Ministry of JUSTICE

PRISON REFORM TRUST

# சிறைக்கைதிகளுக்கான தகவல்

2008 Tamil

© Prison Reform Trust and HM Prison Service/NOMS

This publication can be shared, copied, distributed and transmitted but not sold. It can not be altered in any way without the permission of the copyright owners.

The National Offender Management Service: part of the Ministry of Justice protecting the public and reducing re-offending by delivering probation and prison services.

The Prison Reform Trust works to create a fair and decent prison system. We do this by looking at how prisons are working, giving information to prisoners, staff and people outside and by asking the government and officials to make changes.

First published in 2008 by Prison Reform Trust

ISBN: 0946209 86 3

For further information, contact:

Prison Reform Trust
15 Northburgh Street
London EC1V 0JR
020 7251 5070
www.prisonreformtrust.org.uk

Both HMPS and the Prison Reform Trust would like to thank prisoners and staff at HMP Wandsworth for helping with this book and Mencap for its work to make the book easier to read.

The Prison Reform Trust would like to thank the Big Lottery Fund and the Diana, Princess of Wales Memorial Fund for supporting our charity to improve information for prisoners.

# சிறைக்கைதிகளுக்கான தகவல்

# சிறையில் பணிபுரிபவர்கள் யார்?

**ஆளுநர் அல்லது இயக்குநரே** சிறையின் பொறுப்பாளர் ஆவார். ஆளுநர் என்ற சொல்லை இந்தப் புத்தகத்தில் நாங்கள் பயன்படுத்தியுள்ளோம்.

**சிறை அதிகாரிகள் –** சிறையில் பல்வேறு பணிகளைச் செய்யும் மற்றும் நீங்கள் அதிகம் சந்திக்கக்கூடிய அலுவலர்கள் இவர்களே.

**குற்றவாளி கண்காணிப்பாளர் –** உங்கள் தண்டனைத் திட்டத்தில் உள்ள குறிக்கோள்களை நீங்கள் நிறைவு செய்ய உங்களுடைய குற்றவாளி மேலாளருடன் உங்கள் குற்றவாளி கண்காணிப்பாளர் இணைந்து பணியாற்றுவார்.

**தனி அதிகாரிகள் –** இவர் தனது நேரத்தை ஒதுக்கி உங்களுக்கு உதவி புரியும் மற்றும் உங்கள் முன்னேற்றம் குறித்து அறிக்கைகளும் அளிக்கும் சிறை அதிகாரி ஆவார். உங்கள் தண்டனைத் திட்டத்தில் உங்களோடு அவர்கள் இணைந்து பணியாற்றவும் கூடும்.

**நன்னடத்தை அதிகாரி –** சிறையிலிருந்து நீங்கள் சென்றபின் மீண்டும் குற்றம் புரியாமலிருக்க உங்களுக்கு உதவ உங்களோடு இணைந்து பணியாற்றும் நபர் ஆவார்.

**உளவியல் நிபுணர்கள் -** உங்களைப் பற்றிய மதிப்பீடுகளைச் செய்வார் மற்றும் குற்ற நடத்தை குறித்த பயிற்சி வகுப்புகளை நடத்த பிற அலுவலருடன் இணைந்து பணியாற்றுவார்.

**மதகுருமார்கள்-** உங்கள் மத நம்பிக்கைகளைப் பின்பற்ற உங்களுக்கு உதவுவார். பல்வேறு மாறுபட்ட மதநம்பிக்கை கொண்டவர்கள் இதில் அடங்குவர். நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பது குறித்தும் நீங்கள் இவர்களிடம் பேசலாம்.

**கல்வி மற்றும் பயிற்சிப் பட்டறை அலுவலர் –** வகுப்புகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்துபவர்கள்.

**உடல்நல அலுவலர் –** தாதியர்கள், மருத்துவர்கள், பல் மருத்துவர்கள் மற்றும் இதுபோன்ற மருத்துவம் சம்பந்தமான பிறர்.

**காரட் பணியாளர்கள் -** போதை மருந்து பிரச்சனை உள்ள சிறைக் கைதிகளுக்கு உதவுபவர்கள்.

**ஐஎம்பி உறுப்பினர்கள் -** இவர்கள் சிறைகள் நல்லவிதமாக செயல்படுகின்றனவா என ஆய்வு செய்யும் உள்ளூரைச் சேர்ந்த தன்னார்வலர்கள் ஆவர்.

**அதிகாரப் பூர்வ சிறைப் பார்வையாளர்கள் –** தங்களை சந்திக்க வரஅதிக நபர்களைக் கொண்டிருக்காத சிறைக் கைதிகளைச் சந்திக்க வரக்கூடிய உள்ளூர் நபர்கள் ஆவார்.

# உள்ளடக்கங்கள் – இந்தப் புத்தகத்தில் உள்ளது என்ன


| உள்ளடக்கங்கள் | பக்கம் |
|---|---|
| இந்தப் புத்தகம் பற்றி | 4 |
| நீங்கள் முதன்முறையாக வரும்போது | 5 |
| தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதிகள் | 7 |
| சிவில் சிறைக்கைதிகள் | 16 |
| குடிவரவு தடுப்புக் காவலில் உள்ளவர்கள் | 18 |
| உங்கள் தண்டனை அல்லது தண்டனைக்காலத்திற்கு எதிராக மேல்முறையீடு செய்தல் | 22 |
| சிறையில் எவ்வளவு காலம் நீங்கள் இருப்பீர்கள் என்பதைக்கணக்கிடுதல் | 25 |
| தீர்க்க வேண்டிய செயல்கள் – சிறைக்கு வெளியே | 29 |
| சிறையில் உங்களுக்கு உதவக்கூடிய நபர்கள் | 37 |
| குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு கொள்ளல் | 39 |
| உங்கள் வழக்குரைஞர் அல்லது பிற அதிகாரபூர்வ நபர்களுடன் தொடர்பு கொள்ளல் | 47 |
| சிறை வாழ்க்கை | 49 |
| உங்கள் உடல் நலம் | 65 |
| உங்கள் மத நம்பிக்கை | 78 |
| சிறை விதிகள் | 83 |
| எவ்வாறு புகார் செய்வது அல்லது ஒரு வேண்டுகோள் விடுப்பது | 110 |
| குற்றவாளி மேலாண்மை, தண்டனை திட்டமிடுதல் மற்றும் விடுதலைக்குத் தயாராகுதல் | 118 |
| தற்காலிக உரிமத்தின் அடிப்படையில் விடுதலை | 134 |
| விடுதலை மற்றும் கண்காணிப்பு | 138 |
| வெளிநாட்டு சிறைக்கைதிகள் | 151 |
| இளம் குற்றவாளிகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்த மையங்கள் | 155 |

# இந்தப் புத்தகம் பற்றி

**சிறையில் இருக்கும்போது, கீழே குறிப்பிட்டுள்ளவை போன்ற நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்களை இந்தப் புத்தகம் உங்களுக்கு எடுத்துரைக்கும்.**

✓ சிறை விதிகள் மற்றும் செயல்களைச் செய்யும் முறைகள்
✓ உங்கள் உரிமைகள்

**இந்தப் புத்தகத்தில் உள்ள எதைப் பற்றியாவது உங்களுக்கு சரியாகத் தெரியவில்லை எனில் சிறை அதிகாரி ஒருவரிடம் அதைப் பற்றிக் கேளுங்கள்.**

## யாருக்கானது இந்தப் புத்தகம்?

இந்தப் புத்தகம் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இளம் குற்றவாளிகள் உட்பட ஆண் சிறைக் கைதிகளுக்கானது.

## இந்தப் புத்தகம் எதைப் பற்றியது?

- சிறை வாழ்க்கை குறித்து நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்பதை இந்தப் புத்தகம் உங்களுக்கு எடுத்துரைக்கும்.
- விதிகள் மற்றும் செயல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பது ஒவ்வொரு சிறையிலும் மாறுபடலாம். சில சமயங்களில் சிறைவிதிகள் விரைவில் மாற்றப்படக்கூடும். உங்களைப் பாதிக்கக்கூடிய, விதிகளில் செய்யப்பட்ட எந்த ஒரு மாற்றம் குறித்தும் உங்களுக்குக் கூறப்படும்.
- விதிகளின் பிரதிகள் சிறை நூலகத்தில் உள்ளன.
- உங்களால் நூலகத்திற்கு செல்ல முடியவில்லை என்றாலும் கூட இவ்விதிகளை நீங்கள் படிப்பதற்கு வேண்டும் எனக் கேட்கலாம்.

## இந்தப் புத்தகத்தின் பிரதிகள் எங்கே கிடைக்கும்

- சிறை நூலகம்.
- உங்களால் இதை நூலகத்தில் இருந்து பெற முடியவில்லை எனில், சிறை அலுவலர் இந்தப் புத்தகத்தை முழுமையாகவோ அல்லது அதன் பகுதிகளையோ பிரதியெடுத்து அளிக்கக்கூடும்.
- நீங்கள் அச்சடிக்கப்பட்ட ஒரு பிரதியை வைத்திருந்தால், உங்கள் பிரிவிலுள்ள பிறருடன் அதைப் பகிர்ந்து கொள்ளவோ அல்லது உங்களுடன் வைத்துக் கொள்ளவோ நீங்கள் அனுமதிக்கப்படலாம்.
- மற்றொரு பிரதியைப் பெறுவது எளிதான செயல் அல்ல என்பதால், உங்களிடம் ஒரு பிரதி இருந்தால் அதைப் பத்திரமாக வைத்திருக்கவும்.

# நீங்கள் முதன்முறையாக வரும்போது

**நீங்கள் சிறைக்கு முதன்முறையாக வரும்போது இந்த நடைமுறைகள் தான் மேற்கொள்ளப்படும்**

- ✓ சிறையின் வரவேற்பறைப் பகுதிக்கு நீங்கள் அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
- ✓ போதைப் பொருட்கள் அல்லது மதுப்பழக்கம் உங்களுக்கு இருந்தால் மற்றும் இது குறித்து உதவி தேவைப்படின் அலுவலரிடம் கூறுங்கள்.
- ✓ நீங்கள் எந்தவித ஆடைகள் அணிவது என்பது பற்றி சிறை அலுவலர் உங்களோடு கலந்து தீர்மானிப்பார். நீங்கள் ஒரு தீர்ப்பளிக்கப்பட்ட சிறைக் கைதியாக இருப்பின், சிறை ஆடைகளை நீங்கள் உடுத்த வேண்டியிருக்கும்.
- ✓ நீங்கள் உங்களுடன் கொண்டு வந்த அனைத்து பொருட்கள் பற்றிய பட்டியலை சிறை அலுவல் உறுப்பினர் தயாரிப்பார். சில பொருட்களை நீங்கள் வைத்துக் கொள்ள இயலும். மற்ற அனைத்தும் உங்களுக்காக பத்திரமான ஒரு இடத்தில் வைக்கப்படும். ஆபத்தான அல்லது சட்டத்திற்குப் புறம்பான பொருட்களைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களையும் நீங்கள் சிறையை விட்டுச் செல்லும்போது திரும்பப் பெறுவீர்கள். எடுத்துக்காட்டாக, கத்திகள் அல்லது போதைப் பொருட்கள் போன்றவை.
- ✓ சிறை அலுவல் உறுப்பினர் ஒருவர் உங்களிடம் தேடல் சோதனை செய்வார். உங்களுக்கு மருத்துவப் பிரச்சனை இருந்தால், அதாவது முழு உடல் தேடல் சோதனை செய்வது உங்களுக்கு சிரமமளிக்கும் எனில் மருத்துவர் ஒருவரைக் காண வேண்டும் என நீங்கள் கேட்கலாம்.
- ✓ உங்களுக்கு உடல்நலப் பிரச்சனை ஏதாவது இருந்தால் ஒரு மருத்துவர் அல்லது தாதியரைக் காண வேண்டும் என நீங்கள் கேட்கலாம். நீங்கள் ஏதாவது மருந்து உட்கொள்பவராயிருந்தால் மேலும் போதைப் பொருட்கள் அல்லது மதுப் பழக்கத்தினால் பிரச்சனை இருந்தால் அது குறித்து மருத்துவர் அல்லது தாதியரிடம் கூறுங்கள். நடக்கும் செயல்கள் குறித்து நீங்கள் மிகவும் மனமுடைந்து போயிருந்தாலோ அல்லது கவலை கொண்டிருந்தாலோ அது பற்றியும் அவர்களிடம் கூறுங்கள்.
- ✓ உங்கள் குடும்பத்தினரிடம் தொலைபேசியில் பேச நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள். அவர்கள் உங்களைச் சந்திக்க எவ்வாறு ஏற்பாடு செய்வது என்பது பற்றியும் உங்களுக்குக் கூறப்படும்.
- ✓ உங்களுக்கு ஒரு சிறை எண் வழங்கப்படும்.
- ✓ நீங்கள் உறங்கும் சிறை அறைக்கு நீங்கள் அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
- ✓ உங்களுக்கு தேவையெனில் நீங்கள் குளிக்கலாம் அல்லது ஷவர் செய்யலாம்.
- ✓ மற்ற அலுவலரை நீங்கள் சந்திப்பீர்கள். தனி அதிகாரி என அழைக்கப்படும் அதிகாரியுடன் உங்களுக்கு ஒரு நேர்காணல் இருக்கலாம்.
- ✓ அலுவலர் உங்கள் விரல் ரேகைகளைப் பதிவெடுக்கலாம் மற்றும் உங்களைப் புகைப்படம் எடுக்கலாம்.
- ✓ சிறை வாழ்க்கை குறித்து நீங்கள் செய்ய வேண்டியவை பற்றியும் மேலதிக தகவல்களையும் அலுவலர் உங்களுக்குக் கூறுவார். இது உட்சேர்த்தல் என அழைக்கப்படுகிறது.

# மேலதிக தகவல்

**நீங்கள் எங்கு உறங்குவீர்கள் (உங்கள் சிறை அறை)**

- வேறு யாராவது ஒருவருடன் ஒரு சிறை அறையை நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும். அவ்வாறு இருப்பின் உங்களோடு சிறை அறையைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பான நபர் யார் என்பது குறித்து சிறை அலுவலர் சிந்தித்து முடிவெடுப்பார். உங்களுக்கு இதில் எந்தப் பிரச்சனை இருந்தாலும் அவர்களிடம் நீங்கள் கூறலாம். நீங்கள் விரும்பவில்லையெனில் புகைபிடிக்கும் பழக்கம் உள்ள ஒரு நபரோடு சிறை அறையைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் கேட்டுக்கொள்ளப்படமாட்டீர்கள். பாதுகாப்பில்லாமல் இருப்பதாக நீங்கள் உணர்ந்தாலோ அல்லது கவலை கொண்டிருந்தாலோ அலுவலரிடம் கூறுங்கள்.
- சில சிறைகள் சிறைக் கைதிகள் முதல் நாள் இரவு உறங்குவதற்கான ஒரு சிறப்புப் பகுதியைக் கொண்டிருக்கும், ஆகையால் அவர்கள் சிறையில் இருப்பதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளலாம்.

### என்ன செய்ய வேண்டும் …

**சிறைக்கு வரும்போது நீங்கள் மிகவும் மனமுடைந்து போயிருந்தால் அல்லது ஆழ்ந்த கவலை கொண்டிருந்தால்**

நீங்கள் இவ்வாறு உணர்ந்தீர்கள் என்றால் யாராவது ஒருவருடன் பேசுவது என்பது மிகவும் முக்கியம். கீழ்காணும் நபர்களிடம் நீங்கள் இதுபற்றிக் கூறலாம்

- ✓ சிறை அலுவலர். தனி அதிகாரி என அழைக்கப்படும் அதிகாரி உங்களுக்கென இருக்கக்கூடும் அல்லது சிறையின் உங்கள் பகுதிக்கு (பிரிவு அல்லது லேண்டிங் என இது அழைக்கப்படுகிறது) பொறுப்பான அதிகாரியிடம் நீங்கள் பேசலாம்.
- ✓ உங்கள் உடல் நலத்தைக் கவனித்துக்கொள்ளும் மருத்துவர் அல்லது தாதியர்.
- ✓ மதகுரு.
- ✓ தோழர் அல்லது கேட்பாளர் என அழைக்கப்படும் ஒரு சிறைக் கைதி.
- ✓ மேற்பார்வையாளர்.

**நீங்கள் கவனித்துக்கொள்ள வேண்டிய பிற நபர்கள் அல்லது குழந்தைகள் பற்றி நீங்கள் கவலை கொண்டிருந்தால்**

- மேலுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள எந்த ஒரு தனிநபரிடத்தும் இது குறித்துப் பேசுங்கள்.

**ஒரு வழக்குரைஞரை நீங்கள் காண வேண்டுமெனில் – நீதிமன்றத்தில் இருந்து செல்வதற்கு முன் உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லையெனில்**

- உங்கள் வழக்குரைஞர் உங்களைச் சந்திக்க ஏற்பாடு செய்ய உதவுமாறு வரவேற்பின்போது உள்ள சிறை அதிகாரியைக் கேட்கவும்.

# தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதிகள்

## தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதிகள் யார்?

- ✓ **தண்டனை வழங்கப்படாத** சிறைக் கைதிகள் என்பவர்கள், அவர்களது வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு செல்ல காத்திருக்கும் நபர்கள் ஆவர்.
- ✓ தண்டனை வழங்கப்படாத சிறைக்கைதிகள் **குற்றம் செய்யாத** நபராகவே நடத்தப்படுகிறார். இது ஏனெனில், அவர்களது குற்றத்திற்கான விசாரணைக்காக அவர்கள் இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்பதாலேயே ஆகும்.
- ✓ தண்டனை வழங்கப்பட்ட சிறைக்கைதிகள் செய்ய இயலாத அதே சமயம் தண்டனை வழங்கப்படாத சிறைக்கைதிகள் அதை செய்யக்கூடிய சில செயல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, அவர்கள் வாக்களிக்கலாம் மற்றும் அவர்களது சொந்த ஆடைகளையே வழமையாக அணிந்து கொள்ளலாம்.
- ✓ இருந்தபோதும், மற்ற சிறைக் கைதிகள் பின்பற்றும் பெரும்பாலான அதே விதிகளையே தண்டனை வழங்கப்படாத சிறைக்கைதிகளும் பின்பற்ற வேண்டியிருக்கும்

த ண்டனை வழங்கப்படாத சிறைக் கைதியாக இருப்பதால், கீழ்க்காண்பவைகளுக்கான உதவியையும் ஆதரவையும் நீங்கள் பெறலாம்.

- பிணை பெற விண்ணப்பிக்க
- உங்கள் இல்லத்தைப் பராமரிக்க மற்றும் உங்கள் பணியைப் பாதுகாக்க
- உங்கள் வழக்கு விசாரணைக்கு தயாராவதற்காக
- உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் தொடர்பைப் பேண
- சட்டத்திற்கு புறம்பில்லாதவரை, உங்கள் தொழிலில் தொடர்ந்து பங்குபெற அல்லது தொழிலைச் செய்ய
- உங்களுக்கு உள்ள எந்த ஒரு பிரச்சனைக்கும் உதவி பெற

## தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதியாக நீங்கள் இருந்தால், பிணை கோருதல்

பிணை கோருதல் என்பது, உங்கள் வழக்கு விசாரணைக்காக காத்திருக்கும்போது சிறையிலிருந்து விடுதலை செய்ய நீங்கள் கேட்பது ஆகும்.

**சிறைச் சேவை ஆணைகள் 6100 மற்றும் 6101** ஆகியவற்றில் மேலதிக தகவல் உள்ளன.

இந்த இரண்டின் பிரதியும் நூலகத்தில் உள்ளது.

### பிணை கோருவது எப்படி?

**முக்கிய அம்சங்கள்**

- ✓ முதன்முறை அவர்கள் உங்கள் பிணை வேண்டுகோளை நிராகரித்தால், நீங்கள் அதே நீதிமன்றத்தையோ அல்லது சேம்பரில் உள்ள நீதிபதி என அழைக்கப்படுபவரிடமோ ஒரு முறைக்கும் அதிகமாக பிணை அனுமதியைக் கேட்கலாம். ஆனால், உங்களுக்கு அவர்கள் ஏன் பிணை அளிக்க வேண்டும் என்பதற்கான புதிய காரணத்தை அவர்களுக்கு நீங்கள் அளிக்க இயன்றால் மட்டுமே இதைச் செய்ய இயலும்.
- ✓ நீங்கள் பிணை கேட்கும்போது, நீதிமன்றமானது உங்களுக்கு ஏன் பிணை அளிக்க வேண்டும் என்பதற்கான உங்களால் இயன்ற அனைத்துக் காரணங்களையும் கொடுங்கள்.
- ✓ உங்கள் பிணை கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தால், அதற்கான காரணங்களை நீங்கள் மீண்டும் பிணை கோரி விண்ணப்பிக்கும் முன் ஆராயுங்கள். உங்களுக்கு ஏன் பிணை கிடைக்கவில்லை என்பது குறித்து உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை எனில், பிணை தகவல் அதிகாரி அல்லது சட்ட சேவைகள் அதிகாரி அல்லது உங்கள் வழக்குரைஞரிடம் கேளுங்கள்.
- ✓ பிணை கோருதலில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படின் பிணை தகவல் அதிகாரியிடம் கூட நீங்கள் பேசலாம். இல்லத் தேவைகள் குறித்து உதவி செய்ய க்ளியர்ஸ்பிரிங்ஸ் என்ற திட்டமும் உள்ளது.
- ✓ சட்டரீதியான உதவிகளுக்கு விண்ணப்பிக்க உங்களுக்கு உதவி ஏதேனும் தேவைப்பட்டால் (சட்ட ஆலோசனை அல்லது பிரதிநிதிப்படுத்தல் போன்ற செலவுகளுக்கு தேவையான பண உதவி) சட்ட சேவைகள் அதிகாரியிடம் அது குறித்துப் பேசுங்கள்.
- ✓ நீதிமன்றம் உங்களுக்கு பிணை அளிக்கும் முன் உங்களுக்கான ஒரு வசிப்பிட முகவரியை நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

## வசிப்பதற்கு ஒரு இடம்

- நீங்கள் பிணை கேட்டால், பிணையில் நீங்கள் விடுதலை செய்யப்பட்டால் நீங்கள் வசிக்கக்கூடிய ஏதாவது ஒரு இடத்தின் முகவரியை நீங்கள் நீதிமன்றத்திற்கு அளிக்க வேண்டியிருக்கும். இது உங்கள் சொந்த வீடு அல்லது நண்பர்கள் அல்லது குடும்பத்தினரது முகவரியாகவோ இருக்கலாம். (நீங்கள் அவர்களோடு வசிக்க சம்மதம் தெரிவித்து உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் நீதிமன்றத்தில் முதலில் தெரிவிக்க வேண்டும்)

- நீங்கள் வசிப்பதற்கு எந்த இடமும் இல்லை எனில், பிணை தகவல் அதிகாரி அல்லது சட்ட சேவைகள் அதிகாரியிடம் உதவியைக் கேளுங்கள். நீங்கள் வசிக்க தங்கும் விடுதி, போன்ற ஒரு இடத்தைக் கண்டறிய அவர்கள் உங்களுக்கு உதவுவர்.

## மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் உங்கள் வழக்கு விசாரணை நடத்தப்பட்டால்

உங்கள் வழக்கு விசாரணைக்காக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு நீங்கள் செல்லும் ஒவ்வொரு முறையும் பிணை அளிக்கும்படி நீங்கள் கேட்கலாம். அல்லது உங்களுக்காக இதைச் செய்யும்படி உங்கள் வ ழக்குரைஞரை நீங்கள் கேட்கலாம்.

1. பிணை கேட்பதற்காக நீங்கள் சில படிவங்களை நிறைவு செய்ய வேண்டும். இதைச் செய்ய உங்கள் வழக்குரைஞர் அல்லது சட்ட சேவைகள் அதிகாரி உங்களுக்கு உதவுவர்.
2. நீதிமன்றம் உங்களுக்கு பிணை அளிக்கவில்லையெனில், ஏன் என்ற காரணத்தை விளக்கும் கடிதம் ஒன்றை நீங்கள் பெறுவீர்கள். மீண்டும் பிணை கேட்க நீங்கள் விரும்பினால் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் இக்கடிதத்தை பத்திரமாக வைத்துக்கொள்ளவும்.
3. மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உங்களுக்கு ஒருபோதும் பிணை அளிப்பதில்லை என்று முடிவு செய்தால், அதை உங்களுக்குக் கூற சான்றிதழ் எனப்படும் ஒரு ஆவணத்தை உங்களுக்கு அவர்கள் அனுப்புவார்கள்.
4. எல்லா சாத்தியங்களையும் விசாரித்து விட்டோம் என்ற விளக்கத்தை கொண்டிருக்கும் இந்தச் சான்றிதழை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உங்களுக்கு அனுப்பினால், பிணை கேட்டு கிரவுன் நீதிமன்றத்திற்கு இந்தச் சான்றிதழை நீங்கள் அனுப்பலாம்.
5. கிரவுன் நீதிமன்றமும் நிராகரித்துவிட்டால், பிணை கேட்டு மேல் நீதிமன்றத்தில் சேம்பரில் உள்ள நீதிபதி என்றழைக்கப்படுபவருக்கு நீங்கள் எழுதலாம்.

## உங்கள் வழக்கு விசாரணை கிரவுன் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டால்

1. கிரவுன் நீதிமன்ற விசாரணைக்கு உங்களை அனுப்பிய மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் கிளார்க்கிற்கு எழுதுங்கள் அல்லது உங்களுக்காக இதைச் செய்யும்படி உங்கள் வழக்குரைஞரை கேளுங்கள்.
2. நேரடியாக கிரவுன் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கும்படி உங்கள் வழக்குரைஞரை நீங்கள் கேட்கலாம்.
3. ஒரு வழக்குரைஞர் வைத்துக் கொள்ள உங்களிடம் போதுமான பணம் இல்லையெனில், மற்றும் உங்களுக்கு சட்ட உதவி ஏதுமில்லையெனில் அதிகாரப்பூர்வ வழக்குரைஞர் என்று அழைக்கப்படுபவரிடம் உங்களுக்கு உதவுமாறு நீங்கள் கேட்கலாம். அதை எவ்வாறு செய்வது என்று சட்ட சேவைகள் அதிகாரியிடம் கேட்டறியுங்கள். அதிகாரப்பூர்வ வழக்குரைஞர் மற்றும் பிற சட்ட நடவடிக்கைகள் குறித்த மேலதிக தகவல் **சிறை சேவை ஆணை 2600**-இல் உள்ளது. நீங்கள் ஒரு பிரதியை சிறை நூலகத்தில் பெறலாம்.

## மாஜிஸ்திரேட் நீதிமன்றமும் கிரவுன் நீதிமன்றமும் உங்கள் பிணையை நிராகரித்தால்

மேல் நீதிமன்றத்தில் சேம்பரில் உள்ள நீதிபதியிடம் நீங்கள் பிணை கேட்கலாம்.
சேம்பரில் உள்ள நீதிபதியிடம் நீங்கள் எவ்வாறு பிணை கேட்கலாம் என்பது கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1. உங்களுக்காக இதைச் செய்யும்படி உங்கள் வழக்குரைஞரிடம் கூறுங்கள். கட்டணம் செலுத்தி ஒரு வழக்குரைஞரை நீங்கள் அமர்த்தியிருந்தால் உங்களுக்காக இதைச் செய்ய அவர்களுக்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.
2. ஒரு வழக்குரைஞரை அமர்த்திக் கொள்ள உங்களிடம் போதுமான பணம் இல்லாதிருந்தால் அல்லது சட்ட உதவியை நீங்கள் பெறமுடியவில்லையெனில், உங்களுக்காக பிணை கேட்டு விண்ணப்பிக்கும்படி அதிகாரப்பூர்வ வழக்குரைஞரை நீங்கள் கேட்டுக்கொள்ளலாம். உங்களிடம் எவ்வளவு பணம் உள்ளது என்பதை ஒரு படிவத்தில் நிரப்ப வேண்டி இருக்கும். ஒரு வழக்குரைஞருக்கு கட்டணம் செலுத்த போதுமான பணம் உங்களிடம் இல்லை என அதிகாரப்பூர்வ வழக்குரைஞரிடம் காண்பிக்கவே இந்தப் படிவம்.

## தண்டனை வழங்கப்பட கிரவுன் நீதிமன்றத்திற்கு சென்றால்

உங்களுக்கு பிணை அளிக்கும்படி கிரவுன் நீதிமன்றத்தை நீங்கள் கேட்கலாம். கிரவுன் நீதிமன்றம் உங்களுக்கு பிணை அளிக்கவில்லை எனில் மேல் நீதிமன்றத்தில் சேம்பரில் உள்ள நீதிபதியிடம் நீங்கள் பிணை கேட்கலாம்.

## உங்களுக்கு பிணை கிடைத்தவுடன் என்ன நடக்கும்?

உங்களுக்கு பிணை கிடைத்தவுடன் சில விதிகளை நீங்கள் பின்பற்ற வேண்டியிருக்கும். எடுத்துக்காட்டாக

- உங்களிடம் மிகச்சரியான காரணம் இருந்தாலன்றி, நீதிமன்றத்திற்கு நீங்கள் வரவேண்டும் என்று உங்களுக்கு கூறப்பட்ட நேரத்தில் நீங்கள் திரும்ப வரவேண்டும்.

- குறிப்பிட்ட முகவரியில் வசித்தல், தினசரி காவல் நிலையம் செல்லுதல் அல்லது தடம் அணிந்திருத்தல் போன்ற சில செயல்களை நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

- நீங்கள் நீதிமன்றத்திற்கு வரவில்லையெனில் அதற்காக தொகை செலுத்த ஒப்புக்கொள்ளும் நண்பர்கள் அல்லது குடும்பத்தினரை நீங்கள் கண்டறிய வேண்டியிருக்கும். இந்த நபர்கள் **பிணைதாரர்கள்** என அழைக்கப்படுவர்.

விதிகளை நீங்கள் மீறினால் நீங்கள் கைது செய்யப்படலாம் அல்லது உங்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்படலாம். நீங்கள் நீதிமன்றத்திற்கு வரவில்லையெனில் பிணைதாரர்களான உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் அவர்கள் செலுத்த ஒப்புக்கொண்ட முழுத்தொகையையும் செலுத்த வேண்டி இருக்கும் அல்லது அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

**பிணைதாரர்கள்**

- நீங்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டால், நீதிமன்றத்திற்கு உங்களை திரும்ப வரச்சொன்ன சமயத்தில் நீங்கள் வரவில்லையெனில் அதற்காக தொகை செலுத்த ஒப்புக் கொள்ளும் நண்பர்கள் அல்லது குடும்பத்தினரே பிணைதாரர்கள் ஆவர்.

## உங்கள் குடும்பத்தினரோ அல்லது நண்பர்களோ பிணைதாரர்களாக இருத்தல் எவ்வாறு?

### மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகும்போது உங்களுக்கு பிணை கிடைக்கலாம் என நீங்கள் நினைத்தால்

பிணைதாரர்களாக இருக்க ஒப்புக்கொண்ட நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் நீதிமன்றத்தில் உங்களோடு இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு பிணையில் கிடைத்தால் மற்றும் அவர்கள் பிணைதாரர்களாக இருக்க தகுதி வாய்ந்தவர்கள் என நீதிமன்றம் தெரிவித்தால், அங்கேயே நீங்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவீர்கள்.

### நீங்கள் நீதிமன்றத்தில் இல்லாதபோது உங்களுக்கு பிணையில் கிடைத்தால்

1. உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் பிணைதாரர்களாக இருக்க தகுதி வாய்ந்தவர்கள்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் சோதனைக்காக நீதிமன்றத்திற்கோ அல்லது காவல் நிலையத்திற்கோ அவர்கள் செல்ல வேண்டும். அவர்கள் பணம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டால் அவர்களால் செலுத்த இயலும் என்பதை நிரூபிப்பதற்காக சில ஆவணங்களையும் அவர்கள் கொண்டு செல்ல வேண்டும்.
2. பிணைதாரர்களாக இருக்க அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதை தெரிவிப்பதற்காக ஒரு ஆவணத்தில் உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் கையொப்பமிட வேண்டும்.
3. உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் பிணைதாரர்களாக இருக்க தகுதிவாய்ந்தவர்கள் என காவல் நிலையத்தினரோ அல்லது நீதிமன்றமோ நினைத்தால் உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினருக்கு சான்றிதழ் எனப்படும் ஆவணத்தை அவர்கள் அளிப்பர்.
4. நீங்கள் விடுதலை செய்யப்படுவதற்கு முன், உங்கள் நண்பர்களோ அல்லது குடும்பத்தினரோ அந்த சான்றிதழை சிறைக்கு எடுத்து வர வேண்டும். அவர்கள் பிணைதாரர்களாக இருக்க நீதிமன்றம் அல்லது காவல்நிலையம் சம்மதம் தெரிவித்துள்ளது என்பதை சிறை அதிகாரிகளிடம் காட்டவே இந்த நடைமுறை.

## உங்களுக்கு பிணை கிடைத்தால், சிறையிலிருந்து செல்வதற்கான போக்குவரத்து

- உங்களுக்கு பிணை கிடைத்து, நீதிமன்றத்திலிருந்து உங்கள் வசிப்பிடத்திற்கு பயணிக்க உங்களிடம் பணம் இல்லையெனில் உங்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த அலுவலர் நீங்கள் பயண  வாரண்ட் ஒன்றைப் பெற ஏற்பாடு செய்வார். இது, பிணை காலத்தில் நீங்கள் தங்கியிருக்கும் முகவரிக்குச் செல்வதற்காக நீங்கள் இலவசமாக பயணிக்க அனுமதியளிக்கும் பயணச் சீட்டு ஆகும்.
- உங்களை சிறைக்கு அழைத்து வந்த அலுவலரிடமிருந்து நீங்கள் பயண  வாரண்டை பெற்றுக்கொள்ளலாம் அல்லது நீங்கள் சிறையிலிருந்தபடியே வீடியோ தொடர்பு மூலம் நீதிமன்றத்திடம் பேசியிருந்தால் சிறை அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## நீதிமன்றத்திற்கு செல்லத் தயாராகுதல்

வழக்குரைஞர் கண்டறிவதிலும், நீதிமன்றத்தில் உங்கள் வழக்கு விசாரணைக்காக தயாராவதிலும் உதவியைப் பெற சிறையில் உள்ள சட்ட சேவைகள் அதிகாரியிடம் நீங்கள் பேச வேண்டும்.

### 1. உங்கள் வழக்கு விசாரணைக்காக சாட்சிகளைப் பெறுதல்

- உங்கள் வழக்கு விசாரணையின் போது பேசுவதற்காக சாட்சியைப் பெற உதவும்படி உங்கள் வழக்குரைஞரைக் கேளுங்கள்.
- நீங்கள் வழக்குரைஞரை அமர்த்தியிருக்காவிடில் சட்ட சேவைகள் அதிகாரியை உதவி செய்ய சொல்லி நீங்கள் கேட்கலாம்.
- சட்ட சேவைகள் அதிகாரியால் உங்களுக்காக சாட்சிகளைப் பெற முடியாது. ஆனால் உங்களுக்காக சாட்சியைப் பெற முயற்சிக்குமாறு உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினருக்கு நீங்கள் கடிதம் எழுத அவரால் உங்களுக்கு உதவ   முடியும்.
- உங்களுக்காக சாட்சியைப் பெற முயற்சிக்குமாறு கோரி காவல் துறைக்கு நீங்கள் கடிதம் எழுத இயலும்.  ஆனால் இந்த நபர்கள் உங்கள் வழக்கு விசாரணைக்கு வருவார்கள் என காவல்துறையால் உறுதி அளிக்க இயலாது.

## 2. உங்கள் சட்டப் பணிகளில் உதவியாக கணனியைப் பயன்படுத்தலாமா

- உங்கள் தனிப்பட்ட கணனி இந்த விட யத்திற்காக நீங்கள் பயன்படுத்த இயலாது.
- உங்கள் சட்டப்பணிகளில் உதவியாக சிறையில் உள்ள கணனி நீங்கள் பயன்படுத்த விரும்பினால் ஆளுநரிடம் கேளுங்கள்.
- உங்கள் வழக்கு விசாரணையை நல்லவிதமாக நடத்த உங்களுக்கு கணனி அவசியம் என அவர்கள் நினைத்தால் சிறையின் மடிக்கணனியை (laptop) நீங்கள் பயன்படுத்த ஆளுநர் ஏற்பாடு செய்வார்.
- சிறையின் மடிக்கணனியைப் பயன்படுத்த உங்களுக்கு ஆளுநர் அனுமதியளித்தால், சில விதிகளை நீங்கள் பின்பற்ற வேண்டியிருக்கும்.
- **சிறைச் சேவை செயற்கட்டளை 2/2001** ல் மேலதிக தகவல் உள்ளது. இதன் பிரதி நூலகத்தில் உள்ளது.

## 3. உங்கள் பொருட்கள்

- சில சமயங்களில் நீங்கள் விடுதலை செய்யப்பட்டாலும் உங்களது உடைமைகள் அனைத்தையும் பொருட்களையும் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். நீங்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னும், ஏதாவது பொருட்களை நீங்கள் சிறையில் விட்டு சென்றிருந்தால் அவற்றையும் பெற்றுக்கொள்ள நீங்கள் சிறை நிர்வாகத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

# தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதியாக இருப்பதன் பிற அம்சங்கள்

### உங்கள் உடல் நலம்

- உங்களுக்குத் வேண்டாம் எனில், சிறையில் உள்ள உடல்நல அலுவலரிடமிருந்து என்ஹெச்எஸ் உடல்நல சான்றிதழை நீங்கள் பெற வேண்டிய **தேவையில்லை.**
- தனியார் மருத்துவரிடமிருந்தோ அல்லது பல் மருத்துவரிடமிருந்தோ நீங்கள் மருத்துவப் பராமரிப்பை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அதற்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டும்.
- உங்களுக்கு இது தேவைப்பட்டால் உடல் நலஅலுவலரிடம் கூறுங்கள். அவர்களும் ஆளுநரும் நீங்கள் இதை செய்து கொள்ள அனுமதிப்பர்.

## வாக்களித்தல்

நீங்கள் கீழ்க்கண்ட பிரிவில் ஒருவராய் இருந்தால் நீங்கள் சிறையிலிருக்கும்போது வாக்களிக்கலாம்.

- தண்டனை வழ ங்கப்படாத சிறைக்கைதி
- தண்டனை வழங்கப்பட்டு ஆனால் இன்னும் தண்டனைக்காலம் அறிவிக்கப்படவில்லை .
- அபராதக் கட்டணங்களை செலுத்தாததால் அல்லது நீதிமன்றம் கூறியதை செய்யாததால் (நீதிமன்ற அவமதிப்பு என அழைக்கப்படுகிறது) சிறையில் இருக்கும் சிவில் சிறைக்கைதி

நீங்கள் வாக்களிக்கும் முன் **வாக்காளர் பட்டியலில்** உள்ள பெயர் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஏற்கனவே உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை எனில்

1. நீங்கள் ஒரு படிவத்தை நிறைவு செய்து வாக்காளர் பதிவு அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரிகள் **சிறை சேவை ஆணை 4650 ல்** உள்ளன. இதன் ஒரு பிரதி சிறை நூலகத்தில் உள்ளது.
2. படிவத்தைப் பெறவோ அல்லது வாக்களித்தல் பற்றிய மேலதிக தகவல்களை அறியவோ உங்கள் தனி அதிகாரியையோ அல்லது மற்ற சிறை அதிகாரியையோ கேளுங்கள்.
3. **சிறை சேவை ஆணை 4650** வாக்களித்தல் பற்றிய அதிக தகவல்களைக் கொண்டுள்ளது. அஞ்சல் வாக்கு (அஞ்சல் மூலம் நீங்கள் வாக்களித்தல்) அல்லது பிரதிநிதி வாக்கு (உங்களுக்காக வேறு ஒரு நபர் வாக்களித்தல்) போன்ற விவரங்களும் அதில் உள்ளது.

## பணி மற்றும் ஊதியம் பெறுதல்

- நீங்கள் விரும்பவில்லை எனில் சிறையில் நீங்கள் பணிபுரியத் **தேவையில்லை.**
- நீங்கள் பணிபுரிய விரும்பி, ஆனால் உங்களுக்கு ஏற்ற வேலை ஏதுமில்லை எனில் உங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ள ஒவ்வொரு வாரமும் உங்களுக்கு சிறிய தொகை அளிக்கப்படும்.
- உங்களுக்கு கொடுக்கும் பணியை நீங்கள் செய்ய விரும்பவில்லை என்று கூறினால் சிறையிலிருந்து பணம் ஏதும் நீங்கள் பெறமாட்டீர்கள். வேறு வேலை எதுவும் உங்களுக்கு வழங்கப்படாமல் போகலாம்.

# சிவில் சிறைக்கைதிகள்

கீழ்க்கண்டவை போன்ற செயல்களுக்காக சிறைக்கு அனுப்பப்பட்ட நபர்களே சிவில் சிறைக்கைதிகள் ஆவர்

- தங்களது குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள பராமரிப்பு பணம் தராதிருந்தால்
- அபராதங்கள் அல்லது கடன்கள் கட்டாதிருத்தல்
- தங்களுக்குத் தெரிந்த ஒருவர் பிணையில் இருக்கும்போது குறிப்பிட்ட காலத்தில் நீதிமன்றத்திற்கு தவறும்போது கட்டுவதாக ஒப்புக்கொண்ட தொகையைக் கட்டாதிருத்தல்
- நீதிமன்றம் செய்ய சொன்ன செயலை செய்யத் தவறுதல்

சிவில் சிறைக் கைதிகள் பெரும்பாலும், தண்டனை வழங்கப்படாத கைதிகளைப் போன்றே நடத்தப்படுவர். ஆனால் சில வேறுபாடுகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக நீங்கள் ஒரு சிவில் சிறைக் கைதியாக இருந்தால்

- தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதிகளுக்கு உள்ளதைப் போன்றே பார்வையாளர்கள் சந்திப்பு, கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் போன்ற உரிமைகள் உண்டு. **40ம் பக்கம் பார்க்கவும்**
- நீங்கள் விரும்பவில்லையெனில் பிற சிறைக்கைதிகளுடன் சேர்ந்திருக்க வேண்டியதில்லை.
- உங்கள் சொந்த ஆடைகளையே நீங்கள் அணிந்து கொள்ளலாம். உங்களிடம் போதுமான ஆடைகள் இல்லையெனில் சில ஆடைகள் வேண்டி சிறை அலுவலரிடம் கேட்கலாம்.
- அபராதக் கட்டணத்தைக் கட்டாததாலோ அல்லது நீதிமன்றத்தை அவமதித்ததாலோ நீங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தால் நீங்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படலாம். **சிறை சேவை ஆணை 4650** ல் மேலதிக தகவல்கள் உள்ளன. இதன் பிரதி நூலகத்தில் உள்ளது.

## சிவில் சிறைக்கைதியாக இருப்பதின் மற்ற அம்சங்கள்

### சிறையிலிருந்து முன்கூட்டியே விடுவிக்கப்படுதல்

- எந்தக் காரணத்திற்காக நீதிமன்றம் உங்களைச் சிறைக்கு அனுப்பியதோ அதைப் பொறுத்து நீங்கள் சிறையிலிருந்து முன்கூட்டியே விடுதலை செய்யப்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போகலாம். உங்கள் த ண்டனைக் காலம் முழுவதும் நீங்கள் சிறையில் இருக்க வேண்டி வரலாம். நீங்கள் விடுதலை செய்யப்படும் தேதியை கணிக்கும்போது சிறை அலுவலர் இதைக் கவனத்தில் கொள்வார்.
- கீழ்க்கண்டவை பற்றிய உதவிக்காக உங்கள் தனி அதிகாரியையோ மற்றொரு சிறை அதிகாரியையே அல்லது நன்னடத்தை அலுவலரையோ கேளுங்கள்.
    - o நீங்கள் முன்கூட்டி விடுதலை செய்யப்படுவீர்களா என்பது பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிடின்
    - o நீங்கள் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் நினைத்து ஆனால் நீங்கள் விடுதலை செய்யப்படவேண்டிய தேதியைக் கணிக்கும்போது இதை சிறை அலுவலர் கணக்கில் கொள்ளவில்லை என்றால்

### நீங்கள் நீதிமன்ற அவமதிப்பிற்காக சிறைக்கு அனுப்பியதை எதிர்த்து மேல்முறையீடு செய்தல்

- நீங்கள் செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் உங்களுக்கு கூறியதை செய்யாதிருத்தலே நீதிமன்ற அவமதிப்பு எனப்படுகிறது. நீதிமன்ற அவமதிப்பிற்காக நீங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தால் நீங்கள் அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். நீதிமன்றம் எடுத்த முடிவை மாற்ற முயற்சிப்பதே மேல்முறையீடு எனப்படுகிறது.
- இதை எவ்வாறு செய்வது என்பது பற்றிய ஆலோசனையைப் பெற முதலில் நீங்கள் சிறையில் உள்ள சட்ட சேவைகள் அதிகாரியிடம் பேச வேண்டும்.

### மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தால் நீங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தால்

- கிரவுன் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யுங்கள் அல்லது உங்கள் வழக்குரைஞரிடம் இதைச் செய்யச் சொல்லுங்கள். உங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட 21 நாட்களுக்குள் நீங்கள் மேல்முறையீடு செய்ய வேண்டும்.

### கிரவுன் நீதிமன்றம் அல்லது கவுண்டி நீதிமன்றத்தினால் நீங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தால்

- உங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட 14 நாட்களுக்குள் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யுங்கள் அல்லது மேல்முறையீடு செய்யக்கூறி உங்கள் வ ழக்குரைஞரிடம் சொல்லுங்கள்

Civil Appeal Court
Royal Courts of Justice
Strand
London
WC2N 2LL

# குடிவரவு தடுப்புக் காவலில் உள்ளவர்கள்

**குடிவரவு தடுப்புக் காவலில் உள்ளவர்கள் :** ஐக்கிய ராச்சியத்தை (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட ஐயர்லாந்து) சாராத நபர்களே குடிவரவு தடுப்புக் காவலில் உள்ள நபர்கள்.
குடிவரவு சட்டங்களை மீறியதற்காக சிறைபிடிக்கப்பட்ட அல்லது ஒரு குற்றம் புரிந்து தற்போது அவர்கள் வந்த நாட்டிற்கு திரும்ப அனுப்பப்படுவார்களா(நாடு கடத்தப்பட) என அறியக் காத்திருக்கும் மக்கள்.
குடிவரவு தடுப்புக் காவலில் இருப்பவர்களை என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லை மற்றும் குடிவரவு முகமை தீர்மானிக்கிறது.

**எல்லை மற்றும்** குடிவரவு **முகமை :** இது அரசாங்கத்திற்காக பணியாற்றும் ஒரு குழுவாகும். இவர்கள் பணிபுரிய, சுற்றுப் பயணம் செய்ய அல்லது வசிப்பதற்காக நாட்டிற்குள் வருபவர்களை மேலாண்மை செய்யும் பொறுப்பு கொண்டவர்கள்.

- ✓ நீங்கள் சிறையிலிருக்கும்போது எல்லை மற்றும் குடிவரவு முகமை உங்களோடு தொடர்பில் இருப்பார்கள். நீங்கள் சிறையிலிருக்கும்போது உங்கள் வழக்கை அவர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள்.
- ✓ நீங்கள் சிறையிலிருக்கும்போது தண்டனை வழங்கப்படாத கைதிகளுக்கான அதே விதிகளை நீங்களும் பின்பற்ற வேண்டி இருக்கும். **மேலதிக தகவல்களுக்கு 7ம் பக்கம் பார்க்கவும்.**
- ✓ ஒரு வழக்குரைஞரிடமிருந்து உதவியைப் பெற நீங்கள் முயற்சிக்க வேண்டும். நீங்கள் வழக்குரைஞர் ஒருவரைக் கொண்டிருக்கவில்லை எனில், குடிவரவு ஆலோசனை சேவை என அழைக்கப்படும் குழுவை தொடர்பு கொள்ளவும். **அவர்களது முகவரி 20ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.** உங்கள் வழக்குரைஞருக்கு தொலைபேசியில் அழைக்கவோ, கடிதம் எழுதவோ அல்லது தொலை நகலி அனுப்பவோ கூடிய வசதியை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். அல்லது அவர்கள் உங்களைச் சந்திக்க வரலாம்.
- ✓ உங்களுக்கு உதவி ஏதேனும் தேவைப்பட்டால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களைக் கேளுங்கள்.
  - o உங்கள் தனி அதிகாரி ஒருவரை நீங்கள் கொண்டிருந்தால்
  - o உங்கள் பிரிவுக்குப் பொறுப்பான சிறை அதிகாரி
  - o இன சமத்துவ அதிகாரி என சிறையில் அழைக்கப்படுபவர்
  - o அல்லது வெளிநாட்டு சிறைக் கைதி ஒருங்கிணைப்பாளர் என அழைக்கப்படுபவர் அப்படி ஒருவர் உங்கள் சிறையில் இருந்தால்
- ✓ உங்களுக்குத் தேவைப்பட்டால் மொழி பெயர்ப்பாளர் ஒருவரையும் நீங்கள் பெறலாம் (ஆங்கிலத்தில் கூறப்படுவதை நீங்கள் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவக்கூடிய நபர்).
- ✓ மேலதிக தகவலுக்கு **வெளிநாட்டு சிறைக் கைதிகளுக்கான தகவல் மற்றும் ஆலோசனை** என்ற கையேட்டை நீங்கள் படித்துப் பார்க்கவும். இதன் பிரதி நூலகத்தில் உள்ளது

**உங்கள் வழக்கை கவனித்துக் கொள்ளும் அலுவலருடன் தொடர்பிலிருந்தல்**

- நீங்கள் சிறையிலிருக்கும்போது எல்லை மற்றும் குடிவரவு முகமையைச் சேர்ந்த நபர்கள் உங்களுடன் தொடர்பிலிருப்பர். அவர்கள் ஏற்கனவே உங்கள் சிறையில் பணிபுரியலாம். அல்லது உங்கள் சிறையைப் பார்வையிட அவர்கள் வரலாம்.
- உங்களுக்குத் தேவைப்படும்போது நீங்களும் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.
- உங்கள் வழக்கை கவனித்துக் கொள்ளும் குடிவரவு அலுவலருடன் தொடர்பிலிருக்கும்படி உங்கள் வழக்குரைஞரையோ, ஒரு சிறை அதிகாரியையோ அல்லது ஆளுநரையோ நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

**பிணையில் விடுதலை செய்யும்படி கோருதல் (இதன் அர்த்தம் என்னவெனில் உங்கள் வழக்கு பரிசீலனையில் இருக்கும்போது சிறையிலிருந்து விடுதலை செய்யும்படி கோருதல்)**

- சிறையிலிருந்து பிணையில் விடுதலை செய்யும்படி நீங்கள் கேட்க முடியும்.
- சிறையிலிருந்து பிணையில் விடுதலை செய்யும்படி கேட்க **ஐஎஸ்91 ஆர்** எனப்படும் படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்.
- பிணையில் விடுதலையாவது குறித்து மேலதிக தகவல்கள் படிவத்தில் உள்ளன.
- பிணை கேட்க நீங்கள் கீழ்காணும் நபர்களிடத்திலும் உதவியை பெறலாம்.
    - குடிவரவு ஆலோசனை சேவை எனப்படும் குழுவினர் **(இவர்களது விவரம் பக்கம் 20ல் உள்ளது)**
    - உங்கள் சிறையில் பணிபுரியும் அல்லது சிறைக்கு வருகை புரியும் குடிவரவு அலுவலர்.
    - உங்கள் வழக்குரைஞர் அல்லது சிறையில் உள்ள அலுவலர் இவர்கள் உங்கள் வழக்கைக் கவனித்துக் கொள்ளும் குடிவரவு அலுவலருடன் தொடர்பு கொள்ள முடியும்.

## உங்களுக்கு உதவக்கூடிய நபர்கள்

### 1. குடிவரவு ஆலோசனை சேவை

குடிவரவு தடுப்புக் காவலில் உள்ளவர்களுக்கு இலவச ஆலோசனையும், உதவியும் இவர்கள் அளிக்கின்றனர்.

Immigration Advisory Service
Head Office
3rd Floor
County House
190 Great Dover Street
London
SE1 4YB

பொது தொலைபேசி 0207 967 1200

ஹெல்ப் லைன் 0207 967 1299 (அலுவலக நேரங்களின்போது).

தொலைநகலி 0207 403 5875

### 2. தடுப்புக் காவல் ஆலோசனை சேவை

குடிவரவு தடுப்புக் காவலில் உள்ளதால் செய்ய வேண்டிய செயல்கள் குறித்து இவர்கள் உங்களுக்கு ஆலோசனையும் உதவியும் அளிக்கக்கூடும். ஒரு வழக்குரைஞரை சந்திக்க இவர்கள் உங்களுக்கு உதவ முடியும் மற்றும் இவர்கள் சிறையை பார்வையிட அடிக்கடி வருவார்கள்.

Detention Advice Service
Unit B3
62 Beechwood Road
London
E8 3DY

தொலைபேசி 020 7254 6888

தொலைநகலி 020 7254 8555

3. புலம் பெயர்ந்தோர் நலவாழ்வுக்கான கூட்டுக்குழு (The Joint Council for the welfare of immigrants – JCWI)

குடிவரவு தடுப்புக் காவலில் உள்ளவர்களுக்கு உதவி, தகவல் மற்றும் ஆலோசனைகளை இவர்கள் அளிக்கிறார்கள்.

Joint Council for the Welfare of Immigrants
115 Old Street
London
EC1 9RT

தொலைபேசி 020 7251 8706

தொலைநகலி 0207 251 8707

**நீங்கள் அடைக்கலம் நாடுபவராக இருந்தால் (சொந்த நாட்டில் தங்களுக்கு ஆபத்து இருப்பதால் அங்கிருந்து வெளியேறி ஐக்கிய இராச்சியத்தில் தங்க முடியுமா என்பதைக் கண்டறிய காத்துக் கொண்டிருப்பவர்கள்) இவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.**

4. அகதிகள் சட்ட மையம் (Refugee Legal Centre - RLC)
Refugee Legal Centre
Nelson House
153-157 Commercial Road
London
E1 2DA

தொலைபேசி 0207 780 3200

தொலைநகலி 0207 780 3201

இந்த தொலைபேசி எண்களையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

1. இலவச தொலைபேசி எண். 0800 592 3333 அல்லது 0207 780 3333
   திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 10.30 யிலிருந்து மதியம் 1 மணி வரையிலும் மற்றும் பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரையிலும் இந்தத் தொலைபேசி எண்ணிற்கு அழைக்கலாம்.

2. அவசர காலத்தில் நீங்கள் மிகவும் சீக்கிரமாக யாராவது ஒருவருடன் பேச வேண்டும் என்றால் 07831 598057 என்ற எண்ணிற்கு அழையுங்கள்.
   வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் மாலை 6 மணியிலிருந்து காலை 8 மணிவரை இந்த எண்ணிற்கு நீங்கள் அழைக்கலாம்.

# உங்கள் தண்டனை அல்லது தண்டனைக்காலத்திற்கு எதிராக மேல்முறையீடு செய்தல்

**பயனுள்ள வார்த்தைகள்**

**உங்கள் தண்டனை.** நீங்கள் குற்றம் புரிந்திருக்கிறீர்கள் என நீதிமன்றம் முடிவு செய்வது

**உங்கள் தண்டனைக்காலம்.** நீங்கள் குற்றம் புரிந்திருக்கிறீர்கள் என தீர்ப்பு வழங்கப்பட்டால் உங்களுக்கு என்ன நேர வேண்டும் என்று நீதிமன்றம் கூறுவது

**மேல்முறையீடு செய்தல்.** உங்கள் மீதான தண்டனைஅல்லது உங்கள் தண்டனைக்காலம் குறித்து நீதிமன்றம் எடுத்த முடிவை மாற்ற நீங்கள் முயற்சிப்பது.

உங்கள் **தண்டனை** மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட **தண்டனைக்காலம்** இரண்டின் மீதும் எடுக்கப்பட்ட முடிவை மாற்ற நீங்கள் முயற்சிக்கலாம். இது **மேல்முறையீடு** எனப்படுகிறது. நீங்கள் மேல்முறையீடு செய்ய இயலும் எனில், நீங்கள் எதுகுறித்து எவ்வாறு மேல்முறையீடு செய்வது என உங்கள் வழக்குரைஞர் உங்களுக்கு ஆலோசனை கூற இயலும்.

**முக்கிய அம்சங்கள்**

- நீங்கள் மேல்முறையீடு செய்ய முடிவெடுக்கும் முன் கவனமாக யோசியுங்கள். சிலசமயங்களில் மேல்முறையீடு வெற்றியடையவில்லை எனில், அதற்காக நீங்கள் சிறையில் இருந்த காலத்தை கூடுதல் தண்டனைக்காலமாக நீதிமன்றம் கருதக்கூடும்.
- எது பற்றியும் நீங்கள் முடிவெடுக்கும் முன் உங்கள் வழக்குரைஞர் அல்லது பாரிஸ்டரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ள மறக்காதீர்கள்.
- நீங்கள் மிகவும் விரைவாக மேல்முறையீடு செய்ய வேண்டி இருக்கும். வழக்கமாக உங்களுக்கு தீர்ப்பு அல்லது தண்டனை வழங்கப்பட்டு 28 நாட்களுக்குள் நீங்கள் மேல்முறையீடு செய்ய வேண்டும். இதற்குப் பின்னிட்டும் நீங்கள் மேல்முறையீடு செய்ய இயலக்கூடும். ஆலோசனைக்காக உங்கள் வழக்குரைஞரைக் கேளுங்கள்.
- சிறையில் உள்ள சட்ட சேவைகள் அதிகாரியிடம் பேச வேண்டும் எனக்கூறுங்கள். மேல்முறையீடு எவ்வாறு செய்வது என அவர்கள் உங்கள் விளக்குவார்கள்.
- நீங்கள் மேல்முறையீடு செய்தால், அதற்காக கட்டணம் செலுத்த நீங்கள் பணம் பெற வேண்டும். சட்ட சேவைகள் நிதியுதவி எனப்படும் தொகையைப் பெற நீங்கள் விண்ணப்பிக்கலாம்

## மேல்முறையீடு செய்வது எப்படி

1. உங்கள் வழக்குரைஞர் அல்லது பாரிஸ்டரிடம் பேசுங்கள். நீதிமன்றத்தில் அவர்களோடு பேச உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை எனில், பார்வையாளர் சந்திப்பின் மூலம் அவர்களை சந்திக்க வேண்டும் என ஆளுநரிடம் கூறுங்கள்.

   உங்கள் வழக்குரைஞர் அல்லது பாரிஸ்டர்

   - மேல்முறையீடு செய்தல் குறித்து உங்களுக்கு என்ன வாய்ப்புக்கள் உள்ளன என்று அவர்கள் கருதுவதை உங்களிடம் கூறுவார்.
   - நீங்கள் மேல்முறையீடு செய்ய முடிவு செய்தால் படிவங்களை நிறைவு செய்வார்.

2. சட்ட சேவைகள் அதிகாரியிடம் பேச வேண்டும் என கேளுங்கள். எப்படி மேல் முறையீடு செய்வது என அவர்கள் விளக்கக்கூடும்.

3. எந்த படிவங்களை நிறைவு செய்ய வேண்டும் மற்றும் அவற்றை எங்கு அனுப்ப வேண்டும் என சட்ட சேவைகள் அதிகாரி உங்களிடம் கூறுவார். இது நீங்கள் கிரவுன் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டீர்களா அல்லது மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திலா என்பதைப் பொறுத்தது.

4. நீங்கள் மேல்முறையீடு செய்ய இயலும் எனில், மேல்முறையீடு செய்ய கட்டணம் செலுத்த பணம் பெறுவதற்கு விண்ணப்பியுங்கள். நீங்கள் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் இந்தப் பணம் **சட்டசேவைகள் நிதியுதவி** என அழைக்கப்படுகிறது.

உங்கள் வழக்கு விசாரணைக்காக அளிக்கப்படும் சட்ட சேவைகள் நிதியுதவி (பணம்) மேல்முறையீடு செய்வது எப்படி என்ற ஆலோசனையை நீங்கள் பெறுவதற்காக ம ட்டுமே வழங்கப்படுகிறது. உண்மையில் மேல்முறையீடு செய்வதற்காக அல்ல.

**என்ன செய்ய வேண்டும்**

**உங்கள் வழக்குரைஞரையோ அல்லது பாரிஸ்டரையோ நீங்கள் மாற்ற விரும்பினால்**

- தற்போது நீங்கள் அமர்த்தியுள்ள வழக்குரைஞரிடமோ அல்லது பாரிஸ்டரிடமோ பேசுங்கள் மற்றும் அவர்களை நீங்கள் ஏன் மாற்ற விரும்புகிறீர்கள் என்பதை அவர்களிடம் கூறுங்கள்.
- அல்லது நீங்கள் தேர்ந்தெடுக்கும் வழக்குரைஞர் அல்லது சட்ட ஆலோசகரைக் காண நீங்கள் பணம் செலுத்தலாம்.

**மேல்முறையீடு செய்து நீங்கள் காத்திருக்கும்போது நீங்கள் பிணையில் விடுதலை செய்யப்பட நீங்கள் விரும்பினால்,**

- படிவம் பி எனப்படும் படிவத்தை நீங்கள் நிறைவு செய்து மேல்முறையீடு நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

## உங்களது மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டால் (அதாவது மேல்முறையீடு வெற்றியடையவில்லை)

- **குற்ற வழக்குகள் மறு ஆய்வுக்குழு** என்ற குழுவினரிடம் உங்கள் வழக்கை பரிசீலிக்கும்படி நீங்கள் கேட்கலாம்.
- தவறு நடந்துள்ளது என அவர்கள் கருதும் வழக்குகளை அவர்கள் பரிசீலிப்பார்கள். மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அவர்கள் அந்த வழக்கை மீண்டும் திருப்பி அனுப்பக்கூடும்.
- வழக்கின்போதோ அல்லது மேல்முறையீட்டின்போதோ எடுத்துரைக்கப்படாத **புதிய தகவல் அல்லது சான்றை** நீங்கள் அவர்களிடம் காட்ட வேண்டும்.
- ஒருவழக்குரைஞரிடமிருந்து நீங்கள் உதவியைப் பெற இயலும்.
- உங்கள் உதவிக்காக சட்ட சேவைகள் நிதியுதவியை நீங்கள் பெற இயலும். இந்தப்பணத்தை நீங்கள் பெற **சிடிஎஸ் 1** மற்றும் **சிடிஎஸ்2** எனப்படும் படிவங்களை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும்.
- **சிறை சேவை ஆணை 4400** அத்தியாயம் 3ல் மேலதிக தகவல்கள் உள்ளன. இதன் ஒருபிரதி சிறை நூலகத்தில் உள்ளது.

# சிறையில் எவ்வளவு காலம் நீங்கள் இருப்பீர்கள் என்பதைக் கணக்கிடுதல்

முக்கிய அம்சங்கள்

- உங்கள் தண்டனைக் காலத்தை நீதிமன்றம் முடிவு செய்யும். ஆனால் விவரங்களைக் கொண்டு கணக்கிட இது சிறிது காலம் எடுக்கும்.
- நீங்கள் சிறைக்கு செல்லும்போது உங்களுக்கு தண்டனைக் காலம் எப்போது முடிவடையும் என்பது உங்களுக்கு கூறப்படும். உங்களது தண்டனைக்காலம் பற்றிய விவரத்தைப் பெற சிறை நிர்வாகம் காத்திருந்தால், இத்தகவல் **தற்காலிகம்** என உங்களுக்கு கூறப்படும். மாறக்கூடியதகவல் என்பதே இதன் அர்த்தமாகும்.
- சிறை விதிகளை மீறினால் கூடுதல் நாட்களை நீங்கள் சிறையில் கழிக்க வேண்டி வரும். இது உங்கள் தண்டனைக் காலத்தின் ஒரு பகுதி அல்ல. **மேலதிக தகவலுக்கு 83ம் பக்கம் பார்க்கவும்.**
- உங்கள் சிறைத் தண்டனை பற்றிப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் உங்கள் தனி அதிகாரியிடமோ அல்லது பிற சிறை அலுவலரிடமோ பேசுங்கள்.

**உங்கள் தண்டனை பற்றி –** **பொதுப் பாதுகாப்பு சிறைக்கைதிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுள் அல்லது தீர்மானிக்கப்படாத தண்டனைக் காலத்தை இது உள்ளடக்காது.**

**கீழ்க்கண்டவைகளை பரிசீலிப்பதன் மூலம் உங்கள் தண்டனைக் காலம் கணக்கிடப்படுகிறது.**

- உங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட தேதி
- உங்களது தண்டனைக் காலம்
- நீங்கள் குற்றம் புரிந்த தேதி
- 4 ஏப்ரல் 2005ம் தேதிக்கு முன்னதாக நீங்கள் குற்றம் புரிந்திருந்தால் அந்த குற்றத்திற்காக நீங்கள் சிறையில் கழித்த விளக்க மறியல் காலத்தையும் சிறைச் சேவை கணக்கில் எடுத்துக் கொள்ளும்.
- நீங்கள் 4 ஏப்ரல் 2005ம் தேதிக்குப் பின் குற்றம் புரிந்திருந்தால் நீங்கள் விளக்கமறியலில் கழித்த காலத்தை கணக்கில் கொள்ள வேண்டாம் என நீதிமன்றம் சிறைக்கு கூறக்கூடும்.

## எவ்வளவு காலம் நீங்கள் சிறையில் கழிப்பீர்கள்?

இது குற்றம் புரியப்பட்ட தேதியைச் சார்ந்தது. **பக்கம் 145-** ன் தொடக்கத்தில் கூடுதல் தகவல் உள்ளது

**வயது வந்தோருக்கு 12 மாதங்கள் வரை வழங்கப்பட்ட தண்டனை**

- உங்கள் விடுதலை நிபந்தனையற்றதாக இருக்கும். (ஏயுஆர்)
- குற்றவாளி மேலாளரால் நீங்கள் **கண்காணிக்கப்பட மாட்டீர்கள்**
- அறிக்கை எனப்படும் தகவல் உங்களுக்கு வழங்கப்படும். அந்த அறிக்கையில் பலவிளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் நீங்கள் கையொப்பமிட வேண்டும்.

**4 ஏப்ரல் 2005ம் தேதிக்கு முன்செய்யப்பட்ட குற்றங்கள்**

**உங்கள் தண்டனை ஒருவருட காலத்திற்குள் குறைவு எனில்**

- பாதி தண்டனை காலத்திலேயே உரிமம் இன்றி நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள். (நீங்கள் 21 வயதிற்கு குறைவாக இருப்பின்)

**உங்கள் தண்டனை ஒரு வருட காலத்திற்கு அதிகமாகவும், 4 வருடத்திற்கு குறைவு எனில்**

- உங்கள் தண்டனை காலத்தில் **பாதியை** நீங்கள் கழித்த பின் விடுதலை செய்யப்படுவீர்கள்.
- இது நடந்தால், உங்கள் உரிமத்தில் கூறப்பட்டுள்ள விதிகளை நீங்கள் பின்பற்றுவீர்கள் என்பதை உறுதி செய்யும். நன்னடத்தை பிரிவில் இருக்கும் யாராவது ஒருவரை நீங்கள் காண வேண்டும்.
- உங்கள் தண்டனை காலத்தில் முக்கால் பகுதியின்போது உங்களது உரிமம் முடிவடையும்.

**உங்கள் தண்டனை 4 வருடம் அல்லது அதற்கும் அதிகம் எனில்**

- உங்கள் தண்டனையில் **பாதிக்** காலத்தை நீங்கள் கழித்த பின் பரோலுக்கு (முன் கூட்டியே விடுதலை ஆகும் முறைகளில் ஒன்று) நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- உங்களுக்கு பரோல் கிடைத்தால், நீங்கள் விடுதலை செய்யப்பட்டபின் நன்னடத்தைப் சேவையிலிருந்து ஒருவர் தொடர்ந்து உங்களை கண்காணிப்பார்.
- உங்களுக்கு பரோல் **கிடைக்கவில்லை எனில்,** சிறையில் நீங்கள் 13 மாதங்களுக்குக் குறைவாகவே இருக்க வேண்டியது என்றில்லாதவரை, நீங்கள் ஒவ்வொரு வருடமும் பரோலுக்கு விண்ணப்பிக்கலாம்.
- உங்களுக்கு பரோல் ஒருபோதும் **கிடைக்கவில்லை** எனில், உங்கள் தண்டனைக் காலம் முடியும் முன் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள். நீங்கள் விடுதலை செய்யப்படும் தேதி உங்கள் பரோல் அல்லாத தேதி எனப்படுகிறது. உங்களோடு இணைந்து பணியாற்றும் மற்றும் உங்கள் உரிமத்தில் உள்ள விதிகளை நீங்கள் பின்பற்றுகிறீர்கள் என்பதைக் கண்காணிக்கும் நன்னடத்தைச் சேவைப் பிரிவிலிருக்கும் யாராவது ஒருவரை நீங்கள் காண வேண்டும்.

## 4 ஏப்ரல் 2005ம் தேதிக்கு முன்செய்யப்பட்ட குற்றங்கள்

### நீடிக்கப்பட்ட தண்டனைகள்

- வன்முறை அல்லது பாலியல் குற்றத்திற்காக உங்களுக்கு நீடிக்கப்பட்ட தண்டனை வழங்கப்படலாம்.
- நீங்கள் விடுதலை செய்யப்படும் தேதி சிறையில் நீங்கள் எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என நீதிபதிகள் கூறுவதைப் பொருத்தது.
- உங்களுக்கு பரோல் கிடைத்தாலும் நீங்கள் கூடுதல் உரிம காலத்தை கழிக்க வேண்டி இருக்கும்
- உங்களுக்கு பரோல் **கிடைக்கவில்லை** எனில், ஒவ்வொரு வருடமும் மீண்டும் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- இல்லையெனில் உங்கள் தண்டனைக் காலம் முடியம் முன் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள். நீங்கள் விடுதலை செய்யப்படும் தேதி உங்கள் பரோல் அல்லாத தேதி எனப்படுகிறது. உங்களோடு இணைந்து பணியாற்றும் மற்றும் உங்கள் உரிமத்தின் உள்ள விதிகளை நீங்கள் பின்பற்றுகிறீர்கள் என்பதைக் கண்காணிக்கும் நன்னடத்தை சேவைப் பிரிவிலிருக்கும் யாராவது ஒருவரை நீங்கள் காண வேண்டும்.

## 4 ஏப்ரல் 2005ம் தேதியன்று அல்லது அதன்பின் செய்யப்பட்ட குற்றங்கள்

**உங்கள் தண்டனைக் காலம் ஒரு வருடத்திற்கு கூடுதலாகவும் 4 வருடத்திற்கு குறைவாக இருந்தால்**

- உங்கள் தண்டனையில் **பாதிக்** காலத்தை கழித்தபின் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள்.
- உங்களோடு இணைந்து பணியாற்றும் மற்றும் உங்கள் உரிமத்தில் உள்ள விதிகளை நீங்கள் பின்பற்றுகிறீர்கள் என்பதைக் கண்காணிக்கும் நன்னடத்தை சேவைப் பிரிவிலிருக்கும் யாராவது ஒருவரை நீங்கள் காண வேண்டும்.

**நீடிக்கப்பட்ட தண்டனைகள்**

- நீடிக்கப்பட்ட தண்டனை உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், பரோல் பெற நீங்கள் **விண்ணப்பிக்க** வேண்டும். உங்கள் தண்டனைக் காலத்தில் ஒரு பகுதியை கழித்தபின் இதைச் செய்யலாம்.
- உங்களுக்கு பரோல் **கிடைக்கவில்லை** எனில், ஒவ்வொரு வருடமும் மீண்டும் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

1 அக்டோபர் 1992ம் தேதிக்கு முன் செய்யப்பட்ட குற்றங்கள்

- உங்கள் தண்டனைக் காலத்தில் **மூன்றில்** ஒரு பகுதியை நீங்கள் கழித்த பின் நீங்கள் பரோலுக்கு விண்ணப்பிக்க இயலும்.
- உங்களுக்கு பரோல் கிடைத்தால், உங்கள் தண்டனைக் காலத்தில் மூன்றில் இரு பகுதி வரை உரிமத்தின் அடிப்படையில் நீங்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுவீர்கள்.
- உங்களுக்கு பரோல் **கிடைக்கவில்லை** எனில், சிறையில் நீங்கள் 13 மாதங்களுக்கு குறைவாக இருக்க வேண்டியது என்றில்லாதவரை, நீங்கள் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து விண்ணப்பிக்கலாம். உங்களுக்கு ஒருபோதும் பரோல் கிடைக்கவில்லை எனில், உங்கள் தண்டனைக் காலத்தில் **மூன்றில் இரு பகுதியை** நீங்கள் கழித்த பின் சிறையிலிருந்து நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள்.
- நீங்கள் பரோலில் இருக்கும்போது மற்றொரு குற்றத்தை நீங்கள் புரிந்தால், உங்கள் தண்டனைக்காலம் முழுவதையும் நீங்கள் கழிக்க வேண்டி வரும்.

**உரிமம் மற்றும் பரோலில் விடுதலை பற்றிய மேலதிக தகவல் 141ம் பக்கத்தில் உள்ளது.**

# தீர்க்க வேண்டிய செயல்கள் – சிறைக்கு வெளியே

## 1. நீங்கள் கவனித்துக்கொள்ளும் குழந்தைகள் அல்லது மற்ற நபர்கள்

- நீங்கள் கவனித்துக்கொள்ளும் குழந்தைகள் அல்லது மற்ற நபர்களின் பராமரிப்புக்கு தீர்வு காண வேண்டுமெனில், அது குறித்து சிறை அலுவலரிடம் நேரடியாகக் கூறுங்கள்.

**குழந்தைகள் ஆதரவு முகமை பணம் செலுத்துதல்**

- குழந்தை பராமரிப்புக்கான பணத்தை நீங்கள் செலுத்திக் கொண்டிருந்தால், நீங்கள் சிறையிலிருப்பதை குழந்தைகள் ஆதரவு முகமைக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும்.
- இது குறித்து ஒரு வாரத்திற்குள் குழந்தைகள் ஆதரவு முகமைக்கு கட்டாயம் தெரிவிக்க வேண்டும். எந்த ஒரு மாற்றங்கள் குறித்தும் அவர்களிடம் ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்கவில்லை எனில் அது கிரிமினல் குற்றமாகும்.
- நீங்கள் பணிபுரியவில்லை அல்லது அரச சலுகைப் பணம் எதையும் பெறவில்லை என்றால், குழந்தைகள் பராமரிப்புக்கு நீங்கள் பணம் **செலுத்த வேண்டியதில்லை.**

கீழ்க்கண்ட முகவரிக்கு நீங்கள் அவர்களுக்கு கடிதம் எழுதலாம்

Child Support Agency
National Helpline
PO Box 55
Brierly Hill
DY5 1YL

தொலைபேசி 08457 138 924

## 2. அரசாங்க சலுகைப் பணம் (benefits)

**நீங்கள் ஏற்கனவே அரசாங்க சலுகைப் பணம் பெற்றால்**

- கூடிய விரைவில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண உங்கள் உள்ளூர் ஜொப் சென்டர் பிளஸ் அலுவலகத்தினருடன் பேசுங்கள். அல்லது உங்கள் குடும்பத்தினர் யாராவது ஒருவரிடம் பேசும்படி கூறுங்கள்.
- நீங்கள் 21 நாட்களுக்கும் மேல் சிறையிலிருந்தால், வீட்டு வசதி சலுகைப் பணம் மட்டுமே உங்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரே சலுகையாகும்.
- உங்கள் ஜொப்சென்டர் பிளஸ் உங்களுக்கு சலுகைப் பணம் அளிக்க வேண்டியுள்ளது என நீங்கள் கருதினால், சிறையிலிருக்கும் உங்களுக்கு அந்தப் பணத்தை அனுப்பும்படி கடிதம் எழுதி கேளுங்கள். **ஆளுநருக்கு** அவர்கள் ஒரு ஜைரோ அனுப்புவார்கள். பிறகு அந்தப் பணம் உங்கள் தனிப்பட்ட பணக்கணக்கில் செலுத்தப்படும்.
- உங்களால் இந்தப் பணத்தைப் பெற இயலவில்லை எனில், நீங்கள் விடுதலையான பிறகு அந்தப் பணத்தைக் கோரலாம்.

**நீங்கள் பணிபுரிந்திருந்தால்**

- நீங்கள் சிறையிலோ அல்லது விளக்க மறியலிலோ இருக்கும்போது உங்கள் குடும்பத்தினர் அரசங்க சலுகைகளைக் கோர வேண்டியிருக்கும்.
- கூடிய விரைவில் உள்ளூர் ஜொப்சென்டர் பிளஸ் அலுவலகத்தை அவர்கள் தொடர்பு கொள்ள வேண்டும்.

**கூடிய விரைவில் உங்கள் ஜொப்சென்டர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். அப்படி இல்லையெனில், தற்போதும் நீங்கள் விடுதலையான பின்பும் அரசாங்க பண சலுகைகளைப் பெறுவதில் உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்தினருக்கோ பிரச்சனைகள் ஏற்படலாம்.**

## 3. வாடகை செலுத்துதல் அல்லது வீட்டுக்கடன்

- வாடகை அல்லது வீட்டுக்கடன் செலுத்த உதவியாக நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தினர் **வீட்டு வசதி பண சலுகையைப்** பெற இயலும்.
- இது நீங்கள் தண்டனை வழங்கப்பட்டவரா அல்லது விளக்கமறியலில் உள்ளவரா என்பதைச் சார்ந்தது என்பதால், இது குறித்த ஆலோசனையைப் பெறுவது நல்லது.

## வாடகை செலுத்தல் – என்ன செய்ய வேண்டும்

**நீங்கள் சிறையிலிருப்பதை தெரிவித்து உங்கள் வீட்டு உரிமையாளருக்கோ அல்லது எஸ்ரேற் ஏஜன்ட்டுக்கு கடிதம் எழுதுங்கள்**

- எவ்வளவு காலம் நீங்கள் சிறையிலிருப்பீர்கள்
- உங்கள் வீட்டை வேறு யாராவது கவனித்துக் கொள்வார்களா என்பது குறித்து அவர்களுக்கு கூறுங்கள்.

**நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் வசித்து வந்திருந்தால் மற்றும் ஏற்கனவே வீட்டு வசதி சலுகை பெற்றுக்கொண்டிருந்தால்**

- நீங்கள் சிறையிலிருப்பதை தெரிவித்து வீட்டுவசதி சலுகை அலுவலகத்திற்கு கடிதம் எழுதுங்கள்.
- சிறையில் நீங்கள் இருக்கும் காலகட்டத்தில், உங்கள் அரசாங்க பண சலுகைகளை உங்கள் குடும்பத்தினர் பெறக் கோருவதற்காக உங்கள் குடும்பத்தினரும் வீட்டுவசதி பண சலுகை அலுவலகத்திற்கு கடிதம் எழுத வேண்டும்.

**வீட்டுவசதி பண சலுகையைப் பெறத் தொடங்க வேண்டிய தேவை உங்கள் குடும்பத்துக்கு இருந்தால்**

- வீட்டுவசதி பண சலுகையைக் கோருவதற்காக அவர்கள் வீட்டுவசதி சலுகை அலுவலகத்துக்கு எழுத வேண்டும்.

**நீங்கள் சுயமாக வசித்து வந்திருந்தால்**

- 52 வாரங்கள் வரையில், சிறையில் இருக்கும்போது நீங்கள் குடியிருப்புச் சலுகையைக் கோரலாம் அல்லது 13 வாரங்களுக்குக் குறைவாக நீங்கள் சிறையில் இருந்தால்,
- ஏற்கனவே வீட்டுவசதி சலுகையை நீங்கள் பெற்றுவராமலிருந்தால் அதைக் கோருவதற்காக படிவம் ஒன்றை அனுப்பும்படி கேட்டு உங்கள் உள்ளூர் நிர்வாகத்திற்கு எழுதுங்கள்.

**உங்களால் வாடகை செலுத்த முடியவில்லை மற்றும் வீட்டு வசதி பண சலுகையைப் பெற இயலவில்லை என்றால்**

- உங்கள் வீட்டு உரிமையாளருக்கோ அல்லது எஸ்ரேற் ஏஜன்ட்டுக்கோ வீட்டை நீங்கள் திரும்ப கையளித்துவிடலாம். அவர்களுக்கு அதிக தொகை செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு நீங்கள் கடனாளி ஆவதை விட இது சிறந்ததாகும்.
- நீங்கள் சிறையிலிருந்து வெளியே வந்தபின் நீங்கள் வசிக்க உங்களுக்காக வேறொரு இடத்தை கண்டறிய உங்கள் வீட்டு உரிமையாளர் ஒப்புக்கொள்ளக்கூடும்.
- **ஆலோசனைக்காக நேக்ரோ அல்லது குடிமக்கள் ஆலோசனைக் குழுவை நாடுங்கள்.**
- இந்த அமைப்புகள் சிறைக்கு வருகை புரியக்கூடும். அப்படி இல்லையெனில், நாக்ரோ-வை 0800 0181 259 என்ற எண்ணில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**உங்கள் வீட்டுக்கடன்**

நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் வசித்திருந்தால் மற்றும் அவர்கள் அதே வீட்டில் குடியிருந்தால்

- நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தினரோ உங்கள் வீட்டுக் கடனில் **வட்டியை** செலுத்துவதில் உதவியைப் பெற இயலும்.
- நீங்கள் ஒரு வீட்டை வாங்கியிருந்து, உங்களுக்கு தண்டனை **வழங்கப்படவில்லை** அல்லது உங்களது தண்டனை அறிவிப்புக்காக நீங்கள் காத்துக்கொண்டிருந்தால்

**என்ன செய்ய வேண்டும்.**

✓ நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தினரோ, வீட்டுவசதி பண சலுகையைப் பெற விரும்பினால், நீங்களோ அல்லது அவர்கள் உள்ளூர் ஜொப்சென்டர் பிளஸ் அலுவலகத்திற்கு எழுத வேண்டும்.

✓ நீங்கள் சிறையிலிருப்பதை உங்கள் வீட்டுக்கடன் வழங்கிய நிறுவனத்திற்கோ, வங்கிக்கோ அல்லது கட்டுமான சங்கத்திற்கோ தெரிவியுங்கள்.

✓ என்ன நடக்கக்கூடும் என நீங்கள் நினைப்பதை அவர்களிடம் கூறுங்கள். எடுத்துக்காட்டாக, உங்கள் வீட்டுக்கடன் தொகையில் வட்டியை மட்டுமே செலுத்த நீங்கள் விரும்பினால், அல்லது உங்களால் எதையும் செலுத்த இயலாது என நீங்கள் நினைத்தால் அதை அவர்களிடம் கூறுங்கள்.

✓ உங்கள் தொகைகளை சிறிது காலத்திற்கு செலுத்தாமல் நிறுத்தி வைக்க இயலும். அல்லது வீட்டை விற்றுவிடலாம்.

**வீட்டுவசதி சலுகை எவ்வாறு அளிக்கப்படும்**

2 அக்டோபர் 1995க்கு முன் நீங்கள் வீடு வாங்கியிருந்தால்

- வாரம் 1 முதல் வாரம் 8 வரை — வீட்டுவசதி பணத் தொகை எதுவும் நீங்கள் பெறமாட்டீர்கள்.
- வாரம் 9 முதல் வாரம் 27 வரை — பாதித் தொகையை நீங்கள் பெறுவீர்கள்.
- 27ம் வாரத்திலிருந்து — அனைத்து தொகையையும் நீங்கள் பெறுவீர்கள்

3 அக்டோபர் 1995க்கு பிறகு நீங்கள் வீடு வாங்கியிருந்தால்

- வாரம் 1 முதல் வாரம் 39 வரை — வீட்டுவசதி பணத் தொகை எதுவும் நீங்கள் பெறமாட்டீர்கள்
- 39ம் வாரத்திலிருந்து — அனைத்து தொகையையும் நீங்கள் பெறுவீர்கள்

## 4. உள்ளூர் வரி

**என்ன செய்ய வேண்டும்?**

- ✓ நீங்கள் சிறையிலிருப்பதை உங்கள் உள்ளூராட்சி நிர்வாகத்திடம் கூறுங்கள். நீங்கள் உள்ளூர் வரியை செலுத்த வேண்டியிருக்காது. அல்லது உங்கள் குடும்பத்தினர் குறைவான உள்ளூர் வரியை செலுத்த வேண்டி இருக்கலாம்.
- ✓ நீங்கள் முதலில் சிறைக்கு சென்றவுடன் உள்ளூர் வரி குறித்த கையேட்டைப் பெற வேண்டும். அந்தக் கையேட்டுடன் சில படிவங்கள் இணைக்கப்பட்டிருக்கும். உங்கள் உள்ளூராட்சி நிர்வாகத்தை தொடர்பு கொள்ள அந்தப் படிவங்களை நிறைவு செய்யுங்கள்.

**5. தண்ணீர், எரிவாயு, மின்சாரம் மற்றும் தொலைபேசி மற்றும் இவை போன்ற கட்டணங்கள்**

**நீங்கள் சிறையிலிருக்கும்போது இவற்றுக்காக நீங்கள் எந்தவித உதவியும் பெற இயலாது.**

**என்ன செய்ய வேண்டும்?**

- ✓ நீங்கள் சிறையிலிருப்பதைக் கூற அந்த நிறுவனங்களுக்கு நீங்கள் கடிதம் எழுதலாம். கடிதம் எழுத உதவி செய்யுமாறு அலுவலரைக் கேளுங்கள்.
- ✓ நீங்கள் சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் அந்தக் கட்டணங்களைச் செலுத்த இயலுமா என நீங்கள் அவர்களைக் கேட்கலாம். அல்லது எரிவாயு, தண்ணீர் அல்லது மின்சார இணைப்புகளை துண்டித்துவிடும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளலாம்.

## 6. தேசிய காப்பீடு

**சிறைக்கு வரும் முன் நீங்கள் தேசிய காப்பீடு செலுத்தியிருந்தால்**

- நீங்கள் சிறையில் இருக்கும்போது எந்தவித தேசிய காப்பீடும் நீங்கள் **பெறமாட்டீர்கள்.**
- நீங்கள் 16-18 வயதுடையவராக இருந்தால் வரி சலுகைகள் உங்களுக்கு கிட்டும்.
- நீங்கள் 60-65 வயதுடையவராக இருந்தாலும் உங்களுக்கு சலுகைகள் கிட்டும்.

**நீங்கள் செலுத்தும் தேசிய காப்பீட்டுப் பணம்**

சிறையில் இருக்கும்போது

நீங்கள் பணம் செலுத்த **இயலாது**

- தேசிய காப்பீட்டில் பிரிவு 1 மற்றும் 2 எனப்படும் சில வகைகள் (பணியில் இருக்கும்போது செலுத்த இயல்வது).
- சிறையில் ஒரு சிறப்பு பணித்திட்டத்தில் நீங்கள் இடம் பெற்றிருந்தால் நீங்கள் இதைச் செலுத்த இயலக்கூடும். எடுத்துக்காட்டாக, சமூகப்பணிக்காக நீங்கள் ஊதியம் பெறும்போது.

நீங்கள் பணம் செலுத்த **இயலும்**

- தேசிய காப்பீட்டில் பிரிவு 3 எனப்படும் வகை
- இந்த வகை தேசிய காப்பீட்டில் தொகையை செலுத்துவதை நீங்கள் நிறுத்தினால் உங்கள் ஒய்வூதியம் அல்லது இழப்பீட்டுத் தொகை போன்ற சலுகைகள் பாதிக்கப்படக்கூடும். இது உங்கள் தண்டனைக்காலம் போன்ற சில அம்சங்களை சார்ந்தது.

**மேலதிக விவரங்கள் அறிய உங்கள் ஜொப் சென்டர் பிளஸ் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள் அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்**

HM Revenue & Customs
National Insurance Contributions Office
Benton Park View
Newcastle on Tyne
NE98 1ZZ

தொலைபேசி 0845 302 1479

## 7. உங்கள் அரச ஓய்வூதியம்

கீழ்க்கண்டவைகள் உங்களுக்கு பொருந்தும் என்றால், உங்கள் அரச ஓய்வூதியத்தை நீங்கள் **பெற மாட்டீர்கள்.**

- உங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தால்
- நீங்கள் விளக்கமறியலில் இருக்கும்போது அல்லது உங்கள் வழக்கு விசாரணைக்காக காத்திருக்கும்போது.

கீழ்க்கண்டவைகள் உங்களுக்கு பொருந்தும் என்றால், உங்கள் ஓய்வூதியத்தை நீங்கள் **பெறுவீர்கள்.**

- தண்டனை வழங்கப்படாமல் நீங்கள் விடுதலை செய்யப்பட்டால், நீங்கள் விடுதலை செய்யப்பட்ட பின் உங்கள் பணத்தை நீங்கள் பெறுவீர்கள்.

**உங்களுக்கு துணைவர் ஒருவர் இருந்தால்**

- **சார்ந்திருப்போர் உதவித்தொகை** எனப்படும் தொகையை அவர்கள் பெறாதவரை, நீங்கள் சிறையில் இருக்கும்போதும், உங்கள் துணைவர் அவருடைய ஓய்வூதியத்தைப் பெறுவார்.
- அவர்களுக்கு இது குறித்த உறுதியாகத் தெரியாவிடில் அவர்களுடைய ஜொப் சென்டர் பிளஸ் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விவரம் அறிந்து கொள்ளலாம்.

**மேலதிக தகவலுக்கு ஓய்வூதிய சேவை அமைப்பிற்கு எழுதவும்.**

National Pension Centre
Tyneview Park
Whitley Road
Benton
Newcastle-upon-Tyne
NE98 1BA

தொலைபேசி 0845 6060 265

## 8. வருமானவரி

- நீங்கள் சிறையில் இருக்கும்போது உங்கள் வரி குறித்து மேற்கொள்ள வேண்டிய எந்த ஒரு செயல் குறித்தும் தொடர்ந்து நீங்கள் கண்காணிப்பது மிகவும் முக்கியமாகும்.
- குடிமக்கள் ஆலோசனைக்குகுழு போன்ற அமைப்பை சார்ந்தவர்கள் உங்களது சிறைக்கு வரக்கூடும் மற்றும் அவர்கள் வரிப்பிரச்சனைகளை **தீர்க்க** உங்களுக்கு உதவக்கூடும்.

**என்ன செய்ய வேண்டும்?**

✓ உங்களுக்கு உதவி தேவையெனில், உங்களது வரி அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். உங்களால் இயன்றால், உங்களது தேசியகாப்பீட்டு எண் மற்றும் குறியீட்டு எண்ணை அவர்களிடம் தெரிவியுங்கள்.

✓ உங்களுடைய வரி அலுவலகம் எது என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிடின், உள்ளூர் வரி அலுவலகத்திடம் கேளுங்கள்.

✓ உங்களுக்கு வரி படிவங்கள் ஏதும் அனுப்பப்பட்டிருந்தால் நீங்கள் அந்தப் படிவங்களைப் நிறைவு செய்ய வேண்டும். அல்லது நீங்கள் குறிப்பிட வேண்டிய தேவை உள்ள வருவாயைப் பெற்றிருந்தாலும் கூட படிவங்களை நிறைவு செய்ய வேண்டும்.

✓ உங்களுக்காக வேறுயாராவது ஒருவரும் வரி அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். ஆனால் உங்களுக்காக அதை அவர்கள் செய்ய உங்களுக்கு சம்மதம் என்பதை நீங்கள் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

✓ நீங்கள் சிறையிலிருக்கும்போதும், உங்கள் முதலாளி உங்கள் பதவிக்கு புதிய நியமனம் செய்யாமல் உங்களுக்காக காலியாக வைத்திருந்தால், அதை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கும்படி அவர்களிடம் கேளுங்கள். இதன்மூலம் அது குறித்த ஆவணம் உங்களுக்குக் கிடைக்கும்.

✓ நீங்கள் சிறையிலிருக்கும்போதும், உங்கள் **தனிஅலவன்சுகளைப்** பெறுவீர்கள். வரிகட்டத் தேவையில்லாத உங்கள் வருடாந்த சம்பாத்திய தொகையே உங்கள் தனி அலவன்சு ஆகும்.

**கீழ்க்கண்டவை பற்றி அறிய உங்கள் வரி அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்**

✓ உங்கள் மனைவியோ அல்லது கணவரோ பணிபுரிந்து கொண்டிருந்தால் குழந்தைகள் வரி கிரெடிட் (Tax Credit) பணத்தை உங்கள் மனைவி அல்லது துணைவர் பெயருக்கு மாற்ற இயலுமா என்றறிய

✓ உங்களது வங்கி அல்லது கட்டிட கடன் வட்டி மீது சுமத்தப்பட்ட வரியை நீங்கள் திரும்பப் பெற இயலுமா என்றறிய. இதைச் செய்ய ஒரு படிவத்தை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும்.

✓ நீங்கள் பணியிலிருந்தால் மற்றும் பி45 (P45)எனப்படும் ஆவணமும் உங்களிடம் இருந்தால் ஏப்ரல் 5 வரை நீங்கள் செலுத்திய வருமான வரியை திரும்பப் பெற இயலுமா என்றறிய

✓ அல்லது நீங்கள் உங்களுக்காக பணியாற்றிக் கொண்டிருந்தால் (சுயதொழில்) அது குறித்த ஆலோசனைப் பெற

# சிறையில் உங்களுக்கு உதவக்கூடிய நபர்கள்

- நீங்கள் சிறையில் இருக்கும்போது உங்களுக்கு ஏற்படும் எந்த ஒரு பிரச்சனைகள் குறித்தும் சிறை அலுவலரிடம் நீங்கள் பேசலாம்.
- உங்களுக்கு உதவக்கூடிய பிற நபர்களும் உண்டு.
- வேறுயாரெல்லாம் உங்களுக்கு உதவ முடியும் என்பதை சிறை அலுவலர் கூறுவார். சிறையின் உங்கள் பிரிவில் இதைப்பற்றிய தகவல் இருக்கிறது.

**சிறையில் உங்களுக்கு உதவ க்கூடிய பிற நபர்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த பக்கத்தில் மேலும் அதிக நபர்களின் பட்டியல் இடம் பெற்றுள்ளது.**

**நீங்கள் மனமுடை ந்து போயிருந்தாலோ அல்லது நீங்கள் வேறு யாராவது ஒருவருடன்பேச விரும்பினாலோ , நீங்கள் இவர்களுடன் பேசலாம்,**

- ✓ **மதகுரு அல்லது மதரீதியாக பணிபுரியும் வேறு யாராவது ஒருவர்**
- ✓ **சமரிடன்** : உளவியல் ஆலோசகரிடம் பேச நீங்கள் விரும்பினால் அது குறித்து சிறை அலுவலரிடம் கூறுங்கள். நீங்கள் மனமுடைந்திருந்தாலோ, கவலை கொண்டிருந்தாலோ அல்லது உங்களை நீங்களே காயப்படுத்திக் கொள்ளும் எண்ணமோ அல்லது தற்கொலை எண்ணமோ தோன்றினால் தனிமையாக நீங்கள் மனம்விட்டு பேசக்கூடிய நபர்களே மேற்பார்வையாளர்கள். மேற்பார்வையாளர்கள் 24 மணி நேரமும் சேவைக்காக காத்திருப்பார்கள். நீங்கள் ஒரு மேற்பார்வையாளரை தனிமையில் நேரில் சந்தித்துப் பேசலாம், தொலைபேசியில் உரையாடலாம், (உள்ளூர் எண்ணை நீங்கள் கேட்டு அறிய வேண்டும்) அல்லது கீழ்க்கண்ட முகவரியில் அவர்களுக்கு கடிதம் எழுதலாம்.

Chris
PO Box 9090
Stirling
FK8 2SA

- ✓ **கேட்பாளர் அல்லது தோழர் என அழைக்கப்படும் மற்ற சிறைக்கைதிகள்** : நீங்கள் மனமுடைந்திருந்ததாலோ அல்லது கவலை கொண்டிருந்தாலோ உங்கள் பிரச்சனைகள் கேட்கவும் உங்களுக்கு ஆதரவளிக்கவும் பயிற்சிபெற்ற **சிறைக்கைதிகளே** கேட்பாளர்கள் ஆவர். உங்களையோ அல்லது வேறு யாரையோ நீங்கள் காயப்படுத்தக்கூடும் என அவர்கள் கவலைப்பட்டாலன்றி நீங்கள் அவர்களிடம் என்ன கூறினீர்கள் என்பதை சிறை அலுவலரிடம் அவர்கள் **தெரிவிக்கமாட்டார்கள்.** சில சிறைகள் தோழர்கள் எனப்படுபவர்களையும் கொண்டிருக்கும். நீங்கள் யாருடனாவது பேச விரும்பினால் நீங்கள் கூறுவதைக் கேட்க அமர்த்தப்பட்ட சிறைக் கைதிகளே தோழர்கள் ஆவர். தோழர்கள் அவர்கள் வேண்டிய தேவை ஏற்பட்டால் சிறை அலுவலரிடம் நீங்கள் கூறியதை சொல்லக்கூடும்.
  - ✓ **அதிகாரப் பூர்வ சிறைப் பார்வையாளர்கள்**

இவர்கள், தங்களைச் சந்திக்கவர அதிக நபர்களை கொண்டிருந்தால் சிறைக் கைதிகள் அல்லது சிறைக்கு வெளியே உள்ள யாராவது ஒருவருடன் பேச விரும்பும் சிறைக் கைதிகளை சந்திக்கக்கூடிய உள்ளூர் நபர்கள். இந்த நபர்களில் யாராவது ஒருவர் உங்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யும்படி அதிகாரப்பூர்வ சிறை பார்வையாளர் அனுமதி வழங்கல் அதிகாரியிடம் கேளுங்கள்.

**உங்களுக்கு உதவக்கூடிய மற்ற நபர்கள்**

**உங்களை யாராவது வேதனைப்படுத்தினாலோ அல்லது உங்களிடம் வன்முறையாக நடந்தாலோ**

- ✓ எந்த ஒரு சிறை அலுவலரிடமும் உடனடியாக கூறுங்கள். அவர்களால் உங்களுக்கு உதவ முடியும்.

**மற்ற செயல்பாடுகளில் உதவி**

- ✓ **பிற அமைப்புகளும்** சிறைக் கைதிகளுக்கு உதவிகள் புரிகின்றன. எடுத்துக்காட்டாக, பொதுமக்கள் ஆலோசனைக்குழு பணம் மற்றும் சட்டம் போன்ற விசயங்களில் உதவுகிறது. மது அல்லது போதைப் பழக்கம் நீக்குதல் அமைப்பானது போதைப்பொருள் அல்லது மதுவினால் ஏற்படும் பிரச்சனைகள் தீர உதவுகிறது. உங்கள் சிறையில் என்னவிதமான உதவிகளை நீங்கள் பெறமுடியும் என்பதைப் பற்றி சிறை அலுவலரிடம் கேளுங்கள்.
- ✓ **நியு பிரிட்ஜ் ஃபவுண்டேஷன்.** இந்த அமைப்பானது, சிறையில் உள்ள நபர்களை சந்தித்து சிறையிலிருந்து விடுதலையான பின்பான வாழ்க்கைக்கு அவர்கள் தயாராக உதவும் அமைப்பாகும்.

The New Bridge Foundation
27a Medway Street
London
SW1P 2BD
தொலைபேசி 0207 976 0779

**சிறையில் உள்ள பிரச்சனைகள் குறித்து யாரிடம் கூறுவது**

- ✓ **சுயாதீன கண்காணிப்புக்குழு** சிறைகள் நல்லமுறையில் இயக்குகின்றனவா என்பதை உறுதிப்படுத்த இவர்கள் சிறைகளை பரிசோதனையிடுவர். இவர்கள் சிறைக்காக பணிபுரிவதில்லை. இவர்கள் உள்ளூரைச் சேர்ந்த தன்னார்வலர்கள் ஆவர். சிறை வாழ்க்கை பற்றி உங்களுக்கு குறை அல்லது புகார் ஏதுமிருந்தால் அடுத்த முறை அவர்கள் சிறைக்கு வரும்போது சுயாதீன கண்காணிப்புக்குழு உறுப்பினர்களில் யாராவது ஒருவரையோ அல்லது மொத்தக் குழுவினரையோ காண வேண்டும் எனக்கேட்கலாம். இதைச் செய்ய ஒரு சிறப்பு படிவத்தை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும். சுயாதீன கண்காணிப்புக்குழுவினர் பற்றிய கையேடும் படிவமும் சிறையில் உங்கள் பிரிவில் இருக்க வேண்டும்.

- ✓ சிறை அலுவலரிடமோ அல்லது சிறைகள் மற்றும் நன்னடத்தை ஓம்புட்ஸ்மேன் என அழைக்கப்படுபவரிடமோ நீங்கள் புகார் செய்யலாம். **மேலதிக தகவலுக்கு 115ம் பக்கம் பார்க்கவும்.**

# குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு கொள்ளல்

குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ள உங்கள் சிறை நிர்வாகம் உங்களுக்கு உதவ வேண்டும்.

சிறையில்

- நீங்கள் கடிதங்கள் எழுதலாம்
- நீங்கள் ஒரு தொலைபேசி அழைப்புகள் எடுக்கலாம்
- உங்களைச் சந்திக்க பார்வையாளர்கள் வரலாம்.

உங்களுக்கு தேவையெனில் இந்த விஷயங்களில் உதவும்படி ஒரு சிறை அதிகாரியைக் கேளுங்கள்.

## குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் சந்திப்புக்கள்

**முக்கிய அம்சங்கள் (அடுத்த பக்கத்தில் மேலும் சில தகவல்கள் உள்ளன)**

- ✓ யாராவது ஒருவர் சிறைக்கு வந்து உங்களைச் சந்திக்கும் முன் **சந்திப்பு ஆணை** எனும் படிவத்தை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும். (நீங்கள் தண்டனை பெறாத அல்லது சிவில் கைதியாக இருந்தாலொளிய)
- ✓ சிறையில் உள்ள ஒரு அறையில் சந்திப்புக்கள் இடம் பெறும். அறையின் எந்தப் பகுதியில் அமர வேண்டும் என்பதை சிறை அலுவலர் உங்களிடம் கூறுவார்.
- ✓ சந்திப்புக்கள் நடைபெற வேண்டிய நாட்கள் மற்றும் நேரங்களை வழக்கமாக, ஒவ்வொரு சிறையிலும் உள்ள ஆளுநர் முடிவு செய்வார். வழக்கமாக, பொது விடுமுறை நாட்களில் (கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் போன்ற நாட்கள்) சந்திப்புகள் நடை **பெறஇயலாது.**
- ✓ குழந்தைகள் உங்களைச் சந்திக்கலாமா அல்லது இயலாதா என்பது குறித்து சிறை அலுவலர் முடிவு எடுப்பார். இது நீங்கள் புரிந்த குற்றம் மற்றும் சிறையில் உங்கள் நடவடிக்கை ஆகியவற்றை பொறுத்தது. இது குறித்து சிறை அலுவலர் உங்களிடம் கூறுகிறார்.

- ✓ குழந்தைகள் எத்தனை பேருடனும் வயதில் மூத்தோர் அதிகபட்சம் 3 பேர் ஒவ்வொரு முறையும் உங்களைச் சந்திக்கலாம். அவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் உங்களைச் சந்திக்க வேண்டும். அவர்களது பெயர்கள் சந்திப்பு ஆணையில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- ✓ வழக்கமாக, குழந்தைகள் வயதில் மூத்தவர் ஒருவர் துணையுடன் வர வேண்டும். ஆனாலும் சில சிறைகளில் 16 லிருந்து 18 வயதானவர்கள் தனியாகவே வந்து சந்திக்க அனுமதி உண்டு.
- ✓ உங்களை சந்திக்க வருபவர்கள் யார் என்பதை முன்கூட்டியே கண்டறிவது சிறப்பானதாகும். அதேதினத்தில் மற்றொரு குழுவினர்கள் உங்களைச் சந்திக்க வந்தால், உங்களைச் சந்திக்க அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படலாம்.
- ✓ **சிறை சேவை ஆணை 4410-ல்** மேலதிக தகவல் உள்ளது. இதன் ஒரு பிரதி நூலகத்தில் உள்ளது.

**தண்டனை வழங்கப்படாத மற்றும் சிவில் சிறைக்கைதிகளுக்கான தகவல்**

- ✓ உங்கள் குடும்பத்தினர் வழக்கமாக சிறைக்கு தொலைபேசியில் அழைத்து உங்களைச் சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்க வேண்டும். சந்திப்பு படிவத்தை நீங்கள் நிறைவு செய்ய **வேண்டியதில்லை.**
- ✓ வாரத்திற்கு 3 சந்திப்பிற்கு உங்களுக்கு அனுமதி உண்டு. ஒவ்வொரு முறையும் இந்த சந்திப்புக் காலத்தின் அளவு 1 மணி நேரமாகும். இந்த சந்திப்புக்களில் ஒன்று வார இறுதியில் அமையலாம்.
- ✓ சில சிறைகள் சந்திப்புக் கால அளவு குறைவாகவும் ஆனால் அதிக சந்திப்புகளையும் கொண்டிருக்கக்கூடும்.
- ✓ நீடிக்கப்பட்ட கால அளவுடன் அதிக சந்திப்புகளும் உங்களுக்குக் கிடைக்கக்கூடும். இது உங்கள் நடத்தை மற்றும் நீங்கள் இருக்கும் சிறை போன்ற அம்சங்களைப் பொறுத்தது. **64ம் பக்கம் பார்க்க.**
- ✓ ஒவ்வொருமுறையும் குழந்தைகள் எத்தனைபேருடனும் வயதில் மூத்தோர் அதிகபட்சம் 3 பேர் உங்களைச் சந்திக்கலாம்.
- ✓ சிலசிறைகள் பதின்பருவத்தினரை (Teen agers) வயதில் மூத்தோராகவே கணக்கில் கொள்கின்றனர். பதின் பருவத்தினர் உங்களைச் சந்திக்க வந்தால் அது குறித்து சிறை அலுவலருடன் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
- ✓ வேறொரு சிறையில் தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதியாக இருக்கும் உங்கள் குடும்ப உறுப்பினர் எவரையும் நீங்கள் சந்திக்க இயலும். இது வழக்கமாக நீங்கள் இருவரும், மேலும் ஒரு மாதத்திற்கு சிறையில் இருக்க வேண்டியுள்ள நிலையில் மட்டுமே நடக்க இயலும். இதைச் செய்ய வேண்டும் என நீங்கள் விரும்பினால் சிறை அலுவலரிடம் கூறுங்கள்.

## அனைத்து சிறைக்கைதிகளுக்குமான தகவல்

- ✓ ஒவ்வொரு 4 வாரத்திற்கும் குறைந்தபட்சம் 2 பார்வையாளர் சந்திப்புக்களை நீங்கள் பெறலாம். சந்திப்புக்களின் கால அளவு ஒரு மணி நேரமாகும்.
- ✓ சிறையில் உங்கள் நடவடிக்கைகளைப் பொறுத்து அதிக பார்வையாளர் சந்திப்புக்களும் உங்களுக்கு கிட்டக்கூடும். **64ம் பக்கம் பார்க்கவும்.**

பார்வையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்வது எப்படி

1. **சந்திப்பு ஆணை** எனப்படும் படிவத்தை நிறைவு செய்யவும். ஒவ்வொரு 2 வாரங்களுக்கு ஒரு முறை நீங்கள் ஒரு புதிய சந்திப்பு ஆணையைப் பெறுவீர்கள்.
2. நீங்கள் சந்திக்க விரும்பும் நபர்கள் அனைவரின் பெயரையும் படிவத்தில் எழுதவும். நீங்கள் சந்திக்க விரும்பும், குழந்தைகளின் பெயரையும் படிவத்தில் குறிப்பிடவும்.
3. சந்திப்பு ஆணையை நீங்கள் சந்திக்க விரும்பும் நபர்களில் ஒருவருக்கு அனுப்பவும்.
4. உங்களைச் சந்திக்க வரும் நபர்கள் அந்தப் படிவத்தை அவர்களுடன் கொண்டு வரவேண்டும்.

## பார்வையாளர்கள் சந்திப்பு பற்றிய மற்ற தகவல்

## வேறொரு சிறையில் இருக்கும் உங்கள் குடும்பத்தினர் ஒருவரை சந்தித்தல்

வேறொரு சிறையிலிருக்கும் உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினரை நீங்கள் சந்திக்கலாம். ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒரு முறை இதற்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம். இதற்காக, நீங்கள் இருவரும் சந்திப்பு ஆணையை நிறைவு செய்ய வேண்டும். இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்ய சிறிது காலம் எடுக்கும்.

## உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்கள் இருக்கும் இடத்திலிருந்து தொலைவில் உள்ள சிறைக்கு நீங்கள் கொண்டு செல்லப்பட்டால்

- பார்வையாளர் சந்திப்புக்களை நீங்கள் சேமிக்கலாம். குறைந்தபட்சம் 3 மற்றும் அதிகபட்சம் 26 பார்வையாளர் சந்திப்புக்களை நீங்கள் சேமிக்க இயலும். இவை **ஒன்று சேர்க்கப்பட்ட சந்திப்புகள்** எனப்படுகின்றன. இதை எவ்வாறு செய்வது என்பது பற்றி அறிய சிறை அலுவலரிடம் கேளுங்கள். சிறைகள் மிகவும் அதிக வேலைப்பளுவை கொண்டிருப்பதால் இதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டி இருக்கும்.
- உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள சிறைக்கு **குறுகிய காலத்திற்கு** நீங்கள் மாற்றப்பட முடியுமா என்று சிறை ஆளுநரிடம் நீங்கள் கேட்கலாம். தற்போதுள்ள சிறையில் ஆறுமாத காலம் இருந்த பின்னர் நீங்கள் இதைச் செய்ய முடியும்.
- உங்களது புதிய சிறையின் பார்வையாளர் சந்திப்பு விதிகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.
- உங்கள் பழைய சிறைக்கு நீங்கள் திரும்பி வந்தவுடன் மீண்டும் நீங்கள் பார்வையாளர் சந்திப்புக்களை சேமிக்கத் தொடங்கலாம்.

## பார்வையாளர்களின் பயணச் செலவுக்கான உதவி

- சிறிது பண உதவி பெற இயலும். இந்தப் பண உதவியைப் பெற அவர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் சில அரசாங்க பண சலுகைகள் பெறுபவராகவும் மற்றும் அதிகம் சம்பாதிக்கக் கூடியவராக இல்லாமலும் இருக்க வேண்டும்.
- உதவி பெற்ற சிறைப்பார்வையாளர் சந்திப்பு திட்டம் என்று அழைக்கப்படும் திட்டத்திலிருந்து பணத்தைப் பெற விண்ணப்பிக்க அவர்கள் **ஒரு படிவத்தை** நிறைவு செய்ய வேண்டும்.
- இதைபற்றிய தகவல் **சிறை சேவை ஆணை 4405**லும் பார்வையாளர்கள் உங்களைச் சந்திக்கும் அறையிலும் உள்ளது.
- சிறை, பார்வையாளர் மையம் மற்றும் பார்வையாளர் உங்களைச் சந்திக்கும் அறை ஆகிய இடங்களிலிருந்து நிரப்ப வேண்டிய படிவத்தை நீங்கள் பெறலாம் அல்லது கீழ்காணும் முகவரியில் உதவி பெற்ற சிறைப்பார்வையாளர் சந்திப்பு அலகை தொடர்பு கொண்டும் பெறலாம்.

Assisted Prison Visits Unit
PO Box 2152
Birmingham
B15 1SD

தொலைபேசி 0845 300 1423 அல்லது 0121 626 2000

(திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 10:15 – 11.45 மற்றும் மதியம் 14:15 – 15.45 ஆகிய நேரங்களில்)

டெக்ஸ்ட் தொலைபேசி : 0845 304 0800 (அதே நேரங்களில்)

## கடிதங்கள்

### முக்கிய அம்சங்கள்

- ✓ உங்கள் கடிதத்தில் என்ன இருக்கலாம் அல்லது எவையெல்லாம் இருக்ககககூடாது என்பதைப் பற்றி **சிறை சேவை ஆணை 4411** உங்களுக்கு எடுத்துக்கூறும். விதிகளை நீஙகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால் சிறை ஆணை என்ன கூறுகிறது என்பது பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிடில் உங்களுக்கு உதவும்படி சிறை அலுவலரைக் கேளுங்கள்.
- ✓ ஒவ்வொரு வாரமும் ஒரு கடிதத்தை நீங்கள் இலவசமாக அனுப்பலாம். அதாவது அஞ்சல் தலைக்கு நீங்கள் தொகை செலுத்த வேண்டியதில்லை. நீங்கள் தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதியாக இருந்தால் ஒரு வாரத்திற்கு 2 கடிதங்களை நீங்கள் இலவசமாக அனுப்பலாம்.
- ✓ ஏதாவது தண்டனைகளை நீங்கள் பெற்றாலும் கூட இது மாறாது.
- ✓ வேறு அதிக கடிதங்கள் அனுப்ப நீங்கள் தொகை செலுத்த வேண்டும்.
- ✓ சில காரணங்களால் யாராவது உங்களை வந்து சந்திக்க இயலவில்லை என்றால், அவர்கள் உங்களை வந்து சந்திப்பதற்கு பதிலாக ஒரு இலவச கடிதத்தை நீங்கள் அவருக்கு அனுப்பலாம்.
- ✓ ஏதாவது முக்கிய விஷயம் அல்லது அவசரச் செய்தியை தெரிவிக்க நீங்கள் கடிதம் எழுத வேண்டி இருந்தால், இலவசக் கடிதம் நீங்கள் அனுப்ப இயலும். எடுத்துக்காட்டாக, வேறு சிறைக்கு விரைவில் நீங்கள் மாற்றப்பட இருந்து அதை நீங்கள் உங்கள் குடும்பத்தினருக்கு தெரிவிக்க வேண்டியது போன்ற சூழ்நிலைகள்.
- ✓ நீங்கள் எத்தனை கடிதங்கள் வேண்டுமானாலும் அனுப்பப்படலாம்.

### உங்கள் கடிதங்கள் எந்த அளவு இரகசியமானது?

- நீங்கள் அனுப்பும் அல்லது உங்களுக்கு வரும் அத்தனை கடிதங்களும் சிறை அலுவலரால் திறந்து பார்க்கப்படும். அனுமதிக்கப்படாத எதுவும் கடிதத்துடன் அனுப்பப்படவில்லை என்பதை பார்த்து அறிவதற்காகவே இந்த நடவடிக்கை. வழக்குரைஞர்கள், நீதிமன்றங்கள் மற்றும் பிற முக்கிய அமைப்புகளுக்கு இதில் விதி விலக்கு உண்டு. **47ம் பக்கம் பார்க்கவும்.**
- பெரும்பாலான கடிதங்களை சிறை அலுவலர் **படிக்க மாட்டார்**. ஆனால் குறிப்பிட்ட கால அளவுகளில் சிறிய எண்ணிக்கையிலான கடிதங்களை அவர்கள் படிப்பார்கள்.

**கடிதங்கள் பற்றி மேலதிக தகவல்**

- கீழ்க்காணும் காரணங்கள் உள்ள சமயங்களில் சிறை அலுவலர் உங்களது அனைத்து கடிதங்களையும் **படிக்கக்கூடும்.**
    - o நீங்கள் ஏ – பிரிவு சிறைக் கைதியாக இருந்தால்
    - o நீங்கள் சிறையில் இருந்து தப்பிவிடக்கூடும் என கருதினால்
    - o குழந்தைகளுக்கு நீங்கள் தீங்கு விளைவிக்கக்கூடும் என கருதினால் (குறைந்த பட்சம் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இது சோதித்து அறியப்படும்.)
    - o நீங்கள் வன்கொடுமை குற்றத்திற்காக தண்டனை வழங்கப்பட்டு இருந்தால் அல்லது நீங்கள் விளக்கமறியலில் இருந்தால்
    - o உங்களுக்கு கட்டுப்பாட்டு ஆணை அல்லது நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டிருந்தால் (இது ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சரிபார்க்கப்படும்)
    - o சிலகாரணங்களுக்காக கடிதங்களில் உள்ளவை சிறைக்கோ அல்லது மற்ற நபர்களுக்கோ ஆபத்தானது என சிறை அலுவலர் கருதினால்

## தொலைபேசி அழைப்புகள்

**முக்கிய அம்சங்கள் (அடுத்த பக்கத்தில் மேலும் சில விவரங்கள் உள்ளன)**

- ✓ நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்களின் பட்டியலை எழுத சிறை அலுவலர் உங்களுக்கு ஒரு படிவத்தை கொடுப்பார். எடுத்துக்காட்டாக, உங்கள் குடும்ப நபர்கள், நண்பர்கள் மற்றும் உங்கள் வழக்குரைஞர்
- ✓ இந்தப் பட்டியல் ஏற்புடையது என்றால் சிறை அலுவலர் அதற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் சிறை அலுவலர் முதலில் சம்மதம் தெரிவிக்காமலும்கூட நீங்கள் ஒரு எண்ணிற்கு தொலைபேசியில் அழைக்கலாம். இது உங்கள் பாதுகாப்பு வகைப் பிரிவைப் பொறுத்தது.
- ✓ **பின்** எண் எனப்படும் ஒரு எண்ணை சிறை அலுவலர் உங்களுக்கு கொடுப்பார். ஒவ்வொரு முறையும் தொலைபேசியில் அழைப்பதற்கு முன்பாக இந்த எண்ணை நீங்கள் பதிவு செய்ய வேண்டும்.
- ✓ தொலைபேசியை பயன்படுத்துவது தொடர்பான சில விதிகளை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள் என்பதை தெரிவிப்பதற்காக ஒரு ஆவணத்தில் நீங்கள் கையொப்பம் இடவேண்டும்.

- ✓ கிரெடிட் – ஐ வாங்குவதன்மூலம் நீங்கள் தொலைபேசி அழைப்புகளுக்கு பணம் செலுத்தலாம். இது நீங்கள் முதலிலேயே செலுத்தும் தொகையாகும். ஒவ்வொரு முறை நீங்கள் அழைக்கும்போதும் அந்த அழைப்புக்கு உண்டான கட்டணம் கழிக்கப்படும்.
- ✓ உங்கள் தனிப்பட்ட பணத்தைக் கொண்டோ அல்லது நீங்கள் சம்பாதித்த பணத்தைக் கொண்டோ சிறை கடையில் இருந்து கிரெடிட்டை நீங்கள் வாங்கலாம்.
- ✓ நீங்கள் சிறையிலிருக்கும் போதான உங்கள் நடவடிக்கையைப் பொறுத்து நீங்கள் தொலைபேசியில் பேச கூடுதல் நேரம் செலவழிக்க இயலும். **64ம் பக்கம் பார்க்கவும்.**
- ✓ உங்கள் வழக்குரைஞருடன் மிகவும் அவசரமாக பேச வேண்டும். அல்லது வேறு முக்கியமான காரணம் என்றால் மிகவும் தனிப்பட்ட மற்றொரு தொலைபேசியைப் பயன்படுத்த வேண்டும் என நீங்கள் கேட்கலாம். நீங்கள் அதைச் செய்யலாமா என்பது குறித்து ஆளுநர் முடிவு எடுப்பார்.

**சிறை சேவை ஆணை 4440 , அத்தியாயம் 4ல்** இது குறித்த தகவல் உள்ளது. இதன் ஒரு பிரதி நூலகத்தில் உள்ளது.

## உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்கள் வேறொரு நாட்டில் வசித்தால்

- நீங்கள் மேற்கொள்ளும் மற்ற அழைப்புகள் தவிர, அவர்களுக்கு மாதத்திற்கு ஒரு **இலவச** தொலைபேசி அழைப்பு நீங்கள் செய்யலாம். அழைப்பின் கால அளவு 5 நிமிடங்களாக இருக்கும். கடந்த மாதத்தில் உங்கள் குடும்பத்தினரோ அல்லது நண்பர்களோ உங்களைச் சந்தித்திருந்தால் உங்களுக்கு இந்த இலவச அழைப்பு **கிடைக்காது.**
- நெருக்கமான குடும்பத்தினரை மற்றொரு நாட்டில் கொண்டுள்ள சிறைக் கைதிகள் அல்லது வெளிநாட்டு பிரஜைகள் (யூகே பாஸ்போட் அற்றவர்கள்) இந்த நாட்டில் உள்ள குடும்பத்தினர் அல்லது நண்பர்களுக்கு தொலைபேசியில் பேச தங்கள் தனிப்பட்ட பணத்தை பயன்படுத்தலாம்.

### உங்கள் தொலைபேசி அழைப்புகள் எந்த அளவு இரகசியமானவை

- நீங்கள் அதிக அல்லது அதி உயர் இடர் வகைப் பிரிவான வகைப்பிரிவு ஏ -ஐ சேர்ந்த சிறைக் கைதியென்றால் சிறை அலுவலர் உங்களது **அனைத்து** தொலைபேசி அழைப்பு உரையாடல்களையும் கேட்பார்.
- அவ்வாறு இல்லையெனில், சிறை அலுவலர் உங்கள் தொலைபேசி அழைப்பு உரையாடல்கள் **சிலவற்றை** கேட்கக்கூடும்.
- தொலைபேசியில் நீங்கள் பேசும்போது, நீங்கள் மற்றும் மறுமுனையில் பேசுபவர் ஆகிய இருவருடைய உரையாடல்களையும் கேட்பார். உரையாடல்களை அவர்கள் பதிவு செய்யவும் கூடும். இதன்மூலம் உங்கள் உரையாடல்களின் பிரதி அவர்களிடம் இருக்கும்.
- இது உங்கள் சிறையில் நடைபெற்றால், அதுபற்றி சிறை அலுவலர் உங்களுக்கு கூறுவார்.
- நீங்கள் பேசக்கூடாதவற்றை பேசினால் சிறை அலுவலர் உங்கள் அழைப்பை துண்டிக்கலாம்.
- உங்கள் வழக்குரைஞர்கள் அல்லது தனியார் அமைப்புகளிடம் உரையாடுவதை அலுவலர் கேட்க மாட்டார்.

## திருமணம் செய்தல் அல்லது சிவில் பார்ட்னர் ஷிப்

- நீங்கள் சிறையிலிருக்கும்போது திருமணம் செய்து கொள்ளவோ அல்லது சிவில் பார்ட்னர் ஷிப்பிற்கோ நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- இதைச் செய்ய, ஒரு வேண்டுகோள் படிவம் அல்லது கடிதத்தை ஆளுநருக்கு எழுதி அதை மேல் நடவடிக்கைக்காக சிறை அலுவலரிடம் கொடுத்து அனுப்பலாம்.
- திருமண விழா அல்லது சிவில் பார்ட்னர்ஷிப் விழா எங்கு நடத்தப்படும் சிறையிலா அல்லது அருகில் உள்ள பதிவாளர் அலுவலகத்திலோ என்பதை ஆளுநர் முடிவெடுப்பார்.
- நீங்களும் உங்கள் துணையும் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சரியான நபரைத் தொடர்பு கொள்ளல், சரியான படிவங்களை நிறைவு செய்தல் மற்றும் மற்ற செலவினங்களுக்கு பணம் செலுத்தல்.
- சில ஏற்பாடுகளைச் செய்வதில் மதகுரு உங்களுக்கு உதவக்கூடும்.

**மேலதிக தகவல்**

- திருமணம் செய்தல் பற்றிய மேலதிக தகவல் **சிறை சேவை ஆணை 4450**ல் உள்ளது.
- சிவில் பார்ட்னர் ஷிப் பற்றிய மேலதிக தகவல் **சிறை சேவை ஆணை 4445**ல் உள்ளது.

இவற்றின் பிரதிகளை நூலகத்தில் இருந்து நீங்கள பெறலாம்.

# உங்கள் வழக்குரைஞர் அல்லது பிற அதிகார பூர்வ நபர்களுடன் தொடர்பு கொள்ளல்

## உங்கள் வழக்குரைஞர், நீதிமன்றங்கள் அல்லது பிற அதிகாரபூர்வ அமைப்புகளிடமிருந்து நீங்கள் கடிதங்கள் பெறுதல் அல்லது நீங்கள் அவர்களுக்கு அனுப்புதல்

- மிகச்சரியான காரணம் இல்லாதவரை, சட்ட விஷயங்கள் குறித்து உங்கள் வழக்குரைஞர் அல்லது நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களை சிறை அலுவலர் பிரிக்கவோ அல்லது படிக்கவோ மாட்டார். இது **கடித விதி 39** கடிதம் எனப்படும்.
- சிறை மற்றும் நன்னடத்தை ஓம்புட்ஸ்மேன் உங்கள் எம்.பி. மற்றும் உளவியல் ஆலோசகர் போன்ற வேறு சில அமைப்புகளுக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்கும் இது பொருந்தும். இந்த அமைப்புகளின் பட்டியலை தெரிந்து கொள்ள **சிறை சேவை ஆணை 4411**-ஐ பார்க்கவும். இதன் ஒரு பிரதி நூலகத்தில் உள்ளது.

### கடிதம் அனுப்புதல்

கடிதத்தை அனுப்ப சிறை அலுவலரிடம் அதைக் கொடுக்கும்முன் பெயர் மற்றும் முகவரியுடன், இவ்றையும் கடிதத்தின் உறையில் எழுத வேண்டும்.

- உங்கள் வழக்கறிஞருக்கு அல்லது நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களின் உறையில் **சிறை விதி39** என்பதை எழுதவும்.
- மற்ற நபர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களின் உறையில் ரகசிய **அணுகல்** என்பதை எழுதவும்.

### உங்கள் வழக்குரைஞர் நீதிமன்றங்கள் அல்லது பிற அதிகார பூர்வ அமைப்புகளிடமிருந்து கடிதங்களைப் பெறுதல்

உங்களுக்கு கடிதங்களை அனுப்பும் நபர் கீழ்காணும் விவரங்களை கடிதத்தின் உறையில் எழுத வேண்டும்.

- உங்கள் பெயர் மற்றும் சிறை எண்.
- அவர்களது முகவரி மற்றும் தொலைபேசி எண்
- சிறைவிதி 39 அல்லது ரகசிய அணுகல்
- கடிதத்தின் உறையில் உங்கள் வழக்குரைஞர் கையொப்பமிட வேண்டும். பிறகு கடிதத்தை மற்றொரு உறையிலிட்டு ஆளுநரின் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது அதற்குப் பதிலாக கடிதத்தைப் பற்றிய சிறுகுறிப்பையும் அவர்கள் எழுதலாம்.

- சட்ட ரீதியான செயலுக்காக இருந்தால் நீங்கள் கடிதத்தின் உறையில் **விதி 39** என மட்டுமே எழுத வேண்டும்.
- நீங்கள் அனுப்ப **அனுமதிக்கப்படாத** எதையும் கடித்தினுள் வைத்து **அனுப்பக்கூடாது.**
- ஏதோ தவறு உள்ளது என சிறை அலுவலர் நினைத்தால், அவர் உங்கள் முன்னால் கடிதத்தை திறந்து பார்ப்பார். இதைச் செய்யலாமா என அவர்கள் ஆளுநரிடமோ அல்லது இயக்குநரிடோ முதலில் கேட்க வேண்டும்.

## தொலைபேசி அழைப்புகள் மற்றும் அவர்களுடனான சந்திப்புகள்

- உங்கள் வழக்குரைஞர் மற்றும் மற்ற அதிகாரப்பூர்வ பார்வையாளர்கள் (சட்ட விஷயங்கள் தொடர்புடைய நபர்கள்) உங்களை சிறையில் சந்திக்கலாம்.
- இந்த நபர்கள் உங்களை சந்திக்கும்போது ஒரு சிறை அதிகாரி அங்கு இருப்பார். ஆனால், அவர்கள் சற்று தொலைவில் இருப்பார்கள் எனவே நீங்கள் கூறுவதை அவர்களால் கேட்க இயலாது.
- உங்களது வழக்குரைஞர் அல்லது பிற சட்டம் தொடர்பான நபர்களுக்கு நீங்கள் மேற்கொள்ளும் எந்த ஒரு தொலைபேசி அழைப்புகளையும் சிறை அலுவலர் கேட்கமாட்டார்

## செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி அல்லது சஞ்சிகைகளுடன் தொடர்பு கொள்ளல்

கீழ்க்கண்டவைகளை நீங்கள் பின்பற்றும்வரை செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி அல்லது சஞ்சிகைகளுக்கு நீங்கள் எழுதலாம்.

- நீங்கள் செய்த குற்றம் குறித்தோ அல்லது வேறு யாராவதுஒருவர் செய்த குற்றம் குறித்தோ நீங்கள் எழுதாத வரைக்கும் (குற்றம், தீர்ப்பு, நீதி தண்டனை அல்லது சிறை சேவை போன்றவை குறித்து தீவிரமான கருத்தை கூற வேண்டி இருந்தாலன்றி)
- எந்த ஒரு சிறைக் கைதி அல்லது சிறை அலுவலரை இவர்தான் என தெளிவாக அடையாளம் காட்டக்கூடிய விதத்தில் நீங்கள் **எழுதாதவரைக்கும்.** எடுத்துக்காட்டாக ஒரு நபரின் பெயரை குறிப்பிட்டு எழுதக்கூடாது.
- கடிதங்களின் விதியை நீங்கள் பின்பற்றும்வரைக்கும்
- நீங்கள் செய்யும் செயலுக்கு நீங்கள் ஊதியம் **பெறாதவரைக்கும்** (நீங்கள் தண்டனை வழங்கப்படாத சிறைக்கைதியாக இருந்தாலன்றி)

பத்திரிக்கையாளர்கள் உங்களைச் சந்திக்கலாமா அல்லது அவர்களிடம் இருந்து தொலைபேசி அழைப்புகளைப் பெறலாமா என்பதை ஆளுநர் அல்லது இயக்குநரிடம் நீங்கள் கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

**சிறைச்சேவை ஆணை 4470ல்** மேலதிக தகவல் உள்ளது. இதன் ஒரு பிரதி நூலகத்தில் உள்ளது.

# சிறைவாழ்க்கை

## உங்கள் சிறை எண்.

நீங்கள் சிறைக்கு முதலில் வரும்போது உங்களுக்கு சிறை எண் அளிக்கப்படும். நீங்கள் வேறொரு சிறைக்கு மாற்றப்பட்டாலும் உங்கள் சிறை எண் மாறாது. உங்களையும் மற்றும் நீங்கள் சம்பந்தப்பட்ட செயல்களையும் கண்காணிக்க சிறை அலுவலருக்கு இந்த எண் பயன்படும்.

## உங்கள் சிறை பதிவேடுகள்

உங்களைப் பற்றிய தகவலை கணிணியிலும் ஆவணத்திலும் சிறை நிர்வாகம் பதிந்து வைத்திருப்பதே உங்கள் சிறை பதிவேடாகும்.

இது பின்வருவன போன்ற விவரங்களை உள்ளடக்கும்

- உங்கள் பெயர் மற்றும் பிறந்த தேதி
- நீங்கள் உள்ள செல்
- நீங்கள் நீதிமன்றத்திற்கு சென்றது குறித்து விவரங்கள்
- சிறையில் நீங்கள் இருக்கும்போது உங்களுக்கு நடந்த ஏதாவது விசாரணைகள்
- உங்கள் உடல்நலம் பற்றிய தகவல்
- நீங்கள் மேற்கொள்ளும் பணி அல்லது கல்வி குறித்த தகவல்

## சிறைசேவை ஆணைகள் (Prison Service Orders -PSO) மற்றும் சிறைசேவை கட்டளைகள் (Prison Service Instructions -PSI)

செயல்முறைகளை சிறைகள் மேற்கொள்ளும் வழிகள் மற்றும் சிறை நெறிமுறைகள் (விதிகள்) போன்றவற்றை இவைகள் விளக்கமாக எடுத்துரைக்கும்.

## உங்களைப் பற்றிய தகவலை சிறை அலுவலர் என்ன செய்வார்?

- ✓ உங்களைப் பற்றிய தகவலை சிறைஅலுவலர் இரகசியமாக வைத்திருப்பார். ஆனால் இந்தத் தகவலை காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள் போன்ற நபர்களுக்கு அவர்கள் காட்ட வேண்டிய தேவை இருக்கும்.
- ✓ உங்களைப் பற்றி சிறை நிர்வாகம் வைத்திருக்கும் தகவல்களை நீங்கள் காணலாம். நீங்கள் **அனைத்து** தகவல்களையும் பார்க்க விரும்பினால் நீங்கள் 10 பவுண்டு செலுத்த வேண்டும்.
- ✓ நீங்கள் இதைச் செய்ய வேண்டுமெனில் **குறித்த நபர் அணுகுதல் வேண்டுகோள் படிவம்** என்ற படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும். இதை நீங்கள் சிறை அதிகாரியிடம் கேளுங்கள் அல்லது கேட்பதற்குப் பதிலாக நீங்கள் ஒரு தாளில் குறிப்பெழுதியும் விண்ணப்பிக்கலாம்.
- ✓ படிவத்தை அல்லது குறிப்பை ஒழுக்கம் / பாதுகாவல் அலுவலகம் அல்லது பணியாளர் துறைக்கு அனுப்ப வேண்டும்.
- ✓ சில குறிப்பிட்ட விசயங்களை சிறை நிர்வாகம் உங்களுக்கு தெரிவிக்கக்கூடாது என சட்டம் உள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு குற்றத்தை கண்டுபிடிக்கப்பயன்படுத்தப்படும் தகவலை அவர்கள் உங்களுக்கு அளிக்க இயலாது.
- ✓ **சிறைசேவை ஆணை 9020-ல்** மேலதிக தகவல் உள்ளது. இதன் ஒரு பிரதி நூலகத்தில் உள்ளது.
- ✓ உங்களுடைய தகவல்களை சிறைகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பது குறித்த மேலதிக விவரங்கள் அறிய கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

The information manager
H M Prison Service
Room 330
Bell House
John Islip Street
London
SW1P 4LH

## உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவு

**பயனுள்ள வார்த்தைகள்**

**திறந்தசிறைகள் :** இவை, அதிகம் நடமாட மற்றும் பிற செயல்களைச் செய்ய மற்ற சிறைகளை விட உங்களுக்கு அதிக சுதந்திரம் அளிக்கும் சிறைகளாகும். நீங்கள் தங்கியிருக்கும் செல்லுக்கான திறவுகோலை நீங்களே வைத்திருக்கலாம். நீங்கள் நம்பிக்கைக்குரியவர் என அலுவலர் கருதினால் நீங்கள் திறந்த சிறையில் போடப்படலாம்.

**மூடிய சிறைகள்** சிறையில் உள்ள பெரும்பாலான நபர்கள் மூடிய சிறைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பர். இந்த சிறைகள் மிகவும் பாதுகாப்பானவை மற்றும் அங்கிருந்து யாரும் தப்பிவிட முடியாது.

### உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவு என்றால் என்ன?

- நீங்கள் என்ன வகையான சிறைக்கைதிகள் என்பதைப் பற்றியதே உங்கள் பாதுகாப்பு வகைப் பிரிவாகும்.
- மற்றவர்களை நீங்கள் காயப்படுத்துவீர்களா அல்லது சிறையில் இருந்து தப்பிக்க முயற்சிப்பீர்களா மற்றும் சிறையில் இருந்த தப்பித்தால் நீங்கள் எவ்வளவு அபாயகரமானவராக இருப்பீர்கள் என்பது போன்ற விஷயங்களை சிறை அலுவலர் பரிசீலிப்பார்.
- உங்களை எந்த பாதுகாப்பு வகைப் பிரிவில் சேர்க்கலாம் என சிறை அலுவலர் முடிவெடுத்து அதை உங்களிடம் கூறுவார்.
- நீங்கள் உய ர்பாதுகாப்பு வகைப்பிரிவில் (ஏ அல்லது பி போன்ற) இருந்தால் சிறையில் செயல்களை மேற்கொள்வதில் மற்ற சிறை கைதிகளை விட உங்களுக்கு குறைந்த அளவு சுதந்திரமே கிடைக்கும். நீங்கள் தப்பிப்பதை தடுத்து நிறுத்த உங்களை சிறை அலுவலர் அதிகம் சோதனையிடுவார்.
- வயதில் மூத்த சிறைக் கைதிகளைப் போல் அல்லாமல் இளம் குற்றவாளிகளுக்கு மாறுபட்ட பாதுகாப்பு வகைப்பிரிவுகள் உண்டு.

வயதில் மூத்தோருக்கான பாதுகாப்பு வகைப்பிரிவுகள்

1. **வகைப்பிரிவு ஏ.** இதுவே நீங்கள் சிறைக்கு வெளியிலுள்ள யாராவது ஒருவரை நீங்கள் காயப்படுத்துவீர்கள் மேலும் / அல்லது தப்பிக்க முயற்சிப்பீர்கள்) எனவே, நீங்கள் தப்பிப்பபதைத் தடுக்க இயன்ற அனைத்தும் செய்யப்படும்.
2. **வகைப்பிரிவு பி.** இது நீங்கள் தப்பிப்பதற்கு வாய்ப்பே இருக்கக்கூடாது எனச் சிறை அலுவலர் கருதும் இடமாகும்.
3. **வகைப்பிரிவு சி.** இது நீங்கள் தப்பிக்கமாட்டீர்கள். ஆனால் திறந்தவெளிச் சிறையில் உங்களை நம்பமுடியாது எனச் சிறை அலுவலர் கருதும் இடமாகும்.
4. **வகைப்பிரிவு டி.** இது திறந்தவெளிச் சிறையில் உங்களை நம்பலாம் எனச் சிறை அலுவலர் கருதும் இடமாகும்.

இளம் குற்றவாளிகளுக்கான பாதுகாப்பு வகைப்பிரிவுகள்

1. **வகைப்பிரிவு ஏ :** இது நீங்கள் யாராவது ஒருவரை காயப்படுத்துவீர்கள் மற்றும் நீங்கள் இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மையத்திலிருந்து தப்பிப்பதை தடுக்க இயன்றபடி அனைத்து ஏற்பாடுகளும் உள்ள இடமாகும்.

2. **கட்டுப்படுத்தப்பட்ட தகுதிநிலை :** இது, உங்கள் இளம்குற்றவாளிகள் சீர்திருத்த மையத்தின் பாதுகாப்பான பகுதியில் வைக்க வேண்டும் என சிறை அலுவலர் கருதுவதாகும்.

3. **மூடப்பட்ட நிலைகள் :** நீங்கள் ஆபத்து குறைந்தவர் ஆனாலும், திறந்த இளம் குற்றவாளிகள் மையத்தில் இருக்க பாதுகாப்பற்றவர் என சிறை அலுவலர் கருதுவதாகும்.

4. **திறந்த நிலைகள் :** நீங்கள் திறந்த இளம் குற்றவாளிகள் மையத்தில் இருக்க கூடிய அளவு உங்களை நம்பலாம் என சிறை அலுவலர் கருதுவதாகும்.

## உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவு சரியானதுதான் என்பதை உறுதிப்படுத்த பரிசோதித்தல்

நீங்கள் சரியான பாதுகாப்பு வகைப்பிரிவில் தான் உள்ளீர்கள் என்பதை சிறை அலுவலர் தொடர்ந்து கண்காணிப்பார். நீங்கள் பாதுகாப்பான நபராகிவிட்டீகள் அல்லது அதிக ஆபத்தானவராகிவிட்டீர்கள் என சிறை அலுவலர் கருதினால் அவர்கள் உங்களது பாதுகாப்பு வகைப்பிரிவை மாற்றுவர்.

- **உங்கள் தண்டனைக்காலம் ஒரு வருடம் மற்றும் 4 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருந்தால்**

ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு முறை சிறை அலுவலர் உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவை பரிசீலனை செய்வார்.

- **உங்கள் தண்டனைக்காலம் 4 வருடங்களுக்கும் அதிகமாக இருந்தால்**

ஒவ்வொரு வருடமும் சிறை அலுவலர் உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவை பரிசோதிப்பார்.

- **நீங்கள் வகைப்பிரிவு ஏ சிறைக்கைதியாக இருந்தால்**

சிறை சேவை தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர் உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவை பரிசோதிப்பார்.

- **நீங்கள் வகைப்பிரிவு டி சிறைக்கைதியாக இருந்தால்**

உங்களது பாதுகாப்பு வகைப்பிரிவை சிறை அலுவலர் அதிகம் பரிசோதிக்கத் தேவையில்லை.

தவறானது என நீங்கள் கருதினால், உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவு குறித்து நீங்கள் புகார் செய்யலாம். 110ம் பக்கம் பார்க்கவும்.

## உங்கள் தண்டனைக் காலத்தை நீங்கள் எங்கு கழிப்பீர்கள்.

- ✓ உங்களுக்கு தண்டனை வழங்கிய நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள உள்ளுர் சிறை அல்லது இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மையத்தில் உங்கள் தண்டனை காலத்தை கழிக்க தொடங்குவீர்கள்.
- ✓ உங்கள் தண்டனைக்காலம் குறைவானது என்றால் நீங்கள் தண்டனைக் காலம் முழுவதும் அதே சிறையில் இருக்கக்கூடும்.
- ✓ உங்கள் தண்டனைக்காலம் அதிகம் எனில், மிக விரைவில் வேறொரு சிறைக்கு நீங்கள் மாற்றப்படுவீர்கள்.
- ✓ நீங்கள் செல்ல விரும்பும் சிறையை நீங்கள் தேர்ந்தெடுக்க **இயலாது**. ஆனால் உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள சிறைக்கு நீங்கள் மாற விரும்பினால் அது குறித்து சிறை அலுவலரிடம் கேட்டுக் கொள்ளலாம். இந்த விஷயத்தில் அவர்கள் உங்களுக்கு உதவக் கூடும்.
- ✓ சிறை மாற விரும்பும் சிறைக்கைதிகள் நிறைய பேர் உள்ளதால் மற்றொரு சிறைக்கு மாறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருக்கும்.

## பல்வேறு வகையான சிறைகள்

### 1. உள்ளூர் சிறைகள்

- கீழே குறிப்பிட்டுள்ளவை உங்களுக்குப் பொருந்தும் என்றால் முதலில் நீங்கள் உள்ளூர் சிறைக்கோ அல்லது இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மையத்திற்கோ கொண்டு செல்லப்படுவீர்கள்.
    - தற்போதுதான் உங்களுக்கு நீதிமன்றத்தினால் உங்களுக்கு தண்டனை அல்லது தண்டனைக்காலம் வழங்கப்பட்டிருந்தால்
    - நீங்கள் விளக்கமறியலில் இருந்து உங்கள் வழக்கு விசாரணைக்காக காத்துக்கொண்டிருந்தால்
- உங்களுக்கு இங்கு பாதுகாப்பு வகைப்பிரிவு அளிக்கப்படும்.
- நீங்கள் இங்கேயே இருக்கக்கூடும் அல்லது வேறொரு சிறைக்கோ அல்லது இளம் குற்றவாளி சீர்த்திருத்த மையத்திற்கோ மாற்றப்படுவீர்கள். இது உங்கள் தண்டனை கால அளவைப் பொறுத்தது.
- உள்ளூர் சிறைகள் அனைத்தும் மூடிய சிறைகளேயாகும்.

### 2. பயிற்சி சிறைகள்

- உள்ளூர் சிறைக்கு நீங்கள் அனுப்பப்பட்ட பிறகு கூடிய விரைவில் ஒரு பயிற்சி சிறைக்கு நீங்கள் மாற்றப்படலாம்.
- பயிற்சி சிறைகள் திறந்த சிறைகளாகவோ அல்லது மூடிய சிறைகளாகவோ இருக்கக்கூடும்.
- நீங்கள் விடுதலையான பின்பு மற்றொரு குற்றத்தை செய்யாமலிருக்க உங்களுக்கு உதவக்கூடிய வகுப்புகள் மற்றும் பயிற்சிகளை இந்த சிறைகளில் நீங்கள் மேற்கொள்ளலாம். உதவக்கூடிய வகுப்புகள் மற்றும் பயிற்சிகளை பெறுவதற்கு நீங்கள் நீண்ட காலம் காத்து இருக்க வேண்டி இருக்கும்.

### 3. இளம் குற்றவாளிகள் சீர்திருத்த மையம்

- இந்த இடங்கள், 15 லிருந்து 21 வயதிற்குட்பட்ட குற்றம் புரிந்த இளைஞர்களுக்கானதாகும்.

## 4. உயர் பாதுகாப்பு சிறைகள்

- இந்த சிறைகள், பாதுகாப்பு வகைப்பிரிவு ஏ அல்லது பி வகைப்பிரிவு வழங்கப்பட்ட சிறைக்கைதிகளுக்கானதாகும்.
- தற்சமயம் 8 உயர் பாதுகாப்பு சிறைகள் உள்ளன. அவையாவன : பெல்மார்ஷ், ஃபிராங்லேண்ட், ஃபுல்சுட்டோன், லாங் லார்டின், மான்செஸ்டர், வேக்பீல்டு, ஒயிட்மூர் மற்றும் உட்ஹில்

## 5. தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் சிறைகள் (சிலசமயம் ஒப்பந்த சிறைகள் எனப்படும்)

- இந்த சிறைகள் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.
- மற்ற சிறைகளில் உள்ள சிறைக் கைதிகளைப் போன்றே இங்குள்ள சிறைக் கைதிகளும் அதே விதிகளைப் பின்பற்றுவர் மற்றும் அதே உரிமைகளும் உண்டு.
- சில அலுவலர்கள் மாறுபடக்கூடும். எடுத்துக்காட்டாக தனியார் சிறைகள் இயக்குநர் என்பவரால் நடத்தப்படுகிறது. ஆளுநரால் அல்ல.
- சிறை அதிகாரிகள் சிறை பொறுப்பு அதிகாரிகள் என அழைக்கப்படுவர்.
- தற்சமயம் 11 தனியார் சிறைகள் உள்ளன. அவையாவன : அல்ட்கோர்ஸ், ஆஷ்ஃபீல்டு, புரான்ஸ்ஃபீல்டு, (பெண்கள்) டான்கேஸ்டர், டவ்கேட், ஃபாரஸ்ட் பேங்க், லோதாம் கிரேன்ஜ், பார்க், பீட்டர் பாரோ (ஆண்கள் மற்றும் பெண்கள்) ரேஹில் மற்றும் தி வோல்ட்ஸ்.

## சிறையில் நீங்கள் என்ன வைத்திருக்கலாம் மற்றும் என்ன வைத்திருக்கக்கூடாது

**முக்கிய அம்சங்கள்**

- ✓ நீங்கள் சிறையில் அதிக பொருட்களை வைத்திருக்கக்கூடாது.
- ✓ நீங்கள் வைத்திருக்ககூடாத கூடுதல் பொருட்களை பார்வையாளர்கள் உங்களைச் சந்திக்க வரும்போது அவர்களிடம் நீங்கள் கொடுத்து விட வேண்டும்.
- ✓ உங்களிடம் உள்ள விலை அதிகமான அல்லது மதிப்புமிக்க பொருட்களை பார்வையாளர்களிடம் கொடுத்துவிடுவது சிறப்பானதாகும். ஏனென்றால் சிறை அலுவலர் செய்தார் என நிருபித்தால் அன்றி, உங்கள் பொருள் காணாமல் போனாலோ அல்லது உடைந்து போனாலோ சிறை நிர்வாகம் எதுவும் செய்ய இயலாது.
- ✓ நீங்கள் வைத்திருக்கக்கூடாத அல்லது பார்வையாளர்களிடம் தர இயலாத பொருட்கள், நீங்கள் விடுதலையாகும் வரை சீலிடப்பட்ட பையில் வைத்து சிறைக்கு உள்ளோ அல்லதுவெளியிலோ உள்ள ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படும்.
- ✓ சிறை அலுவலர் , சிறை அலுவலர் ஒரு படிவத்தில் (உடைமை அட்டை) உங்களை கையொப்பமிடக் கூறுவார்.
    - சிறைக்கு நீங்கள் வரும்போது பைகளில் சிறை அலுவலர் என்னென்ன பொருட்களை இட்டார் என்பதை நீங்கள் பார்த்ததையும் மற்றும் பைகள் உங்கள் முன் மூடப்பட்டன என்பதை நீங்கள் தெரிவிக்கவும்,
    - நீங்கள் புதிய சிறைக்கு செல்லும்போது உங்கள் பொருட்கள் சரியாக உள்ளன என்பதை நீங்கள் தெரிவிக்கவும்
    - நீங்கள் சிறையிலிருந்து விடுதலையாகும்போது, உங்கள் அனைத்து பொருட்களும் இருந்தன என்பதை தெரிவிக்கவும்
- ✓ நீங்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படும்போது நீங்கள் வைத்திருக்க அனுமதியில்லாத அல்லது சட்டத்திற்கு எதிரான பொருட்கள் தவிர உங்களுடைய அனைத்துப் பொருட்களையும் திரும்பப் பெறுவீர்கள்.

## உங்கள் சிறை அறையில் நீங்கள் என்ன வைத்திருக்கலாம்.

- 2 பெட்டிகளில் அடங்கக்கூடிய அளவிலான போதுமான பொருட்களை உங்கள் சிறை அறையில் நீங்கள் வைத்திருக்கலாம்.

- நீங்கள் சிலவற்றையும் வைத்திருக்கலாம்.
  - ஒரு ஸ்டீரியோ அல்லது இசை கேட்க பயன்படும் ஏதாவது
  - சற்றுப் பெரிதான பொருட்கள் எடுத்துக்காட்டாக ஒரு கிதார்
  - நீங்கள் வைத்திருக்க அனுமதியுள்ள சட்ட ஆவணங்கள்

- அளவுக்கு அதிகமான பொருட்களையோ அல்லது தவறான பொருட்களையோ நீங்கள் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதி செய்ய சிறை அலுவலர் அவ்வப்போது சோதனை செய்வார்.

- உங்கள் சிறை அறையில் சில பொருட்களை வைத்திருக்க சில உரிமைகளை நீங்கள் பெற்றிருக்க வேண்டும். 64ம் பக்கம் பார்க்கவும்.

உங்கள் சிறை அறையில் நீங்கள் வைத்திருக்க **அனுமதியளிக்கப்படக்கூடிய** பொருட்களின் பட்டியில் கீழே தரப்பட்டுள்ளது. இது, ஒவ்வொரு சிறைக்கும் மாறுபடலாம் மற்றும் உங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவையும் சார்ந்தது.

### இந்தப் பொருட்களை நீங்கள் வைத்திருக்க இயலும்.

- ✓ செய்தித்தாள்கள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்
- ✓ பாடல் கேட்க உதவும் சாதனம் மற்றும் இயர்போன்.
- ✓ கணனி மற்றும் அது சார்ந்த ஃபிளாப்பி டிஸ்க் போன்றவை
- ✓ புகைப்பிடிக்க உங்களுக்கு தேவையானவை **தண்டனை வழங்கப்பட்ட** சிறைக் கைதிகள் 62.5 கிராம்கள் வரையிலான தூள் புகையிலை அல்லது 80 சிகரெட்டுகள் அல்லது சுருட்டுகள், அல்லது இரண்டின் கலவையை வைத்திருக்க இயலும். **தண்டனை வழங்கப்படாத** சிறைக் கைதிகள் 137.5 கிராம்கள் தூள் புகையிலை அல்லது 180 சிகரெட்டுகளை வைத்திருக்க இயலும். நீங்கள் உங்களுடைய சிறை அறையில் மட்டுமே புகைப்பிடிக்க அனுமதிக்கப்படலாம்.
- ✓ விளையாடுவதற்கான சில விளையாட்டுகள், மின்னணு விளையாட்டுகள் உட்பட.
- ✓ உங்கள் பொழுதுபோக்கு செயலுக்கு தேவையான சிலபொருட்கள் எடுத்துக்காட்டாக, கலை அல்லது எழுதுதல்

## உங்கள் சிறை அறையில் நீங்கள் வைத்திருக்க இயல க்கூடிய பிற பொருட்கள்

- 1 பறவைக்கூண்டு மற்றும் ஒரு சிறிய பறவை (கூண்டிலடைக்கப்பட்ட பறவைகள் சிறை அனுமதித்தால் மட்டுமே பல  சிறைகள் அனுமதிப்பதில்லை)
- கடிகாரம்
- மின்னணு சவ  ர  க் கருவி
- நீங்கள் உடல் ஊனமுற்றவராக இருப்பின் உங்களுக்கு உதவக்கூடிய பொருட்கள்
- மின்கலங்கள்
- டாய்லட்டரிகள் (பல்துலக்கி, பற்பசை, மற்றும் டியோடாண்ட் போன்றவை)
- திருமண மோதிரம் அல்லது சாதரண மோதிரம்
- உங்கள் மத  நம்பிக்கை சம்பந்தமான புத்தகங்கள் மற்றும் அது தொடர்பான பொருட்கள் மற்றும் ஊதுபத்தி
- புகைப்படங்கள் மற்றும் படங்கள் (கண்ணாடியில்லாத சட்டத்தில் அவை பொருத்தப்பட்டிருந்தால்)
- வாழ்த்து அட்டைகள்  (பிறந்தநாள் அட்டைகள் போன்றவை, அவை பேடிங் போன்றவற்றை கொண்டிருக்காமல் இருந்தால்)
- நாள்காட்டி மற்றும் நாட்குறிப்பு அல்லது பர்சனல் ஆர்கனைசர்
- ஒரு முகவரிப் புத்தகம்
- முத்திரைகள் மற்றும் கடித உறைகள்
- மருந்து (இதை நீங்கள் <u>சிறை அறையில்</u> வைத்திருக்கலாமா எ ன அலுவலர் உங்களுக்கு கூறுவார்)

## வேறொரு சிறைக்கு நீங்கள் மாற்றப்பட்டு ஓர் இரவு எங்காவது தங்க நேர்ந்தால்

இந்தப் பொருட்களை நீங்கள் எடுத்துச் செல்ல லாம் : சோப்பு, சீப்பு, பல்துலக்கி, பற்பசை, ரேசர், ஷேவிங் க்ரீம், ஷாம்பூ, டியோடரண்ட், வானொலி பெட்டி, புத்தகம், பேனா மற்றும் பேப்பர். உங்கள் பொருட்களை பத்திரமாக வைத்திருப்பதும் அவை பாதுகாப்பாக உள்ளதை உறுதிப்படுத்திக்கொள்வதும் உங்கள் பொறுப்பு.

## உங்கள் பணம்

**முக்கிய அம்சங்கள்**

- ✓ சிறையில் நீங்கள் இருக்கும்போது உங்கள் நண்பர்களோ அல்லது உங்கள் குடும்ப நபர்களோ உங்களுக்கு பணம் அனுப்பலாம்.
- ✓ இந்தப் பணம் உங்கள் **தனிப்பட்ட பணம்** எனப்படும்.
- ✓ இந்த பணம் நேரடியாக உங்களிடம் சேர்க்கப்படமாட்டாது. உங்களுக்காக சிறை நிர்வாகம் அதை வைத்திருக்கும்.
- ✓ அந்தப் பணத்தை நீங்கள் செலவிடலாம். நீங்கள் எவ்வளவு செலவிடலாம் என்பது சிறையில் எந்தஅளவு நல்லமுறையில் நீங்கள் நடந்து கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.
- ✓ எடுத்துக்காட்டாக, நீங்கள் **தண்டனை வழங்கப்பட்ட** சிறைக் கைதியாக இருந்தால், ஒரு வாரத்திற்கு 4 பவுண்டு, 15.50 பவுண்டு அல்லது 25.50 பவுண்டு பணத்தை நீங்கள் செலவிட இயலும். இது நீங்கள் எந்த அளவு நன்னடத்தையோடு இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.
- ✓ நீங்கள் **தண்டனை வழங்கப்படாத** சிறைக்கைதியாக இருந்தால் உங்கள் நடத்தையைப் பொறுத்து ஒரு வாரத்திற்கு 22 பவுண்டு, 47.50 பவுண்டு அல்லது 51 பவுண்டு நீங்கள் செலவிட முடியும்.
- ✓ 64ம் பக்கம் இதைப்பற்றிய மேலதிக தகவல்களை நீங்கள் காணலாம்.
- ✓ சில  சமயங்களில் உங்கள் சொந்தப் பணத்தை அதிகம் செலவிட ஆளுநர் உங்களுக்கு அனுமதியளிக்கக்கூடும். எடுத்துக்காட்டாக உங்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக உங்களுக்கு பணம் தேவைப்பட்டால், அல்லது நீங்கள் வெளிநாட்டு பிரஜை சிறைக்கைதியாக இருந்து வேறொரு நாட்டில் உள்ள உங்கள் குடும்பத்தினருடன் தொலைபேசியில் பேச உங்களுக்கு பணம் தேவைப்படும்போது

## சிறையில் உள்ள உங்களுக்கு நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் பணம் அனுப்புவது எவ்வாறு

- காசோலைகளாகவோ அல்லது அஞ்சல் ஆணைகளாகவோ அனுப்ப அவர்கள் முயற்சிக்க வேண்டும். அவை **எச்.எம்.சிறைசேவை** என்ற பெயருக்கு எடுக்கப்பட்டு **ஆளுநருக்கு** அனுப்பப்பட வேண்டும்.
- பணமாக அனுப்ப விரும்பினால் கடிதத்துடன் உறையில் எவ்வளவு பணம் உள்ளது என்பதை தனியாக குறிப்பிட்டு எழுதி அனுப்ப வேண்டும்.
- கீழ்வரும் விபரங்களை அவர்கள் உறையில் எழுதி குறிப்பிட வேண்டும்.
    - அவர்களது பெயர் மற்றும் முகவரி
    - உங்கள் பெயர் மற்றும் சிறை எண்.

## சிறைக்கடை-கன்ரீன் எனவும் அழைக்கப்படுகிறது.

- புகையிலை, மின்கலங்கள், இனிப்புகள் மற்றும் டாய்லட்டரிகள் (பல்துலக்கி, மற்றும் டியோடரண்ட் போன்றவை) போன்ற பொருட்களை ஒவ்வொரு வாரமும் கடையில் இருந்து நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்.
- ஒவ்வொரு சிறையிலும் உள்ள கடைகள் மாறுபட்ட பொருட்களைக் கொண்டிருக்கக்கூடும்.
- உங்கள் தோல் பராமரிப்பு அல்லது கேச பராமரிப்பு போன்ற விஷயங்களுக்கு சிறப்பு பொருள் வேறு ஏதாவது உங்களுக்கு தேவைப்பட்டால், உங்களுக்கு அவற்றைப் பெற்றுத் தர முடியுமா என கடையில் கேளுங்கள்.
- சில நிறுவனங்களிடமிருந்து பொருட்களை மெயில் ஆர்டர் (நீங்கள் வாங்கிய பொருட்களை நிறுவனங்கள் அஞ்சல் வழியாக உங்களுக்கு அனுப்புவது) மூலம் வாங்க நீங்கள் அனுமதிக்கப்படலாம். இதைப்பற்றிய தகவலுக்கு சிறை அலுவலரிடம் கேளுங்கள்.

## புகைப்பிடித்தல்

- சிறை வளாகத்தில் நீங்கள் புகைப்படக்கூடிய ஒரே இடம் உங்கள் செல் மட்டுமே. நீங்கள் புகைப்பிடிக்கும்போது செல்லின் கதவை மூடிவிட வேண்டும்.
- நீங்கள் புகைப்பிடிக்காதவரெனில், புகைபிடிக்கும் ஒரு நபரோடு செல்லை நீங்கள் பகிர்ந்து கொள்ளத் **தேவையில்லை.**

புகைப்பிடித்தல் பற்றிய மேலதிக தகவல்

இவ்விடங்களில் நீங்கள் புகைபிடிக்க இயலாது,

- 18 வயதுக்கும் குறைவானவர்களுக்கான இடங்களில்
- சிறை சேவை வாகனங்களில்
- அதிக படுக்கைகள் கொண்ட செல்களில் (டார்மிட்டரிகள்)
- புகைபிடிக்கக்கூடாது என சிறை அலுவலர் குறிப்பிடும் செல்கள் மற்றும் பகுதிகளில்

புகைபிடிக்கும் பழக்கத்தை நீங்கள் விட விரும்பினால் அதற்கு உதவி செய்யுமாறு உடல்நல அலுவலரிடம் கேளுங்கள்.

## உணவு

- சிறைகள் உங்களுக்கு வழங்கப்படும் உணவு நன்றாக உள்ளது என்பதை உறுதிப்படுத்த அவர்கள் சோதனைகள் செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆரோக்கியமானது, உண்பதற்கு பாதுகாப்பானது மற்றும் உங்களுக்கு போதுமான உணவு கிடைக்கிறது என்பன போன்றவை.
- உணவில் ஏதாவது பிரச்சனை என்றால் சமையல் அலுவலரிடம் (சமையல் அறையில் ப ணிபுரியும் அலுவலர்) பேசுங்கள்.
- உண்பதற்கு முன் மெனுவிலிருந்து நீங்கள் உண்ண விரும்பும் உணவை தேர்வு செய்ய இயலும்.

மெனுவில் கீழ்க்கண்ட உணவு வகைகள் அடங்கியிருக்கும்.

- இறைச்சி அல்லது மீனுடன் சேர்ந்த ஏதாவது உணவு
- சைவ உணவு
- வேகன் உணவு
- ஹலால் உணவு
- கோஷர் உணவு

- உருளைக்கிழங்குகளுக்கு பதிலாக அரிசி வகை உணவை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.
- உங்கள் உடல் நலம் காரணமாக நீங்கள் சிறப்பு வகை உணவுகளை உட்கொள்ள வேண்டியிருந்தால், அதுபற்றி உடல்நல அலுவலர் உங்களிடம் கூறுவார்.
- மதப் பண்டிகை அல்லது கொண்டாட்டத்தின் போது உங்கள் மத நம்பிக்கைக்கேற்ற சிறப்பு வகை உணவை சிறை நிர்வாகம் உங்களுக்கு வழங்கக்கூடும்.

## ஆடைகள்

**தண்டனை வழங்கப்பட்ட சிறைக் கைதிகள்**

- சிறை உங்களுக்கு கொடுக்கும் ஆடைகளை நீங்கள் அணிந்து கொள்ள வேண்டும். உள்ளாடைகள், சாக்ஸ் மற்றும் சட்டைகள் ஆகியவை இதில் உள்ளடங்கும்.
- ஆடைகள் சுத்தமாக இருப்பதையும், நல்ல நிலையில் உள்ளதையும் மற்றும் உங்களை கதகதப்பாக வைத்திடும் மற்றும் சுகாதாரமானது என்பதையும் சிறை அலுவலர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- சுத்தமான ஆடைகள் அடிக்கடி உங்களுக்கு அளிப்பதை சிறை அலுவலர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- சிறையில் நீங்கள் நல்லவிதமாக நடந்து கொண்டால், சில சிறைகளில் சில சமயங்களில் நீங்கள் உங்களது சொந்த ஆடைகளையே உடுத்திக் கொள்ள இயலும். **64ம் பக்கம் பார்க்கவும்.**

**தண்டனை வழங்கப்படாத சிறைக் கைதிகள்**

- உங்கள் சொந்த ஆடைகள் சுத்தமாகவும், சிறையில் அணிந்து கொள்ளக்கூடியதாக உள்ளவரை நீங்கள் சொந்த ஆடைகளை உடுத்திக் கொள்ளலாம்.
- கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் நீங்கள் சிறை அளிக்கும் ஆடைகளையே உடுத்த வேண்டி இருக்கும்.
    - நீங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவு ஏ  சிறைக் கைதியாக இருந்தால்
    - நீங்கள் தப்பிக்க முயற்சிக்கலாம் என  ஆளுநர் கருதினால், நீங்கள் தப்பிக்க முயற்சித்தால் சிறை அலுவலர் உங்களை எளிதில் அடையாளம் காணும் வகையான ஆடைகளை நீங்கள் உடுத்த வேண்டி இருக்கும்.
    - நீதிமன்றத்திற்கு உங்களை அழைத்து செல்லும்போது, இது நடந்தால் இந்த ஆடையில் மற்ற நபர்கள் உங்களைப் பார்ப்பதை தடுக்க சிறை அலுவலர் அவர்களால் இயன்ற அனைத்தையும் செய்வார்.
- உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்கள் உங்களுக்கு ஆடைகளை கொண்டு வரலாம் மற்றும் துவைப்பதற்காக எடுத்துச் செல்லலாம்.
- உங்களது சொந்த ஆடைகளை நீங்கள்
    - நீதிமன்றத்தில் இருக்கும்போது உடுத்தி இருக்க வேண்டும்.
    - உங்களுக்கு தண்டனையளிக்கப்படவில்லை எனில், சிறையிலிருந்து வெளியேறும் போது உடுத்தி இருக்க வேண்டும்.
- உடுத்துவதற்கு போதுமான அளவு சொந்த ஆடைகள் உங்களுக்கு இல்லை எனில், ஆடைகள் வேண்டுமென சிறை அலுவலரிடம் கேளுங்கள்.

## படுக்கை –  படுக்கை விரிப்புகள் மற்றும் போர்வைகள்

- படுக்கைகள்
  - சுத்தமாகவும் நல்ல நிலையிலும் இருக்க வேண்டும்.
  - கதகதப்பாக இருக்க வேண்டும்.
- மெத்தைகள் மற்றும் படுக்கைகள் குறைந்தபட்சம் வாரம் ஒருமுறை சுத்தம் செய்யப்பட வேண்டும்.
- சிறையில் சலவையகம் (உங்கள் துணிகளை துவைக்கும் இடம்) உள்ளது. வாரத்திற்கு ஒரு முறை உங்கள் படுக்கை விரிப்புக்களையும், துணிகளையும் அங்கு சுத்தம் செய்யலாம்.

## குளியல், ஷவர் மற்றும் கழிவறைகள்

- கழிவறை மற்றும் சிங்குகள் எந்த நேரத்திலும் நீங்கள் பயன்படுத்த கூடியதாக இருக்க வேண்டும்.
- ஒரு வாரத்திற்கு குறைந்தபட்சம் 3 முறை வெந்நீர்க் குளியல் அல்லது ஷவர் செய்யும் வசதி உங்களுக்கு கிடைக்க இயல  வேண்டும்.
- டாய்லட்டரிகள் (பற்பசை, பல் துலக்கி, மற்றும் டியோடரண்ட் போன்றவை) வாங்க உங்களிடம் போதுமான பணம் இல்லையெனில், அவற்றை சிறை அலுவலர் உங்களுக்கு கொடுக்கக்கூடும்.

## வெளியே திறந்தவெளியில் செலவழிக்கும் நேரம்

- ஒவ்வொரு நாளும் அனைத்து சிறைக் கைதிகளும் 30 நிமிடங்களிலிருந்து 1 மணி நேரத்திற்கு இடையேயான கால அளவுகள் வெளியே திறந்த வெளியில் செலவிட இயலும்.
- சிலநேரங்களில் இது நடக்காமலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, தட்பவெப்பநிலை மோசமாக இருந்தால் அல்லது உங்களை வெளியே விடமாலிருக்க நல்லதொரு காரணம் இருந்தால்
- ந டத்தல் போன்ற சில உடற்பயிற்சிகளை நீங்கள் மேற்கொள்ள இயல  வேண்டும்.  உங்கள் சிறையில் என்ன விதமான உடற்பயிற்சிகளை நீங்கள் செய்யலாம் என்பதை சிறை அலுவலர் உங்களுக்கு கூறுவார்.
- சில சிறைகள் நீங்கள் பிஈ (விளையாட்டு போன்ற) மற்றும் பிற செயல்களை செய்ய தனியாக நேரம் ஒதுக்கி இருக்கக்கூடும். எனவே, நீங்கள் உங்கள் செல்லிலிருந்து வெளியே நேரத்தைக் கழிக்க இயலும்.

## ஊக்கத் தொகைகள் மற்றும்  ஈட்டப்பட்ட சலுகைகள் (ஐ.ஈ.பி-க்கள் எனவும் அழைக்கப்படுகிறது)

இது கீழ்க்கண்ட சமயங்களில் நீங்கள் பெறும் அல்லது செய்யும் கூடுதல் அம்சங்களாகும்,

- நீங்கள் விதிகளை முறையாகப் பின்பற்றினால்
- நீங்கள் சரியான முறையில் உங்கள் தண்டனைத் திட்டத்தில் உள்ளது போன்று பணிகளில் அல்லது பிற செயல்பாடுகளில் பங்கெடுத்தால்
- நீங்கள் பெறக்கூடிய அல்லது செய்யக்கூடிய கூடுதல் அம்சங்கள் ஒவ்வொரு சிறையிலும் மாறுபடும்.

எடுத்துக்காட்டாக, சிறையில் நீங்கள் விதிகளை சரியாகப் பின்பற்றி வந்தால் அல்லது நல்ல செயல்களை மேற்கொண்டால் கீழ்க்காண்பவை போன்ற செயல்களை நீங்கள் செய்ய இயலக்கூடும்.

- உங்கள் பணத்தில் கூடுதலாக செலவழித்தல்
- உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்களோடு அதிக பார்வையாளர் சந்திப்புக்கள்
- அதிக பணம் சம்பாதித்தல்
- உங்கள் அறையில் தொலைக்காட்சி பெட்டி வைத்துக் கொள்ளல்
- உங்கள் சொந்த ஆடைகளை உடுத்தல்
- உங்கள் செல்லிற்கு வெளியே அதிக நேரம் செலவழித்தல்

**விதிகளை நீங்கள் பின்பற்றாவிட்டல் இந்த அம்சங்கள் உங்களிடமிருந்து பறிக்கப்படலாம்.**

**இது எவ்வாறு செயல்படுகிறது**

உங்கள் நடத்தையைப் பொறுத்து, எத்தனை கூடுதல் அம்சங்களை நீங்கள் பெறலாம் அல்லது செய்யலாம் என்பதை சிறை அலுவலர் உங்களுக்கு கூறுவார். 3 ஐஈபி அளவுகள் உள்ளன.

**அடிப்படை அளவு .** நீங்கள் அடிப்படை அளவில் உள்ளவர் எனில், சில கடிதங்கள் அல்லது பார்வையாளர் சந்திப்புக்கள் போன்ற ச ட்டம் உங்களுக்கு அனுமதியளிக்கிற சில அம்சங்கள் உங்களுக்கு உண்டு. கூடுதலாக எதற்கும் நீங்கள் அனுமதிக்கப்படமாட்டீர்கள்.

**நடுத்தர அளவு.** உங்களுக்கு அதிக கடிதங்கள் அல்லது பார்வையாளர் சந்திப்புகளுக்கு அனுமதி உண்டு என்பதே இதன் அர்த்தமாகும். உங்கள் சிறை அறையில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை வைத்துக் கொள்ளவோ, அல்லது கூடுதலாக உங்கள் பணத்தை செலவளிக்கவோ நீங்கள் அனுமதிக்கப்படலாம்.

**விரிவாக்கப்பட்ட அளவு.** அதிக கூடுதல் அம்சங்களை நீங்கள் பெறலாம் என்பது இதன் அர்த்தமாகும். எடுத்துக்காட்டாக அதிக பார்வையாளர் சந்திப்புகள், உங்கள் அறையில் ஒரு தொலைக்கட்சிப் பெட்டி வைத்துக் கொள்ள அல்லது கூடுதலாக உங்கள் பணத்தை செலவளிக்கவோ நீங்கள் அனுமதிக்கப்படலாம்.

# உங்கள் உடல் நலம்

முக்கிய அம்சங்கள் – அடுத்த பக்கத்தில் அதிக தகவல் உள்ளது.

**உங்கள் உடல் நலம்**

- ✓ சிறைக்கு வெளியே உள்ளவர்களைப் போன்ற அதே உடல்நல கவனிப்பை சிறைக்கைதிகள் பெறலாம்.
- ✓ உடல்நல கவனிப்பிற்காக சிறையில் கூடுதல் பகுதி ஒன்று இருக்கும். சிறையில் மருத்துவமனையும் கூட இருக்கலாம்.
- ✓ உடல்நல கவனிப்பிற்கான ஒரு குழு சிறையில் இருக்கும். இவர்கள் உங்களுக்கு உடல்நல கவனிப்பை வழங்கும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் போன்றோர் ஆவர்.
- ✓ உடல்நல கவனிப்பு பற்றிய நிறைய தகவல்களை நீங்கள் பெற இயலக்கூடியதாக இருக்க வேண்டும்.
- ✓ அனைத்து உடல்நல கவனிப்பு அலுவலர்களும் வெளியில் உள்ள பிற உடல்நல கவனிப்பு அலுவலர்களைப் போன்ற அதே உயர்தர பயிற்சியளிக்கப்பட்டவர்கள் ஆவர்.
- ✓ கீழ்க்காண்பவை பற்றி உடல்நல கவனிப்பு அலுவலரிடம் கூறுங்கள்,
  - போதைமருந்துகள் மற்றும் மதுப்பழக்கத்தினால் உங்களுக்கும் பிரச்சனைகள் ஏதுமிருந்தால்
  - உங்களுக்கு எச்.ஐ.வி. அல்லது எய்ட்ஸ் இருந்தால்
  - நீங்கள் மருந்து உட்கொள்ள வேண்டிய தேவை இருந்தால்

**உங்கள் மனநலம்**

சிறையில் உள்ள பல நபர்கள் மன நல மருத்துவத் தேவை உள்ளவர்களாக இருக்கின்றனர். உங்களுக்கு உதவ நபர்கள் இங்கு உள்ளனர்.

கீழ்காண்பவைகளில் ஏதேனும் உங்களுக்குப் பொருந்தினால் உடல்நல அலுவலரிடம் பேசுங்கள்.

- ✓ நீங்கள் ஒரு மனநல நிபுணர் அல்ல சமூக மனநலதாதியரை கொண்டிருந்தால் அல்லது மனநோய்க்காக மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றிருந்தால்
- ✓ உங்கள் மன நலத்திற்காக நீங்கள் மருந்து உட்கொண்டு வந்திருந்தால்
- ✓ நீங்கள் மனமுடைந்து போயிருந்தால் அல்லது கவலை கொண்டிருந்தால்
- ✓ உற்சாகமின்றியோ அல்ல மன அழுத்தமாகவே நீங்கள் உணர்ந்தால்
- ✓ நீங்கள் மனக்கவலை கொண்டிருந்தால் அல்லது வெறுப்பாக உணர்ந்தால்
- ✓ நீங்கள் மிகவும் களைப்பாக உணர்ந்தால் அல்லது தூங்குவதில் உங்களுக்கு சிரமமிருந்தால்
- ✓ மற்றவர்கள் உங்களைப் பற்றி பேசுவதாக நினைத்தால்
- ✓ உங்கள் தலைக்குள் குரல் ஒலிப்பதை கேட்டால்
- ✓ நீங்கள் மிகவும் கோபமாக உணர்ந்தால்
- ✓ நீங்கள் ஞாபகமறதி அல்லது குழப்பமாக உணர்ந்தால்
- ✓ ஒரே நினைவுகளை நீங்கள் மீண்டும் மீண்டும் சிந்தித்துக்கொண்டிருந்தால்

## சிறை உடல்நல கவனிப்பு அலுவலர்

சிறையில் பணிபுரியும் சில உடல்நல கவனிப்பு அலுவலர்கள்

- மருத்துவர்கள்
- தாதியர்கள்
- பல் மருத்துவர்கள்
- மருந்தாளுநர்கள் (இவர்கள் மருந்துக் கடையில் பணிபுரிபவர்கள் மற்றும் உங்கள் மருத்துவரால் உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மருந்தை உங்களுக்கு அளிக்கக்கூடியவர்கள்)
- போதை மருந்து மற்றும் மதுப்பிரச்சனைகளில் இருந்து மீண்டு வர உதவும் அலுவலர்.
- உங்கள் மனநல பிரச்சனைகள் தீர்க்க உதவும் அலுவலர். இவர்கள் மனநல நிபுணர்கள் அல்லது உளவியலார்கள் என அழைக்கப்படுவார்கள்.
- உங்கள் பாலியல் மற்றும் பொது உடல்நல பிரச்சனைகள் தீர உதவும் அலுவலர்.

### ஒ ரு மருத்துவர் அல்லது தாதியரைக் காணுதல்

- நீங்கள் ஒரு மருத்துவர் அல்லது தாதியரைக் காண வேண்டும் என்றால் உங்கள் பிரிவிலுள்ள சிறை அலுவலரிடம் கூறுங்கள். தாதியர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் நீங்கள் மருத்துவரை நேரில் பார்க்க வேண்டிய தேவையின்றி பல பிரச்சனைகளை தீர்க்க இயலும். ஆனால், இன்னும் நீங்கள் கவலைப்பட்டால் ஒரு மருத்துவரைப் பார்க்க வேண்டும் எனக் கேளுங்கள்.
- உங்கள் உடல்நல பிரச்சனை குறித்து மருத்துவர், தாதியர் அல்லது பிற உடல்நல கவனிப்பு அலுவலர் உங்களிடம் கூறியது குறித்து உங்களுக்கு திருப்தி இல்லையெனில் உடல்நல கவ னிப்பு குழுவில் உள்ள வேறுயாரையாவது பார்க்க வேண்டும் என நீங்கள் கேட்கலாம்.
- உங்கள் உடல் நலபிரச்சனையை சிறையில் உள்ள உடல்நல கவனிப்பு அலுவலரால் தீர்க்க இயலாது எனில், கீழ்காணும் செயல்பாடுகளில் ஏதேனும் ஒன்று மேற்கொள்ளப்படக்கூடும்.
    - உங்களைப் பார்க்க உடல்நலகவனிப்பு சிறப்பு நிபுணர் ஒருவரை சிறை நிர்வாகம் சிறைக்கு வரவழைக்கக்கூடும்.
    - உங்களுக்குத் தேவையான உடல்நல கவனிப்பைப் பெறுவதற்காக நீங்கள் வேறொரு சிறைக்கு மாற்றப்படலாம்.
    - சிறைக்கு வெளியே உள்ள மருத்துவமனைக்கு நீங்கள் கொண்டு செல்லப்படலாம். இது நடைபெற்றால் இன்னமும் கூட சிறை நிர்வாகமே உங்களுக்கு பொறுப்புடையது.

### பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவரை (உங்கள் கண் சிகிச்சைக்காக) பார்த்தல்

- ஒரு பல் மருத்துவரையோ அல்லது கண் மருத்துவரையோ நீங்கள் காண வேண்டும் எனில் சிறை அலுவலரிடம் கூறுங்கள்
- மருத்துவ காரணங்களுக்காக இல்லாதவரைக்கும் உங்களுக்கு எந்த ஒரு சிகிச்சையும் இலவசமாக அளிக்கப்படும்.
- உங்கள் கண் கோளாறுக்காக உங்களுக்கு தேவையெனில் கண்ணாடியோ அல்லது மற்ற பொருட்களையோ  நீங்கள் இலவசமாகப் பெற முடியும்.

## மருந்து

- நீங்கள் சிறைக்கு எடுத்துவந்த எந்த மருந்துக்களையும் நீங்கள் வைத்திருக்க **இயலாது**.
- நீங்கள் ஏதாவது மருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தால், அது குறித்து வரவேற்பின் போதுள்ள அலுவலரிடமோ, மருத்துவரிடமோ அல்லது உடல்நலக் கவனிப்புக் குழுவிலுள்ள வேறு உறுப்பினரிடமோ கூறுங்கள்.
- சிறையிலுள்ள மருத்துவர் உங்களுக்கு தேவைப்படும் மருந்தைப் பரிந்துரைப்பார். இந்த மருந்தை சிறையிலுள்ள மருந்தகத்திலிருந்து நீங்கள் பெறலாம்.
- இதன்பிறகு உங்கள் மருந்தை வைத்துக்கொள்ள நீங்கள் அனுமதிக்கப்படலாம். நீங்கள் இதைச் செய்யலாமா என்பது பற்றி சிறை அலுவலர் முடிவெடுத்து உங்களிடம் தெரிவிப்பார்.

## உங்கள் உடல்நல பதிவேடுகள் (உங்கள் உடல்நலப் பிரச்சனைகள் மற்றும் நீங்கள் பெற்ற எந்த ஒரு உடல்நல கவனிப்பு பற்றிய விவரங்களை உடல்நல கவனிப்பு அலுவலர் ஒரு ஆவணத்திலும் க ணணியிலும் பதிவு செய்து வருவார்)

- நீங்கள் சிறைக்கு வந்தவுடன், உங்களுக்காக ஒரு உடல்நல பதிவேட்டினை சிறை பராமரிக்கத் துவங்கும். சிறைக்கு வெளியிலிருந்து நீங்கள் பெற்ற உங்கள் பழைய உடல்நல பதிவேடுகளை வழக்கமாக சிறை கொண்டிருக்காது.

- மருந்துவர்கள் அவர்களுக்குத் தேவையெனில் உங்கள் பழைய உடல்நல பதிவேடுகளிலிருந்து தகவல்களைப் பெற இயலும். முதலில் இதற்கு நீங்கள் சம்மதம் தெரிவித்தால் மட்டுமே இது மேற்கொள்ளப்படும்.

- நீங்கள் விரும்பினால் உங்கள் உடல்நலப் பதிவேடுகளை பார்க்க வேண்டும் என  கேட்கலாம். உங்கள் உடல்நலம் பற்றி சிறை கைகொண்டிருக்கும் தகவல்களை நீங்கள் பார்க்கலாம்.  நீங்கள் பார்க்க இயலாத வேறு சில தகவல்களும் இருக்கக்கூடும்

- உங்கள் உடல்நலப் பதிவேடுகளை நீங்கள் பார்க்க விரும்பினால் உடல்நல கவனிப்பு குழுவில் உள்ள உறுப்பினர் ஒருவரிடம் கேளுங்கள். அல்லது உங்கள் உடல்நல கவனிப்பு பதிவேடுகளை காண வேண்டும் எனக் கேட்டு ஒரு படிவத்தை நிறைவு செய்து கையளியுங்கள்.

- நீங்கள் கேட்ட தகவல்களை சிறை அலுவலர் உங்களுக்கு அளிக்க 40 நாட்களுக்கு மேல் எடுக்கக்கூடாது. உங்கள் உடல்நல பதிவேடுகள் மற்றொரு சிறையிலிருந்தால், அவை உங்களது சிறைக்கு அனுப்பப்படும்.

- நீங்கள் பார்க்க இயலாது என  மருத்துவர் கூறாதவரைக்கும், நீதிமன்றங்கள் அல்லது பரோல் சபைக்கு உங்கள் உடல்நலம் குறித்து மருத்துவர்கள் அளித்த தகவலை நீங்கள் பார்க்க இயலும்.

## உடல்நல பிரச்சனைகள் மற்றும் உடல்நலக் குறைவுகள்

### எச் ஐ வி மற்றும் எய்ட்ஸ்

- எய்ட்ஸ் நோய் எச் ஐ வி (Human Immunodeficiency Virus) எனப்படும் கிருமியால் உண்டாகிறது
- எய்ட்ஸ் நோயைப் பெறுவதற்கு முன்னரே, மக்கள் முதலில் எச்ஐவி யைப் பெறுகிறார்கள்.
- ஒரு நபரின் உடல் நோய்வாய்ப்படுவதை அதனாலேயே தடுத்து நிறுத்த இயலாத நிலையில் எய்ட்ஸ் தோன்றுகிறது.
- எச்ஐவி உள்ள நபர்கள் பார்ப்பதற்கு நல்ல உடல்நலத்துடன் இருப்பது போன்று தோற்றமளிக்கக்கூடும். ஆனால் அவர்கள் மற்ற நபர்களுக்கு எச்ஐவியைப் பரப்ப இய லும்.

### எவ்வாறு எச்ஐவி / எய்ட்ஸ் உங்களுக்கு பரவக்கூடும்.

- எச்ஐவி உள்ள நபரின் இரத்தமோ அல்லது விந்தோ உங்கள் உடலுக்குள் சென்றால் உங்களுக்கும் எச்ஐவி தொற்றக்கூடும்.
- எச்ஐவி உங்களுக்கு தொற்றக்கூடிய முக்கிய காரணங்கள்
    - ஆணுறை அணியாமல் உடலுறவு கொள்ளுதல்
    - ஊசிகள் அல்லது ஒர்க்ஸ்களை பகிர்ந்து கொள்ளல் (எடுத்துக்காட்டாக போதை மருந்துகள் எடுப்பதற்காக, பச்சை குத்திக் கொள்வதற்காக, அல்லது உங்கள் காதுகள் அல்லது உடம்பில் வளையங்கள் மாட்டிக் கொள்ள துளையிடல்). போதை மருந்துகளை செலுத்திக் கொள்ள பயன்படும் ஊசிகள் மற்றும் கருவிகளின் மற்றொரு பெயரே ஒர்க்ஸ் ஆகும்.

கீழ்க்குறிப்பிட்டுள்ளவை போன்ற தினசரி நடவடிக்கைகளை மேற்கொள்வதால் வேறு யாராவது ஒருவரிடமிருந்து உங்களுக்கு எச்ஐவி **தொற்றாது.**

- அவர்களோடு பேசுவது
- அவர்களோடு கை குலுக்குவது
- அவர்களை கடந்து செல்லும்போது தொடுவது
- ஒரே தட்டுக்கள் மற்றும் கத்திகள் அல்லது முள்ளுக்கரண்டி பயன்படுத்துவது
- ஒரே கழிவறையை பயன்படுத்துவது

**குணமாக்குதல் மற்றும் மருந்துகள்**

- எச்ஐவி அல்லது எய்ட்ஸை குணப்படுத்த **முடியாது**. எச்ஐவி மற்றும் உங்களுக்கு எய்ட்ஸ் இருந்தால் அதைக் கட்டுப்படுத்த நீங்கள் உட்கொள்ளக்கூடிய மருந்துகள் உள்ளன.

## நீங்கள் என்ன செய்யலாம்.

**எச்ஜவி / எய்ட்ஸ் வராமல் உங்களைப் பாதுகாத்து கொள்ள**

✗ ஆணுறை அணியாமல் உடலுறவு **கொள்ளாதீர்கள்.**

✗ **எந்தக் காரணத்திற்காகவும்** எவருடனும் ஊசிகளைப் பகிர்ந்து **கொள்ளாதீர்கள்.**

**எச்ஜவி / எய்ட்ஸ் குறித்து நீங்கள் கவலைப்பட்டால்**

✓ உடல்நல கவனிப்புக் குழுவின் எந்த ஒரு உறுப்பினருடனும் நீங்கள் தனிமையில் பேசலாம்.

✓ சிறையிலுள்ள தொற்றுநோய் மேலாண்மைக் குழுவில் உள்ள ஒரு ஆலோசகர் அல்லது உறுப்பினரிடம் பேச வேண்டும் என நீங்கள் கேட்கலாம்.

✓ சிறையில் எச்ஐவி பரிசோதனையை நீங்கள் செய்து கொள்ளலாம். இந்தச் சோதனையின் முடிவுகள் **தனிப்பட்டதாக** வைக்கப்படும்.

✓ உடலுறவு வைத்துக் கொள்ள ஆணுறைகள், டென்டல் டேம்ஸ் (வாய்வழி உறவுக்காக) அல்லது உராய்வு எண்ணைகள் உங்களுக்குத் தேவைப்பட்டால் அவற்றை உடல்நல கவனிப்புக் குழுவினரிடம் கேளுங்கள். எச்ஐவி உங்களுக்கு தொற்றக்கூடிய ஆபத்து உண்டு எனக் கருதினால் உடல்நல கவனிப்பு அலுவலர் இந்தப் பொருட்களை உங்களுக்குத் தர வேண்டும்.

✓ ஏதாவது காரணத்திற்காக ஊசிகளை நீங்கள் மற்ற நபர்களுடன் பகிர்ந்து கொண்டால், உடல்நல கவனிப்பு குழுவில் உள்ள யாராவது ஒருவருடன் அது குறித்துப் பேசுங்கள். ஊசிகளையும், மற்ற பொருட்களையும் (ஒர்க்ஸ்) சுத்தப்படுத்தக்கூடிய ஏதாவது பொருளை அவர்கள் உங்களுக்கு அளிக்க இயலும்.

## ஹெபடைடிஸ் பி மற்றும் ஹெபடைடிஸ் சி

- இவை மற்றவர்களிடம் இருந்து உங்களுக்கு தொற்றக்கூடிய வைரஸ்களாகும். பிறரின் இரத்தத்திலிருந்தோ அல்லது அவர்களுடன் உடலுறவு கொள்வதாலோ இவை உங்களுக்குத் தொற்றக்கூடும்.

- ஹெபடைடிஸ் பி க்கு தடுப்பு மருந்து இருக்கிறது. ஆனால் ஹெபடைடிஸ் சி க்கு தடுப்பு மருந்து இல்லை. தடுப்பு மருந்து என்பது குறிப்பிட்ட வகை வைரஸ் உங்களுக்கு பரவாமல் தடுப்பதற்காக ஆரம்பத்திலேயே நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்தாகும்.

- ஹெபடைடிஸ் பி அல்லது சி குறித்து நீங்கள் கவலை கொண்டிருந்தால் அல்லது உங்களுக்கு மேலதிக தகவல் தேவைப்பட்டால் உடல்நல கவனிப்புக் குழுவில் உள்ள யாராவது ஒருவரிடம் அது குறித்துப் பேசுங்கள்.

## பாலியலால் பரவும் நோய்கள் மற்றும் தொற்றுக்கள் – யாராவது ஒருவருடன் உடலுறவு கொள்வதால் உங்களுக்கு தொற்றும் நோய். உடலுறவால் பரவும் நோய்கள் – எஸ்டிடி (Sexually Transmitted Diseases) எனவும் அழைக்கப்படுகிறது.

- பாலியலில் ஈடுபடுவதால் பரவும் நோய்கள் மற்றும் தொற்றுக்கள் வேறு சிலவும் உள்ளன. கிளாமைடியா மற்றும் ஜெனிடல் ஹெர்ப்ஸ் போன்றவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

- உடல்நல கவனிப்பு அலுவலரை நீங்கள் உடனடியாகச் சந்தித்தால் இவற்றில் பெரும்பாலனவற்றை சிகிச்சையளித்து குணப்படுத்த முடியும்.

- பாலியல் சம்பந்தமான உங்கள் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய சிறப்பு உடல்நல கவனிப்பு அலுவலர் பெரும்பாலான சிறைகளில் இருப்பார்கள். ஆனாலும் பல மருத்துவர்கள் மற்றும் பிற உடல்நல கவனிப்பு அலுவலர்களும் கூட பாலியலால் பரவும் நோய்கள் மற்றும் தொற்றுகளுக்கு சிகிச்சையளிக்க முடியும்.

- உடலுறவு கொள்வதால் உங்களுக்கு நோய் தொற்றக்கூடும் என நீங்கள் கவலைப்பட்டால் உடல்நல கவனிப்பு அலுவலரிடம் பேசுங்கள். அவர்களிடம் நீங்கள் தனிமையாக பேசலாம்.

# போதைப்பொருள் மற்றும் மது பிரச்சனைகள்

**முக்கிய அம்சங்கள்**

- ✓ போதைப்பொருட்கள் அல்லது மதுப்பிரச்சனைகள் உங்களுக்கு இருந்தால் உதவிக்காக கூடிய விரைவில் உடல்நல கவனிப்பு குழு உறுப்பினர்களுடன் பேசுங்கள்.
- ✓ சரியான உதவியை நீங்கள் பெறுவதை அவர்கள் உறுதி செய்வார்கள்.
- ✓ போதைப் பொருள் அல்லது மது பழக்கத்தைக் கைவிட பலவிமான உதவிகளை சிறையில் நீங்கள் பெறலாம்.
- ✓ மற்ற சிறைக்கைதிகள் போதைப் பொருள் அல்லது மது இந்த வகையான பொருட்களை சிறைக்குள் கொண்டு வர முயற்சித்தாலோ அல்லது உங்களுக்குப் போதை பொருள் பழக்கத்தை உண்டு பண்ண முயற்சித்தாலோ உங்கள் தனி அதிகாரியிடமோ அல்லது மற்ற சிறை அலுவலரிடமோ கூறுங்கள்.

## போதைப் பழக்கம் உண்டா என உங்களைச் சோதித்தல்

நீங்கள் போதைப் பொருள் உட்கொள்கிறீர்களா என்பதை அறிய சிறை அலுவலர் உங்களிடம் பரிசோதனை மேற்கொள்ளலாம். இதை மேற்கொள்ள, உங்களின் சிறுநீர் மாதிரி சேகரிக்கப்பட்டு நீங்கள் போதைப் பொருள் உட்கொள்கிறீர்களா என்பதைப் பற்றிய அறிகுறிகள் அதில் காணப்படுகிறதா என்றறிய அது பரிசோதிக்கப்படும்.

- நீங்கள் சிறையிலிருக்கும்போது போதைப் பொருட்கள் உட்கொள்கிறீர்களா எ ன்றறிய கீழ்காணும் சூழ்நிலைகளில் நீங்கள் பரிசோதிக்கப்படலாம்.
  - பரிசோதனைக்குட்படுத்த சிறை அலுவலர் உங்களைத் தேர்ந்தெடுத்தால். ஒவ்வொரு மாதமும் பரிசோதனைக்காக சிறு அளவிலான சிறைக் கைதிகளை எ ழுந்தமான முறையில் முறையில் தேர்ந்தெடுப்பார்.
  - நீங்கள் போதைப்பொருள் உட்கொண்டிருக்கலாம் என சிறை அலுவலர் கருதினால்
  - நீங்கள் கடந்த காலத்தில் அதிக அளவில் போதைப் பொருட்கள் பயன்படுத்தியிருந்தால் மற்றும் சிறையிலிருக்கும்போது ஏ வகை போதை மருந்துகளை உட்கொண்டுள்ளீர்கள் என்பது சோதனைகளில் தெரியவந்தால், இது நடந்தால் நீங்கள் அடிக்கடி பரிசோதனைக்கு உள்ளாக்கப்படலாம்.

போதைப்பொருட்கள் பரிசோதனை குறித்து மேலதிக தகவல்

- சில செயல்களுக்கு உங்களை அனுமதிக்கும் முன், நீங்கள் இதற்கு முன் நீங்கள் போதைப் பொருட்கள் எதையும் உட்கொள்ளவில்லை என்பதை அலுவலர் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக சிறையிலிருந்து குறைந்த நேரத்திற்கு உங்களை வெளியே செல்ல அனுமதிக்கும் முன் அல்லது மக்கள் உங்களை நம்பக்கூடிய விதமான செயல்கள் அடங்கிய பணியை உங்களுக்கு அளிக்கும் முன்
- வேறொரு சிறைக்கு நீங்கள் மாற்றப்பட்டாலோ அல்லது நீங்கள் சிறைக்கு முதலில் வந்து சேரும்போதோ நீங்கள் பரிசோதிக்கப்படலாம்.

## போதைப்பொருள் பரிசோதனை உங்களுக்கு மேற்கொள்ளப்படுமானால் என்ன நடக்கும்?

1. உங்களுக்கு போதைப்பொருள் பரிசோதனை ஏன் நடத்தப்படுகிறது மற்றும் என்ன செயல்கள் மேற்கொள்ளப்படும் என்பதை சிறை அலுவலர் உங்களிடம் தெரிவிப்பார்.
2. பரிசோதனைக்காக உங்கள் சிறுநீர் மாதிரியை சிறை அலுவலரிடம் நீங்கள் கொடுக்க வேண்டும்.
3. மாதிரியை நீங்கள் தனியாக சென்றும் சேகரிக்கலாம். ஆனால் உங்கள் சிறுநீர் மாதிரியில் நீங்கள் எந்த மாற்றமும் செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்த நீங்கள் மாதிரியை சேகரிப்பதை சிறை அலுவலர் பார்க்கக்கூடியதாக இருக்க வேண்டும்.
4. சிறுநீரில் போதைப்பொருட்கள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்த உங்களது சிறுநீர் மாதிரி பரிசோதனைக்கூடத்தில் சோதிக்கப்படும்.
5. சோதனையின் முடிவை கூடிய விரைவில் சிறை அலுவலர் உங்களுக்குக் கொடுப்பார்.
6. நீங்கள் போதைப்பொருட்கள் உட்கொண்டதை சோதனையின் முடிவுகள் காட்டினால் சிறை அலுவலர் அதை உடல்நல கவனிப்பு குழுவிடம் தெரிவிப்பார். இது, பரிசோதனையின் முடிவை பாதிக்கக்கூடிய மருந்துகள் எதையும் நீங்கள் உட்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவே. உடல்நல கவனிப்பு குழுவினரிடம் சிறை அலுவலர் கூறும்முன் நீங்கள் அதற்கு சம்மதம் கூற வேண்டும்.
7. நீங்கள் போதைப்பொருள் உட்கொண்டுள்ளதாக பரிசோதனையின் முடிவுகள் தெரிவித்தால், போதைப் பொருள் உட்கொண்ட குற்றம் புரிந்தீர்களா அல்லது குற்றம் புரியவில்லையா என்பதை நீங்கள் கூற வேண்டும். இது பற்றிப் பேச ஒரு விசாரணைக்கு நீங்கள் உட்பட வேண்டியிருக்கும் (இதைப்பற்றிய அதிக விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).

## குற்றம் புரியவில்லை என  நீங்கள் கூறினால்

- முதல்  பரிசோதனையின் முடிவுகள் சரியா அல்லது தவறா என்றறிய மற்றொரு போதைப்பொருள்கள் பரிசோதனை உங்களுக்கு மேற்கொள்ளப்படும்.
- இந்த சோதனையின் முடிவுகளும், அதேவிதமாக இருந்தால், சிறுநீர் மாதிரியை மீண்டும் பரிசோதிக்க சிறைக்கு வெளியே உள்ள பரிசோதனைக்கூடத்திற்கு நீங்கள் அனுப்பலாம்.
- இந்த பரிசோதனையின் முடிவுகள் நீங்கள் போதைப் பொருட்களை உட்கொண்டிருப்பதாக காட்டினாலோ அல்லது கூடுதல் பரிசோதனைக்கு நீங்கள் பணம் செலுத்த விரும்பினாலோ சிறை அலுவலர் சில ஆவணங்களை உங்களுக்குக் கொடுப்பார். அந்த ஆவணங்கள்
    - கட்டாய போதைப்பொருள் பரிசோதனை பற்றி சிறைக்கைதிகளுக்கான தகவல்
    - கட்டாய போதைப் பொருள் பரிசோதனையில் சுயாதீன பகுப்பாய்வை மேற்கொள்வது பற்றி வழக்குரைஞர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கான தகவல்.

## குற்றம் புரிந்ததாக நீங்கள் கூறினால் அல்லது இந்தப் பரிசோதனைகள் நீங்கள் போதைப்பொருள் உட்கொண்டதாக மீண்டும் உறுதிப்படுத்தினால்

1. நீங்கள் போதைப்பொருட்கள் உட்கொண்டிருந்தால், **சிறை விதி எண். 51 (9)** அல்லது **இளம் குற்றவாளிகள் விதி எண். 55 (10)** ஐ  நீங்கள் மீறிவிட்டீர்கள் என  அர்த்தம்.
2. குற்றம் புரிந்ததாக உங்கள் மீது வழக்கு பதியப்படும் மற்றும் நீங்கள் ஒரு விசாரணைக்கு உட்படுத்தப்படுவீர்கள். நீங்கள் மற்றும் ஆளுநர் அல்லது வெளியில் இருந்து வரும் நீதிபதி ஆகியோர் குற்றத்தைப் பற்றி விவாதித்து நீங்கள் குற்றம் புரிந்தவரா என  முடிவெடுப்பதே விசாரணையாகும்.
3. நீங்கள் குற்றம் புரிந்தவர் என  முடிவெடுக்கப்பட்டால், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து சிறை முடிவு செய்யும். உங்களுக்கு தண்டனை விதிக்கப்படலாம் அல்லது சில சலுகைகள் எடுக்கப்படலாம்  அல்லது உங்கள் போதைப்பழக்கத்திற்கு தீர்வு காண நீங்கள் அனுப்பப்படலாம். எடுத்துக்காட்டாக காரட்  (ஆலோசனை, மதிப்பீடு, பரிந்துரை, அறிவுரை மற்றும் முழுகவனம்) -CARAT (Counselling, Assessment, Referral, Advice and Thoroughcare) குழுவிற்கு நீங்கள் அனுப்பப்படலாம்

**போதைப்பொருட்கள் பரிசோதனைக்காக அலுவலரிடம் கேட்டல் (இது தன்னார்வ போதைப்பொருள் பரிசோதனை என அழைக்கப்படுகிறது)**

நீங்கள் விரும்பினால் போதைப்பொருள் பரிசோதனையை மேற்கொள்ள சொல்லி நீங்கள் கேட்கலாம். போதைப் பொருட்கள் பயன்படுத்துவதை நீங்கள் நிறுத்த விரும்புவதால் நீங்கள் பரிசோதனை செய்யக்கூறி கேட்கக்கூடும். நீங்கள் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதை நிறுத்திவிடுவதாக கூறினால் அலுவலர் அவரால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்வார்.

நீங்கள் செய்யக்கூடிய இரண்டு காரியங்கள்

1. **தன்னார்வ போதைப்பொருள் பரிசோதிக்கும் பிரிவு** எனப்படும் சிறையில் உள்ள ஒரு பகுதிக்கு செல்ல வேண்டும் என கேளுங்கள். இது சிறையில் உள்ள பாதுகாப்பான பகுதியாகும். நீங்கள் அங்கே தங்கி போதைப்பொருள் பயன்படுத்தும் பழக்கத்தை கைவிட உதவி பெறலாம். சிறையின் இந்தப் பகுதியில் இருப்பதற்கான சில விதிகளுக்கு நீங்கள் ஒப்புதல் தெரிவிப்பதை அறிவிக்க ஒரு படிவத்தில் நீங்கள் கையொப்பமிட வேண்டும். சில போதைப் பொருட்கள் பரிசோதனைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கும்.
2. சிறையின் வேறுபகுதிக்கு மாற்றப்படாமலும் கூட போதைப் பொருட்கள் பயன்படுத்துவதை கைவிடுவதற்கான உதவியை நீங்கள் பெற இயலும். தன்னார்வ போதைப் பொருள் பரிசோதிக்கும் திட்டம் எனப்படுவதின் ஒரு அங்கமாக இருக்க விரும்புவதாக நீங்கள் கேட்கலாம். இது குறித்தான சில விதிகளை பின்பற்றுவேன் என்பதை நீங்கள் தெரிவிக்க ஒரு படிவத்தில் கையொப்பமிட வேண்டும். சில போதைப் பொருட்கள் பரிசோதனைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

✓ போதைப் பொருட்கள் உட்கொள்வதை நீங்கள் நிறுத்த விரும்பினால் சில விதிகளை பின்பற்ற நீங்கள் ஒப்புக்கொள்வதை தெரிவிக்க நீங்கள் ஒரு படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

✓ நீங்கள் இன்னமும் போதைப் பொருட்கள் உட்கொள்வதாக பரிசோதனை முடிவுகள் தெரிவித்தால் அடுத்து என்ன நடக்கும் என்பது படிவத்தில் கூறப்பட்டிருக்கும்.

✓ நீங்கள் போதைப்பொருள் உட்கொள்வதாக கண்டறியப்பட்டால் நீங்கள் தண்டனை பெறமாட்டீர்கள். ஆனால் சிறையின் அந்தப் பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு உங்களை மாற்றுவது போன்ற செயல்களை சிறை அலுவலர் மேற்கொள்ளக்கூடும்.

- சில சிறைகளில், போதைப்பொருள் பரிசோதனை மேற்கொள்ள நீங்கள் ஒப்புக்கொண்டால் மற்றும் நீங்கள் போதைப் பொருட்கள் உட்கொள்வதில்லை என பரிசோதனையின் முடிவுகள் தெரிவித்தால் ச லுகைகள் எனப்படும் கூடுதல் அம்சங்களை நீங்கள் பெறலாம் எடுத்துக்காட்டாக கூடுதல் பார்வையாளர் சந்திப்புகள் அல்லது அதிக அளவில் உங்கள் பணத்தை செலவிட அனுமதிக்கப்படலாம்.
- இது குறித்து சிறை அலுவலரிடம் கேளுங்கள். சில விதிகளைப் பின்பற்றவும், போதைப் பொருள் உட்கொள்ள மாட்டீர்கள் என்பதற்கும், நீங்கள் ஒப்புக்கொள்வதை தெரிவிக்க ஒரு படிவத்தில் நீங்கள் கையொப்பமிட வேண்டும். நீங்கள் என்னென்ன செய்ய வேண்டும் மற்றும் நீங்கள்

போதைப் பொருட்கள் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் மேற்கொண்டு என்ன நடக்கும் என்பதை இந்தப் படிவம் உங்களுக்கு எடுத்துக்கூறும்.

## போதைப்பொருள் மற்றும் மது பிரச்சனைகளுக்கு நீங்கள் பெறக்கூடிய உதவி

போதைப்பொருட்கள் அல்ல மதுப்பழக்கத்தை நிறுத்த **எந்த சிறைக்கைதியும்** உதவியை பெற முடியும். கீழ்க்கண்டவர்களிடம் இருந்து நீங்கள் உதவியைப் பெற முடியும்

1. **உடல்நல கவனிப்புக் குழு** . நீங்கள் போதைப்பொருட்கள் அல்லது மது பழக்கத்தை நிறுத்த உதவி அவர்கள் பலவற்றை செய்ய முடியும்.
2. சிறையின் உங்கள் பகுதியில் இருந்தபடியே அல்லது தன்னார்வ போதைப்பொருள் பரிசோதிக்கும் பிரிவு என அழைக்கப்படும் சிறையின் மற்றொரு பகுதிக்கு மாறிச் சென்றோ நீங்கள் உதவியினைப் பெற முடியும். **92ம் பக்கம் பார்க்கவும்.**
3. **காரட் சேவை (CARAT)** (ஆலோசனை, மதிப்பீடு, பரிந்துரை, அறிவுரை, மற்றும் முழுகவனம்) இவர்கள் சிறைக்கு வெளியில் இருந்து வரும் நபர்களாகளா அல்லது சிறை அதிகாரிகளோ ஆவர். சிறைக்கைதிகள் போதைப் பொருள் பயன்படுத்தும் பழக்கத்தை நிறுத்த உதவ இவர்கள் பணியாற்றுகின்றனர். சிறைக்கு சென்றபின் விரைவிலேயே யாராவது ஒரு காரட் நபரை நீங்கள் சந்திக்கலாம். உங்களுடைய போதைப்பொருள் பழக்கத்தை நிறுத்த உதவ திட்டமிடுவதற்கு அவர்கள் உங்களுடன் இணைந்து பணியாற்றுவர்
4. **போதைப்பொருள் புனர்வாழ்வு திட்டங்கள்.** காரட்டிலிருந்து உங்களோடு இணைந்து பணியாற்றும் நபர் நீங்கள் பெறக்கூடிய இந்த மற்ற வகை உதவிகளைப் பற்றி உங்களிடம் கூறுவார். இந்த உதவியைப் பெற நீங்கள்வேறொரு சிறைக்கு மாற இயல வேண்டும்.

இந்த வகையான உதவிகளில், போதைப்பொருள் பரிசோதனைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். நீங்கள் போதைப் பொருள் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் உங்களுக்கு கிடைக்கப்பெறும் உதவிகளை நீங்கள் இழக்கக்கூடும்.

- போதைப்பொருள் பயன்படுத்தல் பற்றி உங்களுக்கு உதவும் நபரிடம் பேசுவது பற்றி கவலைப்படாதீர்கள். எந்த தகவலையும் தனிப்பட்டு அவர்கள் வைத்திருக்க முடியும் மற்றும் எந்த தகவலை மற்றவர்களிடம் கூற வேண்டும் என்பதை அவர்கள் உங்களிடம் கூறுவர்.
- உங்கள் குடும்பத்தில் யாராவது போதைப்பொருள் உட்கொள்வது அல்லது உங்களது போதைப்பொருள் பழக்கம் அவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பவைகள் குறித்தோ நீங்கள் கவலை கொண்டிருந்தால் அது குறித்து காரட்டிலிருந்து வரும் நபரோடு பேசுங்கள். உங்கள் குடும்பம் சில உதவிகளையோ அல்லது தகவலையோ பெற காரட்டிலிருந்து வரும் நபரால் ஏற்பாடு செய்ய இயலும்.

# உங்கள் மத நம்பிக்கை

- ✓ உங்கள் மதநம்பிக்கையை சிறையில் நீங்கள் பின்பற்ற இயலும்.
- ✓ நீங்கள் சிறைக்கு முதலில் வரும்போது உங்கள் மத நம்பிக்கை என்ன என்பதை சிறை அலுவலரிடம் நீங்கள் கூறலாம். அவர்கள் உங்கள் மத நம்பிக்கையை பின்பற்ற உதவுவார்கள்.
- ✓ உங்கள் மதநம்பிக்கையை பின்பற்ற நீங்கள் செல்லக்கூடிய இடம் இருப்பதை சிறை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, பிரார்த்தனைகளுக்காகவோ அல்லது மத ரீதியான சந்திப்புகளுக்குச் செல்ல
- ✓ உங்கள் மத நம்பிக்கையைப் பின்பற்ற உங்களுக்கு உதவ ஒவ்வொரு சிறையும் ஒரு குழுவைக் கொண்டிருக்கும். இது மதகுருமார் குழு எனப்படும்.
- ✓ உங்களுக்கு மத நம்பிக்கை எதுவும் இல்லை என்றாலும் கூட ஒரு மதகுருவை சந்திக்க வேண்டும் என நீங்கள் கேட்கலாம். யாராவது ஒருவரிடம் பேச வேண்டும் என விரும்பும், எந்தஒரு சிறைக்கைதி கூறுவதையும் மதகுருமார்கள் கேட்பார்கள். எடுத்துக்காட்டாக சிறைக்கைதி மனமுடைந்து போயிருந்தாலோ அல்லது கவலையாக உணர்ந்தாலோ
- ✓ வழிபடுதல் மற்றும் மதசேவைகள், விடுமுறைகள் மற்றும் திருவிழாக்கள் ஆகியவற்றின் தேதிகள் மற்றும் நேரங்களை சிறை கவனத்தில் கொள்ளும்.
- ✓ உங்கள் மதநம்பிக்கையின் முக்கிய நிகழ்வுக்கு நீங்கள் எப்போதும் செல்லலாம். எடுத்துக்காட்டாக நீங்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தால் தப்பிக்க நினைப்போர் பட்டியல் அல்லது மருத்துவமனையில் இருந்தாலும்கூட நிகழ்வுக்கு நீங்கள் கட்டாயம் செல்ல விரும்பினால் அந்த நிகழ்வுக்கு முன்னரே மதகுருவிடம் தெரிவித்துவிடுங்கள்.
- ✓ சிறையில் உங்கள் மதநம்பிக்கைகள் பூர்த்திசெய்யப்படவில்லை எனில் மதகுருமார்களில் ஒருவருடனோ அல்லது பல கலாச்சார அதிகாரியுடனோ அது குறித்துப் பேசுங்கள்
- ✓ சிறைசேவை ஆணை 4550-ல் மேலதிக தகவல் உள்ளது. இதன்பிரதி நூலகத்தில் பெறலாம்.

## உங்கள் மதநம்பிக்கையை பின்பற்ற உங்களுக்கு உதவும் நபர்கள்.

- மதகுருமார்கள் குழு என்பது, நீங்கள் உங்கள் மதநம்பிக்கையைப் பின்பற்ற உதவ , பல்வேறு மதநம்பிக்கைகளைச் சேர்ந்த நபர்களைக் கொண்ட குழுவாகும்.

- இந்தக் குழுவானது ஒவ்வொரு சிறையிலும் மாறுபடும். ஆனால் வழக்கமாக கீழ்க்காணும் மதங்கள் மற்றும் நம்பிக்கைகளை சேர்ந்த மதகுருமார்கள் இருப்பார்கள்.

    - சர்ச் ஆஃப் இங்கிலாந்து
    - ரோமன் கத்தோலிக்கர், மெதோடிஸ்ட் மற்றும் ஃ.ப்ரீ சர்சஸ்
    - இஸ்லாமியர்
    - புத்தர்கள்
    - யூதர்
    - இந்து
    - சீக்கியம்

தேவைப்பட்டால் மற்ற மதங்கள் மற்றும் நம்பிக்கைகளைச் சேர்ந்த நபர்களும் சிறைக்கு வரக்கூடும். ரஸ்டாஃபரியனிசம் ஒரு மதமாக சிறைகளில் அங்கீகரிக்கப்படவில்லை. எனினும் நீங்கள் ஒரு ரஸ்டாஃபரியனாக இருந்தால் மதகுருமார் குழு உங்களுக்கு உதவ முயற்சிக்கும். சைவ அல்லது வேகன் உணவுகளை நீங்கள் உண்ணலாம் மற்றும் புத்தகங்கள் போன்ற உங்களுக்கு தேவைப்படும் மற்ற பொருட்களும் கிடைக்கும்.

## உங்களுக்கு மத நம்பிக்கை சிறை அலுவலருக்கு தெரிந்ததை உறுதிப்படுத்தல்

- மதநம்பிக்கையை நீங்கள் பின்பற்ற விரும்பினால் சிறைக்கு முதலில் வரும்போது அதை சிறை அலுவலரிடம் கூற வேண்டும். உங்கள் மதநம்பிக்கையைப் பின்பற்ற உங்களுக்கு தேவைப்படுபவை இருப்பதை சிறை அலுவலர் இதன்மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள இயலும்

- நீங்கள் சிறைக்கு முதலில் வரும்போது உங்கள் மதநம்பிக்கையை கூறும்படி கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். உங்கள் மதநம்பிக்கை என்ன என்பதை நீங்கள் சிறை அலுவலரிடம் கூறலாம் அல்லது மதநம்பிக்கை உங்களுக்கு இல்லை எனவும் கூறலாம்.

- இது உங்கள் மதநம்பிக்கையை **பதிவுசெய்தல்** எனப்படுகிறது.

உங்கள் மதநம்பிக்கை பற்றி மேலதிக தகவல்

- அதன்பிறகு, மத நிகழ்வுகளிலோ அல்லது செயல்பாடுகளிலோ நீங்கள் பங்கெடுக்க விரும்பினால், நீங்கள் எந்த நம்பிக்கையை சார்ந்தவர் என பதிவு செய்யப்பட்டதோ அந்த மத நிகழ்விற்கு நீங்கள் செல்லலாம்.

- நீங்கள் சிறைக்கு முதலில் வந்தபின் சரியான மதநம்பிக்கை உங்களுக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும் மற்றும் உங்களுக்கு மதரீதியான தேவைகள் ஏதேனும் இருந்தால் அதைக் கண்டறியவும் உங்களைக் காண மதகுரு ஒருவர் வருவார்.

## உங்கள் மதநம்பிக்கையை நீங்கள் மாற்ற விரும்பினால்

- நீங்கள் எந்தமதநம்பிக்கையைச் சார்ந்தவர் என பதிவு செய்யப்பட்டிருக்கிறீர்களோ அதிலிருந்து வேறொன்றிற்கு உங்கள் மதநம்பிக்கையை நீங்கள் மாற்றிக்கொள்ள இயலும்.
- மற்றொரு மதநம்பிக்கைக்கு மாற்ற விரும்புகிறீர்கள் என்பதை தெரிவிக்க நீங்கள் ஒரு படிவத்தை நிறைவு செய்து கையொப்பமிட வேண்டும்.
- உங்கள் புதிய மதநம்பிக்கைக்கான சரியான மதகுருவை நீங்கள் கண்டறிய மதகுருமார் குழு உங்களுக்கு உதவும்.

## உங்கள் மதநம்பிக்கையை மாற்றாமல் வேறொரு மதநம்பிக்கையை சேர்ந்த மதகுருவை நீங்கள் காண விரும்பினால்

நீங்கள்,

- நிஜமாகவே மற்றொரு மதநம்பிக்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள அல்லது பின்பற்ற விரும்புகிறீர்கள் என ஆளுநர் மற்றும் மதகுருமார்கள் திருப்தியுடன் உள்ளவரை இதைச் செய்யலாம்.

- ஒரு நல்ல காரணத்திற்காகவே இதைச் செய்கிறீர்கள் வேறு பிரச்சனைகளைத் கிளப்புவதற்காக அல்ல என ஆளுநர் மற்றும் மதகுருமார்கள் கருதும்வரை இதைச் செய்யலாம்.

## மதநிகழ்வுகள் அல்லது பிற மதநம்பிக்கைகள் செயல்பாடுகளுக்கு செல்லுதல்

- மத நிகழ்வுகளுக்காக ஒவ்வொரு வாரமும் குறைந்த பட்சம் ஒரு மணிநேரம் சிறை அனுமதியளிக்க வேண்டும்.
- மதநிகழ்வுகள், சந்திப்புகள் அல்லது செயல்பாடுகளின் தேதிகள் மற்றும் நேரங்கள் மதகுருமார் குழு உங்களுக்குக் கூறும்.
- நீங்கள் எந்த மதநம்பிக்கையை சார்ந்தவர் என பதியப்பட்டீர்களோ அந்த மதநம்பிக்கையின் முக்கிய நிகழ்விற்கு நீங்கள் செல்லலாம்.
- போதுமான இடம் இருக்கும்வரை நீங்கள் உங்கள் மதநம்பிக்கை சார்ந்த மற்ற குழுக்கள் அல்லது செயல்பாடுகளுக்கு நீங்கள் செல்லலாம்.
- மதநம்பிக்கை இல்லாதவர் என நீங்கள் சிறையிடம் கூறியிருந்தாலும் கூட மதநிகழ்விற்கு நீங்கள் செல்லலாம்.
- மாறுபட்ட மதநம்பிக்கையினரின் சந்திப்புகளுக்கும் நீங்கள் செல்ல இயலும். இது குறித்து உங்கள் மதகுருவிடம் முதலில் நீங்கள் பேசுங்கள்.
- சிலசமயங்களில் உங்கள் மதநம்பிக்கை தொடர்பான முக்கியமான நிகழ்விற்கான அதே நேரத்திலேயே உங்களது தினசரி உடற்பயிற்சி அல்லது பார்வையாளர்கள் சந்திப்பு போன்ற சிறையில் நீங்கள் மேற்கொள்ளும் மற்ற சம்பவங்களும் இடம் பெறக்கூடும். இது ஏற்பட்டால், உங்கள் மதநிகழ்விற்கு நீங்கள் செல்ல சிறை அலுவலர் உங்களுக்கு உதவக்கூடும்.

## உங்களுக்கு மதகுரு என்னவெல்லாம் செய்ய இயலும்

- வெளியுலகத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ள மதகுருமார்கள் உங்களுக்கு உதவ இயலக்கூடும். எடுத்துக்காட்டாக, உங்கள் சர்ச், மசூதி, கோவில் அல்லது சமூகத்திலிருந்து மதம் சம்பந்தமான ஒ ரு நபர் உங்களை சிறையில் சந்திக்க அவர்களால் ஏற்பாடு செய்ய இயலும்.
- உங்கள் குடும்பத்தினருடன் நீங்கள் தொடர்பு கொள்ளவும் அவர்கள் உதவ இயலும். இதை மேற்கொள்ள அவர்கள் உங்கள் குடும்பத்தினருடனோ அல்லது நன்னடத்தை சேவை போன்ற பிறருடனோ இணைந்து செயலாற்றுவர்.
- நீங்கள் வேறொரு நாட்டைச் சேர்ந்தவராக இருந்தால் (வெளிநாட்டு சிறைக் கைதி) அந்த நாட்டில் உள்ள உங்கள் குடும்பத்தினருடன் நீங்கள் தொடர்பு கொள்ள மதகுரு உங்களுக்கு உதவி புரியக்கூடும்.

## பிற உதவி எடுத்துக்காட்டாக, பரோல் பெறுதல் போன்ற செயல்கள்

- நீங்கள் சிறையில் இருக்கும்போது உங்களைப் பற்றி தயாரிக்கப்படும் எந்த ஒரு அறிக்கைக்காகவும், உங்களைப் பற்றி ஏதாவது கூறவோ அல்லது எழுதவோ வேண்டும்படி உங்கள் மதகுருவை நீங்கள் கேட்டுக்கொள்ளலாம்.

- உங்கள் நடத்தை மற்றும் நீங்கள் மேற்கொண்ட பணி அல்லது கல்வி போன்ற நீங்கள் செய்த செயல்கள் குறித்து சிறை அலுவலர் அவரிடம் உள்ள தகவலைக் கொண்டு உங்களைப் பற்றிய அறிக்கைளை எழுதுவார். இந்த அறிக்கைகள் உங்களைப் பற்றிய முடிவுகளை எடுக்கப்பயன்படும். எடுத்துக்காட்டாக, உங்களுக்கு பரோல் அளிக்கலாமா அல்லது வேண்டாமா என்று முடிவெடுக்க பரோல் போர்டில் இருந்து வரும் நபர்கள் இந்த அறிக்கையை பார்வையிடுவர்.

# சிறைவிதிகள்

**முக்கிய அம்சங்கள்**

- சிறைவிதிகள் அனைத்து சிறைக்கும் பொருந்தும். ஆனால், ஆளுநர் உள்ளூர் விதிகளையும் கொண்டிருக்கக்கூடும்
- சிறைவிதிகளை நீங்கள் மீறும்போது அது **குற்றம்** எனப்படுகிறது
- ஒரு குற்றத்திற்காக உங்கள்மீது குற்றச்சாட்டு பதியப்பட்டு தண்டனையும் அளிக்கப்படலாம்.
- **சிறைவிதி எண். 51** மற்றும் **இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மைய விதி எண். 55** குற்றங்கள் பற்றி எடுத்துக்கூறுகின்றன
- சிறைவிதிகளை புரிந்துகொள்வது சற்று கடினமாக இருக்கலாம். சிறை ஒழுக்க விளக்கக் கையேடு எனும் புத்தகத்தில் நீங்கள் அவற்றை காணலாம். இது **சிறைசேவை ஆணை 2000** எனவும், அழைக்கப்படுகிறது. புத்தகத்தின் ஒரு பிரதி சிறையின் உங்கள் பகுதியிலும் நூலகத்திலும் இருக்க வேண்டும்.

**அடுத்த பக்கங்களில் குறிப்பிட்டுள்ள எந்த செயல்களையாவது நீங்கள் செய்தால் நீங்கள் சிறைவிதிகளை மீறியதாகவும், குற்றம் புரிந்ததாகவும் அர்த்தமாகும்.**

## பிறரை தாக்குதல், மிரட்டுதல் அல்லது காயப்படுத்தல் போன்ற வகைகளில் நடந்து கொள்ளல்

- நீங்கள் யாராவது ஒருவரை தாக்கினால் அல்லது அடித்தால் அல்லது யாராவது ஒருவருடன் சண்டையிட்டால்,
- ஒருவரது இனத்தின் (ஒரு நபரின் நிறம் மற்றும் அவரது பின்புல ம் அல்லது கலாச்சாரம் போன்றவையே இனம் எனப்படுகிறது) காரணமாக நீங்கள் ஒருவரை தாக்கினால் அல்லது அடித்தால்
- மற்றவரை மனம் உடைந்து போகச் செய்யும், பயப்படச் செய்யும் அல்லது மிரளச் செய்யும் விதமாக நீங்கள் ஏதாவது கூறினால் அல்லது ஏதாவது செய்தால், மற்றும் இது ஒருவருடைய இனத்தின் காரணமாக நீங்கள் செய்தால்,
- அவர்கள் விரும்பவில்லை எனினும், ஒரு நபரை நீங்கள் மற்றவரிடமிருந்து ஏதாவது இடத்தில் விலக்கி வைத்தால் எடுத்துக்காட்டாக, அவர்களை ஏதாவது ஒரு இடத்தில் வைத்து தாளிட்டு வைத்தால்
- யாராவது ஒருவரை ஆபத்துக்குள்ளாக்கும் வகையிலோ அல்லது அவரது உடல்நலத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் வகையிலோ நீங்கள் நடந்து கொண்டால்
- சிறையில் அல்லது இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மையத்தில் பணிபுரியும் எவரிடத்தும் அல்லது வருகை புரியும் எவரிடத்தும் நீங்கள் முரட்டுத்தனமாக நடந்து கொண்டால்

### சிறை அலுவலரை அவர் பணிகளை செய்ய விடாமல் தடுத்தல்

- சிறையில் பணிபுரியும் யாராவது ஒருவரை அவ ர்கள் சிறையில் செல்ல வேண்டிய தேவை உள்ள இடத்திற்கு செல்ல விடாமல் நீங்கள் தடுத்தால். எடுத்துக்காட்டாக, உங்கள் செல்லுக்குள் யாராவது வருவதைத் தடுக்க தடுப்புச்சுவர் போல நிற்றல்.
- சிறையில் பணிபுரியும் யாராவது ஒருவரை அவர் பணியைச் செய்யவிடாமல் நீங்கள் தடுத்தால்

### சிறையிலிருந்து தப்பித்தல்

- சிறையிலிருந்தோ அல்லது காவலிலிருந்தோ தப்பித்தல். எடுத்துக்காட்டாக ஒரு காவலரிடமிருந்து தப்பித்து ஓடுதல்.
- குறுகிய நேரத்திற்கு சிறையை விட்டு வெளியே செல்ல நீங்கள் அனுமதிக்கப்பட்டு ஆனால் நீங்கள் திரும்ப வரவில்லை எனில், இது தலைமறைவு எ ன அழைக்கப்படும்.

### போதைப் பொருட்கள் மற்றும் மது

- உங்கள் சிறுநீர் பரிசோதிக்கப்பட வேண்டும் என உங்களுக்கு உத்திரவிடப்பட்டு சோதனையின்முடிவுகள் நீங்கள் உட்கொள்ள அனுமதிக்கப்படாத போதைப்பொருட்கள் உட்கொண்டதாகக் காட்டினால் சிறையிலிருந்து குறுகிய காலம் நீங்கள் வெளியே சென்றபோது உட்கொண்டிருந்தால் கூட
- மது அருந்த நீங்கள் முயற்சித்தால் அல்லது மது அருந்திய பின் அது கண்டுபிடிக்கப்பட்டால்

### சிறை அல்லது இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்தமையத்திற்கு சேதம் விளைவித்தல்

- கட்டிடத்தின் எந்த ஒரு பகுதிக்கோ அல்லது அவற்றில் உள்ளவைகளுக்கோ நீங்கள் தீ வைத்தால்
- கட்டிடத்தின் எந்த ஒரு பகுதியையோ அல்லது உங்களுக்கு சொந்தமில்லாத எந்த ஒரு பொருளையோ நீங்கள் சேதப்படுத்தினால் அல்லது அழித்தால்
- யாரையாவது மனமுடையச் செய்யக்கூடிய அல்லது மிரட்டக்கூடிய அல்லது மிரளக்கூடிய வகையில் ஏதாவது ஒன்றை நீங்கள் சுவரில் ஒட்டினால் அல்லது எழுதினால் அல்லது வரைந்தால்
- அல்லது இந்தச் செயல்களில் ஏதாவது ஒன்றை பிறரின் இனம் காரணமாக நீங்கள் செய்தால் .

## நீங்கள் வைத்திருக்கக்கூடிய அல்லது வைத்துக்கொள்ளக்கூடாத பொருட்கள்

- நீங்கள் வைத்துக்கொள்ளக்கூடாத பொருள் ஏதாவதை நீங்கள் வைத்திருந்தால், எடுத்துக்காட்டாக ஒரு மொபைல் தொலைபேசி,  கத்தி அல்லது போதைப் பொருட்கள்
- ஒரு குறிப்பிட்ட பொருளை நீங்கள் வைத்திருக்க அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக நீங்கள் வைத்திருந்தால்
- நீங்கள் வைத்திருக்கக்கூடாத பொருளை உங்களை சந்திக்க வரும் யாராவது ஒருவரிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்டால் எடுத்துக்காட்டாக, போதைப்பொருட்கள்
- நீங்கள் வைத்திருக்கக்கூடாத பொருளை நீங்கள் யாருக்காவது கொடுத்தால் அல்லது விற்றால்
- நீங்கள் மட்டுமே வைத்திருக்கக்கூடிய பொருளை நீங்கள் யாருக்காவது கொடுத்தால் அல்லது விற்றால்
- உங்களுக்குச் சொந்தமில்லாத பொருளை மற்றொரு நபரிடமிருந்தோ அல்லது சிறையிலிருந்தோ நீங்கள் எடுத்தால் அல்லது திருடினால்

## சிறையில் நீங்கள் இருக்கக்கூடாத இடத்தில் நீங்கள் இருத்தல்

- நீங்கள் இருக்க வேண்டிய இடத்தை விட்டு நீங்கள் சென்றால்
- நீங்கள் செல்லக்கூடாத இடத்திற்கு நீங்கள் சென்றால்

## சிறை அலுவலர் உங்களைச் செய்யக்கூறிய செயலை செய்யாதிருத்தல்

- நீங்கள் ஒரு பணியை செய்ய பணிக்கப்பட்டு அந்தப் பணியை சரியாகச் செய்யவில்லை அல்லது செய்யவே இல்லை என்றால்
- நீங்கள் பின்பற்ற வேண்டிய விதி அல்லது ஆணையை நீங்கள் பின்பற்றவில்லை என்றால்
- சிறை விதி ஏதாவது ஒன்றை நீங்கள் மீறினால் அல்லது வேறுயாராவது மீற நீங்கள் உதவினால்

## குறுகிய நேரம் சிறைக்கு வெளியே செல்லும்போது விதிகளை மீறுதல்

- குறுகிய நேரம் சிறைக்கு வெளியே செல்ல நீங்கள் அனுமதிக்கப்பட்டு அப்போது விதிகளை நீங்கள் மீறினால். இது, சிறை விதி எண். 9 அல்லது இளம் குற்றவாளி சீர்த்திருத்தமைய விதி எண். 5 ஆகியவை பற்றியது.

## சிறைவிதிகளை மீறுதல்

சிறைவிதிகளை நீங்கள் மீறும்போது, அது குற்றம் எனப்படுகிறது.

### நீங்கள் ஒரு குற்றம் புரிந்தால் என்ன நடக்கும்?

1. அவர்கள் நீங்கள் குற்றம் புரிந்ததாகக் கருதினால் அது பற்றியும், நீங்கள் செய்த குற்றம் என்ன என்பதையும் சிறை அலுவலர் ஒருவர் உங்களிடம் உடனடியாகக் கூறுவர். (அல்லது 48 மணி நேரத்திற்குள்) குற்றம் பற்றி உங்களுக்கு எடுத்துக்கூறும் ஒரு படிவத்தை அவர்கள் உங்களுக்கு அளிப்பார்கள்.

2. ஒரு விசாரணைக்கு நீங்கள் செல்ல வேண்டும் (நீதிமன்ற விசாரணை எனவும் அழைக்கப்படுகிறது) இங்கு, நீங்களும், சிறை அலுவலரும் குற்றம் பற்றியும் மற்றும் என்ன நடந்தது என நீங்கள் அனைவரும் கருதுகிறீர்கள் என்பன பற்றியும் பேசுவீர்கள். விசாரணையானது ஆளுநரினாலோ அல்லது சிறைக்கு வெளியிலிருந்து வரும் சுயாதீன நீதிபதி என அழைக்கப்படுபவரினாலோ நடத்தப்படும்.

3. விசாரணையின்போது, நீங்கள் அந்த குற்றத்தைப் புரிந்தீர்களா அல்லது குற்றம் புரியவில்லையா என கூற வேண்டும்.

4. நீங்கள் அந்தக் குற்றத்தை புரிந்தீர்களா அல்லது குற்றம் புரியவில்லையா என்பதை ஆளுநரோ அல்லது சுயாதீன நீதிபதியோ முடிவு செய்வார். நீங்கள் கூறுவதையும் மற்றும் என்ன நடந்தது என்பதை அறிந்த மற்ற நபர்களையும் கேட்டறிந்த பின் அவாகள் இதைச் செய்வர்.

5. நீங்கள் குற்றம் புரிந்ததாக கண்டறியப்பட்டால், உங்களுக்கு தண்டனை வழங்கப்படும். பக்கம் 87 இல் தண்டனைகளின் பட்டியல் விளக்கப்பட்டுள்ளது. நீங்கள் குற்றம் புரியவில்லை எனக் கண்டறியப்பட்டால், வேறு எதுவும் நடக்காது.

## தண்டனைகள்

### முக்கிய அம்சங்கள்

- ✓ நீங்கள் பெறக்கூடிய தண்டனைகள் **சிறை விதி 55 & 55ஏ** மற்றும் **இளம் குற்றவாளி சீர்திருத்தமைய விதி 60 & 60ஏ** வில் கூறப்பட்டுள்ளது.
- ✓ உங்களுக்கு கொடுக்கப்படும் தண்டனை நீங்கள் புரிந்த குற்றத்தின் தீவிரத்தன்மையை பொருத்தது.
- ✓ குற்றம் மிகவும் தீவிரமானது எனில், சிறையானது காவல் துறையை அழைக்கக்கூடும்.
- ✓ ஒரு குற்றத்திற்கு மேல் நீங்கள் புரிந்தால், ஒவ்வொரு குற்றத்திற்கும் தனித்தனியாக நீங்கள் தண்டிக்கப்படலாம். தண்டனைகளை ஒன்றன்பின் ஒன்றாக நீங்கள் அனுபவிக்க வேண்டி இருக்கும்.
- ✓ குற்றம் தீவிரமானது எனில், நீங்கள் கூடுதல் நாட்களை சிறையில் கழிக்க வேண்டி இருக்கும்.
- ✓ ஆனால், கூடுதல் நாட்கள் தண்டனை உங்களுக்கு வழங்கப்பட்டால் ஒவ்வொரு குற்றத்திற்கும் உங்களுக்கு அளிக்கப்படும் கூடுதல் நாள் தண்டனை 42 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- ✓ எச்சரிக்கையைத் தவிர எந்த ஒரு தண்டனையையும் 6 மாதம் வரை நிறுத்தி வைக்கலாம். அதாவது, இந்தக் கட்டத்தில் நீங்கள் வேறு குற்றம் புரிந்தால் உங்கள் தண்டனை துவங்கக்கூடும்.
- ✓ கூடுதல் நாட்கள் தவிர, ஆளுநர் உங்களுக்கு எந்தவொரு தண்டனையும் அளிக்கலாம்.
- ✓ சுயாதீன நீதிபதி (மாவட்ட நீதிபதி) மட்டுமே உங்களுக்கு கூடுதல் நாட்கள் தண்டனை அளிக்கக்கூடிய நபராவார். அதோடு மற்ற எந்த ஒரு தண்டனைகளையும் அளிப்பார்.

குற்றம் புரிந்ததற்காக நீங்கள் பெறக்கூடிய தண்டனைகளின் பட்டியல் கீழே கூறப்பட்டுள்ளது.

- உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படலாம்.
- உங்கள் சிறப்பு சலுகைகள் (உங்கள் சிறை அறையில் தொலைக்காட்சி பெட்டி வைத்திருத்தல்) போன்றவை உங்களிடமிருந்து 42 நாட்கள் வரை பறிக்கப்படலாம். அல்லது இளம் குற்றவாளி எனில் 21 நாட்கள் வரை பறிக்கப்படலாம்.
- 84 நாட்களுக்கு நீங்கள் சம்பாதிக்கும் ப ணத்தொகை நிறுத்தி வைக்கப்படலாம். அல்லது இதுவே இளம் குற்றவாளி எனில் இது 42 நாட்கள் வரையாக இருக்கும். ஆனால் உங்கள் குடும்பத்தினரோடு தொடர்பு கொள்ள அஞ்சல் தலைகள் வாங்க மற்றும் தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொள்ள தேவையான போதுமான பணத்தை நீங்கள் பெறுவீர்கள்.
- ம ற்ற சிறைக் கைதிகளிடமிருந்து தனித்து நீங்கள் மட்டும் தனியாக ஒரு செல்லில் 35 நாட்கள் வரை அடைத்து வைக்கப்படலாம். 18 வயதிற்கு மேலான இளம் குற்றவாளிக்கு இதுவே 16 நாட்கள் வரையாக இருக்கும். இது சிறை அறையில் அடைத்தல் எனப்படுகிறது. இதை மேற்கொள்ளக்கூடிய போதுமான உட ல்நலத்துடன் இருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரு மருத்துவரினாலா அல்லது தாதியராலோ உங்களுக்கு பரிசோதனை நடத்தப்படும்.
- 21 நாட்கள் வரை மற்ற சிறைக் கைதிகளோடு நீங்கள் இணைந்து பணிபுரிவது நிறுத்தப்படலாம்.
- நீங்கள் விளக்கமறியலில் இருந்தால் உங்கள் சலுகைகள் பறிக்கப்படலாம்.
- 28 நாட்களுக்கு சிறையின் பிரிவிலிருந்து அல்லது தங்குமிடத்திலிருந்து நீங்கள் அகற்றப்படலாம். ஆனால், இளம் குற்றவாளிகளுக்கு இது 21 நாட்கள் வரையாக இருக்கும்.

கீழே குறிப்பிட்டுள்ள தண்டனைகள் **இளம் குற்றவாளிக்கு மட்டுமே,**

- எந்தவொரு செயல்பாட்டிலும் நீங்கள் ஈடுபடுவது 21 நாட்கள் வரை நிறுத்தப்படலாம்.
- 21 நாட்கள் வரை தினமும் 2 மணி நேரங்கள் கூடுதலாக பணிபுரிய வேண்டியிருக்கும்.

**கூடுதல் நாட்கள்**

- குற்றம் தீவிரமானது எனில் மற்ற தண்டனைகளுடன் 42 நாட்கள் வரை கூடுதலாக சிறையில் கழிக்க தண்டனை வழங்கப்படலாம்.
- கூடுதல் நாட்கள் என்பது உங்கள் தண்டனையின் ஒரு பகுதி அல்ல. ஆனால் கூடுதல் நாட்களை நீங்கள் சிறையில் கழிப்பீர்கள்.
- சுயாதீன நீதிபதிகள் (அவர்கள் மாவட்ட நீதிபதிகள்) மட்டுமே உங்களுக்கு கூடுதல் நாட்கள் தண்டனையை அளிக்க முடியும்.

கூடுதல் நாட்கள் பற்றி மேலதிக தகவல்

- நீங்கள் விளக்கமறியலில் இருந்தால், தண்டனை வழங்கப்பட்டு, தண்டனைக்காலம் அளிக்கப்பட்டால் மட்டுமே நீங்கள் உங்கள் கூடுதல் நாட்களைக் கழிப்பீர்கள்.
- நீங்கள் ஆயுள் தண்டனை பெற்ற சிறைக்கைதியாகவோ, பொது பாதுகாப்புக்காக சிறைத் தண்டனை பெற்ற சிறைக்கைதியாகவோ, சிவில் சிறைக் கைதியாகவோ அல்லது குடிவரவு பரிசீலனையிலிருக்கும்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டைச் சேர்ந்த சிறைக் கைதியாகவோ இருந்தால் உங்களுக்கு கூடுதல் நாட்கள் தண்டனை வழங்கப்படமாட்டாது.

## சிறை நீதி விசாரணைகள் – விசாரணைகள் எனவும் அழைக்கப்படும்.

முக்கிய அம்சங்கள்

- ✓ குற்றத்தைப் பற்றி பேச நீங்கள் சிறை விசாரணைக்கு செல்ல வேண்டும்.
- ✓ விசாரணையானது, ஆளுநரினாலோ அல்லது சிறைக்கு வெளியே இருந்து வரும் மாவட்ட நீதிபதியாலோ (சுயாதீன நீதிபதி என அழைக்கப்படுபவர்) நடத்தப்படும்.
- ✓ வழக்கமாக நீங்கள் செய்ததாக சிறை அலுவலர் கருதும் குற்றம் பற்றி அவர் உங்களிடம் கூறியதற்கு அடுத்த நாள் விசாரணை நடைபெறும்.
- ✓ விசாரணைக்கு தயாராவதற்காக உங்களுக்கு குறைந்தபட்சம் 2 மணிநேரம் கிடைக்கும்.
- ✓ உங்கள் விசாரணை நடைபெறும் வரை மற்ற சிறைக்கைதிகளிடம் இருந்து நீங்கள் தனியாக வைக்கப்படலாம்.
- ✓ என்ன நடந்தது என நீங்கள் நினைக்கிறீர்களா அதைக் கூற உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.
- ✓ விசாரணையின்போது நீங்கள் சாட்சிகளையும் அழைத்து அவர்களை சாட்சி சொல்ல வைக்க இயலும்.
- ✓ உங்களுக்கு உதவ வேறு சில நபர்களையும் நீங்கள் பெற இயலும். எடுத்துக்காட்டாக ஒரு வழக்குரைஞர் அல்லது மெக்கன்சி நண்பர் என அழைக்கப்படுபவர். **94ம் பக்கம் பார்க்கவும்.**
- ✓ என்ன நடக்கிறது என்று உங்களுக்கு புரியாவிடில் அல்லது கேள்விகள் கேட்க வேண்டுஎனில் சிறை அலுவலர் அல்லது வழக்குரைஞரிடம் பேசுங்கள்.

## விசாரணைக்கு முன்பு என்ன நடக்கும்

- உங்கள் மீது புகார் பதியப்படும். இது, நீங்கள் செய்த குற்றம் என அவர்கள் கருதுவதை சிறை அலுவலர் உங்களிடம் கூறுவதாகும்.

- சிறை அலுவலர் நீங்கள் என்ன குற்றம் புரிந்தீர்கள் என கருதுகிறாரோ அதை உங்களிடம் உடன டியாகக் கூற வேண்டும் (அல்லது 48 மணி நேரங்களுக்குள்)

- விசாரணையானது, சிறை அலுவலர் உங்களுக்குக் கூறியதற்கு அடுத்த நாள் நடைபெறும் (ஞாயிற்றுக்கிழமையோ அல்லது பொது விடுமுறை நாளாகவோ இல்லாத வரை)

- விசாரணைக்கு தயாராவதற்கு உங்களுக்கு குறைந்தபட்சம் 2 மணிநேரம் கிடைக்கும்.

விசாரணைக்கு முன் உங்களுக்கு 2 படிவங்கள் வழங்கப்படும்.

1. படிவம்1127ஏ . (1127A) நீங்கள் செய்ததாக சிறை அலுவலர் கருதும் குற்றம் பற்றி உங்களுக்கு இது எடுத்துக்கூறும். படிவத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை எனில் அதை நீங்கள் கட்டாயம் கூற வேண்டும்.
2. படிவம் 1127சி. (1127C) விசாரணையின்போது என்ன நடக்கும் என்பதை இது உங்களுக்கு எடுத்துக்கூறும்.

இந்தப் படிவத்தில்,

- நீங்கள் என்ன நடந்தது என்று கருதுகிறீர்களோ அதை எழுதலாம். இதை படிவத்தின் பின்பக்கம் எழுதுவும். அதிக தாள்கள் தேவைப்பட்டால் கேட்கவும்.
- அவர்கள் யார் என உங்களுக்கு தெரிந்தால் விசாரணைக்கு வரவேண்டும் என நீங்கள் விருப்பப்படும் எந்த ஒரு சாட்சியின் பெயரையும் எழுதவும். நீங்கள் முன்னுரிமை அளித்தால், யார் உங்களுடைய சாட்சியாக வரவேண்டும் என விசாரணையின்போது நீங்கள் தெரிவிக்கலாம்.

## விசாரணைகள் பற்றிய மேலதிக தகவல்கள்

- விசாரணைக்கு செல்ல நீங்கள் நல்ல உடல்நலத்துடன் உள்ளீர்கள் என்பதை உறுதி செய்ய விசாரணைக்கு முன் ஒரு மருத்துவராலோ அல்லது தாதிய ராலோ உங்கள் உடல்நிலை பரிசோதிக்கப்படலாம்.
- உங்கள் விசாரணை நடைபெறும் வரை மற்ற சிறைக்கைதிகளிடம் இருந்து நீங்கள் தனியாக வைக்கப்படலாம்.

## விசாரணைக்கு முன்பு என்ன செய்ய வேண்டும்

✓ விசாரணையின்போது நீங்கள் என்ன கூற வேண்டும் என்பது குறித்து சிந்தியுங்கள்

✓ என்ன நடந்தது என்பதை வேறு யாராவது பார்த்தார்களா என்பது குறித்து சிந்தியுங்கள். விசாரணையின்போது உங்களுக்கான சாட்சியாக அவர்கள் இருக்கலாம்.

✓ விசாரணைக்கு முன் சிறை ஒழுக்க கையேடு என்ற புத்தகத்தை படித்தல் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இது பிஎஸ்ஓ 2000 (PSO 2000) என அழைக்கப்படுகிறது. சிறையின் உங்கள் பகுதியிலும் சிறை நூலகத்திலும் இதன் ஒரு பிரதி இருக்க வேண்டும். நூலகத்திற்கு உங்களால் செல்ல முடியவில்லை எனில் அதன் ஒரு பிரதியைத் தரும்படி கேளுங்கள்.

✓ உங்கள் விசாரணைக்கு முன் படிப்பதற்கு சிறை ஒழுக்கக் கையேடு உங்களுக்குக் கிடைக்கவில்லையெனில் விசாரணையை வேறு ஒரு தேதிக்கு தள்ளிவைக்கும்படி நீங்கள் கேட்கலாம்.

✓ படிப்பதற்கோ அல்லது எழுதுவதற்கோ உங்களுக்கு கடினமாக இருந்தால், அல்லது ஏதாவது புரியவில்லை என்றால் உதவிக்காக சிறை அதிகாரியையோ அல்லது உங்கள் வழக்குரைஞரையோ கேளுங்கள்.

## விசாரணையியின் போது என்ன நடக்கும்?

1. ஆளுநர்,

- நீங்கள் 1127ஏ (1127A) மற்றும் 1127சி (1127C)ஆகிய படிவங்களைப் பெற்றீர்களா என்பதை பரிசோதிப்பார்.
- நீங்கள் ஏன் விசாரணைக்கு வந்துள்ளீர்கள் மற்றும் என்ன நடக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்களா என்பதை பரிசோதிப்பார்
- விசாரணைக்கு தயாராக உங்களுக்கு போதுமான நேரம் கிடைக்க தர என்பதைப் பரிசோதிப்பார். எடுத்துக்காட்டாக, நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றி சிந்திக்க
- சட்ட உதவி அல்லது மொழிப்பெயர்ப்பாளர் போன்ற ஏதேனும் உதவிகள் உங்களுக்கு தேவைப்படுகிறதா என்பதைப் பரிசோதிப்பார்.

2. குற்றச்சாட்டை யாராவது ஒருவர் படிப்பார். குற்றச்சாட்டு என்பது சிறை அலுவலர் நீங்கள் செய்த குற்றம் எனக் கருதுவதாகும்

3. அந்தக் குற்றத்தை நீங்கள் **செய்தீர்களா** அல்லது **செய்யவில்லையா** எனக் கூறும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.

## நீங்கள் குற்றம் புரிந்ததாகக் கூறினால்

- உங்கள் மீது புகார் பதிந்த சிறை அதிகாரி என்ன நடந்தது என அவர்கள் கருதுவது பற்றிய ஒரு அறிக்கையை வாசிப்பார்.
- இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைக் கூற வேண்டும். எடுத்துக்காட்டாக நீங்கள் கேள்விகள் கேட்கலாம்.
- சிறை அதிகாரி கூறியதை நீங்கள் **ஒப்புக் கொள்ளவில்லை** எனில் அதை தெரிவியுங்கள். சிறை அதிகாரி கூறியவற்றை நீங்கள் **ஒப்புக்கொள்ளவில்லை** எனில் சாட்சிகளை அழைக்கும்படி நீங்கள் கேட்கலாம்.
- நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை எனக்கூறும் எந்த ஒரு விஷயத்தையும் ஆளுநர் பரிசீலிக்க வேண்டும்.
- நடந்த சம்பவங்கள் உண்மையே மற்றும் மேற்கொண்டு பரிசீலிக்கத் தேவையில்லை என ஆளுநர் முடிவெடுக்கலாம். அப்படி நடந்தால், மட்டுப்படுத்தல் மனு செய்ய நீங்கள் விரும்புகிறீர்களா என அவர் உங்களிடம் கேட்பார். இது, உங்கள் குற்றத்தின் தீவிரத்தன்மையை குறைத்துக் காட்டக்கூடியது என நீங்கள் கருதும் எதையும் ஆளுநரிடம் கூறுவதாகும்.
- சிறைக்கு வந்ததிலிருந்து நீங்கள் நடந்து கொண்ட விதம் பற்றியும், இதற்கு முன்பு உங்கள் மீது ஏதாவது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது பற்றியும் தகவல்களை சிறை அலுவலர் ஒருவர் வாசிப்பார்.
- பிறகு அவர்கள் வாசித்துக் காட்டிய தகவலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை கூறலாம்.
- உங்களுக்கான தண்டனை என்ன என்பதை ஆளுநர் உங்களிடம் கூறுவார். உங்கள் தண்டனை பற்றி எடுத்துக்கூறும் படிவம் ஒன்றின் நகல் உங்களுக்குக் கொடுக்கப்படும் இது படிவம் 256 டி (256 D)எனஅழைக்கப்படுகிறது.
- கூடுதல் நாட்கள் தண்டனையை நீங்கள் பெறக்கூடிய அளவிற்கு உங்கள் குற்றம் தீவிரமானது என எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆளுநர் கருதினால், உங்கள் வழக்கை விசாரிக்க சுயாதீன நீதிபதியை அவர்கள் கேட்டுக்கொள்வர்.
- சுயாதீன நீதிபதியைக் காண நீங்கள் 28 நாட்கள் வரை காத்திருக்க வேண்டியிருக்கும்.

**நீங்கள் குற்றம் புரியவில்லை என வாதிட்டால், அல்லது எவ்வாறு வாதிடுவது என உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிடில்**

- உங்கள் மீது புகார் பதிந்த சிறை அதிகாரி என்ன நடந்தது என அவர்கள் கருதுவது பற்றிய ஒரு அறிக்கையை வாசிப்பார்.
- இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நீங்கள் கூறலாம் அல்லது எந்தவிதமான கேள்விகளையும் கேட்கலாம்.
- ஆளுநர் சிறை அதிகாரியை சில கேள்விகள் கேட்பார். சில சாட்சிகளையும் விசாரிக்க வேண்டும் என அவர்கள் கேட்கக்கூடும்.
- நீங்களும், ஆளுநரும் சாட்சிகளிடம் கேள்விகள் கேட்கலாம்.
- குற்றச்சாட்டு (நீங்கள் செய்ததாக சிறை அலுவலர் கருதுவது) பற்றியும் அவர்கள் அளித்த சான்றுகள் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைக் கூறம்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.
- உங்கள் சார்பாக பேச நீங்கள் சாட்சிகளை அழைக்கலாம். (ஏன் முடியாது என்பதற்கு சரியான காரணங்கள் உள்ளன என ஆளுநர் கருதாதவரை)
- நீங்கள், சிறை அதிகாரி மற்றும் ஆளுநர் சாட்சிகளை கேள்விகள் கேட்கலாம்.
- நீங்கள் குற்றம் புரியவில்லை என ஏன் நினைக்கிறீர்கள் என்பதற்கான முக்கிய காரணங்களை நீங்கள் கூற இயல வேண்டும்
- பிறகு, ஆளுநர் அவர் எடுத்த முடிவை உங்களிடம் கூறுவார். இது தீர்ப்பு எனப்படுகிறது. நீங்கள் குற்றம் புரிந்தவர் என முடிவெடுக்கும் முன் நீங்கள் அந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளீர்கள் என்பதை ஆளுநர் கட்டாயம் தெளிவாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- நீங்கள் குற்றம் புரிந்துள்ளீர்கள் என முடிவு செய்யப்பட்டால், உங்களுக்கான தண்டனை என்ன என்பதை ஆளுநர் உங்களிடம் கூறுவார். உங்கள் தண்டனை பற்றி எடுத்துக்கூறும் படிவம் ஒன்றின் நகலை ஆளுநர் உங்களுக்குக் கொடுப்பார். இது படிவம் 256 டி (256 D)என அழைக்கப்படுகிறது.
- கூடுதல் நாட்கள் தண்டனையை நீங்கள் பெறக்கூடிய அளவிற்கு உங்கள் குற்றம் தீவிரமானது என எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆளுநர் கருதினால், உங்கள் வழக்கை விசாரிக்க சுயாதீன நீதிபதியை அவர் கேட்டுக் கொள்வார்.

## விசாரணையின்போது நீங்கள் பெறக்கூடிய பிற உதவிகள்

இந்த வகையான உதவிகளை விசாரணையின்போது நீங்கள் பெற இயலக்கூடும்.

- சட்ட ஆலோசனை
- சட்ட பிரதிநிதிப்படுத்தல் (உங்களுக்காக வாதாட வழக்குரைஞர் ஒருவர் வருதல்)
- நண்பர் அல்லது ஆலோசகர் ஒருவர் வருதல் (இந்த நண்பர் மெக்கன்சி நண்பர் என அழைக்கப்படுவார்.) இந்த நபர் உங்களுக்காக குறிப்புகள் எடுத்து உங்களுக்கு ஆலோசனை வழங்க வரலாம். ஆனால் அவர்கள் உங்களுக்காக பேச **இயலாது** மற்றும் ஆளுநர் சம்மதம் தெரிவித்தால் மட்டுமே அவர் பேசலாம். உங்கள் மெக்கன்சி நண்பரானவர் மதகுரு, ஒரு சிறை அதிகாரி அல்லது மற்றொரு சிறைக் கைதி போன்ற யாராவது ஒருவராக இருக்கலாம் .

## விசாரணை ஆளுநரால் நடத்தப்பட்டால்

நீங்கள் சட்ட ஆலோசனையை பெற **இயலும்**. இது, உங்கள் வழக்குரைஞருடன் தொலைபேசி, கடிதம் அல்லது அவருடனான பார்வையாளர் சந்திப்பின் மூலமாகவோ இருக்கலாம்.

கீழே குறிப்பிட்டுள்ளவை போன்ற செயல்களினால் ஆளுநர் நீங்கள் சட்டப்பிரதிநிதியை வைத்துக் கொள்ளலாம் என்று கூறும்வரை நீங்கள் சட்ட பிரதிநிதிப்படுத்தலை பெற **இயலாது**.

- குற்றத்தின் தீவிரத் தன்மை மற்றும் நீங்கள் பெறக்கூடிய தண்டனை
- சட்டம் பற்றி எழக்கூடிய வாய்ப்புள்ள கேள்விகள்
- என்ன நடக்கிறது என்பது பற்றி நீங்கள் எந்த அளவு புரிந்து கொள்ளீர்கள் என்பது
- வழக்கு விசாரணையை தாமதிக்க கூடிய அல்லது பிரச்சனைகளை உருவாக்கக்கூடிய அம்சங்கள். எடுத்துக்காட்டாக, மற்ற சிறைக் கைதிகளிடம் இருந்து நீங்கள் தனியே அடைக்கப்பட்டிருந்தால் உங்கள் ஆதாரங்களை தயார் செய்வதில் உங்களுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தால்

வழக்கமாக இந்த வகையான விசாரணைகளில் நீங்கள் ஒரு மெக்கன்சி நண்பரையோ அல்லது ஆலோசகரையோ கொண்டிருக்க **இயலாது**.

என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு புரியவில்லை என்றால் வழக்கு மிகவும் சிக்கலானது என்றால் அல்லது இதை அனுமதிப்பது நல்லது என ஆளுநர் கருதினால் நீங்கள் ஒரு மெக்கன்சி நண்பரையோ அல்லது ஆலோசகரையோ உதவிக்கு வைத்துக் கொள்ள இயலும்

## சுயாதீன நீதிபதியால் (மாவட்ட நீதிபதி) விசாரணை நடத்தப்பட்டால்

- சட்டப் பிரதிநிதிப்படுத்தலை நீங்கள் எப்போதும் பெற **இயலும்** (உங்களுக்காக வாதாட வழக்குரைஞர் ஒருவரு வருதல்)

- சட்ட பிரதிநிதிப்படுத்தலைப் பெறுவதில் உங்களுக்கு ஏற்படும் எந்தப் பிரச்சனைகளுக்கும் ஆளுநர் அல்லது சட்ட ஆலோசனைகள் அதிகாரி உதவக் கூடும்.

## விசாரணை அல்லது தண்டனை குறித்து மறு ஆய்வு செய்யக் கேட்டல்

நீங்கள்

✓ விசாரணை தவறான முறையில் நடத்தப்பட்டதாக நீங்கள் நினைத்தால் அல்லது உங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை மிகவும் கடுமையானது எனக் கருதினால் அதை மறு ஆய்வு செய்ய கேட்கலாம்

✓ விசாரணை தவறான முறையில் நடத்தப்பட்டது என ஆளுநர் கருதினால் அது குறித்து ஏதாவது செயல்கள் ஆளுநரால் செய்ய இயலும்.

✓ உங்களுக்கு அளிக்கப்பட்ட கூடுதல் நாட்கள் தண்டனையை திரும்பப் பெறக் கோரி விண்ணப்பிக்கலாம்.

## விசாரணை தவறான முறையில் நடத்தப்பட்டிருந்தால் அல்லது உங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை மிகக் கடுமையானது என நீங்கள் நினைத்தால் என்ன நடக்கும்?

### 1. விசாரணை தவறான முறையில் நடத்தப்பட்டதாக ஆளுநர் கருதினால்

**விசாரணை ஆளுநரால் நடத்தப்பட்டிருந்தால்**

- விசாரணையின் முடிவை ஆளுநரால் மாற்ற இயலும். எடுத்துக்காட்டாக, நீங்கள் குற்றவாளியாக கண்டறியப்பட்ட சான்றை மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையை அவரால் மாற்ற இயலும்.

**சுயாதீன நீதிபதியால் (மாவட்ட நீதிபதி) விசாரணை நடத்தப்பட்டிருந்தால்**

ஆளுநர்,

- பரிசீலனைக்காக வழக்கை ஒரு மூத்த மாவட்ட நீதிபதியிடம் திரும்ப ஒப்படைக்க இயலும்.

## 2. விசாரணை தவறான முறையில் நடத்தப்பட்டதாக அல்லது உங்களது தண்டனை மிகக் கடுமையானது என நீங்கள் கருதினால்

**உங்கள் விசாரணை ஆளுநரால் நடத்தப்பட்டிருந்தால்**

- **படிவம் ஏடிஜெ1 (ADJ1)**எனஅழைக்கப்படும் படிவத்தை தருமாறு உங்கள் பகுதியிலுள்ள சிறை அதிகாரியிடம் கேளுங்கள்.
- படிவத்தை நிறைவு செய்து விசாரணை முடிந்த 6 வாரங்களுக்குள் ஆளுநருக்கு அனுப்புங்கள்.
- மண்டல மேலாளர் என அழைக்கப்படுபவர் உங்கள் வழக்கை பரிசீலிப்பார்.
- விசாரணை தவறான முறையில் நடத்தப்பட்டதாக மண்டல மேலாளர் கருதினால், நீங்கள் குற்றவாளியாக கண்டறியப்பட்ட சான்றை மற்றும் தண்டனையை அவரால் மாற்ற இயலும்.

**உங்கள் விசாரணை சுயாதீன நீதிபதியால் நடத்தப்பட்டிருந்தால்**

- உங்கள் வழக்கு விசாரணையின் முடிவு ஏன் பரிசீலிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை விவரிக்க ஒரு **வெற்றுத்தாளில்** ஆளுநருக்கு எழுதுங்கள். படிவம் ஏடிஜெ1-ஐ **நிறைவு செய்யாதீர்கள்** விசாரணையிலிருந்து 14 நாட்களுக்குள் நீங்கள் ஆளுநருக்கு எழுதவேண்டும்.
- உங்கள் கோரிக்கைதான் பரிசீலனைக்காக மூத்த மாவட்ட நீதிபதி என அழைக்கப்படுபவருக்கு அனுப்பப்படும். அந்த நீதிபதி வெஸ்ட் மின்ஸ்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தை சேர்ந்தவர் ஆவார்.
- உங்கள் தண்டனையை மாற்ற மூத்த நீதிபதி முடிவெடுக்க இயலும். ஆனால், நீங்கள் குற்றவாளியாகக் கண்டறியப்பட்ட சான்றை அவர்களால் மாற்ற **இயலாது**.

### இதற்குப் பின்னும் நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை எனில்

- சிறைகள் மற்றும் நன்னடத்தை ஓம்புட்ஸ்மேன் என அழைக்கப்படுபவரிடம் உங்கள் வழக்கை பரிசீலிக்கும்படி நீங்கள் கேட்கலாம். இந்த நபர் சிறைக்காக பணிபுரிய மாட்டார். சிறை வாழ்க்கை குறித்து சிறைக் கைதிகளால் அனுப்பப்படும் புகார்களை பரிசீலிப்பதே அவர்கள் பணி.
- உங்கள் வழக்கை பரிசீலனை செய்யக் கோரி அவர்களைக் கேட்பதற்காக, நீங்கள் ஓம்புட்ஸ்மனுக்கு எழுதலாம்.
- ஓம்புட்ஸ்மேன் முதலில் உங்களுக்கும், ஆளுநருக்கும் இடையேயான சூழ்நிலையை ஒழுங்குபடுத்த முயல்வார்.

**ஓம்புட்ஸ்மேன் குறித்து மேலதிக தகவல்**

- இது சரிப்படவில்லையெனில், என்ன நடக்க வேண்டும் என அவர்கள் கருதுகிறார்களோ அது குறித்து ஓம்புட்ஸ்மேன் அறிக்கை எழுதுவார்.
- மீண்டும் உங்கள் விசாரணை நடத்தப்படாமல் போகலாம் . ஆனால் நீங்கள் குற்றவாளி என , சான்றை மற்றும் தண்டனையை சிறை மாற்றிவிட்டது என அவரால் பரிந்துரைக்க முடியும் கீழ்காணும் முகவரியில் நீங்கள் ஓம்புட்ஸ்மேனுக்கு எழுதுங்கள்.
  Prisons and Probation Ombudsman
  Ashley House
  2 Monck Street
  LONDON
  SW1P 2BQ

## நீதி மறு ஆய்வு

- உங்கள் வழக்கை பரிசீலிக்கும்படி நீங்கள் ஒரு நீதிபதியை கேட்கலாம். ஆனால் இந்தச் செயல் நடக்க அனுமதிக்கப்படாமல் போகக்கூடும். ஆகவே, முதலில் கூறப்பட்ட வழிமுறைகளில் புகார் செய்வதே சிறப்பானதாகும்.
- உங்கள் வழக்கை பரிசீலிக்க ஒரு நீதிபதியை நீங்கள் கேட்க வேண்டுமானால், இந்தச் செயலை மேற்கொள்ள கேட்பதற்காக உங்கள் வழக்குரைஞருக்கு எழுதுங்கள்.

## கூடுதல் நாட்களைக் குறைத்தல்

- உங்களுக்கு அளிக்கப்பட்ட கூடுதல் நாட்களில் சிலதைக் குறைக்கும்படி நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- வழக்கமாக **பாதி** நாட்களைக் குறைக்கக்கூறி நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- கடைசியாக நீங்கள் குற்றம் புரிந்து **6 மாதங்கள்** ஆனது என கண்டறியப்பட்ட பின்பே நீங்கள் கூடுதல் நாட்களை குறைக்கக்கூறி விண்ணப்பிக்க இயலும். அல்லது, கூடுதல் நாட்களைக் குறைக்க கூறி கடைசியாக நீங்கள் விண்ணப்பித்த 6 மாதங்கள் கழித்தே விண்ணப்பிக்க இயலும்.
- நீங்கள் இளம் குற்றவாளியாக இருந்தால், **நீங்கள் 4 மாதங்களுக்குப்** பின் விண்ணப்பிக்கலாம்.

## கூடுதல் நாட்களை குறைக்க விண்ணப்பிப்பது எப்படி?

- உங்கள் பிரிவில் உள்ள சிறை அலுவலரிடம் பேசுங்கள். உங்களுடைய கூடுதல் நாட்களை உங்களால் குறைக்க இயலுமா என்பதைக் கண்டறிய சிறை அலுவலர் பரிசோதிப்பார்.
- உங்கள் கூடுதல் நாட்கள் குறைக்கப்பட வேண்டும் என ஏன் நீங்கள் கருதுகிறீர்கள் என்பதை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்.
- உங்கள் பிரிவில் உள்ள அலுவலர் உங்களைப் பற்றிய அறிக்கையை எழுதி அதை ஆளுநருக்கு அனுப்புவார். அந்த அறிக்கையோடு நீங்கள் செய்த எந்தவித குற்றங்கள் பற்றிய தகவலையும் அவர்கள் அனுப்புவார்கள்.
- உங்களுடைய அனைத்துக் கூடுதல் நாட்களும் குறைக்கப்பட மாட்டாது. ஆனால் சில காலங்களுக்குப் பின் அதிகமான கூடுதல் நாட்களைக் குறைக்கும்படி கேட்டு நீங்கள் மீண்டும் விண்ணப்பிக்க இயலும்.

## சிறையைப் பாதுகாக்க சிறை அலுவலர் செய்யக்கூடிய தனிமைப்படுத்தல், உங்கள் சிறை அறையில் தேடுதல் நடத்தல் மற்றும் பிற செயல்கள்.

- ✓ சிறையில் நடப்பவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க சிறை அலுவலர் மேற்கொள்ளக்கூடிய வேறு செயல்களும் உள்ளன.
- ✓ இந்தச் செயல்கள் தண்டனைகளாக பயன்படுத்த **இயலாது**. ஆனால் சிறையைப் பாதுகாக்கவும், மற்ற நபர்கள் தாக்கப்படுவதை நிறுத்தவும் தேவை ஏற்படும் சமயத்தில் அவை பயன்படுத்தலாம்.
- ✓ இந்தச் செயல்கள் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன.

## தனிமைப்படுத்தல் (மேலதிக தகவல் சிறை சேவை விதி 45ல் உள்ளது)

**தனிமைப்படுத்தல் என்றால் என்ன?**

- மற்ற சிறைக்கைதிகளிடமிருந்து உங்களை தனியாக பிரித்து வைத்தலே தனிமைப்படுத்தல் ஆகும்.
- உங்களை தனிமைப்படுத்தி வைக்கலாமா அல்லது வேண்டாமா என்பதை ஆளுநர் முடிவெடுப்பார்.
- தனிமைச்சிறை எனப்படும் சிறையின் மற்றொரு பகுதியில் நீங்கள் தனிமைப்படுத்தி வைக்கப்படலாம். மற்ற சிறைக்கைதிகளிடமிருந்து நீங்கள் பிரித்து வைக்கப்படுவீர்கள். தனிமைப்படுத்தலில் உள்ள மற்ற சிறைக்கைதிகளோடு நீங்கள் வைக்கப்படக்கூடும்.
- நீங்கள் பணிபுரிய இயலாது மற்றும் மற்ற சிறைக் கைதிகளைவிட நீங்கள் நீண்ட நேரம் உங்கள் செல்லில் இருக்க வேண்டி தேவைப்படும;.

**ஏன் நீங்கள் தனிமைப்படுத்தி வைக்கப்படலாம்?**

- நீங்கள் ஆபத்தில் உள்ளதாக நீங்களோ அல்லது சிறை அலுவலரோ கருதினால், எடுத்துக்காட்டாக, நீங்கள் செய்த குற்றத்தின் தன்மை காரணமாக மற்ற சிறைக்கைதிகள் உங்களை தாக்கக்கூடும் என நீங்கள் கருதி, மற்ற சிறைக் கைதிகளிடம் இருந்து தனியாக இருக்க வேண்டும் என நீங்கள் விரும்பலாம். எடுத்துக்காட்டாக பாலியல் குற்றத்தை நீங்கள் செய்திருந்தால், உங்கள் வழக்குரைஞரோ அல்லது காவல் துறையினரோ இது குறித்து உங்களிடம் அறிவுறுத்தி இருக்கலாம்.
- மற்ற சிறைக் கைதிகளுக்கு ஆபத்து உண்டாகும் அல்லது சிறையின் மற்ற பகுதிகளில் பிரச்சனைகளை ஏற்படுத்தும் எனசிறை காவலர் கருதும் வகையில் நீங்கள் நடந்து கொண்டால்

**தனிமைப்படுத்தலில் நீங்கள் எவ்வளவு காலம் இருப்பீர்கள்?**

- ஆளுநர் முதலில் 3 நாட்கள் வரை உங்களை தனிமைப்படுத்தலில் வைக்கலாம்.
- அதன்பின் 1 மாதம் வரை நீங்கள் தனிமைப்படுத்திலில் வைக்கப்படலாம். அதன்பிறகு ஒவ்வொரு முறையும் 1 மாதம் வரை நீங்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்படலாம்.
- 21 வருடங்களுக்கு உட்பட்ட சிறைக் கைதிகள் அதிக பட்சம் 14 நாட்கள் வரை தனிமைப்படுத்தலில் வைக்கப்படலாம்.
- முதல் 3 நாட்களுக்குப் பின், நீங்கள் இன்னமும் தனிமைப்படுத்தலில் தான் உள்ளீர்களா என்பதை அறிய குறைந்தபட்சம் ஒவ்வொரு 14 நாட்களுக்கு ஒரு முறை ஆளுநர் சோதிக்க வேண்டும்.

## தனிமைப்படுத்தலில் இருக்க நீங்கள் விரும்பினால் சிந்திக்க வேண்டிய அம்சங்கள்

- ✓ தனிமைப்படுத்தலில் இருத்தல் என்பது மிகவும் தீவிரமான செயலாகும். நீங்கள் தனிமைப்படுத்தலில் வைக்க கேட்டும் முன் மிகவும் கவனமாக சிந்தியுங்கள்.
- ✓ இது சரியான செயல்தான் என ஆளுநர் ஒப்புதல் அளித்தல் மட்டுமே நீங்கள் தனிமைப்படுத்தலில் செல்ல இயலும்.
- ✓ தனிமைப்படுத்தலில் நீங்கள்சென்றால், உங்களைப்பற்றி மற்ற சிறைக் கதிகள் வேறுவிதமாக நினைக்கத் தொடங்குவார்கள். இது ,நீங்கள் மீண்டும் உங்கள் பிரிவுக்குச் செல்வதை கடினமாக்கக்கூடும்.

## தனிமைப்படுத்தலில் இருக்கும்போது நீங்கள் பெறக்கூடிய உதவிகள்

தனிமைப்படுத்தலில் இருக்கும்போது எது குறித்தாவது நீங்கள் கவலைப்பட்டால், சிறை அதிகாரி அல்லது ஆளுநரிடம் பேசுங்கள்.

இந்த நபர்கள் **தினமும்** தனிமைச் சிறைக்கு வருகை தருவார்கள்.

- ஒரு சிறை அதிகாரி
- ஆளுநர்
- மருத்துவர் அல்லது தாதியர்

இந்த நபர்களும் கூட தனிமைச் சிறைக்கு வருகை தருவார்கள் - ஆனால் தினமும் அல்ல

- மதகுரு
- சுயாதீன கண்காணிப்புக்குழுவிலிருந்து யாராவது ஒருவர் (சிறைகள் நல்லவிதமான முறையில் நடத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்ய சிறைகளை பரிசோதனை செய்யும் நபர்கள் ஆவர்)

## சிறப்பு தங்குமிடம் மற்றும் இயந்திர கட்டுப்படுத்திகள்

இந்த செயல் அடிக்கடி பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் சிறை அலுவலர்

- நீங்கள் வன்முறையாக நடந்து கொண்டால், இவற்றை பயன்படுத்தக்கூடும்.
- உங்களையோ, மற்ற நபர்களையோ அல்லது சிறையையோ நீங்கள் தாக்கினால் அல்லது சேதம் விளைவித்தால் இவற்றைப் பயன்படுத்தக்கூடும்.

நீங்கள் மிகவும் வன்முறையாக நடந்து கொண்டால் உங்களை சிறை அலுவலர் அடைத்து வைக்கக்கூடிய இடமே **சிறப்பு தங்குமிடமாகும்.** சிறை அறையில் தளபாடம் எதுவும் இருக்காது. நீங்கள் அமைதியடையும் வரை நீங்கள் அந்த சிறை அறையில் அடைத்து வைக்கப்பட்டு இருப்பீர்கள்.

நீங்கள் மற்றவரையோ அல்லது உங்களை நீங்களாகவோ தாக்குவதை தடுப்பதற்காக உங்கள் உடலில் பொருத்தப்படக்கூடிய பொருட்கள் **இயந்திர கட்டுப்படுத்திகள்** ஆகும். **உடல் பட்டி** என்பது அப்படி பயன்படுத்தக்கூடிய ஒரு இயந்திர கட்டுப்படுத்தியாகும். இது உங்கள் கைகளை கட்டி மார்பைச் சுற்றி இணைக்கப்படும் பட்டியாகும்.

- சிறப்பு சிறை அறையில் உங்களை அடைத்தும் பயன்தரவில்லை எனில் உங்களுக்கு உடல்பட்டிஅணிவிக்கப்படும்.
- நீங்கள் 17 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் மட்டுமே உங்களுக்கு உடல் பட்டி அணிவிக்கப்படும்.
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதை ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கு ஒரு முறை சிறை அலுவலர் பரிசோதிப்பார்.
- சுயாதீன கண்காணிப்புக்குழுவில் (சிறைகள் நல்லவிதமாக நடத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய பரிசோதனை செய்யும் நபர்கள்) இருந்து யாராவது ஒருவர் ஒரு நாளுக்குள் உங்களை சந்திப்பார். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என சிறை அலுவலர் சோதனையிடும் சமயத்தில், வாய்ப்பிருந்தால், இந்த நபரும் உடன் இருப்பார்.

**முக்கிய அம்சங்கள்**

- ✓ சிறை அலுவலர் உங்களுக்கு உடல்பட்டி அணிவிக்கும் முன்னோ அல்லது உங்களை சிறப்பு சிறை அறையில் அடைக்கும் முன்னோ ஆளுநர் அதற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும்.
- ✓ இந்தச் சம்பவம் நடந்ததை சிறை அலுவலர் உடல்நல கவனிப்பு குழுவிடம் தெரிவிக்க வேண்டும்.
- ✓ கூடிய விரைவில் ஒரு மருத்துவரோ அல்லது தாதியரோ உங்களைப் பரிசோதிக்க வேண்டும்.
- ✓ சுயாதீன கண்காணிப்புக் குழுவில் இருந்து (சிறைகள் நல்லவிதமாக நடத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்ய பரிசோதனை செய்யும் நபர்கள்) யாராவது ஒருவர் உங்களை ஒரு நாளுக்குள் சந்திக்க வேண்டும்.
- ✓ சிறை அலுவலர் உங்களுக்கு உடல்பட்டை அணிவித்ததோ அல்லது உங்களை சிறப்பு சிறை அறையில் அடைத்ததோ சரியே என்பதை உறுதி செய்ய சுயாதீன கண்காணிப்புக்குழு பரிசோதனை செய்யும்.
- ✓ நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதை அலுவலர் அடிக்கடி பரிசோதிப்பார். ஆபத்து விளைவிக்கும் விதமான உங்கள் நடவடிக்கை நின்றவுடன் சிறை அலுவலர் உங்களை சிறப்பு சிறை அறையில் இருந்து விடுவிப்பார் அல்லது உடல் பட்டியை அகற்றுவார்.

## சிறை கலகம்

சிறையில் தீவிரமான அமைதியின்மை யை ஏற்படுத்தும் செயலில் நீங்கள் பங்கு கொண்டிருந்தால் நீங்கள் **சிறையில் கலகம்** விளைவித்ததாக குற்றம் சாட்டப்படலாம்

சிறையைக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளவும், மேலும், ஆளுநர் மற்றும் பிற சிறை அலுவலர்கள் அவர்கள் பொறுப்பையும் மற்றும் சிறையை நடத்துவதை தடுக்கவும் முயற்சிக்க நீங்கள் மற்றும் பிற சிறைக்கைதிகள் செய்யும் செயல்களே சிறைக்கலகம் ஆகும்.

கீழ்க்கண்ட காரணங்களுக்காக உங்கள் மீது சிறையில் கலகம் விளைவித்த குற்றம் சாட்டப்படலாம்.

- அலுவலர்களோ அல்லது சிறைக் கைதிகளோ காயமடைந்தால்
- சிறை சேதத்திற்கு உள்ளானால்
- சிறையின் ஒரு பகுதி அல்லது அனைத்துப் பகுதிகளின் கட்டுப்பாட்டை ஆளுநர் இழந்தால்

நீங்கள், சிறையில் கலகம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டால்

- நீங்கள் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை பெறக்கூடும்
- நீங்கள் பணம் செலுத்த வேண்டும் என உங்கள் மீது அபராதம் விதிக்கப்படக்கூடும்.
- அல்லது மேற்கூறிய இரண்டும் உங்களுக்கு விதிக்கப்படக் கூடும்.

### உங்களைச் சுற்றியுள்ள நபர்கள் சிறையில் கலகம் விளைவித்தால்

- அவர்களோடு சேராதீர்கள்
- சம்பவம் நடக்கும் இடத்தை விட்டு வெளியேறுங்கள்.
- அப்படி இல்லையெனில், நீங்களும் கலகத்தில் பங்கேற்றதாகக் கருதி சிறையில் கலக ம் விளைவித்ததாக சிறை அலுவலர் உங்கள் மீது குற்றச்சாட்டு பதியக்கூடும்.

## உங்கள் செல் மற்றும் பொருட்களை சோதனையிடுதல்

- சிறையை பாதுகாப்பாக வைத்திருக்க சிறை அதிகாரிகள் எந்த நேரத்திலும் உங்களது சிறை அறை மற்றும் பொருட்களை சோதனையிடலாம்.
- இது எத்தனைமுறை நடக்கும் எ ன்பதற்கு விதிகளேதும் இல்லை. இது நீங்கள் இருக்கும் சிறை அல்லது நீங்கள் எவ்வளவு பாதுகாப்பாக உள்ளீர்கள் என  சிறை அலுவலர் கருதுவது ஆகியவற்றை சார்ந்ததாகும்.

## உங்கள் சிறை அறை அல்லது பொருட்கள் சோதனையிடப்பட்டால் என்ன மேற்கொள்ளப்படும்.

- உங்கள் சிறை அறையில் சோதனையிடுவதற்கு முன் உங்களிடம் முழு உடல் தேடல் சோதனை நடத்தப்படும்.
- நீங்கள் வைத்திருக்க  அனுமதிக்கப்படாத எந்த ஒரு பொருளையும் சிறை அலுவலரிடம் கொடுக்க வேண்டும்.
- உங்கள் சிறை அறையில் சோதனை மேற்கொள்ளப்படும் போது நீங்கள் வேறுபகுதிக்கு கொண்டு செல்லப்படுவீர்கள்.
- பொருட்களை  சோதனையிட சிறை அலுவலர் அவற்றை எடுத்துச் செல்லலாம் உங்கள் பொருட்களை துல்லியமாக பரிசீலிக்க ஊடுகதிர் இயந்திரங்கள் பயன்படுத்தப்படலாம்.
- உங்கள் சட்ட ஆவணங்களை அலுவலர் சோதனையிடக்கூடும். ஆனால் அவற்றை படித்துப்பார்க்க மாட்டார்.

## உங்களை சோதனையிடுதல்

### 2 வகையான சோதனைகளை சிறை அலுவலர் உங்களிடம் மேற்கொள்ளலாம்.

### 1. மேலோட்ட சோதனை

இதில்,

- உங்கள் ஷுக்களை கழற்ற சொல்லியும் உங்களது சட்டை மற்றும் கால் சட்டை பைகளை காலி செய்து காட்டச் சொல்லியும் சிறை அலுவலர் சோதனை செய்வார்.
- உங்கள் வாய், மூக்கு (மூச்சுக் குழாய்) காதுகள் மற்றும் முடி ஆகியவற்றில் சிறை அலுவலர் சோதனை செய்வார்.

✓ சிறை அலுவலர் எந்த ஒரு சமயத்திலும் உங்களிடம் **மேலோட்ட** சோதனை மேற்கொள்ளலாம்.

✓ பெண் அலுவலர் உட்பட எந்த ஒரு சிறை அலுவலரும் உங்களிடம் **மேலோட்ட** சோதனை மேற்கொள்ளலாம். பெண் அலுவலரால் உங்களிடம் **மேலோட்ட** சோதனை மேற்கொள்ளக்கூடாது என நீங்கள் எழுதினால் சிறை அலுவலரிடம் கூறுங்கள். எடுத்துக்காட்டாக மதரீதியான காரணங்களுக்காக

✓ சிறையின் ஒரு பகுதியிலிருந்து மற்ற பகுதிக்கு நீங்கள் மாற்றப்படுவதற்கு  முன்னும் அதற்குப் பின்னும் மேலோட்ட சோதனை மேற்கொள்ளப்படலாம்.

## 2. முழு உடல் சோதனை

இதில்,

- அலுவலர் உங்கள் உடைகளை சோதனையிடக்கூடும்.
- அலுவலர் உங்கள் முழு உடலை சோதனையிடக்கூடும். உங்கள் ஆசனவாய் மற்றும் பிறப்புறுப்பு பகுதிகளில் எதுவும் ஒளித்து வைக்கப்படவில்லை என்பதை சோதிப்பதற்காக உங்களை அலுவலர் குனியவோ அல்லது அமரவோ சொல்லக்கூடும். இதைச் செய்ய அவர்கள் உங்களை தொடக்கூடாது.
- சோதனையின்போது ஆடையின் சில பகுதிகளை நீங்கள் எப்போதும் உடுத்தியிருப்பீர்கள். ஒரே நேரத்தில், நீங்கள் அணிந்திருக்கும் ஆடையின் ஒரு பகுதியை சோதனையிடும்முன், இந்த ஒரு பகுதி ஆடைகளை நீங்கள் திரும்ப உடுத்திக் கொள்ளலாம்.

**முழு உடல் சோதனை குறித்த மேலதிக தகவல்**

✓ எந்த ஒரு சிறை அதிகாரி, மூத்த அதிகாரி, முதன்மை அதிகாரி அல்லது ஆளுநர் உங்களிடம் முழு உடல் சோதனை மேற்கொள்ளலாம்.

✓ இந்த சோதனை எப்போதும் ஒரு ஆண் சிறை அலுவலரால் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

✓ முழு உடல் சோதனை எந்த நேரத்திலும் மேற்கொள்ளப்படலாம். எடுத்துக்காட்டாக

- ஒவ்வொரு முறையும் சிறையை விட்டு நீங்கள் சென்று பின் திரும்ப வரும் போதும்
- உங்கள் செல்லை சோதனையிடுவதற்கு முன்
- தனிமைச் சிறைப்பகுதிக்கு நீங்கள் அனுப்பப்படும்போது
- உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் அல்லது உங்களது வழக்குரைஞருடனான பார்வையாளர் சந்திப்புகளுக்குப் பின்
- நீங்கள் பாதுகாப்பு வகைப்பிரிவு ஏ-வைச் சேர்ந்த கைதியாக இருந்தால் ஒவ்வொரு பார்வையாளர் சந்திப்புகளுக்கும் பின்னும்

✓ உங்களிடம் முழு உடல் சோதனை மேற்கொள்வதற்கு முன் சிறை அலுவலர் என்ன நடக்கும் என்பதை உங்களிடம் சரியாக விளக்க வேண்டும்.

✓ சிறந்த மற்றும் பாதுகாப்பான முறையிலேயே முழு உடல் சோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

✓ உங்களிடம் முழு உடல் சோதனை நடத்தப்படும்போது அதை நடத்தும் சிறை அலுவலர் மட்டுமே அங்கு இருக்க வேண்டும்.

## சிறையில் நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும்?

சிறையில் நீங்கள் நல்லவிதமான முறையில் நடத்தப்பட வேண்டும். அப்படி நட த்தப்படவில்லை எனில், அது குறித்து சில செயல்களை நீங்கள் செய்ய முயற்சிக்க முடியும்.

நீங்கள் பாதுகாப்பாக இருக்க உதவும் சில சட்டங்கள் மற்றும் நீங்கள் நல்லவிதமாக நடத்தப்படுவதை உறுதி செய்ய சிறை செய்ய வேண்டிய சில செயல்கள் ஆகியவை பற்றிய தகவல் அடுத்த பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மனித உரிமைச் சட்டம் 1998

- இது மனித உரிமைகள் பற்றிய சட்டமாகும். வாழ்வுரிமை அல்லது முறையான விசாரணை போன்ற மனித உரிமைகள் ஒவ்வொருவருக்கும் உண்டு.
- உங்களது மனித உரிமை மீறப்பட்டதாக நீங்கள் கருதினால், உங்கள் வழக்கை நீங்கள் நீதிமன்றத்திற்கு எ டுத்துச் செல்லலாம்.
- மனித உரிமைகள் சட்டம் பற்றி மேலும் அதிகமாக தெரிந்து கொள்ள, **மனித உரிமைகள் சட்டத்திற்கான வழிகாட்டி** என்ற கையேடு மற்றும் **மனித உரிமைகள் சட்டம்** என்ற தகவல் பொதியையும் படித்து அறியவும். இந்த இரண்டும் நூலகத்தில் இருக்கும்.

### வன்முறை அல்லது அடாவடிச் செயல்

- பாதுகாப்பாக இருப்பதற்கு ஒவ்வொரு சிறைக் கைதிக்கும் உரிமை உண்டு.
- யாராவது உங்களிடம் வன்முறையாகவோ அல்லது அடாவடியாகவோ நடந்து கொண்டால் சிறை அலுவலரிடம் உடனடியாகக் கூறுங்கள். சிறை அலுவலர்கள், மதகுரு அல்லது கல்வி அலுவலர் போன்ற எந்த ஒரு சிறை அலுவலரிடமும் நீங்கள் கூறலாம்.
- உங்களை அடித்தல் அல்லது மிரட்டல் போன்ற செயல்களே வன்முறை அல்லது அடாவடிச் செயல்களாகும் (எடுத்துக்காட்டாக, உங்களை அடிக்கப் போகிறேன் என்று கூறுதல் அல்லது உங்களை ஏதாவது செய்தல்)
- இதுபோன்ற சம்பவம் உங்களுக்கு ஏற்பட்டால் அலுவலர் உங்களுக்கு உதவுவார்.

## இன சமத்துவம் – பல்வேறு இனக்குழுக்களை சேர்ந்த நபர்கள்.

- ஒரு நபரின் இனம் என்பது, அவர்களின் பின்புலம் மற்றும் கலாச்சாரம் மற்றும் அவர்கள் தோலின் நிறம் போன்ற பல அம்சங்கள் குறித்தது.
- சட்டத்தின்படி பல்வேறு இனங்களை சார்ந்தவர்களும் முறையாகவும் நல்லவிதமாகவும் நடத்தப்படுவதை சிறைகள் உறுதிப்படுத்த வேண்டும். ஆளுநர் மற்றும் மூத்த மேலாளர்களே அனைவரும் சமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பொறுப்புள்ளவர்கள் ஆவர்.
- பல்வேறு இனங்களைச் சார்ந்த நபர்கள் முறையாகவும் நல்லவிதமாகவும் நடத்தப்படுவதை உறுதி செய்ய சிறை என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து **சிறை சேவை ஆணை 2800** எடுத்துக்கூறுகிறது.
- அனைத்து இனங்களைச் சார்ந்த நபர்கள் முறையாகவும், நல்லவிதமாகவும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது குறித்து சிறை கொண்டுள்ள திட்டத்தின் பிரதியையும் நீங்கள் படித்து அறியலாம். இது **இனசமத்துவ செயல் திட்டம்** என அழைக்கப்படுகிறது.

### நீங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்,

சிறை கீழ்க்கண்டவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

- நீங்கள் முறையாகவும், நல்லவிதமாகவும் நடத்தப்படுவது
- உங்கள் மத நம்பிக்கை மற்றும் கலாச்சாரம் தொடர்பான செயல்களை நீங்கள் செய்வது. எடுத்துக்காட்டாக, உங்கள் மத நம்பிக்கை சார்ந்த ஆடைகளை உடுத்துவது, மதரீதியான புத்தகங்களை வைத்திருப்பது மற்றும் மத நிகழ்ச்சிகளை பின்பற்றுவது.
- உங்கள் மதம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த உணவுகளை உண்பது
- உங்களுக்குத் தேவைப்பட்டால், இந்தப் புத்தகம் போன்று, தகவலை பிற மொழிகளில் பெறுவது அல்லது ஒரு மொழிப்பெயர்ப்பாளரின் உதவியைப் பெறுவது

**உங்கள் இனத்தின் காரணமாக நீங்கள் மோசமான விதத்தில் நடத்தப்பட்டால் அல்லது இவ்வாறு வேறு ஒருவருக்கு நடப்பதைக் கண்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்.**

- ✓ **கொம்ப் 1** என அழைக்கப்படும் படிவம் அல்லது இனவெறி சம்பவ **புகார் படிவம்** என அழைக்கப்படும் படிவத்தை நிறைவு செய்வது குறித்து அலுவலரிடம் பேசுங்கள்.

- ✓ இந்தச் செயல்களை செய்ய முடியும் என நீங்கள் கருதவில்லை எனில், ஆளுநர், பகுதி மேலாளர் அல்லது சுயாதீன கண்காணிப்புக் குழுவின் தலைவரிடம் மிகவும் தனிமையாக நடந்ததைப் பற்றி பரிசீலிக்க சொல்லி நீங்கள் கேட்கலாம்.

- ✓ இதைச் செய்ய **கொம்ப் 2 இரகசிய அணுகுதல் புகார் படிவம்** எனப்படும் படிவத்தை நிறைவு செய்யுங்கள். இந்தப் படிவத்தை முத்திரையிடப்பட்ட உறையினுள் வைத்து அளிக்கலாம். இது மிகவும் தனிப்பட்டு பத்திரமாக வைக்கப்படும்.
- ✓ இதன்பிறகும் நீங்கள் மகிழ்ச்சியடைவில்லை எனில், சிறைகள் மற்றும் நன்னடத்தை ஓம்புட்ஸ்மேன் எனப்படுபவரை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ அல்லது, சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் ஆணையம் எனப்படும் அமைப்பை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். இனத்தின் காரணமாக தாங்கள் மோசமான விதத்தில் நடத்தப்பட்டதாக கருதும் சிறைக் கைதிகளுக்கு அவர்கள் ஆலோசனையையும், உதவியும் அளிப்பார்கள். அவர்களை கீழ்க்கண்ட முகவரியில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

The Equality & Human Rights Commission
3 More London Riverside
Tooley Street
London SE1 2RG

தொலைபேசி 0203 117 0235

## இதைச் செய்ய உங்களுக்கு உதவக்கூடியது யார்?

கீழ்காணும் நபர்களிடமிருந்து நீங்கள் உதவியைப் பெறலாம்,

- ✓ எந்த ஒரு சிறை அலுவலர்
- ✓ இனசமத்துவ அதிகாரி என அழைக்கப்படும் அலுவலர்
- ✓ இன சமத்துவ செயல் குழு என அழைக்கப்படும் குழுவினர்
- ✓ சிறைக் கைதிகளின் பிரதிநிதிகள். இவர்கள் இனம் தொடர்பான சந்திப்புக்களுக்கு செல்லும் சிறைக் கைதிகள் ஆவர் மற்றும் அங்கு மற்ற சிறைக் கைதிகளின் கருத்துக்களை அவர்களின் பிரதிநிதிகளாய் இருந்து எடுத்துக்கூறுவர்.
- ✓ அடாவடிச் செயல் தடுப்பு ஒருங்கிணைப்பாளர் அல்லது பாதுகாப்பான சிறைகள் ஒருங்கிணைப்பாளர் என அழைக்கப்படும் மற்ற அலுவலர்
- ✓ சுயாதீன கண்காணிப்புக் குழு உறுப்பினர் (சிறைகள் நல்லவதமாக இயங்குகின்றன என்பதை உறுதிப்படுத்த சிறைகளை பரிசோதனையிடும் நபர்கள்)

நீங்கள் **வெளிநாட்டு சிறைக் கைதியாக** இருந்தால் (அதாவது உங்களிடம் ஐக்கிய ராச்சியத்தின் கடவுச் சீட்டு உங்களிடம் **இல்லை** என்பதாகும்)

கீழ்க்காணும் நபர்களிடமிருந்து நீங்கள் உதவியைப் பெறலாம்

- ✓ இன சமத்துவ அதிகாரி என அழைக்கப்படும் அலுவலர்
- ✓ வெளிநாட்டு பிரஜைசிறைக்கைதி தொடர்பு அதிகாரி எனப்படும் அலுவலர்
- ✓ உங்கள் தூதரகம். உதவி கேட்டு நீங்கள் அவர்களுக்கு கடிதம் எழுதலாம் அல்லது உங்களுக்காக இதைச் செய்யும்படி இனசமத்துவ அதிகாரி அல்லதுவெளிநாட்டு சிறைக்கைதி தொடர்பு அதிகாரியை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.
- ✓ நீங்கள் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய சில முகவரிகள் சிறை நூலகத்தில் உள்ளது **லண்டன் இராஜிய உறவு பட்டியல்** எனப்படும் பட்டியலை நீங்கள் கேட்டு வாங்கலாம் அல்லது சிறை சேவை ஆணை 4630 ல் கண்டறியலாம்.
- ✓ இந்தப் புத்தகம் போன்று தகவல்களை பிற மொழிகளிலும் நீங்கள் பெறலாம்.

## ஊனமுற்ற சிறைக் கைதிகள்

உடல் ஊனமுற்றோரை மோசமான முறையில் நடத்தப்படுவதை தடுப்பதற்காக ஊனமுற்றோர் பாகுபாட்டுச் சட்டம் எனப்படும் சட்டம் இருக்கிறது.

சிறை இந்த சட்டத்தைப் பின்பற்ற வேண்டும். கீழ்க்கண்டவற்றிற்காக அதனால் இயன்றவற்றை சிறை செய்ய வேண்டும்.

- நீங்கள் சிறை வாழ்க்கையில் பங்கு பெறலாம் என்பதை உறுதிப்படுத்த
- நீங்கள் முறையாக மற்றும் நல்லவிதமாக நடத்தப்படுகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்த

**சிறைச் சேவை ஆணை 2855** ல் மேலதிக தகவல் உள்ளது. இதன் ஒரு பிரதி நூலகத்தில் உள்ளது.

### நீங்கள் உடல் ஊனமுள்ள சிறைக் கைதியாக இருந்தால் உங்களுக்கு உதவக்கூடியது யார்?

✓ உங்களது தனி அதிகாரி அல்லது உங்கள் பிரிவு அதிகாரி. உங்கள் உடல் ஊனம் தொடர்பாக ஏதேனும் உங்களுக்குத் தேவைப்பட்டால் அது குறித்து அவர்களிடம் பேசுங்கள். எடுத்துக்காட்டாக, உங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் வேறுவிதமான முறையில் உங்களுக்குத் தேவையென்றால்,

✓ உடல் ஊனம் தொடர்பு அதிகாரி என அழைக்கப்படும் அலுவலர்

✓ உடல் நல கவனிப்பு குழுவிலிருக்கும் யாராவது ஒருவர்

✓ அல்லது நீங்கள் ஆளுநருக்கு எழுதலாம் (கொம்ப் 1) என அழைக்கப்படும் படிவத்தை நீங்கள் நிறைவு செய்ய வேண்டி இருக்கும்).

✓ அல்லது சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் ஆணையம் எனப்படும் அமைப்பை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். உடல் ஊனத்தின் காரணமாக தாங்கள் மோசமான விதத்தில் நடத்தப்பட்டதாக கருதும் சிறைக் கைதிகளுக்கு அவர்கள் ஆலோசனையும் உதவியும் அளிப்பார்கள். அவர்களை கீழ்க்கண்ட முகவரியில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

The Equality and Human Rights Commission
3 More London
Riverside
Tooley Street
London SE1 2RG

தொலைபேசி 0203 117 0235

# எவ்வாறு புகார் செய்வது அல்லது ஒரு வேண்டுகோள் விடுப்பது

**சிறை சேவை ஆணை 2510-ல்** மேலதிக தகவல் உள்ளது. நூலகத்தில் இருந்து நீங்கள் ஒரு பிரதியைப் பெறலாம்.

## வேண்டுகோள் விடுப்பது (ஏதாவது குறித்து கேட்டல் என்பதே இதன் அர்த்தம்)

- ஏதாவது குறித்து எந்த நேரத்திலும் நீங்கள் சிறை அதிகாரியிடம் கேட்கலாம்.
- ஏதாவது குறித்து கேட்க நீங்கள் ஒரு படிவத்தை நிறைவு செய்ய வேண்டியிருக்கும். நீங்கள் கேட்டதை நீங்கள் பெற இயலாது என சிறை அலுவலர் முடிவு செய்தால், ஏன் என்று அவர்கள் உங்களிடம் கூற வேண்டும்.

## புகார் செய்வது எப்படி

- சிறையில் முறையற்ற விதத்தில் நீங்கள் நடத்தப்படுவதாக கருதினால், நீங்கள் அது குறித்து நீங்கள் புகார் செய்யலாம்.
- பிரச்சனை நடத்த 3 மாதங்களுக்குள் நீங்கள் புகார் அளிக்க வேண்டும்

புகார் அளிக்க நீங்கள்

- முதலில் சிறை அலுவலரிடம் புகார் அளிக்கலாம்.
- சிறைக்கு **வெளியே** உள்ள நபர்களுக்கு புகார் அளிக்கலாம் (உங்கள் எம்பி போன்றவர்கள்)

- பிரச்சனையை முதலில் சிறையில் உள்ள நபர்களோடு தீர்க்க முயலுங்கள். சிறைக்கு வெளியே உள்ள நபர்கள், பிரச்சனையை முதலில் நீங்கள் சிறை அலுவரைக் கொண்டு தீர்க்க முயற்சித்திருக்க வேண்டும் என உங்களை எதிர்பார்ப்பார்கள்.

### 1. கீழ்க்கண்டவை போன்ற செயல்கள் குறித்து புகார் அளித்தல்

- நீதிமன்ற விசாரணைகள் (விசாரணைகள்)
- உங்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு வகைப்பிரிவு
- உங்களுக்கு மரணத்தை ஏற்படுத்தும் நோய் உள்ளதால் அல்லது நீங்கள் மற்றொரு, குற்றம் புரியும் வாய்ப்பு மிகவும் குறைவு போன்ற அம்சங்களால் சிறையிலிருந்து உங்களை முன்கூட்டியே வெளிவிடலாமா என்பது குறித்து முடிவுகள். இது **கருணை விடுதலை என** அழைக்கப்படுகிறது.

- இந்த வகையான புகார்கள் ரிசர்வ்டு **சப்ஜெக்டுகள்** எனப்படுகின்றன. அவை பகுதி மேலாளராலோ அல்லது சிறைக்கு வெளியே உள்ள அலுவலராலோ மட்டுமே முடிவு செய்ய இயலும்.
- ரிசர்வ்டு சப்ஜெக்டுகள் **சிறை சேவை ஆணை 2510 இணைப்பு** எச்-ல் உள்ளது. இதன் பிரதியை நூலகத்திலிருந்து நீங்கள் பெறலாம்.
- பகுதி மேலாளருக்கு எழுதுவதன் மூலமே இந்த செயல்கள் குறித்து நீங்கள் வேண்டுகோள் விடுக்க அல்லது புகார் அளிக்க இயலும்.
- அவர்கள் என்ன முடிவெடுத்துள்ளார்கள் என உங்கள் கடிதம் கிடைத்த 6 வாரங்களுக்குள் பகுதி மேலாளர் உங்களுக்கு பதில் கடிதம் அனுப்புவார்.
- இன்னமும் உங்களுக்கு திருப்தி இல்லை எனில், சிறைகள் மற்றும் நன்னடத்தை ஓம்புட்ஸ்மேனிற்கோ அல்லது வழக்குரைஞருக்கோ புகார் அளிக்கலாம். **115ம் பக்கம் பார்க்கவும்.**

### 2. மற்ற அம்சங்கள் குறித்து புகார் அளித்தல்.

**புகார் அளிப்பது எப்படி**

1. பிரச்சனை குறித்து அலுவலரிடம் பேசுங்கள். உங்களுக்கென தனி அதிகாரி இருந்தால் அவரிடம் பேசுங்கள். இது பிரச்சனையை தீர்க்கக்கூடும்.

2. இது பலனளிக்கவில்லை எனில், உங்கள் பிரிவின் லேண்டிங் அதிகாரி அல்லது மேலாளரிடம் பேச வேண்டும் என கேளுங்கள்.

**புகார் அளித்தல் குறித்த மேலதிக தகவல்**

3. இது பலனளிக்கவில்லையெனில், உங்கள் புகார் குறித்து எழுத்துப்பூர்வமாக தெரிவியுங்கள். இதைச் செய்ய **கொம்ப் 1** (COMP1) எனப்படும் படிவத்தை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட உங்கள் படிவங்களை **புகார் பெட்டி** யில் நீங்கள் போட வேண்டும். உங்களது படிவத்தை அலுவலரிடம் நேரடியாக கொடுக்காதீர்கள்.
4. உங்கள் புகார் குறித்து சிறை அலுவலர் என்ன கூறுகிறார் என்ற பதிலுடன் படிவம் உங்களுக்கு திருப்பி அனுப்பப்படும். 3 வேலை நாட்களுக்குள் பதிலை நீங்கள் பெற வேண்டும்.
5. சிறை அலுவலர் உங்களுக்கு அளித்த பதிலில் நீங்கள் **திருப்தியடையவில்லை** எனில், **கொம்ப் 1ஏ** (COMP1A) படிவத்தை நிறைவு செய்வதன் மூலம் உங்கள் புகாரை மீண்டும் பரிசீலிக்கும்படி நீங்கள் கேட்கலாம்.

**மிகவும் ரகசிய முறையில் புகார் அளித்தல்**

- மிகவும் ரகசிய முறையில் புகார் அளிக்க, **கொம்ப் 2** (COMP2) **இரகசிய அணுகுதல் புகார் படிவத்தை** நீங்கள் நிறைவு செய்யலாம். நீங்கள் ஏன் மிகவும் தனிப்பட்ட முறையில் புகார் அளிக்கிறீர்கள் என்பது பற்றி படிவத்தில் எழுதுங்கள்.
- சீலிடப்பட்ட உறையிலிட்டு அந்தப் படிவத்தை ஆளுநருக்கு, சுயாதீன கண்காணிப்புக் குழுவின் தலைவர் அல்லது பகுதி மேலாளருக்கு நீங்கள் அனுப்பலாம்.
- உங்கள் புகார் மிகவும் தீவிரமானது என்றாலோ அல்லது சிறை அலுவலருடன் பேசுவதற்கு கடினமான விஷயம் என்றாலோ மட்டும்தான் நீங்கள் இதைச் செய்ய வேண்டும்.
- உங்கள் புகார் குறித்து பரிசீலிப்பதற்கான மிகச்சிறந்த வழியை நீங்கள் படிவம் அனுப்பிய நபர் முடிவெடுப்பார். நீங்கள் எந்த நபர் மீது புகார் அளித்தீர்களோ அவர் உட்பட மற்ற நபர்களுடனும் அவர்கள் பேச வேண்டி இருக்கும்.

## அலுவலர் மீது புகார் அளித்தல்

- சிறை அலுவலர் சிறை விதிகளை மீறியதாக மற்றும் மோசமான விதத்தில் உங்களை நடத்தியதாக நீங்கள் கருதினால் ஆளுநரிடமோ அல்லது பகுதி மேலாளரிடமோ நீங்கள் புகார் அளிக்கலாம். தனியார் சிறைகளில், சிறை காவல் அதிகாரிகள் தொடர்பான புகார்கள் குறித்து நீங்கள் கட்டுப்பாட்டாளரிடம் புகாரளிக்க வேண்டும்.
- கொம்ப் 1(COMP1) எனப்படும் புகார் படிவத்தினையோ அல்லது கொம்ப் 2 (COMP2) என்ற படிவத்தையோ நிறைவு செய்யுங்கள். அலுவலர் தவறு செய்ததாக நீங்கள் என்ன கருதுகிறீர்களோ அந்த விவரங்களை படிவத்தில் எழுதுங்கள். எடுத்துக்காட்டாக, என்ன நடந்தது, எங்கே மற்றும் எப்போது நடந்தது மற்றும் வேறு யாராவது அதைப் பார்த்தார்களா போன்ற விவரங்கள்.
- மூத்த அலுவலர் ஒருவர் உங்கள் புகாரைப் பரிசீலிப்பார். அவர் உங்களிடமும், நீங்கள் யார் மீது புகார் அளித்தீர்களோ அவரிடமும் மற்றும் நடந்த சம்பவத்தை யாராவது பார்த்திருந்தால் அவரிடமும் பேசுவார்.

**நீங்கள் கூறியது உண்மை என்றால், ஆளுநர்**

- நீங்கள் யார் மீது புகார் அளித்தீர்களோ அந்த அலுவலர் மீது நடவடிக்கை எடுப்பார்.
- தேவைப்பட்டால் காவல் துறையினரை அழைப்பார்
- என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை உங்களுக்கு தெரிவிக்க கடிதம் எழுதுவார். இது வழக்கமாக 2 வாரங்கள் எடுக்கும்இரகசிய அணுகுதல் என்றழைக்கப்படும் மிகவும் தனிப்பட்ட முறையில் நீங்கள் புகார் அளித்திருந்தால், பகுதி மேலாளர் உங்களுக்கு கடிதம் எழுதுவார்.

## ஒரு புகார் பற்றிய உங்களது எண்ணத்தை மாற்றிக் கொள்ளல்

- உங்கள் எண்ணத்தை நீங்கள் மாற்றிக் கொண்டால், எந்த நேரத்திலும் புகாரை நிறுத்தி வைக்கலாம்.
- அலுவலரிடம் இதைக் கூறுங்கள். நீங்கள் புகாரை நிறுத்த விரும்புவதை தெரிவிக்க படிவத்தில் எழுதும்படி அவர்கள் உங்களைக் கேட்டுக் கொள்வார்.

## சிறையில் நீங்கள் பேசக்கூடிய மற்ற நபர்கள்

- புகாரை அலுவலர் மூலம் நீங்கள் தீர்க்க முயற்சித்தபின், உங்கள் புகார் குறித்த **சுயாதீன கண்காணிப்புக் குழு** எனப்படும் குழுவினரோடும் நீங்கள் பேசலாம். சிறைகள் நல்ல விதத்தில் இயங்குகின்றன என்பதை உறுதிப்படுத்த இந்த குழுவினர் சிறைகளை பரிசோதனையிடுவர்.
- சுயாதீன கண்காணிப்புக் குழுவில் உள்ளவர்கள் உள்ளூரைச் சேர்ந்த தன்னார்வலர்கள் ஆவர். சுயாதீன கண்காணிப்புக் குழு பற்றி நீங்கள் அறிந்து கொள்ள விளக்கக் கையேடு ஒன்று உள்ளது. அது சிறையின் உங்கள் பிரிவில் உள்ளது.
- உங்கள் புகாரை பரிசீலிக்கும்படி சுயாதீன கண்காணிப்புக்குழுவைக் கேட்க, நீங்கள் ஒரு படிவத்தை நிறைவு செய்ய வேண்டும். சிறையின் உங்கள் பிரிவில் அந்தப் படிவத்தைப் பெறலாம்.

சுயாதீன கண்காணிப்புக்குழு இவற்றை செய்ய இயலும்.

- உங்கள் புகார் மீதான முடிவை விளக்கும்படி ஆளுநரைக் கேட்கலாம்.
- வேறு என்ன செய்ய இயலும் என ஆளுநருக்கு ஆலோசனை கூறலாம்.
- பரிசீலிக்கப்படாத தகவலை சுட்டிக் காட்டலாம்.

அவர்களால் சிறை எடுத்த முடிவை மாற்ற இயலாது.

## உங்கள் புகாரை நீங்கள் அனுப்பக்கூடிய சிறைக்கு வெளியே உள்ள நபர்கள்-- சிறை அலுவலருடன் உங்கள் புகாரை தீர்க்க நீங்கள் முயற்சித்த பிறகு

### 1. சிறைகள் மற்றும் நன்னடத்தை ஓம்புட்ஸ்மேன்.

- உங்கள் புகாரை சிறை அலுவலருடன் ஏற்கனவே நீங்கள் தீர்க்க முயற்சித்த பின்னும் உங்களுக்கு திருப்தி இல்லையெனில், சிறைகள் மற்றும் நன்னடத்தை ஓம்புட்ஸ்மேன் என்பவருக்கு நீங்கள் கடிதம் எழுதலாம்.
- ஓம்புட்ஸ்மேன் சிறைக்காக பணிபுரிபவர் அல்ல. சிறை வாழ்க்கை குறித்து சிறைக் கைதிகள் எழுப்பும் புகார்களை பரிசீலிப்பதே அவர்களது பணியாகும்.
- **நீங்கள்** அனுப்பிய புகார்களை மட்டுமே ஓம்புட்ஸ்மேனால் பரிசீலிக்க இயலும்.
- உங்கள் புகார் குறித்து சிறை அலுவலரிடம் இருந்து நீங்கள் பதிலைப் பெற்ற 1 மாதத்திற்குள் நீங்கள் ஓம்புட்ஸ்மேனிற்கு கடிதம் எழுத வேண்டும்.
- நீங்கள் அவருக்கு கடிதம் எழுதும்போது உங்களால் இயன்ற அனைத்தையும் கூறவும். வழக்கமாக அவர்கள் உங்களைச் சந்தித்து பேசமாட்டார்கள். எனவே, உங்களால் இயன்ற அனைத்து தகவ ல்களையும் நீங்கள் உங்கள் கடிதத்தில் எழுதி அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.
- ஓம்புட்ஸ்மேன் உங்கள் புகாரைப் பரிசீலிக்க வழக்கமாக 12 வாரங்களோ அல்லது அதற்குக் குறைவாகவோ எடுத்துக் கொள்வார். என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை தெரிவிக்க எழுத்துப்பூர்வமாக நீங்கள் சிலவற்றை பெறுவீர்கள்.
- நீங்கள் முறையான வழியில் நடத்தப்படவில்லை என ஓம்புட்ஸ்மேன் கருதினால், ஆளுநரிடம் அவரது முடிவை மாற்றச் சொல்லிக் கூறலாம். அல்லது சிறை சேவை தலைவருக்கு மாற்றங்களை பரிந்துரைக்கலாம்.

கீழ்க்கண்ட முகவரியில் ஓம்புட்ஸ்மேனுக்கு எழுதுங்கள்.
Prisons and Probation Ombudsman
Ashley House
2 Monck Street
London
SW1P 2BQ

ஓம்புட்ஸ்மேன் குறித்தும் மற்றும் எப்படி புகார் அளிப்பது பற்றியும் தகவல் கொண்ட கையேட்டை நீங்கள் படித்து அறியலாம். இது நூலகத்தில் உள்ளது.

## 2. உடல்நலம் குறித்த புகார்கள்.

- உங்கள் புகார் உடல்நலம் தொடர்பானது எனில், நீங்கள் முதலில் சிறையில் உள்ள உடல்நல கவனிப்புக் குழுவினரிடம் பேச வேண்டும்

- இது பலனளிக்கவில்லை எனில், உங்கள் புகார் பற்றிக் கூற உங்களது முதன்மை சுகாதார அமைப்பிற்கு நீங்கள் கடிதம் எழுதலாம். முதன்மை சுகாதார அமைப்பானது அவர்களது உள்ளூர் பகுதியில் உள்ள மருத்துவர்கள், பல் மருத்துவர்கள் மற்றும் கண் மருத்துவர்கள் போன்ற உடல்நல சேவைகளுக்கு பொறுப்புடையதாகும்.

- நீங்கள் இன்னும் திருப்தியடையவில்லை எனில், உங்கள் புகாரைப் பரிசீலிக்கும்படி உடல்நல ஆணையத்தை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். உடல்நல சேவைகள் நல்ல முறையில் செயல்படுவதை உறுதிப்படுத்த இந்தக் குழு பணியாற்றுகிறது.

உங்கள் புகார் குறித்து கீழ்க்கண்ட முகவரியில் அவர்களுக்கு எழுதுங்கள்.

Healthcare Commission
FREEPOST NAT 18958
Complaints Investigation Team
Manchester
M1 9XZ

- உடல் நல  ஆணையத்தால் எடுக்கப்பட்ட முடிவு குறித்து நீங்கள் திருப்தியடையவில்லை எனில், உங்கள் புகாரைப் பரிசீலிக்கும்படி பாராளுமன்ற மற்றும் உடல்நல சேவை ஓம்புட்ஸ்மேனை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். கீழ்க்கண்ட முகவரியில் ஓம்புட்ஸ்மேனுக்கு கடிதம் எழுதுங்கள்.

The Parliamentary and Health Service Ombudsman
Millbank Tower
Millbank
London
SW1P 4QP

- உங்கள் உடல்நலம் குறித்து புகார் அளித்தலில் உங்களுக்கு உதவி ஏதேனும் தேவை எனில், சுயாதீன புகார்கள் ஆலோசனை சேவை (Independent Complaints Advisory Service - ICAS) என்ற அமைப்பிடம் உதவிக்காக நாடுங்கள்.

- அவர்களது தொடர்பு விவரங்களை சிறை அலுவலரிடமிருந்தோ, சிறை நூலகத்திலிருந்தோ பெறலாம் அல்லது 0845 4647 என்ற எண்ணில் என்.எச்.எஸ்.ஐ நேரடியாக அழைத்தும் பெறலாம்.

## 3. உங்கள் எம்.பி

- உங்கள் சொந்தப் பகுதியைச் சேர்ந்த எம்.பிக்கு நீங்கள் கடிதம் எழுதலாம்.
- அவர்களுக்கு எழுதும் கடிதத்தில், உங்களது வீட்டு முகவரியை குறிப்பிட்டு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- உங்கள் புகாரை பரிசீலிப்பதற்காக, பாராளுமன்ற மற்றும் உடல்நல சேவைகள் ஓம்புட்ஸ்மேனுக்கு உங்கள் புகாரை அனுப்பும்படியும் உங்கள் எம்.பி-யை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

## 4. உங்கள் வழக்குரைஞர்.

சட்டம் தொடர்பான எந்தவிதமான கேள்விகளுக்கும் உங்கள் வ ழக்குரைஞர் உங்களுக்கு உதவ முடியும்.

## 5. காவல்துறை தலைமை அதிகாரி

ஒரு குற்றம் நிகழ்ந்துள்ளதாக நீங்கள் கருதினால், உள்ளூர் காவல் நிலையத்திற்கு நீங்கள் எழுதலாம். உங்கள் கடிதத்தை அனுப்ப வேண்டிய சரியான முகவரிக்காக சிறையிலிருக்கும் காவல்துறை தொடர்பு அதிகாரி என அழைக்கப்படுபவரிடம் கேளுங்கள்.

## 6. நீங்கள் ஒரு பெட்டிஷனை மகாராணியார், பாராளுமன்றம் அல்லது உங்கள் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும் அனுப்பலாம்.

இதைப்பற்றிய மேலதிக தகவல் **சிறைசேவை ஆணை 2510-ல்** உள்ளது. அதில் படிவம் ஒன்று உள்ளது. நீங்கள் பெட்டிஷன் அனுப்ப அந்தப் படிவத்தை பிரதி எடுத்துக் கொள்ளலாம்.

## 7. குற்ற காய ங்கள் இழப்பீட்டு ஆணையம்

உங்களுக்கு எதிராக யாராவது வன்முறையாக நடந்து கொண்டதால் உங்களுக்கு காயம் ஏற்பட்டிருந்தால், நீங்கள் இந்த அமைப்பிற்கு கடிதம் எழுதலாம். வன்முறை குற்றத்தினாலோ அல்லது வேறு சில காரணங்களாலோ காயமடைந்த மக்களுக்கு இழப்பீடு (பணம் ) வழங்க இவர்கள் பணியாற்றுகிறார்கள். கீழ்க்கண்ட முகவரியில் நீங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

CICA
Tay House
300 Bath Street
Glasgow
G2 4LN

# குற்றவாளி மேலாண்மை, தண்டனை திட்டமிடுதல் மற்றும் விடுதலைக்குத் தயாராகுதல்

## குற்றவாளி மேலாண்மை

இது, நீங்கள் சிறையில் கழிக்கும் அல்லது கண்காணிப்பின் கீழ் சமூகத்தில் நீங்கள் கழிக்கும் காலம் எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது என்பதை பற்றியதாகும்.

எதிர்காலத்தில் நீங்கள் குற்றம் புரியும் வாய்ப்பு குறைவு என்பதை உறுதி செய்யவே குற்றவாளி மேலாண்மை செயல்படுத்தப்படுகிறது.

இது படிப்படியாக அனைத்து குற்றவாளிகளுக்கும் செயல்படுத்தப்படும்.

## உங்கள் மதிப்பீடு மற்றும் தண்டனைத் திட்டம்

சிறைகள் மற்றும் நன்னடத்தை சேவைகள் குற்றவாளி மேலாண்மை அமைப்பைப் பயன்படுத்துகிறது. இது சுருக்கமாக **ஓயாசீஸ் (OASys** )என அழைக்கப்படுகிறது.

நீங்கள் ஏன் குற்றமிழைக்கிறீர்கள் மற்றும் குற்றமிழைப்பதை தடுக்க உங்களுக்கு என்ன தேவை என்பதைக் கண்டறிய இது அவர்களுக்கு உதவுகிறது.

இது, நீங்கள் மற்றவர்களையோ அல்லது உங்களையோ காயப்படுத்துவீர்களா எனக் கண்டறியவும். நீங்கள் அவ்வாறு செய்யாமலிருக்க உங்களுக்கு உதவ உங்களோடு இணைந்து செயலாற்றவும் பயன்படுகிறது.

12 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாகவோ சிறையிலிருக்க செல்லும் ஒவ்வொருவருக்கும் ஓயாசீஸ் மூலமாக உருவாக்கப்பட்ட திட்டம் உண்டு.

ஒரு செயல்திட்டத்தை தயாரிக்க மதிப்பீடு பயன்படுத்தப்படுகிறது. இந்த செயல்திட்டமானது உங்களுக்கு **தண்டனைத் திட்டம்** என அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, சில சமயங்களில் நீங்கள் நடந்து கொண்ட விதத்தை மாற்ற நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் அல்லது, போதைப் பொருட்கள் அல்லது மது பழக்கத்தினால் உண்டாகும் பிரச்சனைகளை நீங்கள் எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் என்பதை தண்டனை திட்டம் விளக்கக்கூடும்.

தண்டனைத் திட்டமானது, உங்கள் தண்டனை காலத்தின்போது மற்றும் நீங்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னும் பெரும்பாலான முடிவுகள் மற்றும் மாற்றங்களைப் பாதிக்கும்.

## குற்றவாளி மேலாளர் மற்றும் பிற அலுவலர்

குற்றவாளி மேலாளர் நன்னடத்தை சேவையை சேர்ந்தவர் ஆவார். இவர்கள் சமூகத்தில் பணியாற்றுபவர் மற்றும் நீங்கள் சிறையிலிருக்கும்போது அல்லது கண்காணிப்பின் கீழ் சமூகத்தில் இருக்கும் போதும் வழக்கமாக அனைத்து நேரங்களிலும் உங்களோடு இணைந்து பணியாற்றுவார். உங்கள் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த அவர் உங்களுக்கு உத வி புரிவார். ஆகையால், எதிர்காலத்தில் நீங்கள் குற்றம் புரியும் வாய்ப்பு குறைவாகக்கூடும்.

நீங்கள் சிறையிலிருக்கும்போது, ஒரு குற்றவாளி கண்காணிப்பாளரையும் கூடவே தனி அதிகாரியையோ நீங்கள் கொண்டிருக்கக்கூடும்.

உங்கள் தண்டனைத் திட்டத்தை நீங்கள் பின்பற்ற அவர்கள் உங்களுக்கு உதவுவர்.

உங்கள் குற்றவாளி கண்காணிப்பாளர் மற்றும் / அல்லது தனி அதிகாரி ஆகியோர் உங்கள் குற்றவாளி மேலாளருடன் இணைந்து பணியாற்றுவர். சில இடங்களில் குற்றவாளி கண்காணிப்பாளர் மற்றும் தனி அதிகாரி ஒரே நபராக இருக்கக்கூடும்.

ஓயாசீஸ் அல்லது குற்றவாளி மேலாண்மை குறித்து உங்களுக்கு கேள்விகள் இருப்பின் சிறை அலுவலருடன் பேசுங்கள்.

## பல முகமை பொது பாதுகாப்பு ஏற்பாடுகள் (Multi-Agency Public Protection Arrangements - MAPPA)

வன்முறை மற்றும் பாலியல் குற்றவாளிகளை நிர்வகிப்பதற்காக காவல்துறை, நன்னடத்தை மற்றும் சிறை சேவைகள் ஆகியோர் மற்ற நிபுணர்களோடு இணைந்து பணியாற்றுவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது.

உங்களுக்கு இது பொருந்தும் என்றால், **உங்களுக்கு கூறப்படும்.**

நீங்கள் பலமுகமை பொது பாதுகாப்பு ஏற்பாடுகள் மதிப்பீட்டைக் கொண்டிருந்தீர்கள் எனில், ஒரு இடர் மேலாண்மை திட்டத்தை தயாரிக்க அது பயன்படுத்தப்படும். குழந்தைகள் மற்றும் மற்ற நபர்களுக்கு நீங்கள் இடர் செய்யக்கூடியவரா என அலுவலர் முடிவு செய்யவும் இந்த மதிப்பீடானது உதவும்.

## உங்கள் தண்டனை திட்டம்

உங்கள் தண்டனை திட்டம் குறிக்கோள்களை உள்ளடக்கியிருக்கும்.

இவை நீங்கள் செய்ய வேண்டிய அல்லது மாற்ற வேண்டிய செயல்களாகும்.

எடுத்துக்காட்டாக, கீழ்க்குறிப்பிட்டுள்ளவை போன்ற கல்வி சார்ந்த குறிக்கோள்களை நீங்கள் கொண்டிருக்கலாம்.

- ✓ கல்வியறிவு – படித்தல் மற்றும் எழுதுதல்
- ✓ எண்ணியல் – கணக்கு மற்றும் பணத்தை நிர்வகித்தல்
- ✓ புதிய திறமையை கற்றுக் கொள்ளுதல், இதன்மூலம் சிறையிலிருந்து விடுதலையானபின் வேலை பெற இயலும்.
- ✓ தேர்வுகள் எழுதுதல் மற்றும் கல்வித் தகுதியை அதிகரித்தல்

உங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக, நீங்கள் ஏன் குற்றம் புரிகிறீர்கள் என்பது குறித்த சிந்திக்கவும் மற்றும் உங்கள் நடத்தையை மாற்றிக் கொள்ள உதவும் குழுக்கள் அல்லது பாடவகுப்புகளுக்கு நீங்கள் செல்லக்கூடும்.

### சில எடுத்துக்காட்டுகள்

சூழ்நிலைகளின்போது சிந்தித்து செயலாற்றவும், உங்கள் எதிர்தாக்கத்தை கட்டுப்படுத்தவும் உதவும் பாடவகுப்புகளை நீங்கள் மேற்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக

- விரிவாக்கப்பட்ட சிந்தனைத் திறன்கள் மற்றும் சிந்தனையோட்ட திறன்கள் ஊக்குவிப்பு எனப்படும் பாட வகுப்புகள். சிந்தனையோட்டம் என்பது நீங்கள் சிந்திக்கும் விதம் குறித்தானது ஆகும்.
- உங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்த உதவும், கோபத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் அதை நிர்வகிக்கக் கற்றுக் கொள்ளல் (Controlling Anger and Learning to Manage it – CALM) எனும் பாட வகுப்பு
- பாலியல் குற்றவாளி நன்னெறிப்படுத்தல் திட்டங்கள் (Sex Offender Treatment Programmes – SOTPs)( பெரும்பாலும் SOTPs எ என அழைக்கப்படுகிறது).

## திட்டங்கள் பற்றி மேலதிக தகவல்

உங்களுடைய வன்முறைக் குணத்தால் உங்களுக்கு பிரச்சனைகள் இருப்பின் உங்களுக்கு உதவ சில திட்டங்களும் உள்ளன.

எடுத்துக்காட்டாக

- நீங்கள் உங்கள் துணையை துன்புறுத்தியிருந்தால், ஆரோக்கியமான உறவுகள் திட்டம்
- நீங்கள் அடிக்கடி வன்முறையாக நடந்து கொண்டால், சிந்தனையோட்ட சுய மாறுதல் திட்டம்
- வன்முறையாக நடந்து கொள்ளுபவர்கள் மற்றும் மற்ற குழுக்களினால் உதவி செய்யப்பட முடியாத குறிப்பிட்ட பிரச்சனைகள் உள்ளவர்களுக்காக க்ரோமிஸ் திட்டம்
- சிறை வாழ்க்கைக்குப்பின் சமூகத்தில் மீண்டும் நீங்கள் இணைந்து வாழ உங்களுக்கு உதவும் திட்டங்கள்.

## கல்வி

ஒவ்வொரு சிறையிலும் நூலகம் மற்றும் கல்வித் துறையும் இருக்கும்.

நீங்கள் பயன்படுத்த **நூலகம்** ஒன்று இருக்கும். இது சிறைக்கு வெளியே இருக்கும் பொது நூலகங்கள் போன்றது.

- புத்தகங்களை நீங்கள் இரவல் வாங்கலாம் அல்லது ஆர்டர் செய்யலாம்.
- ஒவ்வொரு வாரமும் குறைந்த பட்சம் 20 நிமிடங்கள் நூலகத்திற்கு செல்வதற்கான வாய்ப்பை நீங்கள் பெற வேண்டும்.
- பெரும்பாலான நூலகங்கள் மற்ற மொழி புத்தகங்களை கொண்டிருக்கும்.
- **சிறை சேவை ஆணை 6710-ல்** மேலதிக தகவல் உள்ளது.

## கற்றல்

எந்த ஒரு வ குப்புகளிலும் நீங்கள் சேருவதற்கு முன்னும், படித்தல் மற்றும் எழுதுதல் போன்ற செயல்களினால் உங்களுக்கு எந்தவிதமான ஆதரவு தேவைப்படும் என்பதைக் காண நீங்கள் சோதனை மற்றும் நேர்காணல் செய்யப்படுவீர்கள். இது உங்களுக்கு ஏற்ற பாட வகுப்புக்களை நீங்கள் தேர்வு செய்ய உதவும்.

கல்வி அலுவலரிடமிருந்து நீங்கள் ஒப்புக்கொண்டபடியான உங்கள் சொந்த கல்வித் திட்டம் மற்றும் கால அட்டவணையை நீங்கள் பெறுவீர்கள்.

### கற்றல் குறித்து  மேலதிக தகவல்

பல்வேறு மாறுபட்ட தலைப்புகள் கொண்ட வகுப்புகளில் நீங்கள் சேரலாம்

எடுத்துக்காட்டாக

- படித்தல் மற்றும் எழுதுதல்
- கணிதம்
- மற்ற மொழிகளைப் பேசுபவர்களுக்காக ஆங்கிலப் பாடங்கள்
- கலை
- வணிகப் படிப்புகள்

நீங்கள் படிக்கும்அனைத்துப் பாடப்பிரிவுகளும் சிறைக்கு வெளியே, ஜிசிஎஸ்ஈ அல்லது என் வி க்யு போன்ற, அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதி நிலைக்கு ஏற்றவாறு இருக்கும் . இதன் மூலம் நீங்கள்சிறையை விட்டு வெளியே செல்லும் போது உங்கள் சொந்த விருப்பதிற்கேற்ற கல்வி தகுதியுடன் செல்லலாம்

திறந்த நிலை பல்கலைக்கழக (Open University –  OU) பாடப்பிரிவுகள் போன்ற, தொலைமுறை கல்விப் பாடப்பிரிவுகளுக்கான உதவியையும் நீங்கள் பெற இயலக்கூடும்.

**21 வயதுக்கு மேற்பட்ட** சிறைக் கைதிகள், ஒவ்வொரு வாரமும் குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் விளையாட்டுக்களில் பங்குபெற அல்லது பி.ஈ  நேரங்களைப் பெற வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

## பணி மற்றும் பயிற்சி

### பயிற்சி

சிறைச்சேவை, கற்றல் மற்றும் திறமைகள் கவுன்சிலுடன் இணைந்து பணியாற்றுகிறது. நீங்கள் சிறையில் இருக்கும்போதும் விடுதலையான பின்னும் கற்றல் மற்றும் திறமைகள் கவுன்சில் உங்களுக்கு என்ன அளிக்க முடியும் என்பதைப் பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ள கல்வி அலுவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்களுக்கு பணியை பெற்றுத்தர உதவக்கூடிய திறமைகளை, நீங்கள் கற்றுக்கொள்ள உதவுவது பற்றியதே பயிற்சி ஆகும். இது **பணிசார் பயிற்சி** எனப்படுகிறது.

பணிசார் பயிற்சியானது பெரும்பாலும் கல்வி வகுப்புகளோடு தொடர்புடையது. இந்த முறையில், நீங்கள் பயிற்சி வகுப்புகளுக்கு சென்று தகுதிநிலைகளைப் பெற இயலும்.

எடுத்துக்காட்டாக,  நீங்கள் வர்ணம் தீட்டல் மற்றும் அலங்காரக் கலை தொடர்பான பயிற்சி வகுப்புக்கு சென்று கொண்டிருக்கலாம். அதே சமயத்தில் , நீங்கள் கணிதம் மற்றும் படித்தல் வகுப்புகளுக்கும் செல்லலாம். இதன்மூலம் நீங்கள் ஜிசிஎஸ்ஈயையோ தேசிய பணிசார் கல்வித் தகுதி (National Vocational Qualification - NVQ) யையோ பெற இயலும்.

உங்கள் சிறையில் என்னென்ன பயிற்சி வகுப்புகள் செயல்படுகின்றன என்பதை உங்களுக்கு எடுத்துக்கூறும் **கல்வி மற்றும் பயிற்சி டைரக்டரி** எனப்படும் புத்தகத்தை ஒவ்வொரு சிறையும் கொண்டிருக்கும்.

**பணி**

சிறையில் நீங்கள் இருக்கும்போது உங்கள் பகல் நேரத்தின்போது நீங்கள் செய்யும் முக்கிய செயல்களில் ஒன்றாகும் பணி. பணியானது நீங்கள் திறமைகளையும், தகுதிநிலைகளையும் பெற உதவுவதில் பெரும் பங்காகும். இதன்மூலம் நீங்கள் சிறையில் இருந்து சென்றபின் ஒரு வேலையைப் பெற முடியும்.

சிறைக்கு நீங்கள் வந்தவுடன், எந்தவிதமான பணி உங்களுக்கு ஏற்றதாகும் என்பதை அறிய நீங்கள் மதிப்பீடு செய்யப்படுவீர்கள்.

தொழிற்பட்டறைகள் மற்றும் / அல்லது வேளாண்மை (விவசாயம்) மற்றும் தோட்டக்கலை (தோட்டம் பராமரிப்பு) பிரிவுகள் மூலமாகவே சிறையில் பணி மேற்கொள்ளப்படுகிறது. சிறையில் தேவைப்படும் மற்றும் சமூகத்தில் விற்கவும் தேவையான பொருட்களை நீங்கள் உருவாக்குவீர்கள் மற்றும் சேவைகளை செய்வீர்கள்.

இந்தவிதமான பிரிவுகளில் பணிபுரிவது கீழ்காணும் தொழில்கள் போன்றவற்றில் உங்களுக்கு திறமைகளையும் அனுபவத்தையும் அளிக்கும்.

- ஜவுளிகள்
- பொறியியல்
- மர வேலை
- அச்சிடுதல்
- டேட்டா என்ட்ரி
- பிளாஸ்டிக் மோல்டிங்
- கணிப்பொறி உதவியுடனான வடிவமைப்பு
- தளபராமரிப்பு

சிறையில் உங்கள் பணிக்கு உங்களுக்கு ஊதியம் வழங்கப்படும். நீங்கள் பணிபுரிய விரும்பினால், ஆனால் சிறையில் உங்களுக்கு ஏற்ற பணி இல்லையெனிலும் கூட உங்களுக்கு ஊதியம் வழங்கப்படும். இந்த தொகையானது, நீங்கள் பணிபுரிந்தால் வழக்கமாக நீங்கள் எவ்வளவு ஊதியம் பெறுவீர்களோ அதில் பாதித் தொகையாக இருக்கும்.

### சமூகப் பணி

சிறைக்கு அருகே உள்ள உள்ளூர் சமூகத்திற்காக பணிபுரிதல் **வெளியே பணிபுரிதல்** என அழைக்கப்படுகிறது. சிறையை விட்டு நீங்கள் செல்லும்போது உங்கள் த ன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள இது உங்களுக்கு நல்ல வாய்ப்பாகும். உங்கள் சமூகத்திற்கும் மற்றும் உங்களோடு பணியாற்றும் மற்றும் வசிக்கும் மற்ற நபர்களுக்கும் பொறுப்புள்ளவனாக இருப்பது பற்றி நீங்கள் மேலும் அதிகமாக புரிந்து கொள்ள இது உங்களுக்கு உதவும். வெளியே பணிபுரிதல் என்பது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை உள்ளடக்கும்.

- சுற்றுப்புறச் சூழல் திட்டங்களில் பணியாற்றுவது
- வயதானோருடன் பணியாற்றுவது
- உடல் ஊனமுற்றோருடன் பணியாற்றுவது
- விளையாட்டு நடவடிக்கைகளில் பணியாற்றுவது

### வேலை மன்றங்கள்

நீங்கள் சிறையைவிட்டு வெளியேறும்போது உங்களுக்கு வேலை கிடைப்பதற்கு உதவுவதற்காக சில சிறைகள் சொந்த வேலை மன்றங்களை இயங்குகின்றன. நேர்காணலுக்கு தயாராகுதல் மற்றும் வேலைகளைள எப்படி தேடுவது போன்ற செயல்களில் வேலை மன்றங்கள் உங்களுக்கு உதவும். உங்கள் சிறையில் வேலை மன்றம் உள்ளதா என அறிய சிறை அலுவலரிடம் கேளுங்கள். பெரும்பாலான சிறைகள் வேலை பெறுதல் தொடர்பாக உங்களுக்கு ஆலோசனையும் ஆதரவும் வழங்குவதற்காக பயிற்சி பெற்ற அலுவலரைக் கொண்டிருக்கும்.

### தன்னார்வலர்கள்

சிறையில் நீங்கள் ஒரு கேட்பாளாராக தன்னார்வ தொண்டு செய்ய இயலும்.

அல்லது சந்திப்புக்களின்போது மற்ற சிறைக் கைதிகளுக்காக பேசுதல் அல்லது வழிபாட்டிடத்திலோ அல்லது நூலகத்திலோ உதவுதல் போன்ற சிறப்பு வேலைகளை நீங்கள் செய்ய இயலும்.

## சிறையை விட்டு செல்ல தயாராகுதல்

சிறையை விட்டு நீங்கள் செல்லும்முன் கீழ்க்கண்டவற்றை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

- ✓ நீங்கள் எங்கு வசிப்பீர்கள்.
- ✓ உங்கள் அரசாங்க பண சலுகைகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது
- ✓ எங்காவது வசிக்க உங்களுக்கு உதவ எந்தெந்த மானிய உதவிகளுக்கு நீங்கள் விண்ணப்பிக்க இயலும்.
- ✓ சிறைக்கு செல்வதற்கு முன் நீங்கள் பணிபுரிந்திருந்தால், வரி படிவங்களை நீங்கள் அனுப்ப வேண்டி இருக்கிறதா
- ✓ சிறைக்கு செல்லும்முன் நீங்கள் உடுத்தியிருந்த ஆடைகள் இன்னமும் அளவு சரியாக உள்ளதா
- ✓ நீங்கள் உரிமத்தின் கீழ் உள்ளீர்களா நன்னடத்தை சேவையை நீங்கள் காண வேண்டுமா

### உங்கள் உடைமை

சிறையை விட்டு நீங்கள் செல்லும்போது, நீங்கள் சிறைக்கு வரும்போது உடுத்தியிருந்த ஆடைகள் போன்ற, அனைத்து தனி உடைமைகளும் திருப்பி அளிக்கப்படும். சில சிறைகளில் நீங்கள் சிறையை விட்டு செல்வதற்கு சில நாட்களுக்கு முன் உங்கள் ஆடையை உடுத்தி பார்க்கும் வாய்ப்பு உங்களுக்கு உண்டு. இதன்மூலம் ஆடைகள் உங்களுக்குப் பொருத்தமாகவோ அல்லது காலநிலைக்கு ஏற்றவாறோ இல்லையெனில், நீங்கள் உங்கள் குடும்பத்தினரையோ அல்லது நண்பர்களையோ ஆடைகள் கொண்டு வரச்சொல்லி கேட்கலாம்.

இதற்கு வாய்ப்பு இல்லையெனில், சிறைசேவை உங்களுக்கு **சுதந்திர ஆடை** யை அளிக்க வேண்டும். இது சிறையைவிட்டு செல்லும்போது உங்களுக்கு பொருந்தும் விதத்திலும் கால நிலைக்கு ஏற்ற விதத்திலும் இருக்கும் ஆடையாகும்.

**நீங்கள் சிறையை விட்டு செல்ல இருக்கும் தினத்திற்கு சில நாட்களுக்கு முன்னரே ஆடைகளைப் பற்றி கேட்கவும்.**

### பயண வாரண்ட்

உங்கள் இல்லத்திற்கு நீங்கள் திருப்பிச் செல்லவோ அல்லது ஐக்கிய ராச்சியத்திலுள்ள மற்றொரு முகவரிக்கோ நீங்கள் செல்ல பயண வாரண்ட் ஒன்றை நீங்கள் பெறுவீர்கள். இது ரயில், பேருந்து அல்லது கோச்சில் நீங்கள் பயணம் புரிய அனுமதிக்கும்.

## வெளிவிடுதல் மானியங்கள்

நீங்கள் வருவாய் ஆதரவு அல்லது வேலை தேடுவோர் அலவ ன்சு பெறும்வரை உங்களுக்கு உதவுவதற்கான மானியம் ஆகும். இது ஒரு சிறிய தொகையாகும் – கிட்டத்தட்ட 46 பவுண்டு. கீழ்க்கண்டவை உங்களுக்கு பொருந்தினால் நீங்கள் வெளிவிடுதல் மானியம் பெறமாட்டீர்கள்

- நீங்கள் 18 வயதுக்கு குறைவானவராக இருந்தால்
- உங்கள் தண்டனைக்காலம் 14 நாட்கள் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால்
- அபராதம் செலுத்தாததற்காக நீங்கள் சிறையில் இருந்தால்
- நீங்கள் ஒரு சிவில் சிறைக்கைதியாக இருந்தால்
- நீங்கள் விளக்கமறியலில் இருந்தால் அல்லது நாட்டை விட்டு வெளியேற்றுவதற்காக காத்துக்கொண்டிருந்தால்
- நேரடியாக நீங்கள் மருத்துவமனைக்கு சென்றால்
- ஐக்கிய ராச்சியத்திற்கு வெளியே வேறு எங்காவது நீங்கள் வசிக்கப் போவதாக இருந்தால்
- வருமான ஆதரவைப் பெறும் தகுதி இல்லாதவராக இருந்தால்
- 14 நாட்களுக்கும் குறைவாக நீங்கள் திரும்ப அழைக்கப்பட்டிருந்தால்

நீங்கள் வசிப்பதற்கு ஒரு இடத்தை பெற உங்களுக்கு உதவுவதற்காக ஆளுநர் வீட்டுவசதி அளிப்பவருக்கு (வீட்டு உரிமையாளர்) மற்றொரு சிறிய மானியத் தொகையை அளிக்கக்கூடும். இந்த மானியத்தொகை ஆளுநரைப் பொறுத்தது. உங்களுக்கு எந்த இடத்திற்காக பணம் தேவைப்படுகிறதா அந்த இடம் பொருத்தமானதுதானா என்பதை சிறை பரிசோதிக்கும்.

## வீட்டு வசதி

விடுதலையாகும்போது நீங்கள் வீடில்லாதவராக இருந்தால், நீங்கள் ஒரு தங்குமிடத்தைக் கண்டறிய உங்களுக்கு உதவக்கூடிய அமைப்புகள் உள்ளன. பெரும்பாலான தங்குமிடங்கள் விடுதிகளிலோ அல்லது பகிர்ந்து கொள்ளும் இல்லங்களாகவோ இருக்கும். நீங்கள் குற்றவாளி மேலாளர் ஒ ருவரைக் கொண்டிருந்தால், அவர்கள் இதுகுறித்து உங்களிடம் ஆலோசனை நடத்துவார்கள்.
இந்த விஷயத்தில் உதவுமாறு சிறையில் உள்ள மறுவாழ்வு பிரிவைக் கேளுங்கள்.
சிலசிறைகள் நேக்ரோவின் எளிதில் அணுகக்கூடிய சேவை தகவல் தரவுத் தொகுதியை பயன்படுத்தக்கூடும். உங்கள் சிறை இதைச் செய்ய இயலுமா எனக் கேளுங்கள். இந்தத் தகவல் கணிப்பொறியில் இருக்கும்.

## வீட்டுவசதி குறித்து மேலதிக தகவல்

நேக்ரோ என்பது சிறையில் இருந்த நபர்களோடு இணைந்துசெயலாற்றும் தொண்டு நிறுவனமாகும். நீங்கள் 0800 0181 259 என்ற எண்ணில் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

ஷெல்டர் என்பது, வீடில்லாதவர்களுக்கு உதவுகின்ற தொண்டு நிறுவனமாகும் நீங்கள்0808 800 4444 என்ற எண்ணில் ஷெல்டரைத் தொடர்பு கொள்ளலாம்.

## பணம் மற்றும் சலுகைகள்

சலுகைகளுக்காக நீங்கள் ஜொப்சென்டர் பிளஸ் (Job Centre Plus)மூலமாக விண்ணப்பிக்கலாம் நீங்கள் சிறையில் இருந்து வெளியேறுவதற்கு **முன்பாக**, சலுகைகளுக்காக விண்ணப்பிப்பதில் உதவும்படி உங்கள் சிறையில் பணியாற்றும் ஜாப்சென்டர் பிளஸ் மற்றும் பெனிபிட் சர்ஜரி (Benefit Surgery)ஆலோசகர்களை நீங்கள் கேட்கலாம்.

நீங்கள் வெளியே செல்வதற்கு முன்பாக ஒரு ஆலோசகரை உங்களால் காண இய லவில்லை எனில், நீங்கள் சிறையை விட்டு வெளிவந்தவுடன் உங்களால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு விரைவில் உங்கள் ஜொப்சென்டர் பிளஸ் அலுவலகத்திற்கு செல்லுங்கள் அல்லது தொலைபேசியில் பேசுங்கள்.

- **ஃப்பிரஷ் ஸ்டார்ட்(Fresh Start) திட்டத்தின்** கீழ் ஒரு ஆலோசகரை நீங்கள் காண வேண்டுமென அவர்களிடம் கூறுங்கள். இது சிறையில் இருந்த நபர்களுக்கான திட்டமாகும்.
- சிறையிலிருந்து வெளிவந்த **7 நாட்களுக்குள்** நீங்கள் இதை ஒழுங்குபடுத்த வேண்டும். இதன்மூலம், நீங்கள் சிறையிலிருந்து வெளிவந்த நாள் முதல் சலுகைகளை நீங்கள் கோர முடியும்.

ஜொப்சென்டர் பிளஸிற்கு  உங்கள் அப்பாயிண்ட்மெண்டின் போது நீங்கள் செல்லும் சமயத்தில் நீங்கள் இவற்றையும் **உங்களோடு எடுத்துச் செல்ல வேண்டும்.**

- உங்களை அடையாளம் (Identification ID) காட்டக்கூடிய உங்கள் கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம் அல்லது பிறப்பு சான்றிதழ் போன்ற ஏதாவது
- உங்கள் தேசிய காப்பீட்டு எண்.
- சிறையிலிருந்து ஒரு அதிகாரப்பூர்வ கடிதம்.

உங்கள் சொந்தப்பகுதிக்கு நீங்கள் திரும்ப செல்லவில்லை என்றால் அல்லது இந்த ஆவணங்கள் உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் இருந்தால் அதை நீங்கள் எப்படி பெறுவீர்கள் என்பதை முறைப்படுத்திவிட்டதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இதை, சிறையை விட்டு வெளியே வரும் முன்பே செய்துவிடுங்கள்.

### வருமானவரி

உங்களின் கடைசி பணியின் பி45(P45) படிவம் உங்களிடம் இல்லை எனில் நீங்கள் சிறையை விட்டு வெளிவரும்முன் உங்களுக்கு உள்நாட்டு வருமான படிவம் பி80-1 (P80-1)அளிக்கப்படும்.

இதை நீங்கள் நிறைவு செய்து, உங்கள் கடைசி பணியை கையாண்ட வரி அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

வேலை தேடுவோர்கள் அலவன்சு மற்றும் வருமான ஆதரவிற்காக நீங்கள் இதை நிறைவு செய்ய வேண்டும்

நீங்கள் சுயதொழில் துவங்கப் போவதாக இருந்தால், உங்கள் உள்ளூர் வரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

### மானியங்கள் மற்றும் கடன்கள்

நீங்கள் வருமான ஆதரவு அல்லது வருமான அடிப்படையில் வேலை தேடுவோர் அலவன்சைப் பெறப்போவதாக இருந்தால், நீங்கள் **சமூக கவனிப்பு மானியத்தை** யும் கூட பெற இயலக்கூடும். இந்த மானியம், உங்களிடம் ஆடைகளோ, அல்லது வீட்டு உபயோகப் பொருட்களோ இல்லையெனில் அதற்காக உங்களுக்கு உதவுவதற்கானது ஆகும். நீங்கள் எவ்வளவு காலம் சிறையில் இருந்தீர்கள் என்பதையும், அவர்கள் கணக்கில் கொள்வார்கள். உங்கள் ஆடைகள் திருட்டு போனதா, தொலைந்துவிட்டதா, அல்லது சேதமடைந்ததா அல்லது உங்கள் எடை அதிகம் கூடிவிட்டது அல்லது குறைந்துவிட்டது அதனால் உங்கள் ஆடைகள் உங்களுக்கு பொருந்தவில்லையா என்பது போன்ற அம்சங்களையும் அவர்கள் கணக்கில் கொள்வார்கள்.

இந்த மானியத்தை நீங்கள் திரும்ப செலுத்த வேண்டியதில்லை

### மற்ற மானியங்கள்

நீங்கள் சமூக கவனிப்பு மானியத்தை பெற இயலவில்லை எனில், நீங்கள் **சிரமகால கடனை** பெற இயலக்கூடும். இதை நீங்கள் திரும்ப செலுத்த வேண்டும். அதை திரும்ப செலுத்தி முடிக்கும்வரை, தொகைகள் உங்கள் சலுகைகளிலிருந்து நேரடியாக எடுத்துக்கொள்ளப்படும்.

## உங்கள் உடல்நலம்

உங்கள் உடல்நலம் அல்லது மருந்துகள் தொடர்பாக உங்களுக்கு கவலைகள் ஏதேனும் இருந்தால், நீங்கள் வெளியே செல்லும் முன் ஒரு மருத்துவரையோ அல்லது தாதியரையோ காண வேண்டும் என நீங்கள் கேட்கலாம்.

தெருவோரம் கிடைக்கும் போதை மருந்துகள் எப்போதும் ஆபத்தானவை. சிறையில் நீங்கள் சட்டவிரோத போதை மருந்துக்களை பயன்படுத்தியிருந்தால், வெளியில் கிடைப்பவைகளை விட பெரும்பாலும் அவை ஆற்றல் குறைந்தவைகளாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சிறைக்கு வெளியே கிடைக்கும் மருந்துக்களின் அதிக ஆற்றல் தன்மையினால் உங்களுக்கு இடர் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

போதை மருந்து பிரச்சனைகளுக்காக நீங்கள் சிகிச்சை மேற்கொண்டு வந்தால், உங்கள் சிகிச்சையைத் தொடர ஒரு சமூக போதைப்பொருள் சிகிச்சை சேவைக்கு நீங்கள் பரிந்துரைக்கப்படுவீர்கள்.

## விடுதலைக்காலம்

விடுதலையாகும் தினத்தன்று, பெரும்பாலும் நீங்கள் காலை 8.45 மணிக்கு முன்னரே சிறையை விட்டு செல்வீர்கள்.

உங்கள் விடுதலைத் தேதி சனிக்கிழமையோ அல்லது ஞாயிற்றுக்கிழமையோ வந்தால், முன்னதாக வெள்ளிக்கிழமையன்றே நீங்கள் வெளிவிடப்படுவீர்கள்.

உங்கள் விடுதலைத் தேதி வங்கி விடுமுறை தினத்தன்று வந்தால் வங்கி விடுமுறை தினத்திற்கு முன்பாக கடைசி வேலை நாளன்று நீங்கள் வெளியே செல்வீர்கள். வழக்கமாக இது வெள்ளிக்கிழமையாக இருக்கக்கூடும்.

நீங்கள் பரோலில் விடுதலையானால் மற்றும் உங்கள் விடுதலைத் தேதி வார இறுதி நாட்களில் வந்தால் நீங்கள் திங்கள் கிழமை வெளியே செல்வீர்கள்.அது வங்கி விடுமுறை தினத்தன்று வந்தால் , நீங்கள் வங்கி விடுமுறை தினத்திற்கு பிறகு விடுதலையாவீர்கள். இது , வழக்கமாக செவ்வாய்கிழமையாக இருக்கும்.

## உரிமம் மற்றும் கண்காணிப்பு

உங்கள் தண்டனைக்காலம் ஒரு வருடத்திற்கும் அதிகமாக இருந்தால், நீங்கள் உரிமத்தில் விடுதலை செய்யப்படுவீர்கள். இளம் குற்றவாளிகள், 21 வயதுக்கு கீழ் உள்ளவராக இருந்தால் ,நீங்கள் உரிமம் கொண்டிருப்பீர்கள் என்பதால், **159 பக்கம் பார்க்கவும்.** நீங்கள், குறிப்பிட்ட இடத்தில் தங்கியிருந்தல் மற்றும் உங்கள் குற்றவாளி மேலாளரைக் காணுதல் போன்ற, உங்கள் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை நீங்கள் செய்ய வேண்டும்.

### வாயிற்கதவு கைது

உங்கள் விடுதலையின்போது நீங்கள் கைது செய்யப்பட போவதாக இருந்தால், உங்களுக்கு தெரியக்கூடாது என்று காவல்துறையினர் கூறாதவரை, நீங்கள் செல்லும் முன்பே ஆளுநரால் உங்களுக்கு இது கூறப்படும். இது நடக்கப்போகிறது என ஆளுநர் உங்களிடம் கூறினால், நீங்கள் உங்கள் ந ண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் வழக்குரைஞரிடம் கூறலாம்.

### குற்றவாளிகள் புனர்வாழ்வு சட்டம்

இது குறிப்பிட்ட காலகட்டத்திற்கு பின், உங்கள் பதிவேட்டில் இருந்து அகற்ற (நீக்குதல்) கூடிய கிரிமினல் தண்டனைகள் குறித்த காலகட்டமாகும்.

இந்தக் காலக்கட்டம் **புனர்வாழ்வு கால கட்டம்** என அழைக்கப்படுகிறது.

- புனர்வாழ்வு காலகட்டமானது, உங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு நிர்ணயிக்கப்பட்ட கால அளவாகும்.
- இது எவ்வளவு காலம் என்பது, உங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனைக் காலத்தை சார்ந்ததாகும். குற்றத்தையோ அல்லது எவ்வளவு காலம் சிறையில் இருந்தீர்கள் என்பதைப் பொறுத்தல்ல.
- ஒரு தண்டனை அகற்றப்பட்டுவிட்டால், நீங்கள் வேலைக்கு விண்ணப்பிக்கும்போதோ, காப்பீடு பெறும்போதோ அல்லது சிவில் அல்ல குற்ற விசாரணைகளில் உள்ளடங்கியிருக்கும்போதோ, நீங்கள் அதைக் குறிப்பிட வேண்டிய தேவையில்லை.
- ஒரு முறை தண்டனை அகற்றப்பட்டால் அது அகற்றப்பட்டதாகவே இருக்கும். ஒருவேளை பிற்பாடு மற்ற குற்றங்களுக்காக நீங்கள் தண்டிக்கப்பட்டாலும் கூட

### 2 ½ வருடங்களுக்கும் கூடுதலான தண்டனைக் காலங்கள் ஒருபோதும் அகற்றப்பட இயலாது

இந்த அட்டவணைகள் மாறுபட்ட தண்டனைக் காலங்களுக்கான புனர்வாழ்வு கால கட்டம் எவ்வாறாக இருக்கும் என்பதை உங்களுக்குக் காட்டும். இவை நீங்கள் சிறைக்கு செல்லும் தண்டனைக் காலங்கள் அடிப்படையிலானது.

| **தண்டனைக் காலம்** | **புனர்வாழ்வு காலகட்டம் 18 வருடங்கள் மற்றும் அதற்கும் மேல்** | **புனர்வாழ்வு கால கட்டம் 18 வயதுக்கும் கீழ் உள்ளவர்கள்** |
|---|---|---|
| 2 ½ வருடங்களுக்கு மேல் | **இவை அகற்றப்பட இயலாது** | **இவை அகற்றப்பட இயலாது** |
| 6 மாதங்களுக்கும் மேல் 2½ வருடங்கள் வரை | 10 வருடங்கள் | 5 வருடங்கள் |
| 6 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவு | 7 வருடங்கள் | 3 ½ வருடங்கள் |
| அபராதங்கள், நன்னடத்தை, சமூகசேவை, கூட்டு மற்றும் தடுப்பு உத்தரவுகள் | 5 வருடங்கள் | 2 ½ வருடங்கள் |
| முழுமையாக வெளிவிடுதல் | 6 மாதங்கள் | 6 மாதங்கள் |

சில தண்டனைக்காலங்களுக்கு புனர்வாழ்வுக் காலம் மாறுபடக்கூடும்

| **தண்டனைக் காலம்** | **புனர்வாழ்வு காலகட்டம் 18 வருடங்கள் மற்றும் அதற்கும் மேல்** | **புனர்வாழ்வு கால கட்டம் 18 வயதுக்கும் கீழ் உள்ளவர்கள்** |
|---|---|---|
| நன்னடத்தை, மேற்பார்வை, பராமரிப்பு ஆணை, நிபந்தனை, வெளியேற்றம் அல்லது பைண்ட் ஓவர் | 1 வருடம் அல்லது ஆணை காலாவதியாகும் வரை (நிற்றல்) இதில் எது அதிகமோ அது | 1 வருடம் அல்லது ஆணைக் காலாவதி யாரும் வரை (நிற்றல்), இதில் எது அதிகமோ அது. |
| வருகை மைய ஆணை, மருத்துவமனை ஆணைகள் (கட்டுப்பாட்டு ஆணையுடனோ அல்லது இல்லாமலோ) | ஆணை காலாவதியான பின் 5 வருடங்கள் அல்லது 2 வருடங்கள் (எது அதிகமோ அது) | ஆணை காலாவதியான பிறகு 1 வருடம் |

## அகற்றப்பட்ட தண்டனைகளை நீங்கள் எப்போது அறிவிக்க வேண்டும்

நீங்கள் சிலகுறிப்பிட்ட பணிகளைச் செய்தால் அகற்றப்பட்ட தண்டனைகளை நீங்கள் குறிப்பிட **வேண்டும்.**

- வழக்குரைஞர்
- மருத்துவர்
- பல் மருத்துவர்
- கணக்காளர்
- தாதியர்
- மருந்தாளுநர்

**குழந்தைகள் மற்றும் 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுடன் பணிபுரிய வேண்டிய எந்த ஒரு வேலைக்கோ அல்லது தன்னார்வ பணிக்கோ நீங்கள் விண்ணப்பித்தால் நீங்கள் அகற்றப்பட்ட தண்டனைகளை அறிவிக்க வேண்டும்.**

கீழ்க்கண்ட வேலைகள் போன்றவற்றில் நீங்கள் பணிபுரிய விரும்பினால் அகற்றப்பட்ட தண்டனைகளை நீங்கள் குறிப்பிட **வேண்டும்.**

- ஆயுத முகவர்கள்
- சூதாட்ட விடுதி இயக்குநர்
- காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளில் இயக்குநர்கள் மற்றும் மேலாளர்கள்
- மருத்துவமனை மேலாளர்
- சில சிவில் சேவை வேலைகள்
- பாதுகாப்பு ஒப்பந்ததாரர்கள்

கீழ்க்கண்டவைகளுக்காக சான்றிதழ் பெற நீங்கள் விண்ணப்பித்தால் அகற்றப்பட்ட தண்டனைகளை நீங்கள் குறிப்பிட **வேண்டும்**

- ஆயுதங்கள்
- துப்பாக்கிகள்
- வெடிபொருட்கள்

நீங்கள் ஒரு வேலைக்கு விண்ணப்பித்தால் மற்றும் விண்ணப்பத்தில் **அகற்றப்படாத** தண்டனைகள் குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், நீங்கள் அவற்றை அறிவிக்க வேண்டும்.

நீங்கள் அவ்வாறு குறிப்பிடாமலிருந்து பின்பு அது கண்டறியப்பட்டால், அவற்றை ப ற்றி உங்களுக்கு பணியளித்த நிறுவனத்திடம் கூறாமல் இருந்ததற்காக வேலையில் இருந்து நீக்கப்படலாம்.

நீங்கள் வெளிநாட்டில் குடியேறுவதாக இருந்தால், தண்டனைகளை தெரிவித்தல் குறித்து அந்த நாட்டின் என்ன விதிகள் உள்ளன என்பதை நீங்கள் சோதித்தறிய வேண்டும். அந்த நாட்டின் தூதரகத்திடமிருந்து நீங்கள் இதை கேட்டு அறியலாம்.

## குற்றப்பதிவேடுகள்

அகற்றப்பட்ட மற்றும் அகற்றப்படாத அனைத்து குற்றங்களும் உங்கள் குற்றம் பதிவேட்டில் அப்படியே இருக்கும். இந்தப் பதிவேடுகள் காவல்துறை தேசிய கணிணியில் இருக்கும்.

பலவருடங்களுக்குப் பிறகு நீங்கள் காவல்துறையின் கவனத்திற்கு வரவில்லை எனில் அவை நீக்கப்படக்கூடும்.

**பலவருடங்களுக்கு நீங்கள் காவல்துறையினர் கவனத்திற்கு வரவில்லை என்றாலும்கூட, சில பதிவேடுகள் ஒருபோது நீக்கப்படமாட்டாது. இது நீங்கள் புரிந்த குற்றத்தின் தன்மையினால் ஆகும்.**

# தற்காலிக உரிமத்தின் அடிப்படையில் விடுதலை

சிறையை விட்டு குறுகிய காலத்திற்கு வெளியே செல்ல இயலுவதே தற்காலிக உரிமத்தின் அடிப்படையில் விடுதலை என்பதன் அர்த்தமாகும்.

எடுத்துக்காட்டாக, தற்காலிக உரிமத்தின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்ட காரணங்கள் போன்றவைகளுக்காக நீங்கள் விடுதலை செய்யப்படலாம்.

- ✓ பெற்றோரோ அல்லது துணைவரோ மிகவும் நோய்வாய்ப்பட்டு இருப்பதால்
- ✓ தண்டனைக்காலத்தை நீங்கள் கழித்து முடித்தபின் சமூகத்தில் நீங்கள் மீண்டும் இணைந்து வாழ உங்களுக்கு உதவுவதற்காக

தற்காலிக உரிமத்தின் அடிப்படையில் விடுதலை (Release On Temporary Licence ROTL) சுருக்கமாக ஆர் ஓ டி எல் எனப்படுகிறது.

- × அனைவருக்கும் ஆர் ஓ டி எல் கிடைக்காது.

இதைப்பற்றி மேலதிக விவரம் **சிறை சேவை ஆணை 6300ல் உள்ளது.**

அனைவருக்கும் ஆர் ஓ டி எல் கிடைக்காது. தறகாலிக உரிமத்தின் அடிப்படையில் செல்ல **இயலாத** சிறைக் கைதிகள்,

- வகைப்பிரிவு ஏ அல்லது தப்பிச் செல்லக்கூடியோர் பட்டியலில் உள்ளவர்கள்.
- தண்டனை வழங்கப்படாத அல்லது தண்டனை வழங்கப்பட்டு, ஆனால் தண்டனை விவரம் அறிவிக்கப்படாதவர்கள்.
- நாடு கடத்தல் ந டவடிக்கைக்கு ஆளாகியுள்ளவர்கள் – மற்றொரு நாட்டுக்கு தேவைப்படுபவர்கள், ஏனென்றால், அவர்கள் அங்கே குற்றம் புரிந்திருக்கலாம்.
- தண்டனையளிக்கப்பட்டவர்கள், ஆனால் மேலதிக குற்றச்சாட்டுகளுக்காக விளக்க மறியலிலோ அல்லது மற்ற குற்றங்களுக்காக தண்டனை விவரம் அறியவோ காத்திருப்பவர்கள்.
- மறுதீர்வு பகல் அல்லது இரவுப்பொழுது உரிமம்பெற இயலாத வகைப்பிரிவு பி சிறைக்கைதிகள், ஆனால் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மரணிக்கும் த றுவாயில் இருந்தால்வெளியே செல்ல அனுமதிக்கப்படலாம்.
- நீங்கள் தண்டனை அனுபவித்து வந்தால் மற்றும் கருணை ஆணைக்காக பணம் செலுத்தாமல் போனதற்காக மற்றொரு தண்டனை பெற்றிருந்தால், இந்த கூடுதல் தண்டனை காலத்தின் போது ஆர்ஓடிஎல் – க்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம், உங்கள் உண்மையான தண்டனை யின் மீது இயலாது.
- தண்டனை அனுபவிக்கும் சிறைக் கைதிகள், அவர்கள் திறந்த அல்லது பகுதி திறந்த சிறைகளில் இருந்தால் மட்டுமே வழக்கமாக அவர்கள் தற்காலிக உரிமத்தின் அடிப்படையில் விடுதலை செய்யப்படுவர்.
- மூடப்பட்ட சூழ்நிலைகளில் ஆயுள் தண்டனையை கழிக்கும் சிறைக் கைதிகள். அவர்கள் திறந்த அல்லது பகுதி திறந்த சிறைகளில் வசித்தால் மட்டுமே தற்காலிக உரிமத்தின் அடிப்படையில்

விடுதலை செய்யப்பட இயலக்கூடும். ஆனால் மருத்துவக் காரணங்களுக்காக மாற்றப்பட இயலாது.

### சிறையைவிட்டு வெளியே செல்ல நீங்கள் பாதுகாப்பானவர் என ஆளுநர் கருதினால், 4 முக்கியவகை உரிமங்கள் உள்ளன.

**சிறப்புக் காரணங்களுக்கான உரிமம்.**

இது சிலமணிநேரங்களுக்கு மற்றும் கீழ்க்குறிப்பிட்ட காரணங்களுக்கு வழங்கப்படும்.

- மரணிக்கும் த றுவாயில் உள்ள நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை சந்திப்பதற்காக
- நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் இறுதிச் சடங்கில் பங்கெடுக்க செல்வதற்காக
- திருமணம் அல்லது மதவழிபாடுகள்
- மருத்துவ சிகிச்சை – மருத்துவமனை அப்பாயிண்ட்மெண்ட் அல்லது சிகிச்சை காலம் வரை
- நீதிமன்றத்திற்கு நடுவர் மன்றத்திற்கு அல்லது விசாரணைக்கு செல்ல

**மறுதீர்வு பகல்பொழுது விடுதலை உரிமம்**

இவற்றிற்காக இது வழங்கப்படுகிறது

- விடுதலைக்கு தயாராவதற்கு உங்கள் தண்டனையின் ஒரு பகுதியாக சிறைக்கு வெளியே நீங்கள் செய்ய வேண்டிய சமூக சேவை திட்டங்கள் அல்லது பிற செயல்களில் பங்கேற்பதற்காக
- உங்கள் குடும்பத்தினருடன் தொடர்பிலிருப்பதற்காக
- வாழ்க்கை மற்றும் பணித்திறன்கள் பற்றிய கல்வி அல்லது பயிற்சி வகுப்புகளுக்காக

**மறு தீர்வு இரவுப்பொழுது விடுதலை உரிமங்கள்**

இது பகல்பொழுது விடுதலைக்குண்டான அதே போன்ற செயல்களுக்காகவும், ஆனால் நீங்கள் விடுதலையானபின் நீங்கள் வசிக்கப்போகும் இடத்தில் நீங்கள் நேரத்தைச் செலவிடவும்கூட இது வழங்கப்படுகிறது.

**குழந்தை பராமரிப்பு மறுதீர்வு உரிமம்**

சிறைக்கைதிகள் மட்டுமே 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலராக இருக்கும் குறிப்பிட்ட சிறைக்கைதிகளுக்கானது. இதை ஒவ்வொரு 2 மாதங்களுக்கு ஒரு முறை எடுத்துக் கொள்ளலாம். ஆக வருடத்திற்கு 6 முறை எடுத்துக்கொள்ளலாம்.

## பாதுகாப்பு முடிவு உரிமத்திட்டம் - ஈசிஎஸ்(End of Custody Licence Scheme -ECL)

**இது 2007-ல் தொடங்கிய தற்காலிகத் திட்டமாகும்.**

- ✓ இது, பொருத்தமான மற்றும் 4 வாரங்கள் அல்லது கூடுதலான, ஆனால் 4 வருடங்களுக்கு குறைவான தண்டனைக்காலத்தை உடைய அனைத்து சிறைக்கைதிகளுக்குமானது.
- ✓ உங்கள் இயல்பான விடுதலைத் தேதிக்கு 18 நாட்கள் வரை முன்பாக நீங்கள் விடுதலை செய்யப்படலாம் என்பதே பாதுகாப்பு முடிவு உரிமத் திட்டமாகும்.
  - × சில நபர்கள் ஈசிஎல் பெற இயலாது.

**சிறைசேவை செயற்கட்டளை 42/2007** ல் மேலதிக தகவல் உள்ளது. இதன் பிரதி சிறை நூலகத்தில் இருக்கும்.

நீங்கள் ஈசிஎல் திட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்பட்டால், உங்கள் த ண்டனைக்காலத்தில் விதிகளை நீங்கள் பின்பற்ற வேண்டும். உரிமத்தின் நிபந்தனைகளை (விதிகள் ) மீறினால் நீங்கள் சிறைக்கு திரும்ப அழைக்கப்படுவீர்கள்.

இந்த திட்டத்தின்கீழ் நீங்கள் விடுதலை செய்யப்பட்டால், நீங்கள் சிறிது பண உதவியும், பெறக்கூடும். உங்கள் உண்மையான விடுதலைத் தேதி வரை நீங்கள் சலுகைகளைக் கோர முடியாது.. எடுத்துக்காட்டாக, இந்தத் திட்டத்தின்கீழ் மார்ச் 1-ம் தேதியன்று நீங்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தால், ஆனால் உங்கள் தண்டனைக்கால முடிவு மார்ச் 18 ம் தேதியாக இருந்தால், மார்ச் 18ம் தேதிவரை நீங்கள் சலுகைகளைக் கோர முடியாது.

ஈசிஎல்-ன் கீழ் விடுதலை செய்யப்பட **இயலாத** சிறைக் கைதிகள்

- பதியப்பட்ட பாலியல் குற்றவாளிகள்.
- தீவிர வன்முறைக்காக தண்டனை அனுபவிக்கும் சிறைக்கைதிகள்
- காவலில் இருந்து முன்பு தப்பியோடிய சிறைக்கைதிகள்
- முன்பு அவர்களது தற்காலிக விடுதலை நிபந்தனைகளை மீறிய சிறைக்கைதிகள்

**ஈசிஎல்-ன் கீழ் விடுதலை செய்யப்பட இயலாத சிறைக்கைதிகள் பற்றிய மேலதிக தகவல்**

- வசிப்பதற்கான இடத்தைக் கண்டறிந்து முறைப்படுத்தாத சிறைக் கைதிகள்
- அவர்களது தண்டனைக்காலம் முடிவடைந்தவுடன் நாடு கடத்தப்பட இருக்கும் சிறைக்கைதிகள்
- மற்றொரு நாட்டிடம் ஒப்படைக்கப்பட இருக்கும் சிறைக்கைதிகள்
- மேலதிக குற்றச்சாட்டுகளுக்காக விளக்கமறியலில் இருக்கும் சிறைக் கைதிகள் அல்லது மற்ற குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனை வழங்கப்பட காத்திருக்கும் சிறைக் கைதிகள்
- வீட்டுத் தடுப்புக்காவல் அல்லது மற்ற உரிமத்திலிருந்து திரும்ப அழைக்கப்பட்ட சிறைக்கைதிகள்
- உங்கள் குற்றவாளி மேலாளர் மற்றொரு சரியான கால அட்டவணையை தயார் செய்தாலன்றி,விடுதலை செய்யப்பட்ட பின் அவர்கள் பின்பற்ற வேண்டிய சிகிச்சை திட்டத்தில் இருக்கும் சிறைக்கைதிகள்.

# விடுதலை மற்றும் கண்காணிப்பு

**விடுதலை மற்றும் கண்காணிப்புதொடர்பான பல்வேறு சுருக்க வார்த்தைகள் உள்ளன.**

- தண்டனை காலாவதித் தேதி – எஸ்ஈடி (SED – Sentence Expiry Date)
- உரிம காலாவதித் தேதி – எல்ஈடி (LED – Licence Expiry Date)
- தண்டனைக்கால மற்றும் உரிம காலாவதித் தேதி- எஸ்எல்ஈடி (SLED – Sentence and Licence Expiry Date)
- தானியங்கி நிபந்தனை விடுதலை – ஏசிஆர் (ACR – Automatic Conditional Release)
- சேர்க்கப்பட்ட கூடுதல் நாட்கள் - ஏடிஏ (ADA – Additional Days Added)
- அனைத்து நோக்க உரிமம் – ஏபி (AP – All Purpose Licence)
- வீட்டு தடுப்புக் காவல் – எச்டிசி (HDC – Home Detention Curfew)
- தானியங்கி விடுதலை தேதி – ஏஆர்டி (ARD - Automatic Release Date)
- பரோல் அல்லாத தேதி – என்பிடி (NPD – Non-Parole Date)
- நிபந்தனையுள்ள விடுதலைத் தேதி – சிஆர்டி (CRD – Conditional Release Date)

நீங்கள் விடுதலை செய்யப்படும் தேதி கண்காணிப்பின் கீழ் அல்லது கண்காணிப்பு இல்லாமல் மற்றும் கண்காணிப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது, உங்கள் தண்டனைக் காலத்தின் அளவு மற்றும் உங்களுக்கு எப்போது தண்டனை வழங்கப்பட்டது ஆகியவற்றைச் சார்ந்தது.

இது சற்று சிக்கலானதாகும்.

உங்களுக்கு கேள்விகள் ஏதேனும் இருந்தால், உங்கள் சிறை அலுவலரையோ அல்லது குற்றவாளி மேலாளரையோ நீங்கள் கேட்க வேண்டும்.

## வீட்டு தடுப்புக்காவல் – எ ச்டிசி (Home detention curfew- HDC)

3 மாதங்களிலிருந்து 4 வருடங்கள் வரை சிறையில் கழிக்கக்கூடிய தண்டனைக் காலத்தை உடைய சிறைக்கைதிகள் வீட்டுத் தடுப்புக் காவலின் கீழ் முன்கூட்டியே விடுதலை செய்யப்படலாம். இது தடமிடுதல் எனவும் அழைக்கப்படுகிறது.

அதாவது, உங்களை பரிசோதிக்கப் பயன்படுத்தப்படும் மின்னணு தடத்தை நீங்கள் அணிந்திருப்பீர்கள்.

நீங்கள் எங்கு செல்லலாம் மற்றும் எந்த நேரத்திற்கு நீங்கள் வீட்டிற்கு திரும்பவர வேண்டும் குறித்த விதிகளை நீங்கள் பின்பற்றவேண்டும்..

### எச்டிசி குறித்த மேலதிக தகவல்

வீட்டுத் தடுப்புக் காவலில் நீங்கள் விடுதலை செய்யப்பட்டால்,சிறையை விட்டு செல்லும்போது வசிப்பதற்கென ஒரு வசிப்பிடத்தை நீங்கள் கொண்டிருக்க **வேண்டும்**. நீங்கள் வசிப்பதற்கென இடம் ஏதும் இல்லையெனில், வசிப்பதற்கென ஒரு இடத்தை அளிக்க இயலுமா என **க்ளியர் ஸ்பிரிங்ஸ் தங்குமிடம் மற்றும் ஆதரவு சேவையை** நீங்கள் கேட்கலாம்.
அவர்கள் நீங்கள் வசிப்பதற்கென சிறிய வீடுகளிலோ அல்லது ஃபிளாட்களிலோ இடம் அளிக்க இயலும். இது நீங்கள் 4 மற்ற நபர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய இடமாக இருக்கும். நீங்கள் சமையல், சுத்தம் செய்தல் மற்றும் வாடகை செலுத்த வேண்டும். .
க்ளியர் ஸ்பிரிங்ஸ் வீட்டுவசதியானது நீங்கள் வீட்டுத் தடுப்புக் காவலில் இருக்கும் காலகட்டத்திற்கு மட்டுமே ஆகும்.

நீங்கள் உங்கள் தண்டனைக் காலத்தில் கால் பகுதியையோ அல்லது 30 நாட்களையோ (எது அதிகமோ, அதை) சிறையில் கழிக்க வேண்டும். நீங்கள் எச்டிசி யில் 135 நாட்களை (நாலரை மாதங்கள்) வரை இருக்கலாம்.

எச்டிசி உங்களுக்கு பொருத்தமானதாக இருக்குமா என்பதைக் கண்டறிய அலுவலர் பரிசோதிப்பார். இது நீங்கள் சிறையைவிட்டு வெளியே வந்தால் மற்றவர்களுக்கு பாதுகாப்பாக இருக்குமா என்பதை பொறுத்தது.

எச்டிசி-யில் வெளியே வர **வேண்டாம்** என்பதையும் நீங்கள் தேர்வு செய்யலாம்.

உங்களுக்கு எச்டிசி அளிக்கப்படவில்லை எனில், அதை எதிர்த்து நீங்கள் மேல்முறையீடு செய்யலாம். இதனை மேற்கொள்ள புகார் செய்யும் வழிமுறையைப் பயன்படுத்துங்கள்.

உங்களால் கட்டுப்படுத்த இயலாத காரணங்களுக்காக நீங்கள் தடுப்புக்காவலை மீறினால், நீங்கள் ஒப்புக்கொண்ட முகவரியில் உங்களால் தொடர்ந்து வசிக்க இயலாமல் போதல் போன்ற, மீண்டும் எச்டிசி-யில் வெளியே விட நீங்கள் கேட்கலாம்.

உங்கள் எச்டிசி-யை மீறியதால் நீங்கள் சிறைக்கு திரும்ப அழைக்கப்பட்டிருந்தால், எதிர்காலத்தில் எச்டிசியில் நீங்கள் விடுதலை செய்யப்படாமலிருக்கக்கூடும். இது, நீங்கள் 1991 அல்லது 2003ம் ஆண்டு கிரிமினல் ஐஸ்டிஸ் சட்டத்தின் கீழ் வருகிறீர்களா என்பதைப் பொறுத்தது. உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிடில் அலுவலருடன் பேசுங்கள்.

## எச்டிசி குறித்த மேலதிக தகவல்

நீங்கள் சிறைக்கு திரும்ப அழைக்கப்பட்டால் நீங்கள் அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம்.

சில சிறைக்கைதிகளுக்கு எச்டிசி **ஒருபோதும்** அளிக்கப்படமாட்டாது.
எடுத்துக்காட்டாக,

- பாலியல் குற்றவாளிகள் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டிய சிறைக்கைதிகள்.
- தற்போது நீடிக்கப்பட்ட தண்டனையில் உள்ள வன்முறை மற்றும் பாலியல் குற்றவாளிகள்.
- தற்காலிக உரிமத்தில் விடுதலை செய்யப்பட்ட பின் திரும்ப வராத சிறைக்கைதிகள்.
- மருத்துவமனை ஆணை, மருத்துவமனை வழிகாட்டல் அல்லது மாறுதல் வழிகாட்டலின் பேரில் சிறையில் உள்ள சிறைக்கைதிகள்.
- தடுப்புக் காவல் நிபந்தனையை பின்பற்றாததால் தண்டனை அனுபவிக்கும் சிறைக்கைதிகள்.
- எச்டிசி நிபந்தனையை பின்பற்றாததால் சிறைக்கு திரும்ப அழைக்கப்பட்ட சிறைக்கைதிகள்.
- ஐக்கிய ராச்சியத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடிய சிறைக்கைதிகள்.
- அவர்களின் தண்டனைக் காலத்தின் ' இடர்பாட்டுக்காலம்' முடியும் முன்னர் ஒரு குற்றம் புரிந்ததற்காக எந்த ஒரு காலத்திலும் சிறைக்கு திரும்ப அழைக்கப்பட்ட சிறைக் கைதிகள்.
- தண்டனை வழங்கப்படும்போது, அவர்களின் தண்டனைக்காலத்தின் பாதி 14 நாட்களுக்கும் குறைவாக உள்ள சிறைக்கைதிகள்.
- அபராதம் செலுத்தாத அல்லது நீதிமன்றம் அவர்கள் செய்ய வேண்டும் என அவர்களிடம் கூறியதை செய்யாத (நீதிமன்ற அவமதிப்பு) சிறைக்கைதிகள் .

**சிறைசேவை ஆணை 6700ல்** அதிக தகவல் உள்ளது.

## பரோல்

**நீண்டகால தண்டனைகளை அனுபவிக்கும் சிறைக் கைதிகளுக்காக பரோல் பற்றி தனியாக தகவல் உள்ளது – பொது பாதுகாப்புக்காக ஆயுள் தண்டனைகள் அல்லது தீர்மானிக்கப்படாத தண்டனைகள் போன்றவை** இந்த தகவலைப் பற்றி அறிய சிறை அலுவல ரையோ அல்லது உங்கள் குற்றவாளி மேலாளரையோ கேளுங்கள்.

- உங்கள் தண்டனைக்காலம் முடிவதற்கு முன்பே நன்னடத்தை சேவையின் கண்காணிப்பின்கீழ் சிறையிலிருந்து நீங்கள் முன்கூட்டி விடுதலை செய்யப்படுவதே பரோல் ஆகும்.
- **நீங்கள் விடுதலை செய்யப்படுவதற்கு** கூடுமானவரை முன்கூட்டியே **தேதிக்கு 6 மாதங்களுக்கு முன் நீங்கள் பரோலுக்கு விண்ணப்பிக்கலாம் (கேட்கலாம்).**
- **பெரும்பாலான முடிவுகள் பரோல் போர்டு எனப்படும் சுயாதீன குழுவால் எடுக்கப்படுகிறது.**
- **ஐக்கியராச்சியத்தை சேர்ந்த சிறைக்கைதிகள் அல்லது வெளிநாட்டு சிறைக் கைதிகள் இருவருக்கும் பரோல் குறித்த விதிகள் மாறுபட்டதாகும்.**
- **உங்கள் பரோல் குறித்த தகவல் உங்களுக்கு தேவைப்பட்டால் சிறையில் உள்ள பரோல் கிளார்க்கை நீங்கள் கேட்கலாம்.**

### ஐக்கிய ராச்சியத்தை சேர்ந்த சிறைக் கைதிகளுக்கான பரோல்

சிறையில் இருந்து உரிமத்தின் கீழ் நீங்கள் விடுதலை செய்யப்பட இயலும் ஒரு வழியே பரோல் ஆகும். 136ம் பக்கம் பார்க்கவும்.

பெரும்பாலான சிறைக்கைதிகளுக்கு **பரோல் போர்டு** எனப்படும் ஒரு குழுவினரால் பரோல் வழங்கப்படுகிறது. பரோல் போர்டு சிறைசேவை அல்லது நீதி அமைச்சகத்தின் ஒரு அங்கம் அல்ல. அவர்கள் முழுமையாக சுயாதீனமானவர்கள்.

நீங்கள் பரோலில் விடுதலை செய்யப்படாலாமா என்பதை முடிவு செய்ய, போர்டு கீழ்க்கண்டவற்றை பரிசீலிக்கும்.

- சிறை அலுவலரின் அறிக்கைகள்
- நன்னடத்தை அலுவலரின் அறிக்கைகள்
- உங்கள் உண்மையான குற்றத்தின் விவரங்கள் (நீங்கள் ஏன் சிறைக்கு அனுப்பப்பட்டீர்கள் என்பது)
- சிறையில் உங்கள் நடத்தை
- உங்களுக்கு நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து ஆதரவு இருந்தால் அல்லது நீங்கள் வசிப்பதற்கு ஒரு இடமிருந்தால்
- **உங்கள் விடுதலைக்கான திட்டம் என்ன என்பது – உங்களுக்கு வேலை கிடைத்ததா என்பது போன்றவை**

**ஐக்கிய ராச்சியத்தை சேர்ந்த சிறைக்கைதிகளுக்கான பரோல் குறித்து மேலதிக தகவல்**

உங்கள் தண்டனைக்காலத்தில் பாதியை அடைவதற்கு 6 மாதங்களுக்கு முன் நீங்கள் பரோலுக்கு விண்ணப்பிக்கலாம் (கேட்கலாம்) நீங்கள் பரோலில் விடுதலை செய்யப்படக்கூடிய தேதி உங்கள் பரோல்தகுதி தேதி பிஈடி (Parole Eligibility Date -PED).

உங்களுக்கு தேவையில்லை எனில், நீங்கள் பரோலுக்கு விண்ணப்பிக்க வேண்டியதில்லை

உங்கள் பிஈடி-க்கு **4 மாதங்களுக்கு** முன்பாக, பரோல் போர்டுக்கு அனுப்பப்பட இருக்கும் அனைத்து அறிக்கைகளையும் பார்க்க விரும்புகிறீர்களா என நீங்கள் கேட்கப்படுவீர்கள். இந்த அறிக்கைகள் உங்கள் **பரோல் டோசியர்** என அழைக்கப்படும்.

நீங்கள் ஏன் பரோல் பெற விரும்புகிறீர்கள் மற்றும் விடுதலை செய்யப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது பற்றி நீங்கள் எழுத உதவுவதற்காக நீங்கள் இந்த அறிக்கைகளை பயன்படுத்தலாம்.

உங்கள் பிஈடி-க்கு **2 மாதங்களுக்கு** முன்பாக, உங்கள் வழக்கை பரிசீலிப்பதற்காக பரோல் போர்டில் இருந்து சில நபர்கள் சந்திப்பார்கள். இந்த சிறிய குழு **பேனல் (Panel)** என அழைக்கப்படுகிறது.

அவர்கள் முடிவு செய்யும் முன் உங்கள் கருத்தைக் கூறச் சொல்லி அவர்கள் கேட்கக்கூடும்.

இந்த ச ந்திப்பு நடைபெறும் தேதி மற்றும் நேரம் உங்களுக்குக் கூறப்படும். நீங்கள் பேனல் உறுப்பினர் ஒருவரைச் சந்திப்பீர்கள்.

இவை அனைத்தும் முறைப்படுத்தப்படவேண்டும், இதன்மூலம் உங்கள் பரோல் தகுதி தேதிக்கு முன்பாக பரோல் போர்டிலிருந்து நீங்கள் முடிவைப் பெறலாம்.

நீங்கள் பரோலில் வெளிவருவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறு மற்றும் உங்களுக்கு கிடைக்கும் பலன்கள் போன்ற அம்சங்கள் குறித்து பரோல் போர்டு சிந்திக்கும்.

| என்ன | எப்போது |
|---|---|
| பரோல் கேட்பது | உங்கள் பரோல் தகுதி தேதிக்கு 6 மாதங்களுக்கு முன்பாக |
| பரோல் தகுதி தேதி – பிஈடி (Parole Eligibility Date -PED) | நீங்கள் பரோலில் விடுதலை செய்யப்படக் கூடிய முன் கூட்டிய தேதி |
| உங்கள் பரோல் டோசியரை பாருங்கள் மற்றும் உங்களுக்கு ஏன் பரோல் வேண்டும் என எழுதுங்கள் | உங்கள் பிஈடி-க்கு 4 மாதங்கள் முன்பாக |
| பரோல் போர்டிலிருந்து ஒருபேனல் சந்திக்கும் | உங்கள் பிஈடி-க்கு 2 மாதங்கள் முன்பாக |
| பேனலில் இருந்து யாராவது ஒருவரை சந்தித்தல் | 2 மாதங்களின்போது ஏதாவது ஒரு சமயத்தில் |
| பரோல் போர்டின் முடிவைப் பெறுங்கள் | உங்கள் பிஈடிக்கு போதுமான காலம் முன்பாகவே, இதன்மூலம் நீங்கள் பரோலில் செல்ல தயாராகலாம். |

## உங்கள் பரோல் குறித்து அறிதல்

உங்கள் பரோல் குறித்து பரோல் போர்டு முடிவெடுத்தவுடன், கூடிய விரைவில் உங்களுக்கும் சிறைக்கும் தெரிவிக்கும்.

இதற்கு 2 விதிவிலக்குகள் உள்ளன.

1. நீங்கள் 15 வருடங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக தண்டனை அனுபவித்தால்
2. 1 அக்டோபர் 1992க்கு முன்பாக உங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தால்

நிலைமை இதுவென்றால், நடுவண் செயலரிடம் தாங்கள் என்ன கருதுகிறோம் என பரோல் போர்டு கூற வேண்டும். பிறகு நடுவண் செயலர் உங்கள் பரோல் குறித்து முடிவு செய்வார்.

## உங்களுக்கு பரோல் மறுக்கப்பட்டால் (கொடுக்கப்படவில்லை)

உங்களது பரோலை பரோல் போர்டு ஏன் நிராகரித்தது என்ற காரணங்கள் எழுத்துப்பூர்வமாக விளக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்படும். ஒரு பிரதியை நீங்கள் காணலாம்.

நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்பதாலேயே இந்த முடிவை எதிர்த்து நீங்கள் மேல்முறையீடு **செய்ய இயலாது.**

உங்கள் விண்ணப்பம் முறையான விதத்தில் பரிசீலிக்கப்படவில்லை என நீங்கள் கருதினால், உங்கள் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்ட முறை குறித்த நீங்கள் புகார் **செய்யலாம்.**

புகார்கள் குறித்த தகவல்களை நீங்கள் **110ம் பக்கம்** காணலாம்.

எடுத்துக்காட்டாக,

- உங்கள் பரோல் கோரிக்கைக்கு ஆதரவான தகவல்கள் அனைத்தும் பரோல் போர்டிற்கு அனுப்பப்படவில்லை என கருதினால், நீங்கள் புகார் செய்யலாம்.
- பரோல் கோரிக்கைகளுக்கான நடைமுறைகள் (செயல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்) சரியாக பின்பற்றப்படவில்லை என கருதினால் நீங்கள் புகார் செய்யலாம்.

முடிவு தவறானது என நீங்கள் கருதினால் ஒரு வழக்குரைஞரிடம் நீங்கள் பேச வேண்டும்.

**மறுக்கப்பட்ட பரோல் குறித்து மேலதிக தகவல்**

உங்கள் பரோல் மறுக்கப்பட்டால், ஒவ்வொரு வருடமும் உங்கள் வழக்கு மறு ஆய்வு செய்யப்பட உங்களால் இயலக்கூடும். இது உங்கள் பரோல் அல்லாத தேதி – என்பிடி (Non-Parole Date - NPD) க்கு முன்பாக உங்கள் தண்டனைக் காலத்தில் மீதி எவ்வளவு உள்ளது என்பதைப் பொறுத்தது.

உங்களுக்கு முன்கூட்டிய அல்லது சிறப்பு மறுஆய்வு அளிக்கப்படலாம். அதாவது, உங்கள் பரோல் கோரிக்கை விரைவிலேயே மீண்டும் பரிசீலிக்கப்படலாம் என்பது இதன் அர்த்தமாகும்.

- முன்கூட்டிய அல்லது சிறப்பு மறு ஆய்வுகள் அடிக்கடி அளிக்கப்பட மாட்டாது.
- வேலைவாய்ப்பு, போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மீட்புபோன்ற வகுப்புகளில் நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பதை சோதிக்கவே அவை பயன்படுத்தப்படுகின்றன.
- உங்கள் தண்டனை முடியும் முன் உங்கள் பரோல் கோரிக்கையை பரிசீலிக்க போதுமான காலம் இல்லை எனில், உங்களுக்கு சிறப்பு மறுஆய்வு அளிக்கப்படும்.

## பரோல் மற்றும் வெளிநாட்டு சிறைக்கைதிகள்

வெளிநாட்டு சிறைக்கைதிகளுக்கு பரோலில் 2 பெரிய வித்தியாசங்கள் உள்ளன.

- நீங்கள் பரோலுக்கு தகுதியுடைவர் எனில், தானாகவே நீங்கள் அதற்கு பரிசீலிக்கப்படுவீர்கள். நீங்கள் ஒரு வாய்ப்பை பெற மாட்டீர்கள்.

- நீங்கள் வன்முறை அல்லது பாலியல் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருக்காதவரை, உங்களது பரோல் பற்றிய முடிவு சிறை ஆளுநரால் எடுக்கப்படும். இல்லையெனில், நீதி அமைச்சகம் முடிவு செய்யும்.

நீங்கள் ஒரு வெளிநாட்டு சிறைக்கைதியாக இருந்தால், முன்கூட்டிய வெளியேற்றத் திட்டத்தின் கீழ் நீங்கள் முன்கூட்டியே உங்கள் நாட்டிற்கு அனுப்பப்படுவீர்கள். 151ம் பக்கம் பார்க்கவும்

**இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மைய கண்காணிப்பு – 159ம் பக்கம் பார்க்கவும்**

உங்கள் தண்டனை 12 மாதங்களுக்கு குறைவு எனில், உங்கள் தண்டனைக்காலம் எவ்வளவு குறைவாக இருந்தாலும், விடுதலைக்குப்பின் குறைந்த பட்சம் 3 மாதங்கள் நீங்கள் கண்காணிப்பின் கீழ் இருப்பீர்கள்.

- உங்கள் நன்னடத்தை மேலாளரை நீங்கள் வழக்கமாகச் சந்திக்க செய்ய வேண்டும்.
- 3 மாதங்கள் அல்லது உங்கள் 22வது பிறந்த தினம் இதில் எது முன்கூட்டி வருகிறதோ அப்போது மேற்பார்வையானது முடிவடையும்.
- உங்கள் கண்காணிப்பு நிபந்தனைகளை நீங்கள் மீறினால் உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் அல்லது 30 நாட்கள் கூடுதலாக சிறையில் கழிக்க தண்டனை வழங்கப்படலாம்.

## வயதுவந்தோருக்கான 12 மாதங்கள் வரையான தண்டனைகள்

உங்கள் விடுதலை நிபந்தனையற்றது (Unconditional -AUR).
ஒரு குற்றவாளி மேலாளரால் நீங்கள் **கண்காணிக்கப்பட மாட்டீர்கள்**
அறிக்கை எனப்படும் தகவல் உங்களுக்கு அளிக்கப்படும். இதன் விளக்கம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும். நீங்கள் அதில் கையொப்பமிட வேண்டும்.

- **குற்றத்தை நீங்கள் 4 ஏப்ரல் 2005க்கும் முன் செய்திருந்தால், 146ம் பக்கம் தொடங்கும் பகுதியைப் படிக்கவும்.**

- **குற்றத்தை நீங்கள் 4 ஏப்ரல் 2005அன்று அல்லது அதன்பின் செய்திருந்தால், 148ம் பக்கம் கடைசிப் பகுதியைப் படிக்கவும்.**

## ➢ 4 ஏப்ரல் 2005க்கும் முன்னதான  குற்றங்கள்

முக்கிய அம்சங்கள்

| தண்டனைக் காலம் | விடுதலை வகை |
|---|---|
| 12 மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை | தானிய ங்கு நிபந்தனை விடுதலை (Automatic Conditional Release-ARC) |
| 4 வருடங்கள் மற்றும் கூடுதலாக | தண்டனையின் முடிவு அல்லது பரோல் |
| நீடிக்கப்பட்ட தண்டனை | தண்டனையின் முடிவு அல்லது பரோல், ஆனால் உரிமத்தினால் நீண்ட காலம் இருக்கக்கூடும். |

### 12 மாதங்களுக்கும் கூடுதலாக ஆனால் 4 வருடங்களுக்கு குறைவாக (4 ஏப்ரல் 2005-க்கு முன்)

- நீங்கள் உங்கள் தண்டனையில் கிட்டத்தட்ட முக்கால்வாசி காலத்தை நிறைவு செய்யும் வரை உரிமம் மற்றும் கண்காணிப்பு நீடிக்கும்.
- பாலியல் குற்றங்களுக்காக தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் அவர்களது தண்டனைக் காலம் முடியும் வரை கண்காணிக்கப்படுவார்கள்.
- விசாரணையின்போது வழங்கப்பட்ட எந்த ஒரு சேர்க்கப்பட்ட கூடுதல் நாட்களும் (Any additional days added ADAs) சேர்க்கப்படும். 89ம் பக்கம் பார்க்கவும்
- உங்கள் உரிமம் முடிவடையும் தேதி, உங்கள் உரிம காலாவதி தேதி என  அழைக்கப்படுகிறது.
- உங்கள் உரிமத்தில் கூறப்பட்டுள்ளவைகளை நீங்கள் பின்பற்றவில்லையெனில், நீங்கள் சிறைக்கு திரும்பி வரவேண்டி இருக்கும்
- தண்டனை காலாவதித் தேதிக்கு முன் நீங்கள் மற்றொரு குற்றம் செய்தால், நீதிமன்றம் உங்களை திரும்ப சிறைக்கு அனுப்பக்கூடும்.

உங்கள் விடுதலைக்கு சற்று முன்பாக உங்களுக்கு தானியங்கு நிபந்தனை விடுதலை உரிமம் வழங்கப்படும்.

இதில் உங்கள் உரிமத்தின் நிபந்தனைகள் விவரிக்கப்பட்டிருக்கும் மற்றும் உங்கள் கண்காணிப்பு அதிகாரியின் பெயர் மற்றும் முகவரியை உங்களுக்கு தெரிவிக்கும்.

நிபந்தனைகளில் கீழ்க்கண்டவைகளும் இருக்கும்.

- உங்கள் குற்றவாளி மேலாளரை வழமையாக சந்தித்தல்
- அங்கீகரிக்கப்பட்ட முகவரியில் வசித்தல்
- உங்கள் குற்றவாளி மேலாளரிடமிருந்து சந்திப்புகள்
- பிரச்சனைகளிலிருந்து விலகியிருத்தல்

உங்கள் உரிமத்தின் விதிகளை நீங்கள் மீறினால்,  நீங்கள் திரும்ப சிறைக்கு அழைக்கப்படலாம்.

நீங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டதற்கான குற்றத்தை நீங்கள் 1 ஜனவரி 1999-க்கு முன் செய்திருந்தால் மற்றும் உங்கள் உரிம விதிகளை நீங்கள் மீறினால், இது நீதிமன்றத்தில் தீர்க்கப்படும்.

நீங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டதற்கான குற்றத்தை நீங்கள் 1 ஜனவரி 1999-க்கு பின் செய்திருந்தால் மற்றும் உங்கள் உரிம விதி ஒப்பந்தத்தை மீறியிருந்தால், உங்களை திரும்ப அழைப்பதற்காக நன்னடத்தை சேவை நீதி அமைச்சகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## 4 வருடங்கள் மற்றும் கூடுதல் (4 ஏப்ரல் 2005-க்கு முன்)

- நீங்கள் உங்களது பரோல் அல்லது பரோல் அல்லாத தேதியில் விடுதலை செய்யப்படும்போது, நீங்கள் உங்கள் தண்டனையில் கிட்டதட்ட முக்கால்வாசிக் காலத்தை நிறைவு செய்யும்வரை உரிமம் மற்றும் கண்காணிப்பு நீடிக்கும்.

- சில பாலியல் குற்றவாளிகளுக்கு உரிமம் மற்றும் கண்காணிப்பு உங்களது தண்டனைக்காலம் முடியும்வரை நீடிக்கும்.

- உங்கள் தண்டனை காலாவதித் தேதி வரை நீங்கள் இடரில் இருப்பீர்கள்

## நீடிக்கப்பட்ட தண்டனைக்காலம் (4 ஏப்ரல் 2005-க்கு முன்னதான குற்றங்கள்)

நீடிக்கப்பட்ட தண்டனைக்காலம் 2 பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

- சிறையில் உள்ள காலம்
- உரிமத்தில் உள்ள காலம்

எடுத்துக்காட்டாக,

உங்கள் தண்டனை 4 வருடங்கள் என்றால், அது 2 வருடங்கள் சிறையிலும் மற்றும் 2 வருடங்கள் உரிமத்திலும் என்ற வகையில் ஆனது.

நீங்கள் 2 வருடத்தில் பாதியை சிறையில் கழிப்பீர்கள் – இது 1 வருடம். பின்னர் நீங்கள் 6 மாதங்கள் உரிமத்தில் இருக்க வேண்டும். இது இந்த அளவு சிறைவாசகத்திற்கு வழக்கமானது. மேலும், கூடுதலாக 2 வருடங்கள் உரிமத்தில் இருக்க வேண்டும். உங்கள் தண்டனைக்காலம் 4 வருடங்களில் முடிவடைகிறது.

உங்கள் தண்டனை 4 வருடங்கள் அல்லது கூடுதலாக இருந்தால், முன்கூட்டிய விடுதலையானது பரோல் போர்டினால் முடிவு செய்யப்படும். மற்றும் உங்களது தண்டனையில் பாதிக்காலத்தை நீங்கள் கழித்தபின் எந்த நேரமாகவும் இருக்கக்கூடும்.

உங்கள் உரிமத்தின் நிபந்தனைகளை நீங்கள் மீறினால், உங்களை சிறைக்கு திரும்ப அழைக்க உங்கள் குற்றவாளி மேலாளர் விண்ணப்பிக்க இயலும்

# 4 ஏப்ரல் 2005 – அன்று அல்லது அதன் பின்பான குற்றங்கள்.

## 12 மாதங்கள் அல்லது கூடுதலான ஆனால் 4 வருடங்களுக்கும் குறைவான தண்டனைகள் (4 ஏப்ரல் 2005 அன்று அல்லது அதற்கு பின்னான குற்றங்களுக்கானது)

நீங்கள் அனைத்து நோக்க உரிமத்தின் அடிப்படையில் விடுதலை செய்யப்படுவீர்கள். உங்கள் தண்டனை முடியும் வரை உரிமத்திலோ அல்லது கண்காணிப்பின் கீழே (எஸ்எல்ஈடி) நீங்கள் இருப்பீர்கள்.

நீங்கள் விடுதலை செய்யப்படுவதற்கு சற்று முன் உங்களுக்கு அனைத்து நோக்க உரிமம் அளிக்கப்படும். இதில் உங்கள் உரிமத்தின் நிபந்தனைகள் விவரிக்கப்பட்டிருக்கும். மேலும் உங்கள் கண்காணிப்பு அதிகாரியின் பெயர் மற்றும் முகவரியை உங்களுக்குத் தெரிவிக்கும்.

12 மாதங்களுக்கு மேல் 4 வருடங்களுக்கு உட்பட்ட தண்டனைக் காலத்திற்கான நிபந்தனைகள்

- உங்களுடைய குற்றவாளி மேலாளரை வழக்கமாகச் சந்தித்தல்
- அங்கீகரிக்கப்பட்ட ஒ ரு முகவரியில் வசித்தல்
- உங்கள் குற்றவாளி மேலாளரிடமிருந்து சந்திப்புகள்
- பிரச்சனைகளிலிருந்து விலகியிருத்தல்

நீங்கள் உங்களுடைய உரிமத்தை மீறினால் உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம். அல்லது சிறைக்குத் திரும்ப அழைக்கப்படலாம்.

### நீடிக்கப்பட்ட தண்டனைக் காலம் (4 ஏப்ரல் 2005 அல்லது அதன் பின்னரான குற்றங்கள்)

நீடிக்கப்பட்ட தண்டனைக் காலம் 2 பகுதிகளை கொண்டிருக்கிறது.

- சிறையில் உள்ள காலம்
- உரிமத்தில் உள்ள காலம்

எடுத்துக்காட்டாக,

உங்கள் தண்டனைக் காலம் 8 வருடங்கள் அது 3 வருடங்கள் சிறையிலும் மற்றும் 5 வருடங்கள் உரிமத்திலும் என்ற வகையில் ஆனது. நீங்கள் சிறையில் இருக்கும் காலத்தில் நடுவில் (1 ½ வருடங்கள்) பரோல் போர்டு நீங்கள் விடுதலை செய்யப்படலாமா என்பதைத் தீர்மானிக்கும்.

நீங்கள் விடுதலை செய்யப்படவில்லை எனில், நீங்கள் சிறையில் இருக்க வேண்டும் என நீதிமன்றம் கூறிய காலம் முடியும் வரை நீங்கள் சிறையில் இருக்க வேண்டும்.

நீங்கள் விடுதலை செய்யப்படும்போது, மீதியுள்ள தண்டனைக்காலம் முழுவதும் நீங்கள் உரிமத்தில் இருப்பீர்கள்.

## திரும்ப அழைத்தல் அல்லது உரிமம் ரத்து செய்யப்படுதல்

நீங்கள் சிறைக்குத் திரும்ப அழைக்கப்பட்டால் பிரதிநிதித்துவ தகவல் பொதி எனப்படும்ஒரு தகவல் பொதி உங்களுக்கு வழங்கப்படும். இது சிறைக்கு திரும்ப அழைக்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய உங்களுக்கு உதவுவதற்காகும்.

பரோல் போர்டு சிறைக்குத் திரும்ப அழைக்கப்பட்டதைப் பார்வையிடும். நீங்கள் சிறைக்குத் திரும்ப அழைக்கப்பட்டதிலிருந்து 28 நாட்களுக்குள் உங்கள் பிரச்சனையைப் பார்வையிடுவார்கள். நீங்கள் சிறைக்குத் திரும்ப அழைக்கப்பட்டது சரியா இல்லையா எனப் பரோல் போர்டு முடிவு செய்யும்.

நீங்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், விரைவாகச் செய்யவும். நீங்கள் பரோல் போர்டிற்கு எழுதலாம். நீங்கள் அவர்களிடம் சென்று பேசவும் கேட்டுக்கொள்ளப்படலாம்.

திரும்ப அழைக்கப்படுதல் குறித்த மேலதிக தகவல்

நீங்கள் நிபந்தனைகளின்பேரில் அல்லது நீங்கள் என்ன செய்ய வேண்டும் எனக்கூறும் உரிமத்தின்பேரில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, விதிகளை நீங்கள் பின்பற்றாவிட்டால் நீங்கள் சிறைக்குத் திரும்ப அழைக்கப்படக்கூடும். இதற்கு நீங்கள் மீண்டும் குற்றம் புரிவீர்கள் அல்லது வேறு சில விதிகளை மீறுவீர்கள் என்பது காரணமாக இருக்கக்கூடும். இது உரிமத்தை மீறுதல் எனவும், அழைக்கப்படும்.

உங்களுடைய நிபந்தனைகள் அல்லது உரிமத்தை நீங்கள் பின்பற்றவில்லை எனில், பின்வருவனவை நடக்கும்

- உங்களுக்கு எவ்வகையான உரிமம் வழங்கப்பட்டிருந்தாலும், அது உடனடியாக ரத்து செய்யப்படும்.
- காவல்துறை (உள்ளூர் மற்றும் தேசிய) மற்றும் நன்னடத்தைச் சேவை மற்றும் நீங்கள் கடைசியாக இருந்த சிறைக்கும் தெரிவிக்கப்படும்.
- நீங்கள் கைது செய்யப்பட்டு அருகிலுள்ள சிறைக்கு அனுப்பப்படுவீர்கள்
- நீங்கள் வைக்கப்பட்டுள்ள சிறை மற்றும் நன்னடத்தைச் சேவை, நீங்கள் சிறைக்குத் திரும்பியது குறித்து தலைமையிடத்தில் உள்ளவர்களுக்குத் தெரிவிப்பார்கள்.
- உங்களுக்கு பிரதிநிதித்துவ தகவல்பொதி அனுப்பப்பட்டு உங்களை சிறைக்குத் திரும்ப அழைக்கப்பட்ட முடிவிற்கு எதிராக மேல்முறையீடு செய்ய விரும்புகிறீர்களா எனக் கேட்கப்படும். .
- உங்களுடைய மேல்முறையீடு இருந்தாலும், இல்லாவிடினும், பரோல் போர்டுஉங்களுடைய வழக்கை 28 நாட்களுக்குள் பார்வையிடும். நீங்கள் திரும்ப அழைக்கப்பட்ட முடிவை அவர்கள் நிராகரிப்பார்கள் அல்லது ஏற்றுக்கொள்வார்கள். உங்களை மீண்டும் விடுதலை செய்ய ஒரு தேதியைக் குறிப்பிடுவார்கள் அல்லது நீங்கள் திரும்ப அழைக்கப்பட்டது மீண்டும் மறுபார்வை செய்யப்பட ஒரு தேதியைக் குறிப்பிடுவார்கள்.
- இது குறித்து உங்களுக்கு உத வி தேவைப்பட்டால் நீங்கள் ஒரு வழக்குரைஞரிடம் பேசலாம்.

## வெளிநாட்டு சிறைக்கைதிகள்

### வெளிநாட்டு சிறைக்கைதிகளுக்கான முன்கூட்டிய வெளியேற்றத் திட்டம் – இஆர்எஸ் (Early Removal Scheme – ERS)

இந்தத் திட்டம் வெளிநாட்டுச் சிறைக்கைதிகளை அவர்களின் தண்டனைக்காலம் முடியும் முன்னரே ஐக்கிய ராச்சியத்தை விட்டு வெளியேற அனுமதிக்கிறது.

எல்லைகளை மற்றும் குடிவரவு முகமைக்கு உங்களைப் பற்றிய தகவல் அனுப்பப்படும்.நீங்கள் ஐக்கிய ராச்சியத்தை விட்டுவெளியேறப் போகிறீர்களா என்பதை எல்லைகள் மற்றும் குடிவரவு முகமை உங்களுக்கு கூறும் மற்றும் உங்களுடைய சொந்த நாட்டிற்குப் பயணத்தை ஏற்பாடு செய்யும். நீங்கள் திரும்பிச் செல்லும் முன்னர் ஐக்கிய ராச்சியத்தில் குறைந்தபட்ச காலத்தைச் சிறையில் கழிப்பீர்கள் இஆர்எஸ்-க்கான அதிகபட்ச கால அளவு 270 நாட்கள் வரை ஆகும். சில கைதிகளுக்கு இஆர்எஸ் அனுமதிக்கப்படாது. எடுத்துக்காட்டாக,

- பாலியல் குற்றவாளிகள் பதிவேட்டில் கையெழுத்திட வேண்டிய கைதிகள்
- நீடிக்கப்பட்ட தண்டனைக் காலத்தில் தற்போதுள்ள வன்முறை மற்றும் பாலியல் குற்றவாளிகள்
- தற்காலிக உரிமத்தில் விடுவிக்கப்பட்ட பிறகு திரும்பாத காரணத்திற்காகத் தண்டனை அனுபவித்துவரும் சிறை கைதிகள்
- மருத்துவமனை ஆணை, மருத்துவமனை வழிகாட்டல் அல்லது மாறுதல் வழிகாட்டலின் பேரில் சிறையில் உள்ள சிறைக்கைதிகள்
- தடுப்புக் காவல் ஆணையைப் பின்பற்றாதற்காகத் தண்டனை அனுபவித்து வரும் சிறைக் கைதிகள்
- எச்டிசி தடுப்புக் காவல் நிபந்தனைகளைப் பின்பற்றாமைக்காக ஏதாவது ஒரு ச மயத்தில் சிறைக்குத் திரும்ப அழைக்கப்பட்ட சிறைக் கைதிகள்
- தங்களுடைய தற்போதைய தண்டனைகக் காலத்தில் எச்டிசியில் விடுவிக்கப்பட்ட அல்லது முன்கூட்டியே கருணை விடுதலையளிக்கப்பட்டு, சிறைக்க திரும்ப அழைக்கப்பட்ட சிறைக் கைதிகள்
- அவர்களின் தண்டனைக்காலத்தின் “ இடர்காலம்” முடியும் முன்னர் ஒரு குற்றம் புரிந்ததற்காக ஏதாவது ஒரு காலத்தில் சிறைக்குத் திரும்ப அழைக்கப்பட்ட சிறைக் கைதிகள்
- தண்டனை வழங்கப்படும்போது, அவர்களின் தண்டனைக் காலத்தின் பாதியில் 14 நாட்களுக்கும் குறைவாக உள்ள சிறைக் கைதிகள்
- அபராதம் செலுத்தாத அல்லது நீதிமன்றம் அவர்களைச் செய்யச் சொன்னதைச் செய்யாத சிறைக் கைதிகள் (நீதிமன்ற அவமதிப்பு)

இஆர்எஸ்-ன் கீழ் நீங்கள் வெளியேற்றப்படவில்லை எனில், நீங்கள் உங்கள் தண்டனைக்காலத்தை தொடர்வீர்கள்.

## நாடு கடத்தல்

உங்கள் தண்டனைக்காலத்தின் இறுதியில் நீங்கள் நாடு கடத்தப்பட உள்ளீர்கள் என்பதை எல்லைகள் மற்றும் குடிவரவு முகமை உங்களுக்குத் தெரிவிக்கும்

அவர்கள் சிறைக்கு குடிவரவுத் தடுப்புக்காவல் ஆணை ஒன்றை வழங்குவார்கள் (அனுப்புவார்கள்)

உங்கள் தண்டனைக்காலம் முடிந்தபிறகு நீங்கள் சிறையிலேயே இருப்பீர்கள் அல்லது ஐக்கிய ராச்சியத்திலிருந்து நாடு க டத்தப்படும் (வெளியேற்றப்படும்) வரை குடிவரவுத் தடுப்புக்காவல் மையத்திற்கு அனுப்பப்படுவீர்கள்.

நீங்கள் நாடுகடத்தப்பட விரும்பவில்லை எனில், நீங்கள் மேல்முறையீடு செய்யலாமா என்பதைக் கண்டறிய ஒரு வழக்குரைஞரிடம் ஆலோசிக்கத் தேவைப்படும்.

மேலதிக தகவல்களை நீங்கள் **சிறை சேவை ஆணை 4630-ல்** காணலாம்.

## திருப்பி அனுப்புதல்

ஐக்கிய ராச்சியம் சில நாடுகளுடன் பரிமாற்ற ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. சில கைதிகள் தங்கள் சொந்த நாட்டில் உள்ள சிறைகளுக்குத் திரும்பலாம் என்பது இதன் அர்த்தம்.

கீழ்வரும் சந்தர்ப்பங்களில் நீங்கள் திருப்பி அனுப்பப்படுவீர்கள்.

- நீங்கள் போக விரும்பும் நாட்டைச் சார்ந்தவராக நீங்கள் இருந்தால்
- உங்கள் தண்டனைக் காலம் இறுதியாக இருந்து, மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இல்லாமல் இருந்தால்
- நீங்கள் செய்த குற்றமானது, மற்றொரு நாட்டிலும் சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டிய குற்றமாக இருந்தால்
- நீங்கள் விண்ணப்பிக்கும் நேரத்தில் நீங்கள் விடுதலையளிக்கப்படும் முன்னர், உங்கள் தண்டனைக்காலத்தில் குறைந்தது 6 மாதங்களாவது நீங்கள் அனுபவிக்க மீதியிருக்க வேண்டும்.

உங்கள் நாட்டுடன் ஐக்கிய ராச்சியத்திற்குப் திருப்பி அனுப்புதல் ஒப்பந்தம் உள்ளதா என சிறை அலுவலர்கள் சரிபார்க்கலாம்.

நீங்கள் திருப்பி அனுப்பப்பட இயலுமா என்பதைக் காணும் செயல்முறையைத் தொடங்க நீங்கள் சிறையின் கோரிக்கை / புகார் நடைமுறைகளைப் பயன்படுத்தத் தேவைப்படும்.

திரும்ப அனுப்பப்படுவதற்கு ஒரு அதிகாரப்பூர்வ கோரிக்கையை ஐக்கிய ராச்சியம் மற்றும் உங்கள் நாடு மேற்கொள்ள வேண்டும் .

உங்கள் நாட்டுத் தூதரகத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்களை உங்களுக்காக ஒரு விண்ணப்பத்தை அனுப்புமாறும் நீங்கள் கேட்டுக்கொள்ளலாம்.

தூதரகங்களின் ஒரு பட்டியலை **சிறைச் சேவை ஆணை 4630ல்** நீங்கள் காணலாம்.

திருப்பி அனுப்பப்படுவதற்கான கோரிக்கைகளைப் பற்றித் தீர்மானிக்க நீண்டகாலம் எடுத்துக்கொள்ளக்கூடும். சிலசமயங்களில் 2 வருடங்கள் வரை.

கீழ்வரும் சூழ்நிலைகளில் மட்டும் திருப்பி அனுப்பப்படுவதற்கான கோரிக்கைகள் ஐக்கிய ராச்சியம் வழக்கமாக மறுக்கும்.

- நீங்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டால் குறைவான காலத்தைச் சிறையில் கழித்தால்
- அபராதம் செலுத்த வேண்டி அல்லது பிற நீதிமன்ற உத்தரவு நிலுவையில் இருந்தால்

நீங்கள் திருப்பி அனுப்பப்பட்டால், ஐக்கிய ராச்சியத்தில் உங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையில் மீதிக்காலத்தை நீங்கள் கட்டாயம் அனுபவிக்க வேண்டும்.

நீங்கள் போகும் நாட்டின் தண்டனை மறுஆய்வு, விடுதலை மற்றும் மேற்பார்வை சட்டங்களை நீங்கள் பின்பற்றுவீர்கள்.

உங்கள் திருப்பி அனுப்புதல் ஒப்பந்தத்தில் நீங்கள் கையெழுத்திடும் முன்னர் ஏதாவது மாற்றங்கள் குறித்து உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

சிறைநூலகத்தில் உள்ள **சிறைக்கைதிகள் திருப்பி அனுப்புதல் சட்டம் 1984 வெளிநாட்டுக் கைதிகளுக்கான தகவல்கள்**, புத்தகத்திலிருந்து மேலதிக தகவல்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

தகவலானது டேனிஷ், டச்சு, ஆங்கிலம், பின்னிஷ், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், இத்தாலிய, போர்த்துக்கீசிய, ஸ்பானிஷ், ஸ்வீடன், மற்றும் துருக்கிய மொழிகளில் இருக்கும்

## ஸ்கார்ட்லாந்து, வடஅயர்லாந்து, சேனல்தீவுகள், அல்லது மேன் தீவு ஆகிய இடங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்றுதல்.

இங்கிலாந்து அல்லது வேல்ஸிலிருந்து மேற்கண்ட நாடுகளில் உள்ள சிறைகளுக்கு மாற்றுவது ‘ **மற்றொரு நீதிமன்ற நியாயதிக்கத்திற்கு மாற்றுவது**’ எனப்படும்

உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள் சந்திக்கும் வகையில் நிரந்தரமான மாற்றத்தை நீங்கள் கோரலாம். மாற்றத்திற்கு இரண்டு நாடுகளில் உள்ள சிறை சேவைகளும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

2 வகையான மாறுதல்கள் உள்ளன.

- கட்டுப்படுத்தப்படாத – உங்கள் தண்டனை, நீங்கள் செல்லும் பகுதியால் முழுமையாக நிர்வகிக்கப்படும். மேலும் நீங்கள் விடுதலை, விடுதலைக்குப் பின்னான கண்காணிப்பிற்கு, அவர்களின் விதிகளைப் பின்பற்றுவீர்கள்.
- கட்டுப்படுத்தப்பட்ட - இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உங்கள் மாறுதலுக்கான நிபந்தனைகளை இறுதி செய்யும். இவை விடுதலை. கண்காணிப்பு அல்லது திரும்ப அழைத்தல் தொடர்பாக இருக்கக்கூடும்.

மாறுதல்கள் குறித்த மேலதிக தகவல்கள்

மாறுதல்கள் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட அதிக வாய்ப்புக்களைப் பெற நீங்கள்

- உங்கள் விடுதலை நாளுக்கு முன்னர் அனுபவிக்கக் குறைந்தது 6 மாதங்கள் மீதியிருக்க வேண்டும்.
- தண்டனை அல்லது தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.
- நீதிமன்றத்திற்குத் திரும்பச் செல்லக்கூடாது.

மாறுதலுக்கான உங்கள் விண்ணப்பத்தின் பகுதியாகக் கருத்தில் கொள்ளப்படும் விஷயங்களாவன

- நீங்கள் எதனால் மாறுதல் வேண்டுகிறீர்கள்
- நீங்கள் திரும்பச் செல்ல விரும்பும் நாட்டில் பெரும்பாலான காலம் வசித்து வருகிறீர்களா.
- உங்கள் நெருங்கிய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அங்கே உள்ளார்களா
- உங்கள் விடுதலைக்குப் பிறகு அங்கே வசிப்பதற்கான உங்கள் திட்டத்தைக் கூறியுள்ளீர்களா.

உங்கள் உரிமம் ஸ்காட்லாந்து, வடஅயர்லாந்து, சேனல் தீவுகள் அல்லது மேன் தீவில் கண்காணிக்கப்படவும் நீங்கள் கோரலாம். இதை எவ்வாறு செய்வது என உங்கள் குற்றவாளி மேலாளரிடம் கேட்கவும்.

# இளம் குற்றவாளிகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மையங்கள்

இந்தப் பகுதியானது 18 முதல் 21 வயதுக்குட்பட்ட இளம் குற்றவாளிகளுக்கானது. இது இளம்குற்றவாளிகள் சீர்த்திருத்த மையங்கள் பிற சிறைகளிலிருந்து மாறுபட்டுள்ள சில வகைகள் பற்றிக் கூறுகிறது.

- இந்தப் புத்தகத்தின் மீதியுள்ள பகுதியில் கூறப்பட்டுள்ள பெரும்பான்மையானவை பற்றியும். நீங்கள் அறிந்துகொள்ளத் தேவைப்படும்.
- இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மையங்கள் வழக்கமாக ஒய்ஓஐ எனச் சுருக்கமாக அழைக்கப்படும்.

நீங்கள் ஒய்ஓஐ-ல் இருக்கும்போது **தனி அதிகாரி** என அழைக்கப்படும் அலுவலர் ஒருவர் உங்களுக்கு உதவ அங்கு இருப்பார். உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் அல்லது ஏதாவது உதவி தேவைப்பட்டால் அவர்களை அணுகவும்.

## உங்கள் தண்டனைக் காலத்தை எங்கே கழிப்பீர்கள்

- உங்கள் தண்டனைக் காலத்தை நீங்கள் இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்த மையத்தில் – **ஒய்ஓஐ** (Young Offender Institution – YOI) கழிப்பீர்கள். உங்கள் ஒய்ஓஐ தனித்து இயங்கலாம் அல்லது பெரியவர்களுக்கான சிறையின் ஒரு பகுதியாக இருக்கலாம்.
- நீங்கள் விளக்கமறியலில் இருந்தால் உங்கள் வழக்கு விசாரணை முடிவின் வரை நீங்கள் ஒய்ஓஐ விளக்கமறியல் மையம் அல்லது பெரியவர்களுக்கான உள்ளூர் சிறையில் இருக்கலாம்.

## நீங்கள் தண்டனைக்காலத்தை எங்கே கழிப்பீர்கள் என்பதை முடிவு செய்வது யார்?

**உங்களுக்கு ஏதாவது வகை ஆயுள் தண்டனை இருந்தால்**

(மேன்மை தாங்கிய அரசியின் விருப்பத்திற்கேற்ப ஆயுள் சிறை, ஆயுள் தடுப்புக் காவல்)

- உங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட பிறகு நீங்கள் முதலில் அனுப்பப்பட்ட ஒய்ஓஐ-ல் உள்ள அலுவலர் உங்களைப் பற்றிய பல அறிக்கைகளை நிறைவு செய்ய வேண்டும்.
- அவை நிறைவடைந்த பின் ‘ ஆயுள் குற்றவாளிகள் மையம்’ என்றழைக்கப்படும் இடத்திற்கு நீங்கள் செல்லும் இடம் குறித்த இறுதி முடிவுக்காகக் காத்திருப்பதற்காக அனுப்பப்படுவீர்கள். உங்கள் தண்டனைக் காலத்தைக் க ழிக்க இறுதியாக எங்கே அனுப்பப்படுவீர்கள் என்பதைத் தீர்மானிப்பது. பின்னர் தலைமை அலுவலகத்தில் உள்ள அலுவலரின் பணி ஆகும்.

## தடுப்புக் காவல் தண்டனை எனப்படும் தண்டனைகளுக்கு

- நீங்கள் சிறை வைக்கப்பட்டுள்ள உள்ளுர் சிறை அல்லது விளக்க மறியல் மையம் நீங்கள் எந்த ஒய்ஓஐ-க்குச் செல்வீர்கள் என்பதைத் தீர்மானிக்கும்.

## நீங்கள் ஒய்ஓஐ-க்கு  முதலில் செல்லும்போது என்ன நிகழும்

நீங்கள் ஒய்ஓஐ-க்கு சென்ற முதல் சில நாட்களுக்குப் பிறகு **உட்சேர்த்தல்** எனப்படும் ஒரு நிகழ்வு இருக்கும். அப்பொழுது

- சிறை அலுவலர்களிடம் நீங்கள் சந்தேகங்கள் கேட்கலாம் அல்லது நீங்கள் கவலைப்படும் எது குறித்தும் அவர்களிடம் ஆலோசனை செய்யலாம்.
- நீங்கள் ஒய்ஓஐ-ல் இருக்கும்போது என்ன செய்யலாம் என்பது குறித்தும் நீங்களும் சிறை அலுவலரும் கலந்தாலோசிக்கலாம்.

## உங்கள் தண்டனைக்காலத் திட்டம் (உங்கள் தண்டனைக்காலம் 4 வாரங்கள் அல்லது அதற்கு அதிகமாக இருந்தால்)

- **தண்டனைக்காலத் திட்டம்** எனப்படும் திட்டம் ஒன்றை உருவாக்கச் சிறை அலுவலர் உங்களுடன் இணைந்து பணியாற்றுவார்.
- இந்தத் திட்டமானது, நீங்கள் ஒய்ஓஏ-வில் இருக்கும்போது நீங்கள் மேற்கொள்வதாக நீங்களும், சிறை அலுவலரும் ஒப்புக்கொண்டவை குறித்துக்கூறும். உதாரணத்திற்கு இது உங்கள் கல்வி மற்றும் நீங்கள் செய்யப்போகின்ற வேலை குறித்துக்கூறும்.
- ஒய்ஓஐ-வில் 3 மாதங்களுக்கும் குறைவான காலம் இருந்தால், நீங்கள் வெளியேறிய பிறகு வாழ்க்கைக்குத் தயார் ஆக  நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை திட்டம் கூறும்.
- உங்கள் தண்டனைக் கால திட்டம் வழக்கமாக நீங்கள் ஒய்ஓ-யை விட்டு வெளியேறிய பிறகு குறைந்தபட்சம் 3 மாதங்களுக்குத் தொடரும். ஏனென்றால், நன்னடத்தைச் சேவையிலிருந்து யாராவது (வழக்கமாக உங்கள் குற்றவாளிகள் மேலாளர்) நீங்கள் ஒய்ஓஐ-விட்டு வெளியேறிய பிறகு நீங்கள் எவ்வாறு நடந்துகொள்கிறீர்கள் என்பதைக் காண உங்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள் என்பதால்,
- உங்கள் தண்டனைக்காலத் திட்டத்தில் உள்ள அனைத்துச் செயல்களையும் செய்ய **குற்றவாளிகள் மேலாளர் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பாளர்கள்** எனப்படும் **நபர்கள்** உங்களுக்கு உதவுவார்கள். குற்றவாளிகள் மேலாளர் எனப்படுபவர் சிறைக்கு வெளியில் உள்ள நன்னடத்தைச் சேவையிலிருந்து யாராவது ஒருவர் ஆவார்.  குற்றவாளிகள் கண்காணிப்பாளர் எனப்படுபவர் சிறைக்குள் இருந்து யாரவாது ஒருவர் ஆவர். இது குறித்து உங்கள் தனி அதிகாரியும் உதவுவார்.

## ஒய்ஓஐ-ல் இருக்கும்போது நீங்கள் செய்யக்கூடிய செயல்கள்

### கல்வி

- நீங்கள் ஒய்ஓஐ-ல் இருக்கும்போது புதியவற்றைக் கற்றுக்கொள்ள உங்களுக்கு வாய்ப்பு உண்டு.
- அனைத்து ஒய்ஓஐ-விலும் புதியவற்றைக் கற்றுக்கொள்ளும் வகுப்புக்கள் உண்டு. உதாரணத்திற்கு படித்தல், எழுதுதல் மற்றும் தேவைப்பட்டால் எண்களைப் பயன்படுத்தல் போன்றவை குறித்து உதவி பெறலாம்.
- பெரும்பான்மையான வகுப்புக்கள் பகல் நேரத்திலேயே இருக்கும். ஆனால் சில வகுப்புக்கள் மாலை நேரங்களிலும் இருக்கலாம்.

### பயிற்சி

- நீங்கள் பெறக்கூடிய எராளமான பயிற்சிகள் உள்ளன. நீங்கள் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள அல்லது பணியைப் பெற பயிற்சிகள் உங்களுக்கு உதவும்.
- நீங்கள் சில தகுதிகளைப் பெறவும், பயிற்சிகள் உங்களுக்கு உதவும். தகுதிகள் எனப்படுவது நீங்கள் என்விக்யூ (NVQs) போன்ற தேர்வுகளில் தேர்ச்சியடையும்போது கிடைப்பவை.
- நீங்கள் உள்ளூர் சமூகத்தில் தன்னார்வலராகவும் பணிபுரிய இயலக்கூடும். ஆனால் அவ்வாறு செய்வது பாதுகாப்பானது எனச் சிறை ஊழியர் கருதினால் மட்டுமே

### உடற்கல்வி (விளையாட்டு அல்லது உடற்பயிற்சிக் கூடம் போன்றவை)

- வாரத்திற்குக் குறைந்தது 2 மணி நேரங்களுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு போன்ற செயல்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.
- பகலில், மாலை நேரங்களில் அல்லது வார இறுதியில் நீங்கள் இதை மேற்கொள்ளலாம்.
- இது சிறைக்கட்டிடத்திற்கு உள்ளே அல்லது வெளியே நடக்கலாம். ஒவ்வொரு நாளும் திறந்த வெளியில் சிறிது நேரத்தைச் செலவிட உங்களால் இயலும்.
- உங்களுக்கு ஏதாவது காயம் இருந்தால், அல்லது சிறப்பு வகை உடற்பயிற்சி தேவைப்பட்டால் அது குறித்து உதவி பெற உங்களால் இயலும்.

## ஓ ய்வு நேரம் (சிலசமயங்களில் கூட்டுச் செயல்பாடு எனப்படும்)

- பெரும்பாலான ஒய்ஓஐ-க்களில் பிற கைதிகளுடன் நேரம் செலவிடுதல், விளையாட்டு அல்லது தொலைக்காட்சி பார்த்தல் போன்ற செயல்களுக்காக தினசரி குறைந்தது 1 மணி நேரம் உங்களுக்குக் கிடைக்கும்.

## மதநம்பிக்கை

- உங்கள் ஒய்ஓஐ-ல் ஒவ்வொரு வாரமும் நீங்கள் மதச்சேவைக்குச் செல்லாம்.
- பல்வேறு மதங்களுக்கான **மதச்சேவைகள்** இருக்க வேண்டும். **78ம் பக்கம் பார்க்கவும்.**

## புகைப்பிடித்தல்

- 18 வயதிற்கு குறைந்த வயதினருக்கான பகுதியில் நீங்கள் புகைப்பிடிக்கக் **கூடாது**
- 18-20 வயதுக்குட்பட்ட மக்களுக்கான ஒய்ஓஐ-ன் சில பகுதிகளில் நீங்கள் புகைப்பிடிக்க அனுமதிக்கப்படலாம். அவை வெளிப்பகுதியிலும், சிலசமயங்களில் உங்கள் அறைக்குள்ளும் இருக்கலாம்.

## ஒய்ஓஐ-க்குப் பிறகு வரும் வாழ்க்கைக்குத் தயாராதல்

- நீங்கள் ஒய்ஓஐ-விட்டு வெளியேறிய பிறகு வாழ்க்கைக்குத் தயாராக சிறை அலுவலரிடமிருந்து உதவி பெறுவீர்கள்.
- உங்கள் குற்றவாளிகள் மேலாளரைச் சந்தித்தல், நீங்கள் வசிக்கும் இடம், பணி, உடல்நலம், மருந்துகள், பணம் மற்றும் உங்கள் குடும்பம் குறித்து அவர்கள் உங்களுடன் உரையாடுவார்கள்.

## நீங்கள் வெளியேறிய பிறகு என்ன நிகழும்

நீங்கள் ஒய்ஓஐ-ஐ விட்டு வெளியேறினாலும், வெளியேறிய பிறகு மூன்று மாதங்கள் அல்லது உங்களது 22-வது பிறந்தநாள் வரை இவற்றில் எது முன்கூட்டி வருமோ அதுவரை நீங்கள் சிலவிதிகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும். நீங்கள் ஒரு ஒ ய்ஓஐ-ல் அதிகக் காலம் செலவிட்டால் அது மேலும் நீடிக்கும்.

இது **கண்காணிப்பில்** இருப்பது என்றழைக்கப்படும். நன்னடத்தைச் சேவையிலிருந்து யாராவது ஒருவர், வழக்கமாக உங்கள் குற்றவாளிகள் மேலாளர், நீங்கள் ஒய்ஓஐ-யை விட்டு வெளியேறிய

பிறகு எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதைக் காண உங்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

- கீழ்வரும் நிலைகளைத் தவிர்த்து நீங்கள் கண்காணிப்பில் இருப்பீர்கள்.
    - அபராதம் செலுத்தாதற்காக அல்லது நீங்கள் செய்ய வேண்டும் என நீதிமன்றம் கூறியதைச் செய்யாததற்காக (இதுநீதிமன்ற அவமதிப்பு எனப்படும்)
    - நீங்கள் ஒய்ஓஐ-யை விட்டு வெளியேறும்போது உங்களுக்கு 22 வயது ஆகியிருந்தால்
- நீங்கள் ஒய்ஓஐ-யை விட்டு வெளியேறிய பிறகு குறைந்தது 3 மாதங்களுக்கு நன்னடத்தைச் சேவையிலிருந்து யாராவது ஒருவர் உங்களைக் கண்காணிப்பார்கள்.
- **உரிமம்** எனப்படும் ஆவணம் ஒன்று நீங்கள் ஒய்ஓஐ-யை விட்டு வெளியேறும்போது உங்களுக்கு வழங்கப்படும். அந்த உரிமம் நீங்கள் வெளியேறிய பிறகு கடைபிடிக்கவேண்டிய விதிகளை உங்களுக்குக் கூறும்.
- உரிமம் கூறுவதை நீங்கள் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் எனச் சட்டம் கூறுகிறது. உரிமத்தில் உள்ளவை உங்களுக்குப் புரியவில்லை எனில் நீங்கள் கண்டிப்பாகக் கூறவேண்டும்.
- உரிமத்தின் விதிகளை நீங்கள் மீறினால் நீங்கள் அபராதம் செலுத்த நேரிடும் அல்லது ஒய்ஓஐ-க்குத் திரும்பச் செல்ல நேரிடும்.
- நீங்கள் **பரோலில்** விடுவிக்கப்பட்டிருந்தால், நீங்கள் முழுமையாக விடுதலையாகும் நாள்வரை நீங்கள் உரிமத்தின் விதிகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும். இது உங்கள் பரோல் அல்லாத தேதி எனப்படும்.

# Index

# (அட்டவணை)


| Subject (பொருள்) | Page<br>பக்கம் |
|---|---|
| A | |
| Adjudications(விசாரணைகள்)<br>- on report (புகார்)<br>- pleading guilty(குற்றத்தை ஒப்புக் கொள்ளல்)<br>- pleading not guilty(குற்றத்தை மறுத்தல்) | 89<br>90<br>92<br>93 |
| AIDS (எய்ட்ஸ்) | 70-71 |
| alcohol problems (மது பிரச்சனைகள்) | 73, 77 |
| appealing (மேல்முறையீடு செய்தல்) | 22 |
| arrival (வருகை) | 5 |
| assessment (மதிப்பீடு) | 118 |
| B | |
| benefits (அரசாங்க பண  சலுகைகள்) | 30, 127 |
| bills (கட்டணங்கள்) | 33 |
| C | |
| cell  (சிறை அறை) | 6, 57-58 |
| chaplain (மதகுரு) | 79, 81-2 |
| children (குழந்தைகள்) | 29 |
| civil partnership in prison (சிறையிலிருக்கும்போது சிவில் | 46 |

| | |
|---|---|
| பார்ட்னர் ஷிப்) | |
| civil prisoners (சிவில் சிறைக்கைதிகள்)<br>- early release (முன்கூட்டியே விடுதலை)<br>- contempt of court (நீதிமன்ற அவமதிப்பு)<br>- visits from family and friends (குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பார்வையாளர் சந்திப்புக்கள்) | <br>16<br>17<br>17<br>40 |
| clothes (ஆடைகள்) | 62 |
| complaints (புகார்கள்) | 110 |
| D | |
| declaring convictions (தண்டனைகள் அறிவித்தல்) | 132 |
| deportation (நாடு கடத்துதல்) | 152 |
| disabled prisoners (உடல் ஊனமுற்ற சிறைக்கைதிகள்) | 109 |
| doctor (மருத்துவர்) | 67 |
| drug problems (போதைப் பொருள் பிரச்சனைகள்) | 73, 77 |
| drug testing (போதைப் பொருள் பரிசோதனை ) | 73 - 76 |
| F | |
| faith (மதநம்பிக்கை) | 78-82 |
| family and friends (குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்)<br>- letters (கடிதங்கள்)<br>- telephone calls (தொலைபேசி அழைப்புகள்)<br>- visits (பார்வையாளர் சந்திப்புகள்) | 39<br>43-44<br>44-45<br>39 – 42 |
| H | |
| health (உடல்நலம்) | 65-72 |
| help in prison (சிறையில் உதவி) | 37-38 |
| hepatitis (ஹெபடைடிஸ்) | 72 |

| | |
|---|---|
| high security prisons (உயர் பாதுகாப்பு சிறைகள்) | 55 |
| HIV (எச்ஐவி) | 70-71 |
| home (வீடு)<br>- bills (கட்டணங்கள்)<br>- council tax (உள்ளூர் வரி)<br>- income tax (வருமான வரி)<br>- mortgage (வீட்டுக்கடன்)<br>- national insurance (தேசிய காப்பீடு)<br>- pension (ஓய்வூதியம்)<br>- rent (வாடகை) | <br>33<br>33<br>36<br>32<br>34<br>35<br>30-31 |
| home detention curfew (வீட்டுத் தடுப்புக் காவல்) | 138-140 |
| I | |
| immigration detainees (குடிவரவு தடுப்புக் காவலில் உள்ளவர்கள்)<br>- bail (பிணை)<br>- help and advice (உதவி மற்றும் ஆலோசனை ) | 18<br>19<br>20-21 |
| L | |
| learning (கற்றல்) | 121-122 |
| leaving prison (சிறையை விட்டு செல்லுதல்)<br>- benefits (அரசாங்க பண சலுகைகள்)<br>- gate arrest (வாயிற்கதவு கைது)<br>- grants and loans (மானியங்கள் மற்றும் கடன்கள்)<br>- housing (வீட்டு வசதி)<br>- money (பணம்)<br>- release time (விடுதலை காலம்) | 125<br>127<br>130<br>128<br>126-127<br>127<br>129 |
| local prisons (உள்ளூர் சிறைகள்) | 54 |
| M | |

| | |
|---|---|
| marriage in prison (சிறையில் திருமணம்) | 46 |
| medicine (மருந்து) | 68 |
| money (பணம்) | 59-60 |
| P | |
| parole (பரோல்) | 141 - 144 |
| private prisons (தனியார் சிறைகள்) | 55 |
| privileges (சலுகைகள்) | 64 |
| punishment (தண்டனை) | 87 - 89 |
| R | |
| race equality (இன சமத்துவம்) | 106-108 |
| recall (திரும்ப அழைத்தல்) | 149-150 |
| ◦ foreign national prisoners (வெளிநாட்டு சிறைக் கைதிகள்) | 151 |
| records (பதிவேடுகள்) | |
| - prison (சிறை) | 49-50 |
| - health (உடல் நலம்) | 69 |
| rehabilitation (மறுவாழ்வு) | 130- 131 |
| release on licence (உரிமத்தின் அடிப்படையில் விடுதலை) | |
| - childcare (குழந்தை பராமரிப்பு) | 134 |
| - end of custody licence scheme (காவல் முடிவு உரிமத் திட்டம்) | 135 |
| | 136-137 |
| - ROTL (ஆர்ஓடிஎல்) | 134 |
| - resettlement (மறுதீர்வு) | 135 |
| - special purposes (சிறப்பு நோக்கங்கள்) | 135 |
| religion (மதம்) | 78- 82 |
| repatriation (திருப்பி அனுப்புதல்) | 152-153 |

| | |
|---|---|
| rules (விதிகள்) | 83- 86 |
| S | |
| searches (தேடல் சோதனைகள்) | 103-104 |
| segregation (தனிமைப்படுத்தல்) | 99-100 |
| sentences (தண்டனைகள்)<br>- how long (எவ்வளவு காலம்)<br>- sentence plan (தண்டனைத் திட்டம்)<br>adult prisoners (வயது வந்த சிறைக்கைதிகள்)<br>- on or after April 2005(ஏப்ரல் 2005-ன்போது அல்லது பின்பு)<br>- on or before April 2005(ஏப்ரல் 2005-ன்போது அல்லது முன்பு)<br>- before October 1992 (அக்டோர் 1992-க்குள்)<br>- up to 12 months (12 மாதங்கள் வரை)<br>young offenders (இளம் குற்றவாளிகள்) | 25<br>26-28<br>118, 120<br>26, 145<br>27, 148-149<br>26-27, 146-148<br>28<br>26,145<br>145 |
| smoking (புகைபிடித்தல்) | 60- 61 |
| solicitors (வழக்குரைஞர்கள்)<br>- letters (கடிதங்கள்)<br>- visits (பார்வையாளர்கள் சந்திப்புகள்) | 47<br>47<br>48 |
| special accommodation (சிறப்பு தங்குமிடம்) | 100-101 |
| supervision (கண்காணிப்பு) | 138 |
| T | |
| training (பயிற்சி) | 122 |
| training prisons (பயிற்சி சிறைகள்) | 54 |
| transfers (இடமாற்றங்கள்) | 153-154 |

| | |
|---|---|
| U | |
| unconvicted prisoners (தண்டனை வழங்கப்படாத குற்றவாளிகள்)<br>° bail (பிணை)<br>- court (நீதிமன்றம்)<br>- sureties (பிணைதாரர்கள்) | **7**<br>**8**<br>**9-11, 13**<br>**11-12** |
| W | |
| work (பணி) | **123-124** |
| Y | |
| young offender (இளம் குற்றவாளி) | **155** |
| - arrival (வருகை)<br>- education (கல்வி)<br>- leaving (செல்லுதல்)<br>- sentences (தண்டனைகள்)<br>- supervision (கண்காணிப்பு)<br>- training (பயிற்சி) | **156**<br>**157**<br>**158**<br>**53, 145, 155**<br>**159**<br>**157** |

# சிறை மறுசீரமைப்பு அறக்கட்டளை பற்றி

நல்ல மற்றும் நாகரீகமான சிறை அமைப்பை உருவாக்க சிறை மறுசீரமைப்பு அறக்கட்டளை பணியாற்றுகிறது.சிறைகள் எவ்வாறு செயல்படுகின்றன மற்றும் சிறைக்கைதிகள், அலுவலர்கள் மற்றும் சிறைக்கு வெளியே உள்ள நபர்களுக்கு தகவல்கள் அளித்தல் மேலும் ,மாற்றங்களை செய்யுமாறு அரசையும் அதிகாரிகளையும் கேட்டுக் கொள்வதன் மூலம் நாங்கள் இதைச் செய்கின்றோம்.


## நன்றிகள்

- இந்த புத்தகத்தை உருவாக்குவதில் உதவி புரிந்த ஹர் மெஜஸ்டிஸ் சிறை சேவை(Her Majesty' s Prison Service-HMPS)மேலும் எச் எம் பி வாண்ட்ஸ்வோர்த் சிறைக்கைதிகள் மற்றும் அலுவலர்களுக்கு சிறை மறுசீரமைப்பு அறக்கட்டளை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது

- சிறைக்கதிகளுக்கான தகவல்களை மேம்படுத்த பாடுபடும் எங்கள் தொண்டிற்கு ஆதரவளிப்பதற்காக பிக் லாட்டரி ஃபண்ட் (Big Lottery fund)மற்றும் வேல்ஸ் இளவரசி டயானா நினைவு நிதியுதவிக்கும் சிறை மறுசீரமைப்பு அறக்கட்டளை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது

- மென்காப் (Mencap)

ஐ பி எஸ் என் எண் 0 046209 86 3

## What is this book about?

- What you need to know about prison life.
- Prison rules and ways of doing things.
- Your rights.

*"The handbook is like an A-Z of information for prisoners. We could never do without it."*

Adeleke, prisoner HMP Wandsworth

*"When a prisoner first comes into prison he often doesn't know the questions he needs to ask. This guide is an invaluable aid."*

Prison Officer

Ministry of JUSTICE
Safer Custody and Offender Rights
NOMS
1st Floor, Fry,
2 Marsham Street
London, SW1P 4DF
www.hmprisonservice.gov.uk

PRISON REFORM TRUST
Prison Reform Trust
15 Northburgh Street,
London, EC1V 0JR
Tel: 020 7251 5070
e-mail: prt@prisonreformtrust.org.uk
www.prisonreformtrust.org.uk

Prison Service Vocab Number BZ032 (Rev 2008) Form Number 2311
ISBN 0 946209 86 3
Printed by HM Prison Service
Prison Reform Trust Registered Charity No. 1035525
Company Limited by Guarantee No. 2906362 Registered in England & Wales